

பதிப்பாசிரியர் :
முனைவர் க. சௌந்தரபாண்டிய
எம்.ஏ., எம்.ஏ., பி.எட்., டிப்.வ.மொ., பிஎச்

பொதுப்பதிப்பாசிரியர் :
நடன. காசிநாதன் எம்.ஏ

# தொண்டை மண்டல வரலாறுகள்

அ.கீ.சு. நூலக வெளியீடு: எண். 408
தமிழ் நூல் வெளியீடு: எண்: 112

# தொண்டை மண்டல வரலாறுகள்

பதிப்பாசிரியர்:

முனைவர் சு. சௌந்தரபாண்டியன்
எம்.ஏ.(தமிழ்), எம்.ஏ.(ஆங்), பி.எட்., டிப்.வ.மொ., பிச்.டி.
காப்பாட்சியர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை-5.

பொதுப்பதிப்பாசியர்

நடன.காசிநாதன் எம்.ஏ.
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத் துறை
சென்னை-113.

© அ.கீ.சு.நூ.
1997

விலை: 104

G.O.M.L Publication- No.408
Tamil Publication No.112

# TONDAI MANDALA VARALARUKAL

Edited by:

**Dr. S. Soundarapandian**
M.A.(Tamil), M.A.(Eng.), B.Ed., Dip.Skt., Ph.D.
Curator
Govt. Oriental Manuscripts Library
Chennai - 5

General Editor:

**Natana Kasinathan,** M.A.
Director
Archaeology Department
Chennai - 113.

© G.O.M.L.
1997

Price Rs.104

# தொண்டைமண்டல வரலாறுகள்

## பொருளடக்கம்

பக்கம்

1. தொண்டை மண்டல வரலாறு ........ 75

2. மும்மண்டலப் பண்டைய மன்னர் வரலாறு ........ 89

3. சோழராசாவின் பூர்வ விருத்தி ........ 101

4. பழவேற்காட்டுக் கைபீது ........ 146

5. திருப்பாலைவனக் கைபீது ........ 197

6. சித்தாமூர்க் கைபீது ........ 202

7. திருவிடைச்சுரம் கோட்டை வரலாறு ........ 206

8. பாண்டுக்குழி வரலாறு ........ 216

9. மருதங் குறும்பர் கோட்டை வரலாறு ........ 228

10. ஆற்காட்டுப் பூர்வீகச் சரித்திரம் .................... 231

11. கள்ளப்புலியூர் வெள்ளைக்கல்
மேட்டுக் கைபீது .................... 241

12. வேலூர் துலுக்கப்பிரபுக்கள் வமிசாவளி .................... 244

13. அழிபடைதாங்கி பௌத்த
ராஜாக்கள் கைபீது .................... 249

14. பொன்விளைந்த களத்தூர் வரலாறு .................... 261

15. பல்லாவரத்திலிருந்த பூர்வீக
ராசாக்களுடைய கைபீது .................... 266

16. மாமல்லபுரம் கைபீது .................... 273

17. திருக்கழுக்குன்றக் கைபீது .................... 279

# தொண்டைமண்டல வரலாறுகள்

## பதிப்புரை

கர்னல் காலின் மெக்கன்சி (1754-1821) என்ற ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்தவர், தமிழகம் மற்றும் தென்னிந்தியப் பகுதிகளில் சர்வே பணியில் ஈடுபட்டிருந்த காலத்தில், ஆங்காங்கே பல வட்டார வரலாறுகளைத் தொகுத்தார். அவ்வாறு தொகுக்கப்பட்ட சுவடிகள் மெக்கன்சியின் சுவடிகள்(Mackenzie Manuscripts) என்று அழைக்கப்படுகின்றன.

இத்தகைய மெக்கன்சியின் தொகுப்பில் உள்ள சுவடிகளில், தொண்டைமண்டலம் தொடர்பான சுவடிகளை மட்டும் தொகுத்து தொண்டைமண்டல வரலாறுகள் எனும் பொதுத்தலைப்பிட்டு இங்கு பதிப்பிக்கப் பெறுகின்றன.

இங்கு பதிப்பிக்கப்பெறும் இச்சுவடிகள் யாவும் இதுவரை அச்சில் வெளிவராதவை ஆகும்.

இங்கு பதிப்புப்பெறும் தாட்சுவடிகள் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை. எனவே, கி.பி.19-ஆம் நூற்றாண்டில் நாட்டுமக்களின் ஒரு பிரிவினரிடையே உரை நடைத்தமிழ் யாங்ஙனம் இருந்தது என்பதை அறிய இந்நூல் உதவும்.

மும்மண்டல பண்டைய மன்னர் வரலாறு எனும் நாட்சுவடி கி.பி.1818-இல் எழுதப்பட்டதாகும். சுவடியில் காணப்படும் வெங்கட்டராவ் என்பாரின் குறிப்பால் இது அறியப்படுகிறது.

தொண்டைமண்டலம் என்றால் எந்தப் பகுதி?

இதற்கு விடை ஒரு மெக்கன்சியின் சுவடியிலேயே உள்ளது (டி.3089):-

"கிழக்கே கடல்; தெற்கே பெண்ணையாற்றங்கரை; மேற்கே திருவண்ணாமலை; வடக்கே காளஹஸ்தி; இந்தச் சதுரம்." இந்த நான்கு எல்லைகளுக்கு உட்பட்ட நிலமே தொண்டைமண்டலம் என்று இச்சுவடி குறிக்கிறது. இச்சுவடி, அ.கீ.அ.நூலகப் பருவ இதழ் தொகுதி 19-2இல் (1972) வெளியிடப்பட்டுள்ளதால், இங்கு பதிப்புப் பெறவில்லை.

ஔவையார் எழுதிய பழம் பாடல் ஒன்றில் 'தொண்டைநாடு' குறிப்பிடப்படுகிறது:-

> வேழம் உடைத்து மலைநாடு மேதக்க
> சோழ வளநாடு சோறுடைத்து - பூழியர்கோன்
> தென்நாடு முத்துடைத்துத் தெள்நீர் வயல்தொண்டை
> நன்னாடு சான்றோர் உடைத்து!

சங்ககாலத்தில் தொண்டைமான் இளந்திரையன் என்ற சோழன் தொண்டைநாட்டை ஆண்டான். இவனைத்தான் ஔவையார் வஞ்சப்புகழ்ச்சியாகப் (புகழ்வதுபோல இகழ்தல்) பாடினார்; அதன் விளைவாக, அதியமான் நெடுமான் அஞ்சிக்கும் தொண்டைமான் இளந்திரையனுக்கும் நடக்க இருந்த போர் தவிர்க்கப்பட்டது. இதற்காகவே, அதியமான், ஔவைக்கு நெல்லிக்கனியை ஈந்தான்.

சதாசிவப்பண்டாரத்தார் முதலியோர் எழுதிய பல்லவர்களின் வரலாறு பலபடக் காட்டப்படுகிறது. கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு வரை தொண்டைமண்டலத்தைப் பல்லவர்கள் ஆண்டுள்ளனர். முதற்பல்லவன், சிம்மவிஷ்ணு பல்லவன்; இறுதிப் பல்லவன், அபராஜித பல்லவன். அபராஜி பல்லவனிடமிருந்து பல்லவநாட்டைக் கைப்பற்றியவன் விஜயாலய சோழன்.

இவ்வாறு எழுதப்பட்ட வரலாறுகள் பல தொண்டைமண்டலத்து வரலாற்றை ஏற்கனவே நமக்கு ஒருவாற்றான் உணர்ந்திருந்தாலும், நாம் இதுவரை அறியாத எத்தனையோ செய்திகள் தொண்டைமண்டலம் தொடர்பாக இன்னும் இருக்கின்றன; இங்கு பதிப்பிக்கப்பட்டுள்ள சுவடிகள் இக்கூற்றுக்குச் சான்று.

தொண்டைநாடு என்று ஔவையார் குறிப்பிட்டதை முன்பே கண்டோம். தொண்டை மண்டலத்தைக் குறிப்பிட்டுக் கூறும் சாதியாரும் உளர்; தொண்டைமண்டல வேளாளர் நாங்கள் என்று கூறுவர் வேளாளரில் ஒரு பிரிவினர். இதைப் போலவே, வைணவ வடகலை சுயமாச்சார்யார்களில் ஒரு பிரிவார், "தொண்டைமண்டல சுயமாச்சார்யார்கள் நாங்கள்; நாங்கள் வரதராஜரை வழிபடுவோம்" என்று கூறுகிறார்கள்.

தொண்டைநாட்டுச் சிவத்தலங்களைப்பாடிய திருநாவுக்கரசரோ, திருநானசம்பந்தரோ 'தொண்டை' என்ற சொல்லை ஓரிடத்தில் கூடக் குறிக்கவில்லை. சுந்தரர் மட்டும் (கி.பி.9 நூற்றாண்டு) ஒரே ஓரிடத்தில் 6 தொண்டைமான் களிறு' என்று கூறுகிறார்.

இங்கு பதிப்பிக்கப்பெறும் தாட்சுவடிகள் கால அடைவில் பழுதடைந்துவிட்டால், பிறகு அரிய வரலாறுகள் நமக்குத் தெரியவரலாமலேயே போய்விடும்! எனவேதான், இவற்றை இதுபோன்ற நூற்களாக அச்சிடவேண்டும் என்ற குரல் நம்மிடையே இருந்துவருகிறது.

எடுத்துக்காட்டாக, தொண்டை மண்டல வரலாறு (டி.3102) என்ற தாட்சுவடி மை அழிந்தநிலையில் படிக்க இயலாதவாறு உள்ளது. இச் சுவடியில் 24 கோட்டைகளின் பகுப்பும், ஆமூர்க்கோட்டை,

புலியூர்க்கோட்டை, செம்பூர்க்கோட்டை, முதலிய சில பெயர்களும் காணக்கிடக்கின்றன. இச் சுவடியில்உள்ள செய்திகள் தொண்டைமண்டல வரலாறு எனும் அதே பெயரில் உள்ள பிறிதொரு (டி.3827) சுவடியில் பெரும்பாலும் வந்துள; இந்தச் சுவடியே இந்நூலில் தற்போது பதிப்பிக்கப்பெறுகிறது. எனவே, இனியும் காலதாமதம் செய்யாமல் அழியும் நிலையில் இருக்கும் மெக்கன்சி ஆவணங்களை அச்சிடுதல் நமது கடனென்று இந்நூல் அச்சிடப்படுகிறது.

'தொண்டைமான் சக்கரவர்த்தி சரித்திரம்' என்ற பெயரில் மற்றொரு தாட்சுவடி உள்ளது (டி.3097). இதில் உள்ள வரலாறுகள், இங்கு அச்சாகியுள்ள 'பண்டைய மும்மண்டலமன்னர் வரலாறு' எனும் சுவடியில் அடங்கியவையே; மேலும், தொண்டைமான் சக்கரவர்த்தி சரித்திரம் எனும் சுவடி படிக்க இயலாதவாறு மை அழிந்த நிலையில் உள்ளது.

'தொண்டைமண்டல வரலாறு' (டி.3827) என்று இங்கு பதிப்புக்கண்ட சுவடியில், குறும்பர் வரலாறு சிறப்பாகப் பேசப்படுகிறது. வேடர், குறும்பர் என்ற இரு வகுப்பார், தொண்டை மண்டலத்துப் பூர்வகுடிகள் என இச்சுவடிமூலம் அறிய வருகிறோம். இத்தொண்டைமண்டலத்தில் வாழும் பல சாதிகளுக்கு இந்த இரு

சாதிகளே பூர்வீகமாக இருந்திருக்க இடமுண்டு; இது மேலும் ஆயத்தக்கதே. குறும்பர்கள், கர்நாடக தேசத்திலிருந்து இத்தொண்டைமண்டலத்திற்கு வந்தவர்கள் என்றும் இந்தச் சுவடி குறிக்கிறது. குறும்பர்களின் 'கடோர' குணத்தினால், குறும்பர் என்ற பெயரைப் பெற்றதாகவும், இச்சுவடி நுவல்கிறது; இக்கருத்து, தள்ளத்தக்கதல்ல. சில வகுப்பார் கடுமையாக இருப்பது கண்கூடு. இந்திய வரலாற்றில், இராஜபுதனர்கள் (Rajputs), தீவிரமான தன்மை கொண்டோர் என்பது அறியத்தக்கது. குறும்பர்கள், புழலூரைத் தலைமையிடமாக்க கொண்டு, புழலூர்க் கோட்டையையும் சேர்த்து மொத்தம் இருபத்துநான்கு கோட்டைகளைக் கட்டினார்கள் என்கிறது இந்தச் சுவடி. இந்த இருபத்து நான்கு கோட்டைகளும் பெரும்பாலும் செங்கை மாவட்டத்தைச் சேர்ந்தவை எனக்கருத இடமுண்டு.

குறும்பர் ஆட்சியில் மக்களுக்கு இன்னல்கள் ஏற்பட்டதாகவும், அவ்வேளையில் ஆதொண்டைச் சோழன் என்ற சோழ நாட்டு அரசன், குறும்பர்களை வென்று, தனது சோழ ஆட்சியை நிறுவியதாகவும் இந்தச்சுவடி காட்டுகிறது, குறும்பர்கள் சமணமதத்தைப் பரப்ப முயன்றதாகவும் இச்சுவடி கூறுகிறது. எனவே, குறும்பர் வரலாற்றில், சைவ - சமண மதப்பூசல் ஓர் இன்றியமையாத இடத்தைப் பெறுவது தெளிவாகிறது. கி.பி. ஏழாம்

நூற்றாண்டில், திருநாவுக்கரசர், சமணராக ஆக்கப்பட்டதையும், பிறகு அவர் மீண்டும் திருவதிகை வீரட்டானம் என்ற தலத்தில், சைவராகத் திரும்பியதையும் ஈண்டு ஒப்பிடலாம். மேற்கண்ட ஆதொண்டைச்சோழன் என்பானே, பல வேளாளர்களைத் துளுவ தேசத்திலிருந்து அழைத்துவந்து குடியேற்றினார் என்றும் நுவல்கிறது இச்சுவடி; அதனால்தான் துளுவ வேளாளர் என்ற பெயரை அவர்கள் பெற்றார்கள் என்றும் கருதுகிறது சுவடி. இதே சோழன், சோழதேசத்திலிருந்தும் பல வேளாளர்களை அழைத்துவ்நது தொண்டை நாட்டில் குடியேற்றினான் என்றும், அதனால்தான்சோழியவெள்ளாளர் என்ற பெயர் வந்தது என்றும் காட்டுகிறது இச்சுவடி.

'மருதங் குறும்பர் கோட்டை வரலாறு' (டி.3828) எனும் சுவடி, மருதம் என்ற ஊர்க்கோட்டை பற்றிப் பேசுகிறது. மருதம் என்ற ஊர் செங்கை மாவட்டத்தில், உத்திரமேரூர் வட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூர்க் குறும்பர்களின் மண் கோட்டையைத் திம்மராசா என்பவன் போரிட்டுப் பிடுங்கிக் கொண்டான் என்கிறது சுவடி.

'செஞ்சிராசாக்கள் கைபீது' (டி.3819) என்னும் ஒரு சுவடி அ.கீ.சு. நூலகத்தில் உள்ளது. இது, தேசிங்குராசன் கதைப்பாடலே (ballad). எனவே, இங்கு பதிப்பிக்கப்படவில்லை. 'மதுராந்தகம் வரலாறு' என்றும் ஒரு சுவடி அ.கீ.சு. நூலகத்தில் உளது. மதுராந்தகம், தொண்டை மண்டலத்துள் அடங்குவதே; ஆயினும், தமிழக ஊர் வரலாறுகள் (பதி. டாக்டர் எஸ். சௌந்தரபாண்டியன், அ.கீ.சு. நூலக வெளியீடு, சென்னை-5) எனும் நூலில் இச்சுவடி ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளதால், மீண்டும் இங்கே அச்சிடப்படவில்லை. 'தொண்டைமான் சக்கரவர்த்தி கதை' என்னும் ஒரு சுவடி (டி.3812) அ.கீ.சு. நூலகத்தில் உள்ளது, இது வெறும் புராணக் கதையே. விஸ்வாவசு என்ற புராணமாந்தன் கதையே இதில் உளது. விஸ்வாவசு, தேவலோகத்துச் சாபத்தால் பூமியில் பிறந்ததாகவும், தொண்டைமான் அரசனால் வெட்டுப்பட்டதும், மீண்டும் தேவலோகம் சென்றதாகவும், அவரைச் செயங்கொண்டதால், செயங்கொண்ட தொண்டை மண்டலம் என்று பெயர் வந்ததாகவும் இச்சுவடி எழுதுகிறது.

இங்கு பதிப்பிக்கப்பெற்றுள்ள சுவடிகளில் ஒன்றான 'பண்டைய மும்மண்டல மன்னர்களின் வரலாறு' எனும் சுவடியில் கூறப்படும் சில வரலாறுகள் உண்மை வரலாற்றோடு ஒத்து வருவதாம்.

எடுத்துக்காட்டாக, வரகுணமகாராசா எனும் வரகுணபாண்டியன் காலத்தில், சோழநாடு முழுவதும் பாண்டியர் வசமாயிற்று என்பது எழுதப்பட்ட வரலாறு; இதே வரலாற்றை இச்சுவடியும் பேசுகிறது, அதேபோன்று, குலோத்துங்க சோழன்தான் தொண்டை நாட்டை உண்டாக்கியதாக இச்சுவடி நுவல்வது ஏற்கத்தக்கது அல்ல; ஏனெனில் தொண்டைநாட்டைப் பிடித்து அரசாண்ட பல்லவர்களைக் குலோத்துங்கனுக்கு முன்பே நாம் வரலாற்றில் சந்திக்கின்றோம். சிம்மவிஷ்ணு என்ற பல்லவன், பிறகாலப் பல்லவர்களில் முதலாவதாகத் தொண்டை நாட்டைப் பிடித்து அரசாண்டதாகவே எழுதப்பட்ட வரலாறுகள் தெரிவிக்கின்றன. சோழர்களில் விஜயாலய சோழனே, அபராஜித பல்லவனை வென்று தொண்டைநாட்டைக் கைக்கொண்டதாகவும் அறியப்பட்ட வரலாறுகள் கூறுகின்றன. இவற்றுக்கு முரணாகவே உள்ளன மேற்சுவடியின் சில கருத்துகள்.

ஆயினும், மக்கள் வாழ்வு, பண்பாடு, அரசாட்சி முறை, அரண்மனை முறை, படைமுறை போன்ற எண்ணற்ற கூறுகளின் பெட்டகமாக இச்சுவடி திகழ்கிறது, இத்தகைய கூறுகளுக்காக, நாம் இச்சுவடியை வரவேற்கக் கடமைப்பட்டுள்ளோம்.

எடுத்துக்காட்டாக, ஒரு நாட்டைப் புதிதாக எப்படி உருவாக்குவது? புதிய ஊரை எப்படி உருவாக்கினர்? உருவாக்கிய புதிய ஊரில் வரிமுறை எப்படி இருநதது?- போன்ற பல்வேறுவினாக்களுக்கு விடைகளை அள்ளித்தருகிறது மேற்சுவடி!

மும்மண்டல பண்டைய மன்னர் வரலாறு' எனும் இச்சுவடியில், உத்தரதேசம் என்று பேசப்படுவது, பாண்டிநாட்டுக்கு வடக்கே உள்ள தமிழ்ப்பகுதியே; வடநாடு (North India) என்ற பொருளில் அல்ல.

இதே சுவடியில், மன்னார்குடி இராசகோபால விக்கிரகம், தஞ்சாவூரிலிருந்து கொண்டுவரப்பட்டதாகக் குறிப்பு உளது (பத்தி 126). திருவாரூரில் இருந்த ஆயிரக்கால் மண்டபத்தைப் பிடுங்கி, மன்னார் கோயில் ஆயிரக்கால் மண்டபம் கட்டப்பட்டதாக இசசுவடி குறிக்கிறது (பத்தி 125). இந்த இரு செயல்களையும் தஞ்சை வடுகர் செய்ததாகச் சான்று பகர்கிறது சுவடி (பத்தி 124). இதே சுவடி, மதுரைப் பாண்டியர் வம்சத்தைக்கடைசி நேரத்தில் அழித்தவர்களில் மறவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் என்கிறது. வாணாதிராயர்கள், இவ்வாறு இறுதிநேரத்தில் பாண்டியர்களை ஓடஓட விரட்டியதாகச் சதாசிவப் பாண்டாரத்தார் எழுதியுள்ளார். பண்டாரத்தாரின் கருத்து மேற்சுவடிக்கருத்தோடு ஒப்பிட்டு ஆயத்தக்கதே.

இதே 'மும்மண்டல பண்டைய மன்னர் வரலாறு' எனும் சுவடியில், சேதுபதியைத் தெலுங்கு நாயக்கர் சிறைப்பிடித்துத் திருச்சியில் சிறையில் போட்ட செய்தியும், பிறகு அவர்களை 'வடக்கே இருந்து வந்த பயிராவிகள்' விடுதலை செய்த செய்தியும் மனமுருகக் கூறப்பட்டுள்ளன. மதுரையைச் சுல்தான்கள் பிடித்த வரலாறு இச்சுவடியில் பேசப்படுவது, உண்மை வரலாற்றோடு பெரிதும் ஒத்து நடப்பதே. இச்சுவடியில், சேதுபதி கட்டிய கற்கோட்டைகளின் விவரம் உள்ளது; அதனைப் பட்டியலாக வருமாறு தரலாம்:-

1. பட்டுக்கோட்டை
2. பழைய கோட்டை
3. அறந்தாங்கிக் கோட்டை
4. கீழாநெல்லிக்கோட்டை
5. திருமயம் கோட்டை
6. திருப்பத்தூர்க் கோட்டை
7. இராமநாதபுரம் கோட்டை
8. பாம்பன் கோட்டை
9. கமுதிக் கோட்டை
10. ஆறுமுகக் கோட்டை.

(டி.3088, ப.37)

இப்பட்டியலால் சில ஊர்ப்பெயர்கள் நமக்குத் துலக்கமாகின்றன. இன்னும், பட்டுக்கோட்டை, பழைய கோட்டை என்ற ஊர்ப் பெயர்கள் அப்பகுதியில் வழக்கத்தில் இருந்து வருகின்றன.

இதே சுவடியில், தஞ்சை நாயக்கருக்கும் மதுரை நாயக்கருக்கும் நடந்த பூசல், அஞ்ஞான்று ஆர்க்காட்டு நாவாபின் தலையீடு ஆகியவைகள் பெருமளவுக்கு உண்மை வரலாற்றோடு இசையுமாறு நுவலப்படுகின்றன; உண்மை வரலாற்றுக்கு ஒத்துப்போவது மட்டுமல்லாது, மேலும் விளக்கம் அளிப்பதாகவே உளது.

இங்கு பதிப்பிக்கப்பட்டுள்ள பழவேற்காடு கைபீது எனும் சுவடி, மிகவும் பயனுள்ளவரலாறுகளை நமக்கு அள்ளித்தருகிறது என்பது குறிப்பிடத்தக்கதே.

பழவேற்காடு எனும் ஊர், செங்கை மாவட்டத்தில், சென்னைக்கு வடக்கே 22-கல் தொலைவில் உள்ளது. இங்கே கி.பி.1609-ல் டச்சுக்காரர்கள் (Duch) தங்கி, ஜெல்டிரியா (Geldria) என்ற பெயரில் ஒரு கோட்டையைக் கட்டினர். நாகபட்டிணத்தினை இழந்தபின், டச்சு அரசு இங்கிருந்தே செயல்பட்டது. 1795-இல் ஆங்கிலேயர் டச்சுக் காரர்களிடமிருந்து இப்பகுதியைக் கைப்பற்றிக் கொண்டனர். டச்சுக்காரர்களுக்கு நாகப்பட்டிணம், சதுரங்கபட்டிணம், பழவேற்காடு ஆகிய மூன்று இடங்களில் கோட்டைகள் இருந்தன. கி.பி 1660-இல்

போர்ச்சுக்கீசியரிடமிருந்து நாகபட்டினத்தைக் கைப்பற்றினர் டச்சுக்காரர்கள்.

'பழவேற்காடு கைபீது' எனும் சுவடியில், மீன் பிடி வகையும் மிகச் சிறப்பாகத் தரப்பட்டுள்ளது. தமிழில் இதே காலகட்டத்தில் இப்படியொரு மீன்பிடி விளக்கம் தரப்பட்டதில்லை! நுணலை, மடவை போன்ற பலப்பல மீன் வகைகள் மிக விளக்கமாகத் தரப்பட்டுள. கண்ணிவலை, சிறுவலை, தூரிவலை என்றெல்லாம் மீன்பிடி வலை வகைகளும் பேசப்படுகின்றன. வலையை இத்தனை புருஷம் ஆழத்தில் இவ்விதமாகப் போட்டு, இப்படி அடிமீனை ஓட்டவேண்டும் என்றெல்லாம் வெகு சிறப்பாக மீன் தொழில் விளக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் சிறந்த தொழில் நுட்பச் சுவடியாக இது திகழ்கிறது. வரலாறுகள் பயனற்றவை என்பார் கூற்றை இச்சுவடி பொடிப்பொடியாக்குகிறது.

மீன்பிடிப்போர் சாதிகளையும் நுணுக்கமாக இந்தப் பழவேற்காடு கைபீது எனும் சுவடி நமக்கு நல்குகிறது. பட்டணவர்,கரையார்- இரு வகுப்பாரும் கடற்கரையில் மட்டுமே குடியிருப்பவர்கள் என்ற செய்தியை இச்சுவடி தருகிறது. பள்ளர் என்போர் பள்ளங்களில் மட்டுமே வசித்ததையும் , 'மேட்டுக் குடி' என்று செல்வர்கள் பேசப் படுதலையும் இங்கு ஒப்பிட்டு ஆயவேண்டும்.

பழவேற்காட்டு வரலாறு பேசும் இச்சுவடியால் ஔரங்கசீப் என்ற மொகலாய மன்னனிடம் டச்சுக்காரர்கள் அனுமதி பெற்று கோட்டை கட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது. டச்சுக்காரர்கள் கப்பல்களில் வந்திறங்கிப் பழவேற்காட்டில் இடம் பிடித்த செய்தி மெய்ச்சிலிர்ப்பை ஏற்படுத்தும் வகையில் இச்சுவடியில் நுவலப்பட்டுள்ளது.

டச்சுக்காரர்கள் இங்கே கோட்டை கட்டி அப்படி என்ன பொருட்களை வணிகம் செய்தார்கள்? இதே சுவடி விளக்குகிறது:-

1. மிளகு
2. சர்க்கரை
3. கற்கண்டு
4. இலவங்கம்
5. சாதிக்காய்
6. பட்டுத்துணி
7. தேக்குமரம்
8. குங்கிலியம்
9. செம்பு
10. சாதிக்காய்

இடங்கை வலங்கையர் ஆய்வுக்கும் பழவேற்காடு குறித்த சுவடி பயன்படும். இடங்கை வலங்கையர் வரலாறு என்று இதற்கு முன் ஒருநூலை அ.கீ.சு நூலகம் (பதி. டாக்டர் எஸ். சௌந்தரபாண்டியன்) வெளியிட்டுள்ளது. சில சாதிப் பெயர்களைக் குறிப்பிட்டு, இவர்கள் இடங்கையர் அல்லது வலங்கையர் என்று காட்டுகிறது பழவேற்காடு வரலாறு தரும் சுவடி.

நம்முடைய மீனவ இனம் ஏன் முன்னேறாமல் இருக்கிறது?

மேல் பழவேற்காடு கைபீதில் இதற்கான விடை கூறப் பட்டுள்ளது:-

1. மீன் தொடர்ச்சியாகக் கிடைப்பதில்லை.
2. ஆண்கள் குடித்தல்
3. பெண்களும் குடித்தல்.

இவையே மீனவ இனம் முன்னேறாமல் இருப்பதற்குக் காரணங்கள் என்று காட்டுகிறது அச்சுவடி. உண்மைதானே? இப்படிப்பட்ட சமுதாயச் செய்திகளையெல்லாம் தருவதால், இதுபோன்று சுவடிப் பதிப்பு நூற்கள் நமக்குத் தேவை என்பது பெறப்படுகிறதல்லவா?

பழவேற்காடு வரலாறு கூறும் இச்சுவடியில், ஏனாதி, வேடர், இருளர், வில்லியர், குறவர் வரலாறுகள் சிறிதளவு இடம் பெறுவதால் இச் சாதிகளின் பூர்வீகத் தொழில், இருப்பிடம் போன்ற அடிப்படைச் செய்திகளை நாம் இச்சுவடியினின்றும் பெறுகிறோம்.

முதலியார், செட்டியார், நாயக்கர் சாதிகள், ஏன் அவ்வாறான பெயர்களைப் பெற்றன என்ற வினாவுக்கு விடை இச்சுவடியில் உள்ளது.

இப்படிப்பட்ட சாதி விளக்கம், தொண்டை மண்டலத்திற்கு மட்டுமல்லாது, தமிழகம் முழுமைக்குமே பொருந்தும்.

பாளையப்பட்டுகளாக இருந்து ஆட்சிபுரிந்த வேடர்கள் குறித்தும் இதே சுவடியில் குறிப்பு உளது. பொதிமாட்டுக் குறவர் என்போர் கீழ்வரும் பொருட்களை வியாபாரம் செய்ததாகவும இதே 'பழவேற்காடு கைபீது' விளக்குகிறது:-

1. நெல்
2. சோளம்
3. புளி
4. வெல்லம்
5. அரிசி
6. பயறு

இப்பொருட்களைச் சுமப்பதற்காக மாடு, கழுதை ஆகியவற்றை அப்பொதிமாட்டுக் குறவர் பயன்படுத்தியுள்ளனர் எனவும் இச்சுவடி மூலம் அறிகிறோம்.

மேலே குறிப்பிட்டவாறு, சில சாதிகள் பற்றிய திருமணமுறைகள், தீர்த்துக்கட்டும் முறைகள், சாதியிலிருந்து தள்ளிவைக்கும் பழக்கம் போன்ற பல்வேறு செய்திகளையும் இப்பழவேற்காடு கைபீது எனும் சுவடி நமக்கு அள்ளித்தருகிறது. பார்ப்பார் அல்லாத சாதிகள் சில புரோகிதத் தொழில் செய்து வந்ததாகவும் இச்சுவடிமூலம் அறிகிறோம்.

இதே 'பழவேற்காடு கைபீது' எனும் சுவடியில், திருவள்ளூருக்கு (செங்.மா.) மேற்கே அல்லிக்குழி மலையைச் சுற்றிலும் சில பாளையங்கள் இருந்ததாகச் சுவடி கூறுகிறது. இன்றும், பிளேஸ் பாளையம், சென்றாயன் பாளையம் ஆகியன 'பாளையம்' என்ற பெயரில் அப்பகுதியில் உள்ளன என்பது அறியத் . தக்கது. பழவேற்காட்டை, டச்சுக் காரர்கள் 'Pulicat' என்று உச்சரிக்கவே, இன்னும் அப்பகுதி மக்கள் புலிக்காட்டு என்று அவ்வூரைக் குறிக்கிறார்கள்.

பொன்னேரி, கரிமணல், பாக்கம், கணவன்துறை, சிறுளப் பாக்கம், அவுரிவாக்கம் ஆகியன பழவேற்காட்டை அடுத்துள்ள ஊர்கள்.

பழவேற்காடு, செங்கை மாவட்டத்தில் திருப்பாலைவனம் உள் வட்டத்தில் உள்ளது; சிறு பழவேற்காடு என்றும் ஓர் ஊர் உள்ளது அறியத்தக்கதே.

பழவேற்காடு பற்றிய அறியும் இவ்வேளையில், திருவேற்காடு பற்றியும் காண்போம். திருவேற்காட்டில், சென்னைப் பல்கலைக் கழகம் ஓர் அகழ்வாய்வை (Excavatiom) நடத்தியது; இதன் முடிவுகளை 1996-இல் அறிவித்தது. அதன்படி, கி.மு. ஐந்தாம் நூற்றண்டிலேயே திருவேற்காட்டுப் பகுதியில் மக்கள் வாழந்ததற்கான சான்றுகள் உள. பானை ஓடுகள், அம்போராச் சாடிகள் முதலியன அவ்வகழ்வாய்வில் கிட்டியுள. திருவேற்காடு, தொண்டைமண்டலத்தைச் சேர்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதே.

திருப்பாலைவனம் (செங்.மா. பொன்னேரி வட்டம்) எனும் ஊர்க்கோயிற் சாசனங்கள் (Temple Inscriptions), அ.கீ.சு. நூலகத்தாட் சுவடிகளில் உள. இச் சாசனங்கள் அச்சிலும் வெளிவந்துள (A.R. 319 of 1928; 328 of 1928; 380 of 1928; 336 of 1928; 376 of 1928).

இங்கு அச்சிடப்பட்டுள்ள 'திருப்பாலைவனம் கைபீது' (டி.3084) எனும் சுவடியில், ஆங்கிலக் கம்பெனியார், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், திருவள்ளூர், பெரிய பாளையம் ஆகிய ஊர்க் கோயில்களுக்குத் தர்மம் கொடுத்து ஆலயப் பணிகளை நடத்தியுள்ள வரலாறு குறிக்கப்படுகிறது. (M.59, p.18).

சித்தாமூர்க் கைபீது எனும் ஓலைச் சுவடியில், சித்தாமூர்ச் சமண மடத்தின் ஒரு வரலாறு பேசப்படுகிறது. இச் சுவடி, காலின் மெக்கன்சிக்கு நேரடியாக எழுதிக்கொடுத்த வரலாறு. குலோத்துங்க சோழன் இச் சித்தாமூர் மடத்திற்கு மானியம் விட்ட செய்தி பேசப்படுகிறது. பிறகு, விக்கிரமசோழன், விஷ்ணு தேவமகாராயன், ஸ்ரீரங்கதேவ மகாராயன், வெங்கடபதி மகாராஜன், நரயசி, கிருஷ்ணராயன், கம்பெனியார் என்று வரிசையாக மேற்படி மடத்திற்கு மானியம் தந்து ஆதரித்துள்ளதைச் சுவடி குறிக்கிறது. இவ்வோலைச் சுவடியில் பல சொற்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன; அவை தமிழ் எழுத்துக்கு மாற்றப்பட்டு இங்கு பதிப்பிக்கப்பெற்றுள. இந்த ஓலைச்சுவடிக் கட்டை (Plank) மீது, CCM என்ற மெக்கன்சியின் அரக்கு முத்திரை (Seal) வைக்கப்பட்டுள்ளது. (CCM என்பது, Colonel Colin Mackenzie

என்ற சொற்களின் முதல் எழுத்துகளாம்). கி.பி.19ஆம் நூற்றாண்டுத் தமிழ் நடை இச்சுவடியில் தவழ்கிறது.

'திருவிடைச்சக்கரம் கோட்டை வரலாறு' (டி.3098) எனும் சுவடி திருவிடைச்சுரம் (செங்கை மாவட்டத்தில், செங்கற்பட்டு திருப்போரூர்ச் சாலையில் உள்ளது, எனும் ஊரின் சில வரலாறுகளை உணர்த்துகிறது. திருவிடந்தை வேறு, திருவிடைச்சுரம் வேறு. செங்கற்பட்டு புகை வண்டி நிலையத்திலிருந்து ஐந்தரைக் கல் தொலைவில் உள்ள திருவிடைச்சுரத்தில், நந்திமலை என்றொரு மலையும் உளது. திருவிடைச்சுரம் சிவன் கோயில் சுவாமி பெயர், இடைச்சுர நாதர்; தேவி பெயர் இமயமடக்கொடி. திருவிடைச்சுரம் பாடல் பெற்ற சிவத்தலம். திருஞானசம்பந்த நாயனார் பாடிய ஒரு தேவாரப் பதிகம் திருவிடைச்சுரத்திற்கு உண்டு. (திருஞான சம்பந்தரின் காலம் கி.பி.9-ஆம் நூற்றாண்டு என்பர்). திருவிடைச்சுர வரலாறு கூறும் இந்தச்சுவடி மை அழிந்து படிக்க இயலாத நிலையில் தற்போது உள்ளது. இந்த நிலையிலாவது இச்சுவடி அச்சிடப்படவேண்டிய மிக அவசியமானதாகும்; சிலகாலம் சென்றால், சுவடியை எவருமே படிக்க இயலாதவாறு, மை முற்றும் அழிந்து போகும்!.

மேற்படி திருவிடைச்சுரம் கோட்டை வரலாறு எனும் சுவடி சில புதிய செய்திகளை நமக்கு அளிக்கிறது. இவ்வூர்ப் பகுதியில், குறும்பர்களும், பிறகு அவர்களை வென்ற ஆதொண்டைச் சோழனும் ஆண்ட வரலாறு காட்டப்படுகிறது. இதே கால கட்டத்தில் குறும்பர்களுக்குப் பிறகு, காத்தவராயன், சேதுராயன் என்ற இரு வன்னிய அரசர்கள் இப்பகுதியில் சில கோட்டைகள் கட்டிச் சிறப்பாக வாழ்ந்ததைச் சுவடி பேசுகிறது. இந்த இரு அரசர்களும், மலைகளில் நாம் எந்த இடத்தில் இருந்துகொண்டு போரிடுகிறோம் என்று எதிரிக்குத் தெரியாமலிருக்க, பல இடங்களில் ஒரே நேரத்தில் நவபத்து எனும் தோல் வாத்தியத்தை அடித்து வாசித்து, அப்போது அவர்களை எதிர்த்த இராயரைத்திகைக்க வைத்த செய்தி வெகு சுவையாக இந்தச் சுவடியில் வரையப்பட்டுள்ளது. உண்மை வரலாற்றோடு பின்னிப் பிணைந்து இச் செய்தி செல்கிறது. இராயர் என்பவர் கிருஷ்ணதேவராயராக இருக்கலாம். அங்ஙனமாயின், சுவடி கூறும் வரலாறு கி.பி.17ஆம் நூற்றாண்டு வரலாறு ஆகிறது.

திருவிடைச்சுரம் கோட்டை வரலாறு என்ற தாட்சுவடி எழுதப்பட்ட காலம் கி.பி. 1816-18 ஆகும்.

படுவூர்ப் பாண்டுக்குழி தொடர்பான சுவடி (டி. 3096), கி.பி.1816-18 என்ற காலகட்டத்தில் எழுதப்பட்டது. படுவூர், செங்கை மாவட்டத்தில், திருவிந்தை என்ற ஊருக்கு அருகில் உள்ள ஊர். இவ்வூரில், இன்றும், பாண்டுக்குழி எனப்படும் குழிகள் உள்ளன. இவற்றை மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையார் இன்றும் ஆய்ந்து வருவதாகத் தெரிகிறது. பழந்தமிழர் வாழ்ந்த இடம் என்பதற்கு குழிகள் சான்று. இக்குழிகள் இந்தோரைப் புதைத்த புதை குழிகளே. இவை தொடர்பாகச் சில புராணக் கதைகளும் கட்டிவிடப்பட்டுள. இங்கு பதிப்பிக்கபட்டுள்ள தாட்சுவடி, பலவகை நோக்கில் பாண்டுக்குழியை நடுநிலையோடு ஆய்கிறது. எனவே. ஆய்வாளர்களுக்கு இச்சுவடி ஒரு புதையற்குழி என்றே சொல்லலாம்!

தமிழ்நாட்டில் பல இடங்களில் முதுமக்கள் தாழிகள் இன்றும் காணக்கிடக்கின்றன. நான் பள்ளியில் படித்த காலத்தில், காரைக்குடியில் (சிவ.மா) இருக்கும் தேனாறு, நாட்டான் கண்மாய் ஆகியவற்றை ஒட்டிய பகுதிகளில், சுட்டமண் பாண்டங்கள் தரைக்குமேலே வட்ட வட்டமாகக் நீட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்துள்ளேன். “இதெல்லாம் முதுமக்கள் தாழிகள்” என்று காரைக்குடிப் பெரியவர்கள் சொல்லுவார்கள். முதுமக்கள் தாழி


தொடர்பாக, இந்தக் குறிப்பிட்ட இடம் ஆய்வும் செய்யப் பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதைப் போல உள்ள எல்லா இடங்களும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

'பொன்விளைந்த களத்தூர் வரலாறு' எனும் சுவடியில் (டி.3825), ஆதொண்டையாருக்குப்பின், கொண்டைகட்டி வேளார்கள் என்ற சிற்றரசர்கள் இப் பொன்விளைந்த களத்தூர்ப் பகுதியை ஆண்டதாக வரலாறு காணப்படுகிறது.

பொன்விளைந்த களத்தூர், செங்கை மாவட்டத்தில், செங்கற்பட்டு வட்டத்தில் உள்ள ஊராகும். தென்களத்தூர் என்று அறியப்படுவதும் இந்த ஊரே. படிக்காசுப் புலவர் (கி.பி. 17ஆம் நூற்றாண்டு), பொன் விளைந்த களத்தூரைச் சேர்ந்தவரே; தொண்டை மண்டல சதகம் இவர் இயற்றியதே. கிருஷ்ணதேவராயர் காலத்தில், இக் களத்தூர்க் கோட்டையை அக்கிரகாரமாக மாற்ற கிருஷ்ணதேவராயர் முயன்றதாகவும், வெள்ளாளர்கள் மறுத்ததாகவும், அதனால் கிருஷ்ணதேவராயர், படைகளை அனுப்பிப் போரிட்டதாகவும், பிறகு பணிந்த வெள்ளாளர்கள் அக்கிரகாரமாக மாற்ற ஒத்துக்கொண்டதாகவும் 'பொன்விளைந்த களத்தூர் வரலாறு' எனும் சுவடி காட்டிச்சொல்கிறது.

கள்ளப்புலியூர் (விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தாலுகா) என்ற ஊரில் இப்போதும் காணப்படும் வெள்ளைக்கல் மேடுகள் பற்றிய சுவடியே 'கள்ளப் புலியூர் வெள்ளைக்கல் மேட்டுக் கைபீது'. ஆனால், இச்சுவடியில் புராணக் கதையே கூறப்படுகிறது; உண்மை வரலாறு உருவகமாகக் கிடக்கிறது. இராட்சதர்கள் என்று இச்சுவடியில் வருவது, வலிமைமிக்க இருவகைப் போர்ப்படைகளைக் குறிப்பதாகலாம். இருவேறு படைகள் போரிட்டு, அதில் அழிந்த வீரர்களின் சமாதிகள் அல்லது நினைவுச்சின்னங்களாக இம்மேடுகள் இருக்கவேண்டும்; இது மேலாய்வுக்கு இடமளிப்பதே.

இந்நூலில் பதிப்பிக்கப்பட்டுள்ள 'வேலூர் துலுக்கப் பிரபுக்கள் வம்சாவளி' ஒரு சிறந்த வரலாற்றுச் சுவடி. இதில் வேலூர்க் (வ.ஆ.மாவட்டம்) கோட்டையை ஆண்ட இசுலாமியச் சிற்றரசர்கள் வரிசையாக நுவலப்பட்டுளர். கீழ் வருமாறு நாம் அவர்களை விளக்கலாம்.



சிலுநாயக்கனை எதிர்த்த லாலா சாத்துலகான் பற்றியும் இச்சுவடி குறிக்கிறது. வடஆர்க்காட்டுப் பகுதிகளில் நாயக்கர்கள் சிற்றரசர்களாக ஆண்டுளர். நாயக்கன் ஏரி என்று, ஆம்பூர் அருகே ஓர் ஏரி இன்றும் உண்டு.

கி.பி. 19-ஆம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க சுவடி இது. வெள்ளிக்கந்தப்பையர் என்பாரால் 'கலித்துவம்' செய்யப்பட்டது என்று தாட்சுவடியிலேயே எழுதப்பட்டுள்ளது. ஆகவே, உரைநடையில் ஒரு கலித்துவம் வேண்டிய கி.பி. 19-ஆம் நூற்றாண்டுத் தமிழ் நிலையை வியப்பிற்குரிய வகையில் இந்தச் சுவடி நமக்கு முதன் முதலாகக் காட்டுகிறது!

இத்தருணத்தில், வேலூர் மற்றும் வேலூர்க் கோட்டை பற்றி முன்பே அறியப்பட்ட வரலாற்றை நாம் நினைவுபடுத்திக் கொள்ளலாம்:-

| | | |
|---|---|---|
| கி.பி. 907-55 | : | படுவூர்க் கோட்டத்துப் பங்கல நாட்டைச் சேர்ந்தது வேலூர் என்பதற்கு, முதலாம் பராந்தகச் சோழன் கல்வெட்டில் சான்று உள்ளது. |

| | | |
|---|---|---|
| கி.பி. 962-63 | : | பாலாஜிமலைக் கல்வெட்டால், சோழப் பேரரசு மீது படையெடுத்த இரட்ட (இராட்டிரகூட) மன்னனான மூன்றாம் கிருஷ்ணன் வசம் வேலூர் சிலகாலம் இருந்தது. |
| கி.பி. 13 | : | பத்ராசலத்திலிருந்து வந்த பொம்மி ரெட்டி, வேலூர்க் கோட்டையைக் கட்டியதாகச் செவிவழிச் செய்தி |
| கி.பி. 14 | : | வேலூரைச் சம்புவராயர்கள் ஆண்டனர். |
| கி.பி. 16 | : | வேலூர்க்கோட்டை கட்டப்பட்ட காலம் என்ற பிற்கால ஆய்வாளர்கள் கருதுகின்றனர். |
| கி.பி. 16-17 | : | வீரப்ப நாயக்கன், அவர் மகன் சின்னபொம்மு நாயக்கன், சின்னபொம்மு நாயக்கனின் மகன் இலிங்கம நாயக்கன் ஆகியோர் ஆண்டனர். |

| | | |
|---|---|---|
| கி.பி. 1615-க்குப் பின் | : | விஜயநகர அரசுக்குத் தலை நகராக வேலூர் விளங்கியது. |
| கி.பி. 1615-க்குப் பின் | : | விஜயநகர அரசர் இரண்டாம் ஸ்ரீரங்கராயன் மற்றும் குடும்பத்தார் அனைவரும் வேலூர்க் கோட்டையில், குடும்பப் பூசல் காரணமாக, படுகொலை செய்யப்பட்டனர். |
| கி.பி. 1628 | : | சிவாஜி வேலூர்க் கோட்டையைப் பிடித்தார். |
| கி.பி.1642-49 | : | மூன்றாம் ஸ்ரீரங்கராயர் காலத்தில், பிஜப்பூர் சுல்தானின் படைகள் வேலூரை முற்றுகை இட்டன. |
| கி.பி. 1724 | : | நிஜாம் உல் முல்க் ஆசப் ஜாவின் சிற்றரசன் சாதத்துல்லாகான் வேலூரை ஆண்டான். |

| | | |
|---|---|---|
| கி.பி. 1740 | : | கர்நாடக நவாபான தோஸ்த் அலியின் மகன் சப்தர்அலி தலைநகரை ஆர்க்காட்டிலிருந்து வேலூருக்கு மாற்றினான். |
| | | - முர்த்துசா அலி வேலூரை ஆண்டான். |
| கி.பி. 1780-81 | : | ஐதர்அலி வேலூரை முற்றுகை போட்டார். |
| கி.பி. 1799 | : | திப்புவின் மனைவி மக்கள் வேலூர்க் கோட்டைக்குள் சிறை வைக்கப்பட்டனர். |
| கி.பி. 1885 | : | வேலூர் ஆங்கிலேயர் வசம் போனது. |

இத்தகைய வரலாறு கொண்ட வேலூர் பற்றி நம் சுவடியும் மேலும் சில வரலாற்றுச் செய்திகளை நல்குகிறது. நம் சுவடி கூறும் வரலாறு கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வேலூர் வரலாறு ஆதல் வேண்டும்.

வேலூர், வ.ஆ. மாவட்டத்தில் உள்ள ஊராகும்; இராயவேலூர் என்பதும் இதுவே.

'ஆற்காட்டுப் பூர்வீகச் சரித்திரம்' என்று இங்கு பதிப்பிக்கப்பட்டுள்ள சுவடி சில வரலாற்றுச் செய்திகளை நல்குவதாகும்.

ஆற்காடு தொண்டைமண்டல வரலாற்றில் ஒரு பெரும் இடத்தைப் பெற்றுள்ளது.

அமீர்கான் என்பவர், பிஜப்பூர், கர்நாடக அரசராக ஆனகாலத்தில், கடப்பா நவாப், சேரா நவாப், ஆற்காட்டு நவாப் என்று தனித்தனியாக நவாப்புகள் (Nawabs) குறிப்பிடப்படலாயினர்; அதற்கு முன் 'ஆர்க்காட்டு நவாப்' என்று வரலாற்றில் தனித்துக் கூறப்பட்டதில்லை.

ஔரங்கசீபின் 'வாசிர்' (Wazir), நுஸ்ரத் ஜங் என்பவரே ஆற்காட்டை ஏற்படுத்தியதாக, துசுக்-இ-வாலாஜா என்ற பாரசீக மொழி நூல் (அ.கீ.சு.நூலக வெளியீடு) கூறுகிறது. வாசிர் என்றால், பிரதிநிதி என்பது பொருள்.

ஆசிப்ஜா என்ற ஹைதராபாத் நிஜாம் (Nizam) காலத்தில் ஆற்காட்டு வரலாறு சூடு பிடிக்கிறது. அவரால் நியமிக்கப்பட்ட ஆற்காட்டு நவாபே அன்வருதீன். இவரைத்தான் ஆம்பூரில், டியூப்ளே (பிரஞ்ச் கவர்னர்)யும், சந்தாசாகிபும் கொன்றுவிடுகின்றனர். அன்வருதீனின் மகன் முகமதுஅலி திருச்சிக் கோட்டைக்குள் ஒளிந்துக்கொள்கிறான்; பிறகு முகமது அலிக்கு உதவ முன்வந்தார், இராபர்ட் கிளைவ் என்ற ஆங்கிலேய கவர்னர். இராபர்ட் கிளைவ் ஆற்காட்டை முற்றுகையிட்டு, சந்தா சாகிபைத் தோற்கடித்தார். இதைத் தொடர்ந்து, சந்தா சாகிபும் கொல்லப்பட்டார். சந்தாசாகிபின் முடிவு, இவ்வாறு தொண்டைமண்டலத்தில் நடந்தேறியது.

ஆற்காட்டின் வேறு பக்கத்தையும் இங்கு சிறிது குறிக்கலாம். ஐதர் அலி (1722 - 1782), 1780-இல் ஆற்காட்டை முற்றுகையிட்டுக் கைப்பற்றினார். கைப்பற்றியபோதும், கைப்பற்றிய பின்னரும், மக்கள் பட்டதுன்பங்கள் மிகுதி! “எப்போது ஆங்கிலேயர் வந்து இவரிடமிருந்து காப்பாற்றுவர்?” என்று ஆற்காட்டு மக்கள் ஏங்கியதாக் கூறுகிறது கர்நாடக ராஜாக்கள் சவிஸ்தார சரித்திரம் என்ற அ.சீ.சு நூலகச் சுவடி. (இச்சுவடி அ.கீ.சு.நூ. வெளியீடாகவும் வந்துள்ளது).

ஐதர்அலி, ஆற்காட்டை மட்டுமல்லாது, அக்கம்பக்கப் பகுதிகளையும், வேலூர், செஞ்சி, பெருமுக்கல் பகுதிகளையும் பிடித்ததாகச் 'சவிஸ்தார சரித்திரம்' தெரிவிக்கிறது.

ஐதர் பிடித்த ஆற்காடு, பிறகு ஆங்கிலேயர் வசமானது; ஆங்கிலேயர், அதை மீண்டும் ஆற்காடு நவாபிடம் கொடுத்துவிட்டு, வருடத்திற்கு இவ்வளவு தொகை கப்பம் என்று பெற்றுக்கொண்டனர்.

ஐதர்அலியின் ஆற்காட்டு முற்றுகை மற்றும் சில போர்களுக்கு, அவரின் மகன் திப்புசுல்தான் (1753-1799) உதவினார்.

ஆர்க்காட்டுப் பூர்வீகச் சரித்திரம் எனும் இச்சுவடி (டி.3813) குறிக்கும் ஊர்கள் யாவும் உண்மையில் இப்போதும் வழங்கி வருபவையே. குடிமல்லூர் என்று சுவடி கூறும் ஊர் இப்போது, வடஆற்காடு மாவட்டத்தில், ஆற்காட்டுக்குக் கிழக்கே இருக்கிறது, விஷாரம் என்ற ஊர், இதே மாவட்டத்தில், வேலூருக்கும் இராணிப்பேட்டைக்கும் இடையே இருக்கிறது. புதுப்பாடி எனும் ஊர், இதே மாவட்டத்தில், ஆற்காட்டுக்கும் வேலப்பாக்கத்திற்கும் இடையே உளது.

இந்த ஆற்காட்டுப் பூர்வீகச் சரித்திரம் எனும் சுவடியில், புராணக்கதைகள் தொடர்பான வரலாறே நமக்குக் கிடைக்கிறது.

புராணக்கதை எந்த ஊருக்குக் கூறப்படுகிறதோ, அந்த ஊர் பழைமை வாய்ந்த ஊர் என்று பொதுவாக எடுத்துக்கொள்ளலாம்.

ஆற்காட்டுப் பகுதியில், இன்றும் இசுலாமியர் அதிகமாக இருப்பதற்குக் காரணத்தை இச்சுவடி நமக்குத் தெளிவாக்குகிறது.

அஃதாவது, வடக்கே இருந்து பல இசுலாமியக் குடிகள் கொணரப்பட்டு, குடியேற்றப்பட்டதே காரணம். மேலும், இசுலாமியர் ஆட்சியில், பிற இனத்தவர்கள் சொந்தமாகப் பெரிய வீடுகள் கட்டுவதற்கு அனுமதி இல்லை என்ற பேருண்மையை இந்தச் சுவடி சாற்றுகிறது; இது புதிய செய்தியாகும்.

'அழிபடைதாங்கி பௌத்த ராசாக்கள் கைபீது' (டி.3814) எனும் தாட்சுவடி, அழிபடைதாங்கி (வ.ஆ.மா.) எனும் ஊர்ப் பகுதிகளில் பௌத்தமதத்துச் சிற்றரசர்கள் ஆண்டதைக் காட்டுகிறது. பொதுவாகவே, தொண்டைமண்டலத்தில் சமணரும் பௌத்தரும் வாழ்ந்து வளர்ந்துளர். சென்னையை அடுத்த எட்டியம்பாக்கம்

என்னும் ஊரில் புத்தரின் நின்றநிலைச் சிலை (கல்லால் ஆனது) ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத் தக்கதே.

இந்த அழிபடைதாங்கி வரலாற்றுச் சுவடி, தமிழக் கல்வி (Education in Ancient Tamil Nadu) இயலில் சில இன்றியமையாத செய்திகளை வைக்கிறது.

அஃதாவது, சமணர்கள்கூடத் தங்கள் பிள்ளைகளைப் பௌத்தர்களிடம் அனுப்பி, காவியங்கள், தர்க்கங்கள், தர்ம சாத்திரங்கள் முதலியவற்றை ஓதச் செய்வார்களாம். அந்த அளவுக்கு ஒரு காலகட்டத்தில் பௌத்தத் துறவிகள் பேரரசர்களாக விளங்கித் தமிழகக் கல்விக்குச் சேவை புரிந்துள்ளனர், வடவர்களும் தமிழகம் வந்து மேற்படி நூற்களைப் படித்துச் சென்றதாக இச்சுவடி பேசுவது குறிப்பிடத்தக்கதே. தமிழகம், இந்தியா முழுமைக்கும் அறிவின் ஊற்றாக விளங்கியதற்கு இது சான்று அல்லவா?

பல்லாவரத்துக் கைபீதில் (டி.2805), சென்னை சைதாப்பேட்டை வட்டத்தைச் சேர்ந்த (செங்கை மாவட்டம்), பல்லாவரம் என்ற ஊரின் வரலாறு பேசப்படுகிறது. சமணக் குறும்பன் ஒருவன் அந்நாளில்

இப்பகுதியை ஆண்டதாகச் சுவடி தெரிவிக்கிறது; பல்லன் என்பது அச்சமணக் குறும்ப அரசனின் பெயர் என்றும் சுவடி பேசுகிறது. இந்தச் சுவடி மேலும் ஒரு பழைய தமிழ் அம்சத்தைத் தருகிறது. அஃதாவது, விடுகதை போல, சாடை பேசும் முறையில், ஒருவர் கருத்தை மற்றவருக்கு மறைவாகப் புலப்படுத்துவதில் தமிழ்மக்கள் வல்லவர்கள்! இந்தத் தமிழ்ப்பண்பாடு இப்போது மறைந்துவிட்டது எனலாம். கருத்துச் செறிவும், மொழி வளமும் இந்தச் சாடைமொழியில் இருக்கும். ஒரு பூவாணிச்சி மூலமாக ஒரு காதல் செய்தியைத் தலைவன் தலைவிக்குச் சொல்லியனுப்புகின்றான்; அதற்கு தலைவி, தனது பதிலை மறைமுகமான கூற்று மூலம் அனுப்புகிறாள்! இந்நூலுள்ளே படித்தால் உங்களுக்கு நன்கு விளங்கும். மிகச் சிறந்த நாடகப்பாணியில் இச்சுவடி செல்கிறது.

இந்தச் சுவடியின்படி, பல்லாவரப் பகுதியை ஆண்ட காலிங்கன் என்ற சமணக் குறும்ப மன்னனின் மகள் மீது, சோழன் ஒருவனின் மகன் காதல் கொண்டான்; காதலை நிறைவேற்ற உதவியவன், சோழனின் மந்திரியின் மகன். இந்த இருவரிடையே நடக்கும் காதல் தொடர்பான, மேலே கண்ட, செய்திப் பரிமாற்றங்கள், மிகவும் அருமையான முறையில் நம் கலாச்சார வரலாறு

பகரவல்லன!'மாமலைபுரம் கையீது' (டி.3181) என்பது மகாபலிபுர வரலாறே.பல்லவர் சிற்பக் கலைக்கு உலகப்புகழ் பெற்ற இடம் மகாபலிபுரம்; சென்னையை அடுத்து அமைந்தள்ளது இவ்வூர். கடற்கரையில் அமைந்துள்ள இவ்வூர் மிகப் பழைய ஊராகும். மிகப்பழங் காலத்திலிருந்தே இங்கு கப்பல்கள் வாணிகத்திற்காக வந்து இறங்கின என்பது வரலாறு. இக்கூற்றை நன்கு நிறுவும் வகையில் அண்மையில் வெள்ளிமுலாம் பூசிய சதுரவடிவக் கிரேக்க நாணயம் ஒன்று மகாபலிபுரத்தில் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த நாணயம் கி.மு. 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இன்றும், மகாபலிபுர மீனவர்களுக்கு அவ்வப்போது இதுபோன்ற பழம் பொருள்கள் மகாபலிபுரக் கடற்கரையில் கிட்டுகின்றன. அவர்கள் அவற்றைப் பழம்பொருள் வாங்குவதற்கென்றே இருக்கும் வியாபாரிகளிடம் விற்றுவிடுகின்றனர். அப்பழைய பொருள் வியாபாரிகள் அவற்றை நல்ல விலை தரும் வெளிநாட்டு வியாபாரிகளுக்கு விற்றுவிடுகின்றனர். இது வாடிக்கையாக மகாபலிபுரத்தில் நடந்துவருகிறது.

மல்லேசுவரன் என்ற மன்னன், மகாபலிபுரப் பகுதியை முன்பு ஆண்டதாக இங்கே பதிப்பிக்கப்பட்டுள்ள நம் தாட் சுவடி

நவில்கிறது. மகாபலிபுரக் கடற்கரையில் ஸ்தலசயனச்சுவாமி கோயில் ஏற்பட்ட வகையைப் புராண வழியில் விளக்குகிறது இச்சுவடி. இவற்றில் உள்ள உருவகங்களை நாம் களைந்து உண்மையை ஆய்ந்தெடுக்க வேண்டும்; இவ்வகையில் ஓர் ஆதாரச் சுவடியாக இது (டி.3181) பயன்படும்.

திருக்கழுக்குன்றக் கையீது (டி.3182), சென்னையை அடுத்த திருக்கழுகுன்ற வரலாற்றைச் சுட்டுகிறது.

திருக்கழுக்குன்றம் எனும் மலைத் தலம், செங்கை மாவட்டத்தில், செங்கற்பட்டு வட்டத்தில், திருக்முக்குன்றம் எனும் தனி உள்வட்ட ஊராக உள்ளது. இந்த மலைக்கோயிலுக்கு ஆதிசைவர்களாகிய பிராமணர்கள் அர்ச்சகர்களாக வ்நத வகையை ஒருவாற்றான் இச்சுவடி விளக்குகிறது. ஒரு சோழ அரசனே, ஆதிசைவப் பிராமணர்களைக் கோயில் அர்ச்சகர்களாக ஆக்கியுள்ளான். அதற்குமுன், பிராமணர் அல்லாதாரே திருக்கழுக்குன்றக் கோயிலுக்கு அர்ச்சகர்களாக இருந்திருக்கவேண்டும்; எனவே, இச்சுவடி, கோயில்களில் பிராமணர் அல்லாதார்களைப் பிராமணர்கள் வெளியேற்றிய ஒரு நிலையைக் குறிக்கும் இன்றியமையாத சுவடியாகலாம்.

இச்சுவடியில், இசுலாமிய அரசர்கள் தமிழகத்தை படையெடுத்தபோது இந்துக் கோயில்களை இடித்தது இந்துக்கோயில் மண்டபங்களை மசூதியாக்கியது ஆகியவற்றுக்குச் சான்றுகள் உள்ளன.

திருக்கழுகுன்ற வரலாறு பகரும் இச்சுவடியில், இவ்வூர்க் கோயிலில் நடக்கும் விழாக்கள் மாதம் வாரியாகத் தரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| ஆவணி | - | விநாய சதுர்த்தி |
| புரட்டாசி | - | நவராத்திரி |
| ஐப்பசி | - | கந்தர் சஷ்டி |
| கார்த்திகை | - | கார்த்திகை தீபம் |
| மார்கழி | - | மாணிக்கவாசகர் உவா |
| தை | - | பொங்கல் |
| மாசி | - | சிவராத்திரி |
| பங்குனி | - | உத்திரம் |
| சித்திரை | - | பிரம்ம உற்சவம் |
| வைகாசி | - | வசந்த உற்சவம் |
| ஆனி | - | கொன்றையடி உற்சவம் |

கோயில் விழாக்கள் பல இச்சுவடியில், நாள்வாரியாகவும் விளக்கப்பட்டுள. தமிழகக் கோயில் வரலாறு பற்றி ஆய இச்சுவடி பெரிதும் பயனாகும்.

தொண்டைநாட்டில் கோயில்களுக்குக் குறைவில்லை; பல்லவர்களால் பல கோயில்கள் இத் தொண்டைமண்டலத்தில் எழும்பியுள. இராஜசிம்ம பல்லவனால் காஞ்சிபுரக் கைலாசநாதர் கோயில் எழுந்தது குறிப்பிடத்தக்கது. பல்லவர் ஆட்சிக் காலமான கி.பி 8ஆம் நூற்றாண்டை ஒட்டிய காலத்தில்தான் தமிழகக் குடவரைக் கோயில்கள் உருவாயின என்றும் கூறுப.

தொண்டை மண்டலத்தின் முக்கிய ஊரான சென்னை பற்றிய மெக்கன்சியின் சுவடி எதுவும் குறிப்பிடத் தக்கவாறு இல்லை. எனவே, சென்னை தொடர்பாகச் சில அரிய வரலாற்றுச் செய்திகளைச் சிறிது இலண் காணலாம்.

கி.பி. 17,18 ஆம் நூற்றாண்டுகளில் சென்னைப் பகுதியின் பல ஊர்களை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆண்டுவாடகைக்கு (Lease) வாங்கியுள்ளனர். முதலில் ராயலகாரு என்ற, சந்திரகிரியின் தெலுங்கு அரசரிடம், அவருக்குப் பரிசுகள் அளித்து, ஆண்டுக்கு இத்தனை பகோடா (Pagoda) என்ற வாடகையின் பேரில் மக்ராஸ்

குப்பத்தை வாங்கினர். (இதுவே தற்போதைய Madras). பிறகு அதே அரசரிடம் சென்னம் நாயக் குப்பம் வாங்கப்பட்டது (இதுவே சென்னைப் பட்டணம்).

பிறகு, இதே சந்திரகிரி அரசரின் ஆட்சி கவிழ்ந்து, கர்நாடக நவாபுகளின் கீழ் சென்னைப்பகுதி முழுவதும் வந்தது.

ஆங்கிலேயர், கர்நாடக நவாபுகளிடம் (சாததுல்லாகான், தானாஷா, ஷாஹா மத் ஜங் பகதூர் முதலியோர் ஆட்சிக் காலங்களில்) வாடகை அடிப்படையில் கி.பி. 18 ஆம் நூற்றாண்டில்,

எக்மோர் (Egmore)
வெப்பேரி (Vepery)
திருமால்கதி(திருவல்லிக்கேணி)
மயிலாப்பூர்
நுங்கம்பாக்கம்
'செயின்ட் தாமஸ் மவுண்ட்'

மற்றும் பல பாகங்களை, ஆண்டு வாடகைக்குப் பெற்றனர்.

கி.பி. 1750 இல், நவாப் முகமதலிகான் பூந்தமல்லிப் பகுதி முழுவதையும் ஆங்கிலக் கம்பெனிக்கு வாடகைக்கு விட்டார்.

இதைப் போலவே, காஞ்சிபுரம் பகுதி முழுவதையும், கி.பி. 1763 இல் இதே முகமதலிகான் வாடகைக்கு (ஆண்டு ஒன்றுக்கு 4 இலட்சம் பகோடா) ஆங்கிலக் கம்பெனிக்கு விட்டார்! (Nurhan's Tuzuk-i- Walajahi (1934)).

மேலே குறிப்பிடப்பட்டுள்ள துசுக் இ-வாலாஜாஹி என்ற நூலில், ஆறும் காடும் சேரும் இடத்தில் அமைந்துள்ளதால், அவ்வூர் ஆற்காடு என்று அழைக்கப்பட்டது என்று எழுதப்பட்டுள்ளது. இங்கு பதிப்பிக்கப்பட்டுள்ள மும்மண்டலப் பண்டைய மன்னர் வரலாறு எனும் சுவடியிலும் இதே செய்தியே தரப்பட்டுள்ளது. 'ஆறு' என்பது பாலாற்றைக் குறிக்கும்.

ஆனால், தற்கால ஆய்வாளர்கள் ஆர் என்ற மரம் நிறைந்திருந்ததால், ஆர்க்காடு என்று ஆகி, பின்பு ஆற்காடு ஆனது என்று கருதுகின்றனர். இந்தக் கருத்தே சரியானதாகலாம்.

இவ்விதமாக, தொண்டைநாடு தமிழகப் பண்பாட்டில் மிக இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது. தொண்டைநாட்டு வரலாறு மிகப் பழங்காலத்திருந்தே - வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திருந்தே தொடங்குகிறது. சென்னையை அடுத்த பூண்டி நீர்த்தேக்கம் அருகே தொல்மனிதன் வாழ்வுக் கண்காட்சிக் கூடம் தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் உள்ள ஆரணி வட்டத்தில் துருகம்மலை என்று ஒரு மலை இருப்பதாகவும், அதில் உரல்கள் செதுக்கப்பட்டிருப்பதாகவும், பழங்கால மக்கள் ஆண்டு வாழ்ந்த அடையாளங்களை இருப்பதாகவும் அண்மையில் கண்டறிந்துள்ளனர்.

மேனாட்டார் தமிழகத்தில் முதன் முதலாகக் கற்கால ஆயுதங்களைக் கண்டுபிடித்தது தொண்டை நாட்டில்தான் என்பதும் ஈண்டு குறிப்பிடத் தக்கதே.

கி.பி. 1-2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பௌத்தச் சிற்பத் தொகுதி, சென்னை திருவல்லிக்கேணி எல்லையம்மன் கோவிலில் உள்ளதாக அறியப்பட்டுள்ளது. (தினமலர் 07-01-93).

ஈராளச்சேரி (வ.ஆ.மா., காவேரிப்பாக்கம் அருகே உள்ள ஊர்) எனும் ஊரில் கி.பி. 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மகாவீரர் சிற்பங்கள் தற்போது ஆற்காடு அருங்காட்சியகத்தில் உள்ளன (தினமலர் 07-12-95).

கி.பி. 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மகாவீரர் சிற்பம் அமராபுரம் (வ.ஆ.மா.,) என்ற ஊரில் எடுக்கப்பட்டு, தற்போது

இது ஆற்காட்டு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. (தினமலர் 07-12-95).

2000 ஆண்டுகளுக்க முன் மக்கள், திருவேற்காட்டில் (சென்னை அருகே) வாழ்ந்தற்கான ஆதாரங்கள் (உறை கிணறு, செங்கற்கள், பானை ஓடுகள்) கிடைத்துள்ளன. (தினமலர் 01-01-94).

தமிழகச் சாதி வரலாற்றில், சில சாதிகள் (செட்டியார், மற்றும் சில) பற்றி ஆயும் போது, அவையெல்லாம் தொண்டைநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து, சோழ பாண்டிய நாடுகளுக்குச் சென்றதாக வழிவழியாகக் கூறிவருகின்றனர்.

அ.கீ.சு. நூலகத்தில் உள்ள மெக்கன்சியின் சுவடிகளில் தொண்டைநாடு தொடர்பான சாசனங்கள் பல உள. இவை யாவும் நூலக வெளியீடான தென்னிந்திய கோயிற்சாசனங்கள் என்ற தலைப்பில் வெளிவந்துள (3 தொகுதிகளில் 4 நூற்கள்); மேலும், தொண்டை மண்டல வரலாறு பேசும் வேறு சில மெக்கன்சியின் சுவடிகள், இத்தொகுப்பில் இடம் பெறாதும் உள்ளன.

தொண்டைமண்டல வரலாறுதரும் நோக்குடன் இத்தொகுப்பு இங்கு பதிப்பிக்கப்பெற்றாலும், இத்தொகுப்பு தமிழகத்தின் பிற பகுதி

வரலாறுகளையும் அறிய உதவுவதாகும். கீழ்வரும் வரலாற்று மாந்தர்கள் பற்றி குறிப்புகள் இங்கு பதிப்பிக்கப்பட்டுள்ள சுவடிகளில் உள்ளன:-

சேதுபதிகள்

குறும்பர்கள்

சோழர்

பாண்டியர்

வெள்ளாளர்

மறவர்

தேவர்

ஆனைகுந்திராயன்

அழகாபுரிராயன்

தனுக்காத்த சேதுபதி

இராயர்கள்

கொட்டியம் நாகம நாயக்கன்

வயிராவி

சடைக்கத்தேவன்

அறிக்கைக்காரர்

முகவூரணிச்சேதுபதி

வன்னித்தேவன்

கன்றுமேக்கி உடையான்

நளச்சக்கரவர்த்தி

மங்கம்மாள்

வங்காரு திருமலைநாயக்கர்

வடுகர்கள்

செவ்வப்ப நாயக்கன்

முப்பத்திரண்டு பாளையக்காரர்

நாகமநாயக்கன்

விசுவநாத நாயக்கன்

விசயராகவ நாயக்கன்

இராமப்பய்யன்

சந்தாசாகிபு

கீழ்வருமாறு பலப்பல பொதுப் பொருள்களும் இங்கு பதிப்பிக்கப்பட்டுள்ள சுவடிகளில் பயிலுகின்றன:-

மரத்தின் கீழ் பஞ்சாயத்து

பாளையம்

மண்கோட்டை

கற்கோட்டை

ஆராய்ச்சிமணி

ஆறில் ஒரு பங்கு வரி

நாடக சாலை

சீமை

மண்டலம்

தொண்டைக் கொடி

குரான்

முகத்துவாரம்

ருசு

கீழ் வருவன போன்ற பல கோட்டைகள் இங்குள்ள சுவடிகளில் பயின்றுவருகின்றன:-

பாளையங்கோட்டை

சாக்கைக்கோட்டை

திருக்காட்டுப்புளிக் கோட்டை

பந்தல்லூர்க் கோட்டை

வல்லத்தூர்க் கோட்டை

திருச்சிராப்பள்ளிக் கோட்டை

நாமக்கல்கோட்டை

கருவூர்க்கோட்டை

திண்டுக்கல் கோட்டை

இனி, மெக்கன்சியின் ஆவணங்கள், மற்றும் பிற ஆவணங்களிற் காணப்படும் கலைச்சொல் விளக்கம் குறித்தும் சிறிது இவண் பேசலாம்:-

## கலைச் சொற்கள் – விளக்கம்

| | | |
|---|---|---|
| சண்டை குடுத்தார் | - | சண்டையிட்டார் |
| தண்டு | - | படைகள் |
| ராணுக்கள் | - | படைகள் |
| முத்திக்கை | - | முற்றுகை |
| கிலமாப்போச்சு | - | அழிவுற்றது |
| சீர்மை | - | சீமை |
| ஜாகீர் | - | சேவையைப் பாராட் அரசு அளித்த மானியம் |
| ருசு | - | சான்று (Proof) |

| | | |
|---|---|---|
| அனுமடால் | - | அனுமக்கொடி (கொடியில் அனுமான் படம் போட்டிருக்கும்) |
| கருடடால் | - | கருடக் கொடி |
| அண்டத்துமணி | - | குதிரையின் இரு முதுகுப் புறங்களிலும் தொங்கவிடப் பட்ட மணிகள் |
| சல்லி | - | குதிரை நெற்றியில் காசுகளைக் கோர்த்துக் கட்டப்பட்ட அணி |
| மசுபதி | - | மசூதி (Mosque) |
| நடபாவி | - | உட்பக்கம் இறங்கி நீரெடுக்க ஏற்றவாறு படிகள் அமைக்கப்பட்ட கிணறு |
| சாயபு | - | சாகிப் (Sahib) |
| தாவதுகான் | - | தாவூத்கான் (Dawud Khan) |
| சுலுப்புக்கான் | - | சுல்பிகான் (Sublfi Khan) |
| அப்பணை | - | ஆணை (Order) |
| சுபா | - | மாநிலம் (Province) |
| பெனுகொண்டை | - | பெனுகொண்டா (Benugonda) |
| இருக்கப்போகாது | - | இருக்க இயலாது |
| சலாபத்து | - | மகிழ்ச்சி, சுதந்திரம் |

| | | |
|---|---|---|
| அமில்தார் | - | வரிமுதலியன வசூலிக்கும் வருவாய் அதிகாரி (Revenue Officer) |
| அல்லா ஏறினார் | - | சண்டையிட்டார் |
| குமுக்கு | - | படை |
| பாளையம் | - | கூடாரம் (Camp) |
| தண்டு | - | படை |
| அந்தமேரை | - | அதன்படி |
| தோப்பா | - | பரிசு, கப்பம் |
| முஸ்தீபு | - | ஏற்பாடு |
| பந்தோபஸ்து | - | பாதுகாப்பு |
| பர்மானா | - | ஆணைக்கடிதம் (Order Letter) |
| செனம் | - | சனம் (People) |
| கில்லேதார் | - | கோட்டைக்காவலர் |
| கும்பினி | - | கம்பெனி (Company) |
| கும்பினியார் | - | கிழக்கிந்தியக் கம்பெனி நடத்திய ஆங்கிலேயர் |
| லாட்டு | - | லார்டு (Lord) |
| சென்னல் | - | ஜெனரல் (General) |
| சாதுலகான் | - | சாதத்துல்லாகான் (Sadattulla Khan) |

| | | |
|---|---|---|
| சந்தாகான் | - | சந்தா சாகிபு (Chanda Sahib) |
| திருசுரபுரம் | - | திருச்சி |
| உலாந்தர் | - | ஹாலந்து நாட்டவர் |
| பியாதாக்கள் | - | காலாட்படைகள் |
| தைனாத் | - | இருப்பில் வைத்து (Reserve) |
| தஸ்தா | - | பிரிவு (Batch) |
| தோப்கானா | - | பீரங்கி |
| தமாம் | - | மொத்தம் |
| சர்தாரிகொடுத்து | - | தலைமைதாங்கி |
| கதர் (Ghadar) | - | போர்நிலை |
| பௌசுதாரர் | - | படைவீரர் |
| ஆஷாம் | - | சுடும் சண்டை |
| ஜெண்டாபோட்டார் | - | கொடி நாட்டினார் |
| கடதாசி | - | தாள் |
| புடிதீசுகாரர் | - | பிரிட்டிஷ்காரர் |
| கப்பித்தான் | - | கேப்டன் (Captain) |
| தசத்தா குதிரை | - | பழக்கப்படுத்திய குதிரை |
| தபேலா குதிரை | - | போர்க் குதிரை |
| சாயா குதிரை | - | கோட்டைக் காவற் குதிரை |
| பேடாவிடுதல் | - | படைதங்கும் கூடாரத்தின் அருகே வரிசையாக நிறுத்துதல் |

| | | |
|---|---|---|
| புருசுகள் | - | கோட்டையின் காத்தளங்கள் |
| சோனகர் | - | இசுலாமியர் |
| கவுல் | - | ஒப்பந்தம் (Treaty) |
| புருஷம் | - | கைமேலே தூக்கிய நிலையில், கைநுனியிலிருந்து பாதம் வரை உள்ள அளவு |
| சில்வானம் | - | சொச்சம் (and odd) |
| காமாட்டி | - | மண்தோண்டுவோர் |
| தரியாபத்து | - | தரியாப்து (விசாரணை) |
| இஸ்திரி | - | ஸ்திரீ (பெண்) |
| நாளையில் | - | ஆட்சிக் காலத்தில் |
| அரண்மனை வாரம் | - | அரண்மனைக்குத்தர வேண்டியவரி |

இவ்வகையான ஆவணக் கலைச் சொல்லகராதி ஒன்று தமிழில் செய்யப்படவேண்டும்.

- முனைவர் சு. சௌந்தரபாண்டியன்
எம்.ஏ.(தமிழ்), எம்.ஏ.(ஆங்), பி.எட்.,டிப்.வ.மொ., பி.எச்.டி.,
காப்பாட்சியர்,
அ.கீ.சு. நூலகம்,
சென்னை-5.

# மெக்கன்சின் சுவடிகளில் பதிப்புச் சிக்கல்கள்


- முனைவர் சு. சௌந்தரபாண்டியன்,
காப்பாட்சியர்,
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்,
சென்னை-5

கர்னல் காலின் மெக்கன்சி (1754-1821) என்ற ஸ்காட்லாந்து நாட்டவர் தமிழகத்தின் பல்வேறு பாகங்களிலிருந்து தொகுத்த ஓலை மற்றும் நாட்சுவடிகளைப் பதிப்பிப்பதில் பல சிக்கங்கள் எழுகின்றன.

1.  = ஓரிடத்தில் எழுதப்பட்டிருந்தது. இதை எப்படிப் படிப்பது? எப்படிப் புதிப்பிப்பது? மேலே, இந்தக் குறியீடு 'பட்டணம்' என்று வந்ததால், இந்தக் குறியீடு 'பட்டணம்' என்றசொல்லே எனத் தெரிய முடிந்தது.


2.  இந்தக் குறியீடுகள் எதைக் குறிக்கின்றன?

நமக்குத் திகைப்பு ஏற்படுகிறது. எப்படி, பதிப்புப்பணியில் மேலே செய்வது? 'வகை' என்ற சொல்லுக்கு ஈடாக இந்த இரு குறியீடுகளும் மெக்கன்சி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள. "ஆறு அப்பகுதியில் பாய்ந்த யில்" என்று எழுதப்பட்டுள்ளது.

3.  = இதற்கு என்ன பொருள்? 'சம்' என்ற சொல்லைச் சுட்டுகிறது. உத்தேசம் என்று எழுத, '' என எழுதப்படுகிறது.

4.  = இது 'னு' அல்லது 'னும்' ஆகும்.


5.  = இதற்குப் பொருள் எளிதில் விளங்குகிறதா? இல்லை! 'நஞ்சை' என்ற சொல்லைச் சுட்டுகிறது இது. ' நிலம் விளைச்சல்' என்றால், நஞ்சை நிலம் விளைச்சல் என்பது பொருள்.


6.  = இவை எதற்கு ஈடாக நிற்கின்றன? 'புஞ்சை' என்ற சொல்லுக்கு ஈடாக நிற்கின்றன. '' என்றால், புஞ்சை நிலம் 5 குழி என்பது பொருள்.

7.  = இஃதுஎன்ன? 'குழி' என்ற சொல்லின் சுருக்கம் இது, ' நிலம்' என்றால் ஒரு குழி நிலம் என்று படிக்க வேண்டும்.

8.  = இஃது எதைச் சுட்டுகிறது? மேலே 'புஞ்சை' என்பதற்கு இதே குறி பயன்பட்டதைப் பார்த்தோம்; ஆனால், '' என்று எழுதப்பட்டுள்ள முறையில், அதே 'புஞ்சை' என்ற பொருளை நாம் கொள்ள இயலவில்லையே. இங்கே, 'க்கி' என்ற எழுத்துக்களை இக்குறியீடு சுட்டுகிறது; மேற்சொல்லை, 'சுக்கில பட்சம்' என்று படிக்கவேண்டும்.

9.  = என்ன சொல் இது? 'பாக்கம்' ஆகும்;  என்ற குறியீடு, 'க்க' ஆகும்;  - இது கிரந்த எழுத்தில் ' ம் ' ஆகும். இக்கிரந்த மகரத்தை அடிக்கடி சுவடிகளில் பயன்படுத்துகின்றனர்.

வீக்கம் - 


தூக்கம் - 

கலக்கம் - 

என்றெல்லாம் எழுதக் காண்கிறோம்

10.  = இதற்கு என்ன பொருள்?

‘முதல்’ அல்லது ‘முதலில்’ என்றபொருளில் இக்குறியீடு எழுதப்படுகிறது. கிழக்கு  மேற்கு வரை’ என்றால், இங்கே, ‘கிழக்கு முதல்’ என்று படிக்க வேண்டும்.

11.  = ‘த்த’ என்பதற்கு, ‘’ என்ற அடையாளமே அனைவரும் அறிந்த அடையாளம், ஆனால் மெக்கன்சியின் சுவடிகளில், ‘’ என்ற குறியீடும் ‘த்த’ என்பதற்கு ஈடாக எழுதப்படுகிறது; ‘ந்த’ என்பதற்கும் இதே குறியீடுதான் வரையப்படுகிறது. இடனோக்கி இவ்வேற்றுமைகளை விளங்கிக் கொள்ள வேண்டும்.

12. 'மீணம்' இதை எப்படி விளங்கிக் கொள்வது? மேலே, 'மாகாணம்' என்ற சொல் வந்ததால், 'மாகா' என்பதைக் குறிக்க 'மீ' பென்படுத்தப்பட்டுள்ளது என விளங்கிக் கொள்கிறோம்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தொடர்கள் கமா போன்ற குறி எதுவும் இல்லாது, ஆங்காங்கே புள்ளி வைத்து முடிக்கப்படாமலும், தொடர்ந்து பக்கம் பக்கமாகச் சென்று கொண்டே இருப்பதுதான்! யார் என்ன செய்தார்? எவர் எதைக் கூறினார்? என்று விளங்கிக் கொள்வது சிக்கலானது. சில முறை கவனமாகப் படித்து விளங்கிக் கொண்டு, அதன் பின்னர், உரிய நிறுத்தற் குறிகளைப் பெய்து, இத்தகைய பகுதிகளைப் பதிப்பிக்க வேண்டும்.

தொடரமைப்பிலும் சிக்கல்கள் பல காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, 'என்னைப் பூசிக்குமாறு' என்று எழுத வேண்டிய இடத்தில், 'எனக்குப் பூசிக்குமாறு' என்று எழுதப்பட்டிருக்கும்! அத்தொடரைக் கண்ணுற்றதும், நமக்குப் பொருள் கொள்வதில் சிக்கல் ஏற்படுகிறது. அதை விடுவித்துவிட்டு மேலே செல்ல வேண்டிய நிலை உளது. பதிப்பிக்கும்போது, அப்படியே, 'எனக்கு

பூசிக்குமாறு' என்றுஉள்ளதை உள்ளபடியே பதிப்பிக்கவேண்டிய பொறுப்பும் உள்ளது.

இவ்வாறு இன்னும் எத்தனையோ சிக்கல்கள் மெக்கன்சியின் சுவடிகளில் உள்ளன.

மேலே கண்ட சிக்கல்கள், சுவடிகளுக்கு மட்டுமல்லாமல் பொதுவாக அனைத்து வகைச் சுவடிகளுக்கும் பெரும்பாலும் பொருந்தும் எனவும் கூறலாம்.

(அ.கீ.சு.நூ. நடத்திய சுவடியியல் பணிப்பட்டறையில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை).

# நெய்தல் – சொல்லாராய்ச்சி

- முனைவர் சு.சௌந்தரபாண்டியன்,
காப்பாட்சியர்

நெய்தல், என்ற சொல் எப்படி வந்தது?

நெய்தல் என்பது தூய தமிழ்ச் சொல்லே. நெய்கின்ற காரணத்தால், அது நெய்தல்.

நெய்வது என்றால்?

நெய்வது என்றால், நெருக்குவது, சேர்ப்பது என்று பொருள்.

நூலை ஒன்றுசேரச் சேர்த்துத்தானே ஆடை செய்கிறார்கள்? எனவே, சேர்ப்பதைக் குறிக்கும்வகையில், 'நெய்வது' என்று சொல் அமைத்தனர்.

நெய் + தல் = நெய்தல்

நெய் - பகுதி

தல் - தொழிற்பெயர் விகுதி.

நெ + ய் = நெய்

ய் - சாரியை

நெ - வேர்ச்சொல்

'நெ' எனும் வேர்ச்சொல்லுக்குச் சேர்த்தல், தூக்குதல், கூட்டுதல் என்று பொருள்கள் உள. தயிரைக் கடையும்போது தனியாக மேலே வெண்மைநிறத்தில் ஒதுங்கிச் சேர்வதால் அதற்கு வெண்ணெய் என்று பெயர் வந்தது.

இதழ்கள் நெருக்கமாகச் சேர்ந்து காணப்பட்டதால் அப்பூ, 'நெய்தல் பூ' என்று பெயர் பெற்றிருக்கவேண்டும்.

'நெசவு' என்பதும் மேலே கண்ட 'நெ' என்ற வேர்ச்சொல்லி லிருந்து வந்ததே.

இத்தகைய நெய்தல் தொழில் செய்து பழந்தமிழர் நாகரீகம் காத்த நெசவுத் தொழில் குறித்துச் சங்க இலக்கியம் பலவாறாகப் புகழ்ந்து உரைக்கிறது.

சங்க இலக்கியத்தில் நெசவுத்தொழில் என்று தனியாக ஓர் ஆய்வையே நிகழ்த்தலாம்!

# THEORY OF ANTIQUITY

- **Dr. S. Soundarapandian,**
M A., M A., B.Ed., Dip Skt., Ph D.,
Curator,
Govt. Oriental Manuscripts Library,
University Library Buildings,
Chennai - 5.

## PHILOSOPHY TO PHILOSOPHY:

Any Philosophy to work, an inducement in mind is necessary. This inducement may occur due to many reasons.

So, whon a person wonders at an antiquity, there is something in his mind which is enkindled. What is that philosophy?

## THEORY:

An antiquity is celebrated by one and all invariably because he or she associates the antiquity with

1. Passage of Time
2. Concern of Ancestors.

These two constitute the basic philosphy of our Theory.

**PASSAGE OF TIME:**

Man, since born, had been experiencing consciously or unconsciously the passage of time. He had spent a number of days in his childhood, then in his boyhood, afterwards in adulthood, so on and so forth. His feeling regarding such passage slowly forms a permanent residue in his mind.

So, whenever he happens to view a thing which is capable of arousing this feeling of time passage, his senses are awakened. Then he wonders at the object.

The very look of an antiquity, say a pot, may enkindle some academic notes in the minds of scholars; it is true. But, what about the folk? Why do they enjoy at the sight of an antiquity? This is because of our theory, namely passage of time.

Even for mind with ordinary strength, an antiquity furnishes a good figure only because of the above reason. Otherwise we may not be in a position to account for this.

## CONCERN OF ANCESTORS

While the above marked philosophy works in many cases, there are a few cases where one another element also does function. This is our 'concern of ancestors'.

When an antiquity, say a coin, is placed before a man, immediately his senses, associated with their own family members, are tickled. He begins to think, quite unconsciously, 'Oh! This was the coin, perhaps, used in the transactions of our fore father!'. Because of this feeling he gives enormous respect to the antiquity.

While, "The Passage of Time", helps to wonder at, 'concern of ancestors' functions to respect any antiquity.

These are common tendencies throughout the world.

If we don't agree with the second, we may not be in a situation to give reasons for the man's respect towards antiquities.

We can experience in our daily life the concept 'Concern of Ancestors'.

When one sees a shirt of his deceased father, his eyes just roll down tears. The same is the case with an antiquity. In case of antiquity, the degree is more and elevated

'Ancestors' in the theory donte anybody akin with whom when the man is having some soft cornor. The 'ancestor' may be a dead or alive individual.

## CONCLUSION

It is to be admitted that an antiquity may also be appreciated in regard to its pulchritude and elegance. But this is not predominent in cases of antiquities. An antiquity's merit reaches its peak only when the above mentioned theory works.

# TRADITIONAL SUBJECTS OF TAMIL MANUSCRIPTS

- **Dr. S. Soundarapandian,**
M A., M.A., B Ed., Dip.Skt., Ph.D
Curator
Govt. Oriental Manuscripts Library
*University Library Building,*
*Chepauk,*
*Chennai - 600 005.*

Tamil Nadu Government can keep its head high in pride, for it has got an unique and glorious institution preserving more than 71,000 invaluable manuscripts, both palmleaf and paper put together.

'Government Oriental Manuscripts Library', (situated on the first floor of the Madras University Library), is the institution, which is toiling and moiling to preserve the manuscripts in 14 languages including Tamil by oiling the leaves soiling the noses the workers who are coiling the the leaf bundles with thread

daily. Important dates of the chronicles of Government Oriental Manuscripts Library have been furnished below:-

| | | |
|---|---|---|
| 1783 | - | Colonel Colin Mackeazie came to India. |
| 1880 | - | Mackenzie collected Manuscripts in full swing. |
| 1800, 1804 | - | Mackenzie gathered Telugu Local Records. |
| 1803 | - | Dr.Leyden collected Manuscripts. |
| 1821 | - | Mackenzie died. |
| 1828 | - | Manuscripts were housed at Madras College Library. |
| 1828 | - | H.H.Wilson's Descriptive Catalogue of Mackenzie Manuscripts was pulished. |
| 1835 | - | William Taylor prepared Catalogue for Manu scripts. |

| | | |
|---|---|---|
| 1844 | - | Manuscripts were under the custody of Madras Literary Society. |
| 1847-1869 | - | Library was under the control of Director of Public Instruction, Madras. |
| 1855 | - | C.P.Brown's collection of Telugu and Sanskrit manuscripts took place. |
| 1858 | - | Again Manuscripts came from London were deposited at College Library. |
| 1862 | - | William Taylor's 'Oriental Historical Manuscripts' in three volumes were printed. |
| 1869 | - | Institution was organised in the proper structure under the name Government Oriental Manuscripts Library. |
| 1870 | - | Collections of Manuscripts of Mackenzie, Leyden and Brown were kept at Presidency College, Madras. |

| | | |
|---|---|---|
| 1870-1895 | - | Institution functioned at Presidency College, Madras. |
| 1878 | - | *Gustav Oppert's Catalogue for 32 volumes of Local Records was printed.* |
| 1901 | - | *Deseriptive Catalogue of Sanskrit Manuscripts* Vol.I was published. |
| 1914 | - | Government Oriental Manuscripts Library worked at Egmore Museum Campus. |
| 1916 | - | *C.O.Blagden's 'A Catalogue of Mackenzie Manuscripts' came out.* |
| 1925 | - | *A detailed G.O.running to six pages* was issued for the institution by the state Government. |
| 1938 | - | Government Oriental Manuscripts Library was brought to the premises of Madras University, *Madras-5.* |

| | | |
|---|---|---|
| *1942-1944* | - | *Government Oriental Manuscripts Library was* shifted the Venkateswara Oriental research Insitutite, Thirupati (A.P.) |
| 1945 | - | Again Government Oriental Manuscripts Library started functioning at the premises of Madras University. |

Such an institution, possesses more than 16,000 valuable Tamil manuscripts. This figure has been outdone by no other institution in the world so far. These Tamil manuscripts proclaim us interesting traditional Tamil subjects which can be listed as below:-

| **Sl.No.** | **Subject** |
|---|---|
| 1. | Philosophy |
| 2. | Medicine |
| 3. | Yogam |
| 4. | Gnanam |

5. Mantiram

6. Mantirikam

7. Alchemy

8. Lexicography

9. Niti

10. Karusastiram

11. Magic

12. Astrology

13. Stotram

14. Saivism

15. Samudrikam

16. Calliyasastram

17. Saivasiddhantam

18. Literature

19. Akapporul

20. Dictionary

21. Srivaishnavism

22. Folk song

23. Ciruprabandham

24. Ithihasam

25. Jainsism

26. History

27. Nyayasastram

28. Cosmology

29. Antati Prabandham

30. Inscription

31. Vedantam

32. Atvaita

33. Drama

34. Islamic

35. Genealogy

36. Stray-stanzas

37. Folk-drama

38. Legend

39. Story

40. Alphabet primer

41. Kaifieth

42. Astrology

43. Music

44. Dharmasastram

45. Christianity

46. Pujavidhi

47. Grammar

48. Rhetoric

49. Travel

50. Maths

51. Short Stories

52. Kaviyam

53. Silpam

54. Kanavu Sastiram

55. Prosody

56. Biography

57. Veterinary Science

58. Kamasastiram

59. Divination

60. Physiology

61. Kuravanchi

62. Prediction

63. Sarasastiram

64. Zoology

65. Veerasaivam

66. Upanisad

67. Siddha

68. Logic

# A MOVING PALANQUIN....

Colonel Colin Mackenzie's manuscripts on Tondai mandalam have been edited and published here without changing a single syllable from the original manuscript. This has been followed with a view to help and promote further researches.

The present texts of various manuscripts throw light on not only historical events about also innumerable cultural aspects of Tamil soil.

Apart from historical and cultural aspects, these texts are also important in regord to Tamil language and its development during various stages of time.

Definitely, this is a milestone in our field of manuscript study.

**Dr.S.Soundarapandiam**

M.A (Tamil),M.A.(Eng.), B.Ed, Dip.Skt.,Ph.D.
Curator
G.O.M.L.
Chennai - 5.

# 1. தொண்டை மண்டல வரலாறு
# (டி. 3927)

# ANCIENT HISTORY OF TONDAMANDLAM AND ITS EARLIER INHABITANTS CALLED VEDARS AND CURUMBAR

1. ஆதிகாலங்களிலே யுகாந்த பிரளையத்துக்குப் பிற்பாடு, யிந்த தொண்டமண்டலமானது முழுதுங் காடு மூடி, அது துஷ்ட்ட மிறுகங்களுடைய சஞ்சாரமாய்க் கிடந்தது. அந்த நாள்க்களிலே வேடர் என்று பேர் கொண்ட வேட்டைக்காரர் கிராதர் ஒருவிதமான காட்டுச் சாதிகள் எழும்பி யிந்தக் காட்டு பிலங்களிலே சஞ்சாரம் பண்ணி, இப்போ வேடர்பாளையமென் றழைக்கப்படுகிற ஸ்தளங்களிலே யதிகமாய்ப் பிறபலித்து மிறுகங்களை வெகுவாய் சம்மாரம் பண்ணி, சில காடுகளை யழித்து, அந்த யிடங்களிலே குடிசை போட்டுக்கொண்டு, ஒரு ராசாவு மில்லாமல், தங்கள் சுயமனதின்படியே நடந்துக்கொண்டிருந்தார்கள்.

2. அந்த நாள்க்களிலே, யவர்கள் குச்சுக்களைத் தவிர,கோட்டைக ளொன்று மிருந்ததில்லை. அவர்களுக்கு ராசாவு மில்லை. அவர்களுக்கு யாதொரு மாற்கமுமில்லை. அவர்களுக்கு யாதொரு ஆகாரமு மில்லை. அவர்களுக்கு யாதொரு பொஸ்த்தகங்களு மில்லை.

3. அந்த நாள்க்களி லவர்கள் நிறுமாணிளகளா யிருந்தார்கள் என்றும், அவாளுக்கு கலியாண முறைமைக ளுண்டாயிருந்ததில்லை யென்றுஞ் சொல்லுகிறார்கள்.

4. இப்படி, யிவர்கள் பெகு காலங்களாய், சுய மனதின்படியே யிந்த வனாந்திரங்களிலே யிருந்த மிறுகங்களை சம்மாரங் கொண்டிருக்கையில், குறும்பர் என்ற சாதியார் கற்னாட்ட தேசத்து டொத்த நாடுழ்களிலே பெருகி, கற்னாட தேசத்தை முழுதும் நிரப்பித் தங்கள் கடோரத்தை கற்னாட்ட தேசத்திலே யதீகமாய் விரித்தார்கள்.

---

2. குச்சு - குடிசை
3. நிறுமாணி - நிர்வாணமாய்
4. தேசத்தது டொத்த நாடுழ்களிலே - தேசத்தோடு சேர்ந்த நாடுகளிலே; கற்னாட்ட - கர்நாடக (Carnatic)

5. இவர்க ளொரு விதமான பத்திக் காறரும் கலைக்காறரு மானார்கள். இவாள் தங்கள் கடோரத்தை தங்கள் பிறந்தகமாகிய கற்னாட தேசத்தில் விசித்து, அவ்விடத்திலே யிவாளுக்கு, யிவாள் பண்ணின கடோரம் அல்லது குறும்பினாலே யிவாளுக்குக் குறும்பர் என்கிற பேருண்டாச்சுது. இவாளவ்விடத்தி லிருந்து, தங்கள் கடோரத்தை யிந்த திராவிடதேசத்து தொண்டமண்டலத்து மட்டும் விசித்து, தங்க்ள கடேலத்தை யதிகமாய் விசித்து, உத்திரமேருருக் கடுத்த சாலப் பாக்கத்திலிருக்கும் குறும்பர் என்றின்னம் பேருன்டாயிருக்கிற யிஸ்த்தளத்தில் சத்து யோக்கியரா யிருக்கப்பட்டளவர்கள் வந்து குடியேறினார்கள்.

6. இவாள் கொஞ்ச நாள்க்களாய் கிராதகராகத்திரிந்து இவாள் றாசாக்களில்லாமல் தேசாதிபத்தியம் பண்ணினார்கள். அப்பிற மிவாளுக்குள்ளே ஒருதரோ, ரொருதருக்கு விரோதித மெழும்பி, கடையாந்திரத்தில் இவாளிலந்த கமண்டப் பிறபூ என்று பேர் கொண்டவன் எல்லாரையும்சமரசப் படுத்தி, புத்திமதிகள் சொல்லி,

---

5. உத்திரமேரூர் - செங்கை மாவட்டத்தில் உள்ள ஊர்; சாலப்பாக்கம் - செங்கை மாவட்டத்தில், தற்போது சாலவாகம் என்ற பெயரில் உள்ள ஊர்; சத்து - சற்று.

6. தொட்சகன் - ரெட்சகன் என இருக்க வேண்டும்; இரட்சகன் - காப்பாளன்; நிற்ணித்து - நிர்ணியித்து.

ஒரு தெட்சகன் எல்லாருக்கும் மேலாயிருந்து ஆளவேணுமென்றும், அவனுக்குள்ளாக யாவரும் உள்ளடங்கி யிருக்கவேணு மென்றும் ஏற்ப்படுத்தின விடத்தி, லவன் புத்திவந்தனும், வெகு பொஸ்த்தகங்கள் பண்ணினவனுமாயிருந்தா லவனையே நிற்ணித்து ராசாவாக் கினார்கள்.

7. இவனுக்கு கமண்டக் குறும்பப் பிறபூ, திராவிடதேசாதிபதிபுளல் ராசா வென்ற கிதாபு வந்து, யிவன் சகல எழுத்தோடே யிதுகளோடே கூடிய கணக்குக் காரியங்களில் குறும்பர் பூமி என்றெழுதுகிற வழக்கத்தை யுண்டுபண்ணினான். அப்புறமவன் புழலூரில் மகாசிறப்பும் விஸ்தீறணமுமான கோட்டையைக் கட்டிவைத்தான். இந்தக் கோட்டை கெவுனிகளெல்லாம் வெங்கலமும், தூண்க ளெருக்க மரத்தினாலே செய்விக்கப்பட்டதுவுமா யிருந்தது.

8. இந்தக் கோட்டையினுடைய சிறப்பையும் இவ்வளவு அவ்வளவு என்று ஒருவராலும் நிற்ணித்து முடிவதல்ல. இப்படியாப்போலொத்த கோட்டையி லிவன் ராச்சியம் குறும்பப்பூமி முழுதுங் கட்டுக்கொள்ளாமல் போனபடியாலும், இவன் ராச்சியபாரத்திலிருக்கிற மறுசாதியார் அமளிபண்ணத்

---

7. புழலூர் - செங்கை மாவட்டத்தில், சைதாப்பேட்டை வட்டத்தில் இவ்வூர் உளது; கெவுனி - கவுனி - வாசல்.

துவங்கினபடியாலு மிவனிந்த குறும்பர் பூமியை இருபத்தினாலு பங்காய் பிறித்து, இருபத்தினாலு பங்கிலு மிருப்பத்தினாலு கோட்டை கட்டினான்.

9. அதாவது,

1. புழல்க் கோடடை ராசதானி
2. களத்தூர் கோட்டை
3. ஆமூர்க் கோட்டை
4. புலியூர்க் கோட்டை
5. செம்பூர்க் கோட்டை
6. ஊத்துக்காடு கோட்டை
7. காலியூர் கோட்டை
8. வெங்குண கோட்டை
9. ஈக்காட்டு கோட்டை
10. படுவூர்க் கோட்டை

---

9. இப் பத்துக் கோட்டை ஊர்களும் செங்கை மாவட்டத்தில் உள்ளவைவே. வெங்குணம் என்பது, தற்போது சிறுவங்குணம் (செய்யூர் உள்வட்டம்) என அறியப்படும் ஊராக இருக்கலாம்; ஊத்துக்காடு, தற்போது ஊத்துக்கோட்டை என அறியப்படுவதாகலாம்; ஆமூர், என மானாமதி உள் வட்டத்திலும், நாயர் உள் வட்டத்திலும் இரண்டு ஊர்கள் உள; புலியூர் என, திருக்கழுக்குன்றம், திரூர், உத்திரமேரூர் உள்வட்டங்களில் 3 ஊர்கள் உள. ஈக்காடு, திருவள்ளூர் உள் வட்டத்து ஊர்.

இந்தப் பிறகாரமாகக் கோட்டைகளை கட்டி குறும்பப் பிறபு என்ற கிதாப்புடனே சுபாதாந்தர்களை புழலூர் ராசதானிக் கோட்டைக்கு அடக்கமாக வைத்து ராச்சியபாரம் பண்ணினார்கள்.

10. அப்போ, யிந்த குறும்பபூமியிலுள்ள யாவரும் குறும்பப் பிறபுக்களுக் கடக்கமாயிருந்து குடித்தனம் தொழில்த்துறை நடப்பித்து வந்தார்கள். அந்த நாள்க்களில் கப்பல் வற்தகம் நடந்துது. அதற்கு குறும்பருடன் காவேரிபட்டணத்து செட்டிகள் வந்து சேர்ந்து, யிவாளுக்கு வற்தகத்துக்கு ஆசையை உண்டுபண்ணி, அதில் பேரில் இதற்கடியில் சொல்லப்படுகிற வியாபாரக் கோட்டைகளை கட்டினார்கள்:-

1. பட்டிபுலம்
2. சாலகுப்பம்; இடையன் படலுக்குச் சமீபம்
3. சாலபாக்கம்
4. மெய்யூர்
5. கடலூர்
6. ஆலம்பரை
7. மரக்காணம்

---

10. பட்டிபுலம் - செங்கை மாவட்டத்துக் கேளம்பாக்கம் உள்பட்டத்தில் உள்ள ஊர்; மெய்யூர் என, நெரும்பூர், வேளகாபுரம், வையாவூர் ஆகிய உள்வட்டங்களில் 3 ஊர்கள் உள; கடலூர் - செய்யூர் வட்டத்தில் உள்ள ஊர் (செங்கை மாவட்டம்);

11. இந்தக் கோட்டையில் குறும்பரும் காவேரிபட்டணத்து செட்டிகளு மிருந்துகொண்டு, கப்பல் வற்தகாளோடே வியாபாரஞ் செய்தார்கள். அப்படியாக இவாள் பிறபலித்துப் போனார்கள்.

12. அப்போ, யிவாளுக்கு யாதொரு மதமில்லாமல் ஒரு பவுத்த சன்னியாசி வந்துயிவாளை சயின மதத்துக்குள்ளப்படுத்தினான். அந்த சன்னியாசியி னாமத்தினாலே, அந்த புழல் குறும்ப ராசாவுக்காகக் கட்டப்பட்ட சயின பஸ்த்தி யின்ன மிருக்குது; மத்த யிடங்களில் கட்டப்பட்ட பஸ்த்திகள் சிலதுகளிருக்குது.

13. மத்த யிடங்களில் கட்டப்பட்ட பஸ்த்திகள் சிலதுகள் சீரணப்பட்டு போச்சுது. சில விக்கினம் கழன' முதலானவிடங்களி லிருக்குது. சிலதுகள் பிராமணாளுட காயமகாரத்தினாலே உடைக்கப்பட்டு, புதைக்கப்பட்டு போச்சுது. இந்த பிறகார மிவர்கள் சயின மதஸ்தர்களா யிருந்தார்கள்.

14. இவாளுடைய ஆகாரங்கள் கொஞ்ச மேறக்குறைய யிப்போ யிருக்கிற சயினருக்குக் கட்டிவரும். இவா ளிஸ்திறிகள், பிள்ளைப்

---

11. காவேரிப்பட்டணம் - காவிரிப்பூம்பட்டினம்.

12. பவுத்த சன்னியாசி - சமணச்சந்நியாசி என இருக்க வேண்டும்.

13. காயமகாரம் - வெறுப்பு

பெத்தவுடனே பெருங்காயம் தின்கிறது; அஞ்சானாள் ஸ்தானம் பண்ணுகிறது. இவாள் கலியாணம் பண்ணகிறது யிப்போ விருக்கிற சயினருக்குச் சரியாயிருந்தது. இவாளில் யாதமொருதன் விழுந்துபோனால், அவனுடயிழவுக்கு வருகிறவர்க ளெல்லாம் ஏகசவரம் பண்ணிக்கொள்ளுகிறது; ஒருத ரொருதரைக் கட்டி மினவுகிறது.

15. இவாள் தொழில், சிலர் குறும்பாடு மேய்க்கிறது; சில ஏந்த ஆட்டுமயிர்களினாலே கம்பிளி னெய்கிறது; சிலர் சுண்ணாம்பு விக்கிறது; சிலர் வற்தகம் பண்ணுகிறது.

16. இந்தப்பிறகார மிவர்கள் பிறபூத்துவம் பண்ணிச், சந்ததி வரிசை துடர்ந்து வந்தார்கள். இவாளாளுகை பண்ணிக் கொண்டு வருங்காலத்தில், சீர்ப்பட்டு வழியுடனே அரசாளுகிற சில ராசாக்கள் அடிக்கடி யிவாளோடே யுத்தத்துக்கு வந்து யிவாளாலே முறியடிக்கப்பட்டார்கள். சோழன், பாண்டியன் முதலானவர்க ளிவாளுடன் யுத்தத்துக்கு இவாள் காட்டுச்சாதிகளாயிருந்து தாங்கள் பிராணனைப் பாராமல் எதிர்த்து நின்று சண்டை குடுப்பதால்,

---

14. மினவுதல் - வணங்கி உபசரித்தல்

16. பிறபூத்துவம் - பிரபுத்துவம் - ஆட்சி.

ஒருவராலுமங் கட்டிவராமல் முறியடிக்கப்பட்டு, சில ராசாக்க ளிவாளாலே புழல்க்கோட்டை கெவுனி வாசலுக் கெதிராக வெலங்குண்ணப்பட்டார்கள்.

17. அப்பிறம் இவாளுக்குண்டாகிய செயல்களினாலே, இவாள் கெறுபித்து தங்கள் குடிகளை ரொம்பவும் துன்பப்படுத்தினார்கள். மேலு மிவாளுடைய வாலிபர்கள் சகலரையுஞ் சயின மதத்துக்குள்ப்படுத்த மிகவும் வாதினை பண்ணினார்கள். இந்தத் துன்பப்படுத்துதல் சகல தேசங்களிலேயும் கூக்குரலை யுண்டுபண்ணித்து. ஆனால் ஒருவரும் இவாளுட னெதிர்த்து நிற்காமல் போனார்கள்.

18. கடைசியில், தஞ்சாவூர் சமஸ்தானத்து சோழர் வமுசத்திலே பிறந்த யாதொண்டைச் சோளன் என்பவர் அதிக புத்திவந்தரும் தேவதாபத்தியுடைத்தானவரும், யுத்தத்துக்கு அதிக தயிரிய முடைத்தான பிறபுவுமா யிருந்ததால், அவர் தெய்வசங்கல்ப மாகத்தானே யிந்த குறும்பரை சம்மாரம் பண்ணி, யிந்த குறும்ப பூமியைக் கட்டிக்கொண்டு, குடிகளி னிருக்கத்தை தீர்த்து, வைக்கிறதென் றெண்ணிக்கொண்டு யுத்தத்துக்கு ஆரம்ப

முதலானதுகள் பண்ணி, ரத கெச துரக பதாதிகளுடனே யிந்தப் புழல்க்கோட்டையின் பேரில் யுத்தத்துக்கு வந்தார்.

19. வந்தவுடனே குறும்ப ராசாவானவன், தன் சேனைகளுடனே வந்து விழுந்து வெகு வீரத்துடனே சண்டைக் குடுத்தான். யாதொண்டைச் சோழ ராசாவும், வெகு தயிரியத்துடனெதிர்த்து சண்டை குடுத்தான். ஆனால், குறும்ப ராசனுடைய சேனைகள், வெகு வீரசூரத்துடன் விழுந்து யாதொண்டைச் சோழனுடைய முக்காவாசி தண்டை அருக்கிடையாய்த் தள்ளிப்போட்டுது. அப்போ. யாதொண்டைச் சோழனானவர், வெகு விசனத்துடன் முறிந்தோடி அந்தக் கோட்டைத் தூரமாயிருந்த ஒரு யிடத்தில் வந்து, தன் மீதியான சேனைகளுடன் தங்கினார்.

20. அதினாலே அந்த யிடத்துக்குச் சோழன்பேடு என்று பேர் வந்து, யின்னாள் வரைக்கும் அந்தப்பேர் வசந்தையாயிருக்குது. அந்த யிடம் விட்டு, மறுகாவமே தஞ்சாவூர் சமஸ்தானமே போய்ச்சேர வேணுமென்று தெய்வத்தை நொாந்துகொண்டு விசனத்துடன் தங்கினார்.

---

18. ரத கெச துரக பதாதி – தேர், யானை, குதிரை, காலாட் படைகள்.

21. அன்று ராத்திரியிலே யிவருக்கு சொற்பனமாகி, யீசுரன் பிறத்தெஷ்சமாகி, "பயப்படாதே! நாளைக் காலமே குறும்பருடன் எதிர்ந்து நின்று சண்டை செய்! நாமே அனுக்கிறகம் பண்ணி, யுனக்கு செயத்தைத் தருவோம், அதற்க் கத்தாஷ்சி என்னவென்றால், நாளைய தினம், நீ சண்டைக்கிப் போறபோது, பட்டத்தானை மேலேறிவாய்: அது வருகையில், அதன் காலில் ஒரு முல்லைக் கொடி மாட்டிக்கொள்ளும்; அதை வெட்டுவாய்; அப்போ உதிரங் காணும்; அதை நீ சோதிக்கு மிடத்தில், அவடத்தி லுன்கையினால் காயம்பட்ட ஒரு லிங்கம் காணப்படு மென்று" சொன்னார்.

22. இந்த சொற்பனத்தைக் கண்டச் சோழன் மகா திடாரிக்கத்துடன் குறும்பர் மேல் சண்டைக்கு வருகையில், அவனேறிக் கொண்டு வந்த யானைக்காலிலே ஒரு முல்லைக் கொடி மாட்டியதை வெட்ட உதிரங்கண்டுது; யந்த உதிரப்படி யின்மே லவன்தன் சேனைகளுடன் குறும்பசேனைகள் மேல்வந்து விழுந்து, மகா வீர சூர பிராக்கிரமத்துடன் யுத்தம்பண்ணின விடத்தில் குறும்பச் சேனைகள் வெகுவாய் மடிந்து, கடைசியில் குறும்பர் முழுதுஞ்

---

20. விசனத்துடன் - வருத்தத்துடன்.

21. அத்தாஷ்சி - அத்தாட்சி - சான்று; மேலேறிவாய் - மேல் ஏறிவா;

சேதுப்பட்டு முறிந்தோடி, அப்புறங் குறும்ப ராசா கைப்பிடியாய் அகப்பட்டு சம்மாரம் பண்ணி, புழள் குறும்பக் கோட்டையை யிடித்துக்போட்டு. அதின் வெங்கலக் கதவை தஞ்சாவூர் தேவஸ்தானத்தின் கெற்ப கிரகத்தில் வைத்து, இதிலிருந்த எருக்கந் தூணை புழலுக்கு சமீபத்திலிருந்து தன் காலில் முல்லை கொடி மாட்டி கண்டுபிடித்த சிவலிங்கத்தடிக்கு ஆலயங்கட்டி, அதின் கெற்பக்கிரகத்தில் வைத்து அங்கே தன் ஆனைக்காலில் முல்லைக்கொடி மாட்டினதால் திருமுல்லைவாசல் தேவஸ்தானம் என்ற பேருங் குடுத்தான்.

23. இந்த தேவஸ்தானத்தி லிருக்கிற லிங்கத்துக்கு யாதொண்ட சோழன் ஆயுதத்தால்பட்ட காய மின்ன மிருக்குது. இது யின்று முதல் நாள்தோறும் கைப்பூரத்தால் காயங்கட்டிக் கொண்டு வருகிறார்கள். அப்பிற, மற்ற யிரவத்திமூன்று கோட்டைகளையும் கொஞ்சமாய்ச் சண்டை பண்ணி வாங்கி, குறும்பரை சம்மாரம் பண்ணினான்.

---

22. திடாரிக்கம் - தைரியத்துடன்; சொற்பனம் - கனவு.

23. யின்றுமுதல் - அன்றுமுதல் என இருக்கவேண்டும்; கைப்பூரம் - கற்பூரம்.

24. அதின்பிறகு, இவாளுக்கு வதிள் வெள்ளாழரை பிறபூத்துவங் கொடுத்து, இவாளுக்களிக்கமாக கணக தண்டியுடன் அவாளுக்கு வதிளாக தனக்குள்ளடக்கமாக வைத்தான். அன்னாளில், குடிபடை குறைந்துபோனதால், துளுவ தேசத்திலிருந்து சில வெள்ளாழரை அழைப்பித்து வைத்து, அவாளுக்கு மானியம் பண்ணினான்.

25. அவா ளின்னாள் வரையில் துளவ வெள்ளாழர் என்னப்படுகிறார்கள். சோழ பூசத்திலிருந்த சிலரை யழைப்பித்து வைத்தான்; அவாள் சோழிய வெள்ளாழர் என்னப்பட்டிருக்கிறார்கள். வடக்குத் தேசத்திலிருந்து பிறாமண வமுசத்தில் செனிப்பிக்கப்பட்ட கணக்கரை யழைப்பித்து வைத்தானவாள், கணக்கப்பிள்ளைக ளென் றழைக்கப்படுகிறார்கள். கொண்டை கட்டி வெள்ளாளர் தொண்டமண்டலாதியின சென்மிகள் என்று சட்டம் செய்வித்தான்.

26. அப்போ, யிந்த யாதொண்ட சோளனானவன் தெய்வ பத்தனா யிருந்து, குடிகளுடைய ஆயத்தைத் தீர்த்தத்தின் பேரில்

24. துளுவ்தேசம் - மேற்குக் கடற்கரையில், கர்நாடகா மாநிலத்தில் தென் கன்னடம் எனும் மாவட்டத்தில் உள்ள பகுதி; துளுவ நாட்டு மக்களின் தாய்மொழி துளு.

25. ஆதியின சென்மிகள்- பூர்வீகக் குடிகள்.

இவனுக்கு தஞ்சாவூர் சமஸ்தானத்து சோழர் அனுபொதிப்படியும், குடிக ளனுபொதிப்படியும், இவனுக்கு சக்கிறவற்தி என்கிற கிதாப்பு குடுக்கபட்டுது.

27.அன்று முத லிவன் தெய்வ பக்த்தனா யிருந்தான். தொண்டையமான சக்கிரவற்தி என்கிற பேர் வந்துது. குறும்ப பூமி என்றழைக்கப்பட்ட யிந்த பூமி தொண்டமண்டல மென்ற ழைக்கபட்டுது.

28. அந்த நாள் முதல், குறும்பருடைய யிருபத்தினாலு கோட்டையும் தொண்டமான் சக்கிரவர்த்தியுட கோண்ட மென்றழைக்கப்பட்டது. இவனிந்த மண்டலத்தை நாடுகளாகவும், நத்தங்களாகவும் பிறித்து, காடுகளாய்க் கிடந்த வெகு பூமிகளைத் திருத்தி, புதுப்பேருண்டாக்கினான். இவனாலே யிந்த தொண்டமண்டலஞ் சீர்ப்பட்டுதென்று யாவருக்கும் பிறச்சித்தமாய் தெரிந்திருக்குது.

---

26. அனுபொதி - அனுமதி; கிதாப்பு - மதிப்புப்பட்டம் (Title)

28. கோண்டம் - கோட்டை [redacted] இருக்கவேண்டும்.

# 2. தமிழ் மும்மண்டல பண்டைய மன்னர் வரலாறு
# (D.3088)

# THE CHARITRUMS OR ACTIONS OF THE FORMER RAJAHS OF THE PONDYAMUNDALUM, CHOLE MUNDALUM AND TONAMUNDALUM

1. *இந்திராட்சியந் தெட்சணாதிக்கம் பாண்டிமண்டலஞ் சோழமண்டலந் தொண்ட மண்டலம் பூறுவீக இராச சரித்திர வொழுங்கு.*

2. *முதலாவது, முன் பூறுவ மிந்த இராட்சியந் தெண்டவாரணியந், தாருகாவனஞ், சடாயுவனம், வேதவனம், மிறுகண்ட வனம், பரத்துவாசர் வனம், பொதிகை வனமென்று மேலுஞ் சொல்லப்பட்ட அனேகம் பெயருடைத்தான வனாந்திரம்.*

---

1. இந்திராட்சியம் - இந்து இராச்சியம்; தெட்சினாதிக்கம் - தெற்கு ஆடசி; பூறுவீக - பூர்வீக ஒழுங்கு-வரிசை

2. தெண்டவாரணியம் - தண்டகாரணியம்; வனாந்திரம் - காடு.

3. இரண்டாவது, பூறுவகாலத்தி லிராமன், சீதை, யிலட்சுமணெ ளிவர்கள் அய்யோத்தி யிலிருந்து பதினாலு வருட மிந்த வனத்திலே வனவாசம் பண்ணினார்கள்.

4. கரதூடணன், திரிசிரசு இன்னம் அனேக மிராட்சத ரிந்த வனத்திலே யிருந்தார்களென்று சொல்லப்படு மின்னம் அனேக காரியங்கள் பேசவு மெழுதவும் வேண்டி யிருந்தாலு மதுகளைக் காட்ட இவிடத்திலே யவசரமில்லை.

5. ஆனா லிவிடத்திலே பேசவு மறியவும் வேண்டியதாவது, பூறுவ காலத்தி லிராமனிந்த வனத்திலே வந்து, அவர் பெண் சாதி சீதையை இலங்கையிலிருந்த இராவணன் வந்து சிறையெடுத்துப் போனபோது.

6. இராமனாகிற இராசா இராவணனைக் கொன்று, சீதையாகியற தன் பெண்சாதியைத் திருப்பினபோது, இராவணனையு மனேக மிராட்சதரையுங் கொன்ற கொலைபாதகஞ் சுற்றி லிராமனாகிற விராசாவுக்குச் சித்தப் பிரமை போலே புத்தி மயக்கங் கண்டது.

---

3. அய்யோத்தி - அயோத்தி (உ.பி.)

4. அவசரம் - தேவை

7. அப்போது, தன் னினைவு தடுமாற்றங் கண்டதை யிந்தக் கொடிய வனத்திலே தவசு பண்ணியிருந்த பரத்துவாச ரிஷியிடத்தி லிராமன் சொல்ல,

8. அந்தப் பரத்துவாச ரிஷியானவ னிந்தத் தனுக்கோடி வனத்திலே யொரு சிவலிங்கப் பிரதிஸ்ட்டை பண்ணினா வந்தக் கொலைபாவம் போகுமென்று சொன்னார்.

9. இப்படி யவனக்கியானப் புத்தி யினாலே சொன்னதை யிராமனாகிற ராசாக் கேட்டொரு சிவலிங்கப் பிரதிஸ்ட்டை பண்ணிப் பூசை பண்ணினான்.

10. அதற் கிராமலிங்க மென்று, மிந்தத் தீவுக்குப் பெய ரிராமேசுர மென்று மிந்த யிராமேசுரத் தலத்துக்குத் தீர்த்தந் தனுக்கோடி யென்று, மக்கினி தீர்த்தமென்று, மின்ன மனேகம் பேருள்ள பொய்களை வைத்து.

11. இதற்குப் புராண முண்டாக்கி, யந்தப் புராணத்திலே, காசி யென்கிற ஆற்றின் ஜலத்தை யெடுத்தவந் திந்த இராமேசுர மென்கிற

---

7. பரத்துவாசர் - கசியபர் முதலான ஏழு ரிசிகளில் ஒருவர்

10. பொய்- பொய்கை

தலத்திலே, யிராமனாகிற இராசா வுண்டுபண்ணின.

12. இராமலிங்கத்துக் கபிஷேகம் பண்ணிவித், தனுக்கோடி யக்கினி தீர்த்த மென்கிற கடலிலு, மற்றத் தீர்த்தங்களிலு, மிஸ்த்தானம் பண்ணி, யந்த இராமலிங்கத்தைத் தெரிசனை பண்ணினான்.

13. மனுடன் செய்த பாவங்களெல்லாந் தீருமென்று, .... .... யெழுதி, யந்தப் புராணத்தை யிராமனாகிற இராசா வடக்கே யுத்திராதி தேசமெல்லாம் பரப்பப் பண்ணினதினாலே,

14. வடதேசத்திலுள்ள இராசாக்கள், பிரபுக்கள், எளியவர்கள், வலியவர்கள், சுமான மனுப் பிரஜைக ளனைவோருந் தங்கள் மேலான ஞானக்கண்ணாகிற புத்தி சொரசினுடைய தந்திரத்தினாலே மயங்கி,

15. எளிதாய்ச் சொற்பக் காரியத்தினாலே அத்தனை கோடி பாவமெல்லாந் தீருகிறதென்று புராணஞ் சொல்லுகிறதினாலே,

16. இதைத்தானே பத்தியோடே செய்து பாவத்தை முழுதும் போக்கிப் புண்ணியத்தை யடைந்து அரிதான மோட்சத்தை யெளிதாய்ப் பெற வேணுமென்று, பொய்யை மெய்யென்று நம்பியக் காவடுந் துவக்கி, யிக்கால மட்டும், மனுஷ குலம் .... போச்சுது

17. அக்காலத்திலே கெங்கையாற்றோடக்காரனாகிற குகனென்கிற மறவனந்த இராமனென்கிற இராசாவிடத்தில் விடைபெற்றிந்த இராமேசுர மென்கிற தீவில்,

18. இராமன் பிரதிஸ்ட்டை பண்ணின இராமலிங்கத்தைப் பரிபாலினம் பண்ணுவேனென்று விண்ணப்பஞ் செய்து, அந்த இராமனாகிற அய்யோத்தி யிராசாவின் கைச்சக்கரத்தி லற்த சக்கரமும் பெற்ற பிற்பாடு,

19. இராமன் குகனையுமவன் வங்கிஷ சந்ததிகளையும் விபூஷணன் பிறகே கூட்டி யிந்த யிராமேசுர மென்ற தீவிலிருக்கிற அந்தப் பரத்துவாச ரிஷி யிடத்தி லொப்பிவிக்க, அந்தப் பரத்துவாச ரிஷி, யிந்தக் குகனைப் பார்த்து, முன்னிருந்த குகனென்கிற பேரை மாற்றி, நவமாய்ச் சேதுகாவலன் தனுக்காத்த தேவனென்று பெயர் தரித்தான்.

20. சேதுவாகிற இராமசுவரஞ் தெக்கு வடக்கி ரு காதவழி நீளங், கிழக்கு மேற்குப் பத்து நாழிகை வழி யகலத்தின் தீவிலே குகனாகிற சேதுகாவலத் தனுக்காத்த தேவனு மிவன் வங்கிஷப் பிதிர்களுமாய்ப் பரிபாலித்துக் கொண்டு.

---

19. நவமாய் - புதிதாக

21. இராமனாகிற அய்யோத்தியிராசா பிரதிஸ்ட்டை பண்ணின இராமலிங்க மிருக்கிற விடத்தி லொரு குச்சுப்போலக் குடிசை கட்டிக்கொண்டு, அந்தத் தீவிலிருந்த காட்டை வெட்டிப் பயிரிட்டுச் சாப்பிட்டுக் கடலில் மீன் பிடித்துத் தின்றுகொண்டு காலம் பின்னிட்டுக் கொண்டு வருகையில்

22. அந்த யிராமனாகிற அய்யோத்தி யிராசா, இந்த ராமேசுர மென்கிற மெய்வழி புராணத்தை மோட்சத்துக்குப் போறதற்கு மெய்வழி யென்று உத்திராதி யாகிற வடதேசத்தினு மற்ற தேசங்க ளெங்கும் பரம்பப் பண்ணினதினாலே,

23. சகல தேசத்துப் பிரசகளு மகா வுன்னதமான கருத்துடனே யிந்த யாத்திரைக்குப் போனார்கள்.

24. அப்படியே வடதேசத்திலுள்ள பாண்டியனாகிற வெள்ளாள னிந்த இராமேசுரயாத்திரைக்குப் பிறப்பட்டு வந்தான்.

25. வரும்போது, இந்த தெட்சிண தெண்டவாரணிய வனத்தையு, மிந்த அரணிய வனத்தையு மிந்தப் பூமி மண் நலத்தையு மிந்த ஆரணியத்தில் வரும் பேராறுகளையுங் கண்டு,

---

25. அரணியம் - காடு

26. உத்திராதியில் தன்னிராட்சியத்துப் பூமி சாரத்துக்கு மிந்த வனத்து மண் சாரத்துக்கும் யோசிக்கையி, லிதின் நலங் கண்டுவந் திந்த இராமேசுரமாகிற சேது ஸ்த்தானம்பண்ணி, யாத்திரை முகித்துப் பரத்துவாகரிஷி தெரிசனமும் பண்ணிக்கொண்டுத்திராதியிற் றன் பட்டணம் போய்ச் சேர்ந்தான்.

27. சேர்ந்தபின், தனது சுய பந்துசன பிறசைக ளனைவோரையுந் தன் வேலைக் காறரையுங் கூட்டிக்கொண்டு சகல முஸ்த்தீதுடனே, யொரு பாளையம் போலே வந்து,

28. திரும்ப இராமேசுர ஸ்த்தானம பண்ணி, பிறகு பரத்துவாச ரிஷி யாசீர்வாதமும் பெற்றுக்கொண்டு அவிடம் விட்டு, மேற்கே யெண்காத வழிதூரம் போய்,

29. அவிடத்திலே வைகை யென்கிற ஆற்றைக் கண்டந்த வாறறருகாமை யிலிருந்து காட்டை வெட்டி, வுறவின் முறை யாரைக் கொண்டு பட்டணமும் எண்மனைகளு முகித்து,

---

26. சாரம் - வளம்

28. ஸ்த்தானம் - ஸ்நானம்

30. தன் பிறகே வந்த வேலைக்காரர் மறுசாதிப்பேர் முதலான சகல பிரசைகளுக்குங் கொடுத்த முதற் கட்டளையாவது,

31. அவரவர் மனதின்படி வேண்டிய மட்டுங் காடு வெட்டி, யூர்களுண்டு பண்ணிப் பயிரிட்டு, மூன்று வருடத்துக் கவர்கள் மனதின்படி சாப்பிடுகிறது.

32. அப்பா, லப்பயிரிட்டதிற் பத்தி லொருபாரந் தனக்குக் கொடுக்கிறது; அப்பா லொன்பதி லொன்று கொடுக்கிறத; அப்பா லெட்டி லொன்று கொடுக்கிறது; அப்பா லேழி லொன்று கொடுக்கிறது;

33. அப்பா லாறிலொரு கடமை யெப்போதுந் தனக்குக் கொடுத்துச் சுகத்திலே யிருக்கிற தென், றசையாமணி கட்டிக் காடுவெட்டி நாடுண்டுபண்ணி, யேரிகள், குளங்க ளாறுகள் சகலமு முண்டுபண்ணி யிராட்சியம் ஆளும்போது.

34. இந்த இராமேசுரந் தீவிலிராமனாகிற இராசா வுண்டாக்கின இராமலிங்கத்துக்குக் குப்பையா யிருந்தத்தைத் தள்ளிச் சின்னக்

---

33. கடமை - வரி; அசையாமணி - குறையுள்ளவர்; இதனை அடித்துக் குறையை அரசனிடம் தெரிவிப்பதற்காகக் கட்டப்படுவது.

கோவிலா யுண்டுபண்ணி, யந்த ஸ்த்தலத்தைச் சற்றே மகிமையாக்கினான்.

35. அப்போது, இந்தச் சேது காவலனான தனுக்காத்த தேவனு, மவன் வங்கிஷமு மறவராகச்சே, அறுத்துக் கட்டுகிற சாதியானதா லதிகம் பிரசைகளானதால்,

36. இந்தப் பாண்டியன் காடு வெட்டி, நாடாக்கிக் குடியேற்றின பேரிடத்திற் கூலிக்குக் கைவேலைக் குடிகளால் வந்து சேர்ந்து பாண்டியன் குடிகளுக்குப் பண்ணை யுளவாள்க்களாய் நடந்து,

37. நெடுகிலு மிப்படி யாள்ப்பேற்க ளாயிருந்துவரி லவரவர் காடெல்லாம் வெட்டி நாடாக்கிப் பிரபலமாக்க, மறவர் குடிகளும் விசேஷமாய்ப் பிரபலமாச்சுது.

38. இப்படி, யுத்திராதியிலிருந்து வந்திந்த தெட்சணத்திலிருந்த வினாந்திரமாகிற காட்டை வெட்டி, நாடு இராட்சிய முண்டு பண்ணி யரசான பாண்டியன் பெயர், மதுரநாயக பாண்டியன்.

---

35. வங்கிஷம் - வமிசம்.

36. உளவாள்க்கள் - உழவாட்கள்

38. வினாந்திரம் - வனாந்தரம்- காடு

*39. அவன் முதவுண்டு பண்ணின படியாலதுக்குத் தன்பேரைத் தானே வைத்து, மதுராபுரி யென்று, மதுரை நகரென்றும் பேரிட்டுப் பின்னுமனேகம் பட்டணங்களை யுண்டுபண்ணினான்.*

*40. அவ னிந்தப் பூமிக்கு வரும்போது வயது நாற்பது வயதில் வந்து தொண்ணூறு வயதிருந்து, அவன்கால முகிந்தது.*

*41. அவனுக் கொரே பிள்ளை; யவன்பேர் சந்திரபாண்டிய னந்தச் சந்திர பாண்டிய னெழுபது வயதிருந்து நாற்பது வருட மிராசாங்கம் பண்ணினான்.*

*42. இவனுமந்த இராமேசுரங்கோவிலிற் சில திருப்பணி வேலை கட்டினான். இந்தச் சந்திரபாண்டியனுக் கொருபிள்ளை; யவன் பேர் மலையத்துவச பாண்டியன். அவ னெண்பத்து மூன்று வயதிருந்தான்.*

*43. அவனுக் காண்பிள்ளை யொன், றவன்பே ரழகபாண்டிய னவனுடன் கூடப் பிறந்த பெண் மீனாட்சி; யவளைச் சொக்கனாதன் கலியாணம் பண்ணினான்.*

---

39. முதவுண்டுபண்ணின - முதலில் உண்டுபண்ணின.

40. முகிந்தது - முடிந்தது.

44. இவர்கள் மரித் தடக்கமான விடத்திற் சொக்கலிங்க மென்று, மீனாட்சியென்றும் பேரிட்டு, மதுரைக்கு வடக்கான மலைமேலே யழகபெருமாளென்று, அழகபாண்டியன் தன் பேரரலே யுண்டாக்கினான்.

45. இதுவுமல்லாம லிராட்சியங்களும், பட்டணங்களு, மாறுகளுங் குளங்களும் பதினாறு தேவாலயங்களு, மனேகந் தர்மங்களு முண்டு பண்ணினான்.

46. இந்தப் பாண்டியன் வங்கி ஷத்திலொரு பெண் அல்லியரசாணி என்கிற பெண்ணை, அற்சுனன் கலியாணம் பண்ணினானிந்தப் பாண்டியன் வங்கிஷம் ஈழமாகிய வலங்கைத் தீவுந் திறைக்கொண்டான்.

47. இப்படி யிராட்சியத்தை யாண்டுவருகையி, லிவனுடைய கீர்த்தியு மகிமையு முத்திராதி யிராட்சியத்திலிருந்த தேவேந்திரனென்கிற இராசாக் கேட்டு,

---

46. அல்லியரசாணிமாலை யென்றொரு இலக்கியம் இவள்மீது எழுந்ததே. திறை - கப்பம்.

48. அவனு அவனுடை வெகு சிங்காரமுள்ள சேனைகளு, மாங்காரத்தினாலே யிவன் பேரிலே படைவந் தெதிர்த்துச் சண்டைசெய், திந்தப் பாண்டியன் கையிலடிபட் டோடிப் போனார்கள்.

49. இந்தப் பாண்டியனிலொருவன் சமண வேதத்துக்குள்ளாயிருந்தா னிந்தப் பாண்டி யனிலொருவன் சங்கைப் பலகை போடுவித்தான்.

50. இப்படி, யின்ன மனேகங் காரியங்களைச் செய்து, வெகு கீர்த்தி கொண்டார்களிப்படி, யிந்தப் பாண்டியன் வங்கிஷம், நாற்பத் தெட்டு தலைமுறை 2137 வருட மாயாண்டார்கள்.

---

49. சமணவேதம் - சமண சமயம்

# 3. சோழராசாவின் பூறுவ விற்தி

1. இப்படியே யுத்திராதியிலிருந்த தாய்மான் நள்ளி யென்கிற சோழனாகிற வெள்ளாளன், முப்பத்திரண்டாம் வயதிலே, முன் சொல்லப்பட்ட அய்யோத்தி யிராசாவாகிற இராமன் சேதுவாகிற இராமேசுரத்தின் பேரிலே பண்ணின தலப்புராணத்தை, யுத்திராதித் தேசத்தில் விளங்கப் பண்ணினா னான படியினாலே,

2. அந்தப் தாய்மானான ந்ளிளச் சோழனு, மிந்தடவாயந்தச் சேதிராமேசுரமென்னு மியாத்திரைக்கு வந்தான்.

3. வந்தபோ திந்த வனத்துப் பூமி சாரத்தைப் பார்த்து, முன் தானிருந்த ராட்சியங் கொஞ்சமானதினாலேயு, நிலச்சார மில்லாத பூமியாகச்சேயு மந்த இராட்சியத்துக் கிந்தவன மெத்த நன்மையான பூமியாகவு மிருந்தபடியினாலே,

4. இந்தச் சோழ னிராமேசுர யாத்திரை செய்துகொண்டு திரும்பத் தன் தேசத்துக்குப் போய்த் தன்னுடைய சுய சாதி பந்துவற்கப் பிரசகைகளையுந் தன் சுயமான கைவேலைக்

---

1. பூறுவ விற்தி - பூர்வ விருத்தி - பூர்வ வரலாறு

2. சேதி - சேது

குடிகளையும், பின்னு மனேகம் பிரசைகளையுஞ் சேர்த்துக் கொண்டு வந்து,

5. மேற்கே திரிசிரசு இராட்ச தனிருந்த வனத்துப் பூமியிற் போயிறங்கி, யந்த மலையைச் சூழ்த்திருந்த வனமாகிற காடெல்லாம் வெட்டி, வெளியாக்கித், தன் பிரசகளைக் குடி வைத்து,

6. பட்டணமுண்டுபண்ணி, யந்தப் பட்டணத்துக்குப் பேர், முன்னந்த வனத்திலிருந்த திடிசிர சென்கிற விராட்சதனுடைய பேராலே திருசிரசுபுர மென்று, மந்த மலைமேலே தன் பேராலே தாய்மான்லிங்க மென்றும், பேர்வைத் தொரு கோவிலைக் கட்டினான்.

7. அவடத்திலிருந்து கிழக்கே சமுத்திரக் கரை வரைக்கு காடெல்லாம் வெட்டித் தேசமாக்கலா, மேற்கே மலைகண்ட மட்டுந் தேசமாக்கலா. தெற்கு வடக்கு வெகு தூரம் வரைக்கு மிராட்சிய முண்டாக்கலா மென்று யோசித்து,

8. அந்தத் தாய்மான் நள்ளி யென்கிற சோழன் பிரசைகளுக்குக் கொடுத்த கட்டளையாவது.

9. காடுவெட்டி நாடி ராட்சிய முண்டுபண்ணுகிறது; முதலாறு வருடத்துக்குச் சலுவமானியமா யனுபவிக்கிறது; அப்பால் தனக்குப் பத்திலே யொன்று பகுதி கொடுக்கிறது.

10. மறு வருட மொன்பதி லொன்று, மறு வருட மெட்டிலொன்றும், புறகு ஏழிலொன்றுங், கடசியிலே யெப்போது மாறிலொரு கடமை கொடுக்கிறதென்று கட்டளை யெழுதி, யசையாமணி கட்டனான்.

11. அனேகங் காடு வெட்டி. நாடாக்கி, யூர்கள், பட்டணங்க ளுண்டாக்கிக் காவேரி யென்கிற அதுங்கிழக்கே கொஞ்சத் தூரம் போய்த், திரும்பக் கொள்ளிடத்திற் சேருமுடைப்பை யடைத்துக் கிழக்கே காவேரியாறு நடத்தவேணு மென்று யோசித்தான்.

12. அந்தத் தாய்மான் நள்ளிச் சோழ னெண்பத்தாறு வயதிருந்தா னவனுக்கொரு ஆண் பிள்ளை; யவன் பேர் வீண்சோழன். இவனாளில் வீணனா றென்கிற வீணனாற்றை யுண்டுபண்ணினான்.

---

9. நாடிராட்சியம் - நாடு + இராட்சியம்.

சறுவமானியம் - சர்வமானியம் - எவ்வித வரியும் இல்லாமல்.
பகுதி - கடமை - வரியாக அளித்தல்.

13. ஆனாலவன் தகப்பன் தாய்மான் நள்ளியைப் பார்க்க, அவன்மகன் வீண்சோழ னதிகப் புத்திசாலியாகச்சே, தகப்பன் காவேரி கொள்ளிடத்திற் பாயு முடைப்பை யடைத்துக் கிழக்கே திருப்ப வேணுமென்று நினைத்த வவத்த மென்று கண்டான்.

14. ஏனென்றால், காவேரியாற்றில் வருந் தண்ணீர் முழுதுங் கிழக்கே திரும்பினா லிராட்சியம் பிரையோசன மில்லாமற் கெட்டுப் போமென்று கண்டு,

15. முன்னே யதற்கு மேற்கே தலப்பு வைத்து, விண்ணாற்றை யுண்டுபண்ணி, யதினால் சில சீர்மை யாகும்படிக்கு யோசித்து, விண்ணாற்றை யுண்டுபண்ணினான்.

16. காவேரி யாற்றில் வருந் தண்ணியிற் பாதி, விண்ணாற்றில்ச் சிலவிட்டுப் பிறகு கிழக்கேயுள்ள தூரத்தையு மகலத்தையும் யோசித்தறிந்து, இதற் கிவளவு தண்ணீர் போது அதீக்த தண்ணீருக்குப் போக்கு வைக்கவேணுமென்று தன் புத்தியினாலே யோசித்து, அந்த வுடைப்பிற் கல்வைத்து, மட்டுப்பண்ணினான்.

---

13. அவத்தம் - அபத்தம்

15. சீர்மை - சீமை; விண்ணாறு - வெண்ணாறு

16. சிலவிட்டு - செலவிட்டு; அதீக்த - அதிக

17. ஆனபடியினாலே, யவன் தகப்பனுக்கும் அவனுக்கும் பிறகவன் சந்ததியி லவதரித்த நாற்பத்திரண்டு சோழனுக்கு முள்ள புத்திகளைப் பார்க்க, அந்த வீண் சோழ னதிகப் புத்திசாலி யென்று சொல்லவேண்டிய நாயஞ்சரிதானே.

18. அந்த வீண் சோழ னெண்பது வயதிருந்தா, னவன் பிள்ளை காவேரி யென்கிற சோழ னவனாளிற் காவேரி முழுதுங் கிழக்குச் சமுத்திரம்போய்ச் சேரும்படிக்குக் காவேரி வெட்டிக், கரைகட்டி முகித்துக் காவேரிக்கரை கண்ட சோழ னென்று பேருங் கீர்த்தியு மடைந்தான்.

19. இப்படி யிந்தச் சோழன் வங்கிஷம் நாற்பத்தநாலு தலைமுறை யாண்டுவந்தார்கள். இதிற் கடைசிச் சோழனாகிற குலோத்துங்க சோழனுக்குப் பட்டத்துஸ்த்திரியாற் பிறந்தவொரு ஆண்பிள்ளையு மொரு பெண்பிள்ளையு முண்டு.

20. முன்னிருந்த சோழன் வங்கிஷ மெல்லாஞ் தனதாரதார் பிறதார புத்திரராக விருந்து, சகல அக்கியான தர்ம வழியுடனே நடந்து வந்தார்கள்.

---

19. பட்டத்துஸ்த்திரி - பட்டஸ்திரீ - பட்டத்து அரசி

21. இந்த குலோத்துங்க சோழனானவன், தன்னுடைய பட்டஸ்த்திரி யிருக்கத் தன்னுட நாடகசாலையாகிற நாகி நாகரற்றின மென்கிற தாசி யொருதி நல்ல ரூபவதியு, மெவ்வனமுமா யிருந்தாள்.

22. அவள் பேரிலே யிந்தக் குலோத்துங்க சோழனாகிற விராசாத் தன் மனதிலே மோகித் தாசைவைத்தான்.

23. ஆனா லவளிராசாவி னாடக சாலை நாட்டியத்தாசியா யிருந்தாலு, மவளைத் தான் பிரச்சித்தமாய் வைத்தாளக் கூடாதென்று கண்டான்.

24. எதினாலே யென்றால்த், தேவந்தி யெப்போது மியாபேருந் தனதாரதார் பிறதார புத்திரனாக விருக்கக் கற்பினை யாகச்சே,

25. தன் வங்கிஷப் பதியாகிய முன்னோர்கள் நாற்பத்திமூன்று சோழனு மந்தத் தர்ம மேரையுடனே யிராட்சியத்தை நடத்தி, மகாகீர்த்தி கொண்டபடியினாலே, தானந்தக் கீர்த்திக்கு மகிமைக்கு மடறுசெய்யப் போகா தென்றறிந்து,

---

21. நாகரற்றினம் - நாகரத்தினம் (தாசியின் பெயர்)

23. பிரச்சித்தமாய் - வெளிப்படையாக

24. இயாபேரும் - யாவரும்; புறதார - பிறர்தார

25. இடறு - இடர்

26. தன் மோக விசாரத்தைத் தள்ளமாட்டாம, லிராச்சியத்திலே தன்னுடைய அரண்மனைச் சமீபத் தாதியி லொருதி புத்திசாலியுமாய்ப் பெரிய வயதுள்ள கெட்டிக்காரியுமான தாதியவள் பெயர் உமாபதி.

27. அவளை யிராசாவானவ னிரகசியத்திலே தனிமையி லழைத்துத் தன் மனதிலிருக்கிற மோக ஆசையைச் சொல்லி, விசாரங்கொண்டான்.

28. அப்போது, அந்த வுமாபதி யென்கிற தாதி, யிராசாவைப் பார்த் "தாண்டவனே யேதுக்கித்தனை விசார?" மென்ன, உமக்கார் பேரிலே யித்தனை மோகவிசார மிருக்குது,

29. அடியாளிடத்தி லும்முடைய வுண்மையான இரகசியத்தைச் சொன்னா லாண்டவன் சித்தத்துக் கேர்த்த வூழியம் பண்ணுவேனென்னறு சொல்ல,

30. இராசாவுந் தமது மன விருபத்தை வெளிவிட, வுமாபதி யென்கிற தாதி யானவ ளிராசாவி னிறுதயத்தின் ரகசியத்தின்படியே,

---

29. ஏர்த்த - ஏற்ற

30. இறுதயம் - இருதயம் - இதயம்

31. அந்த நாடகசாலை யாகிற நாகிநாகரெற்றின மாகிற தாதியைத் தன் வளவிலழைப்பித்து வைக்க, இராசாவு மிராத்திரி காலத்திலே தனிமையிலே யிரகசியமாக வந்தவளோடே சேர்ந்து பிரிய,

32.இப்படிச் சிலநாளிராசாவு நாடகசாலைத் தாதியு மறிந்த இரகசியமாய், மற்றொருவ மறியாமற், சிலநாளிந்த மோகபாவ நடந்து வந்தது.

33. இப்படி வரும்போ திராசாவின் விந்துக் கந்தத்தாசி வயற்றிலே கெர்ப்பமாய்ப் பத்துமாதஞ் சென்று குழந்தை ஆண்பிள்ளை பிறந்தது;

34. முன்னர் இராசாத் தாதிக்கு இரகசியத்திலே கொடுத்த கட்டளைப் படிக்குத் தாதி யந்தக் குழந்தையைப் பொற்பாத்திரத்திற் பட்டு வஸ்த்திரம் பொதிந்து, ஆதண்டமாலை சூட்டி காவேரிக் கரையிற் கொண்டு வந்து வைத்துப்போனாள்.

35. இராசவு மந்த இராத்திரியிலே பிறப்பட்டுத், தாமு மிஸ்த்தானப்பிராமணாளு மெப்போது மிஸ்த்தானத்துக்கு வருமேரையாயவர்,

---

31. வளவு - தங்குமிடம் - வீடு

34. ஆதண்டமாலை - ஆதொண்டைமாலை

35. இஸ்த்தான - ஸ்நான

36. அந்த இராத்திரி காலத்திலே காவேரியாற்றங் கரையிலே, யிராசா ஸ்த்தானக்கிடத்திலே பச்சைக் குழந்தை அழுகைச் சத்தங் கேட்ட இராசாவுங், கூடவந்த பிராமணாளு, மற்றவர்களு மறிந்து,

37. குழந்தையிடத்தில் வந்து, குழந்தையைப் பார்த் தாச்சரியப்பட், டிந்தவிடத்திலே, யிந்த விராத்திரி காலத்திலே பச்சைக்குழந்தை, சொர்ன பள்ளையத்திற் பட்டுவஸ்த்திரம் பொதிந்து, ஆதண்டப் பூச்சூடி யிருக்கிற காரிய விதி தெரியக் கூறுங்கோளென்று, கூடவந்த பிராமணாள் பெரியவர்களைக் கேட்க,

38. அப்போது, பிராமணாள் பெரியவர்கள் சொன்னது, மகா கீர்த்திமானான மகாராசாவே கேளு முமக்கொரே யேகபுத்திரனாயிருந்த பிள்ளையைக் கவியீஸ்பரனாகிய கம்பன் கொன்று போட்டத்தை நீர் தயையோடே பொறுத்தபடியினாலே,

39. சுவாமி யுமக்குக் காவேரித் தீர்த்தக் கரையிலே அகோராத்திரி காலத்திலே யிந்தப் பிள்ளையைக் கொடுத்தார். அதுவு மும்முடைய தற்சுய சொரூபமாய்ச் சொர்னப் பாத்திரத்திலே பட்டு வஸ்த்திரம் போத்தி, ஆதண்ட மாலை சூடிவந்த படியினாலே,

---

37. சொர்ன - சொர்ண - தங்க; பள்ளையம் - பாத்திரம்

40. தெய்வமிந்தக் காவேரிப் புண்ணிய இஸ்த்தலத்திலே யித்தனை யோக்கியமான மகிமைப் பூச்சியத்துடனே யனுக்கிரகம் பண்ணின படியினாலே, யிதுவேயும்முடைய பட்டத்துக்கு யோக்கிதை.

41. இந்தக் குழந்தைக்குப் பேராதண்ட மாலிகை சூடிவந்த படியினாலே, ஆதண்டமான ஆதண்டச் சோழ னென்றவடத்திலிருந்த பிராமணாள், பெரியவர்கள் சொன்னார்கள்.

42. அப்போதிராசா வானவன், தன்னுத்திரீயந் தனக்குத் தெரிந்திருப்பதினாலு, மிஸ்த்தானக் கிடத்திலே பிராமணாள், பெரிவர்களிந்தக் குழந்தையை யித்தனை பூச்சிய மகிமையோடே பேசினத்தினாலேயும்,

43. இராசாவி னேகபுத்திரனைக் கம்பன் கொன்று போட்டத்தினாலேயுந், தனக்கு வேறே பிள்ளைக ளில்லாத்தத்தி னாலேயு, மிஸ்த்தானம் பண்ணி, மகா சந்தோஷத்துடனே குழந்தையை யெடுத்துக் கொண் டரண்மனைக்கு வந்து,

---

42. உத்திரியம் - ஆடை; பூச்சிய - மதிப்பிடனும் வணக்கத்துடனும்.

44. தன் பெண்சாதி கையில்க் " காவேரிக் கரையிலே சுவாமி யுனக்குக் குழந்தை கொடுத்தாரென்று சொலலிக் கொடுத்தான்.

45. அந்தக் குழந்தையை யிராசாவின் பெண்சாதி மகா சந்தோஷத்துடனே வாங்கி, மாரோடணைத்து, முத்தங்கொடுத்துத் தாதியளையழைத்துப் பால் கொடுக்கச் சொல்லி, மகா பூச்சியத்துடனே, தன் பிள்ளைபோலே பாவித்து வளர்த்துப் பரிபாலினம் பண்ணினாள்.

46. அந்தப்பிள்ளை வளர்ந் திராச குமார னானவுடனே, யிராசா அந்தப் பிள்ளைக்குத் தன் சுயசாதி வெள்ளாளரில்ப் பெண்ணெடுத்துக் கலியாணஞ் செய்து, பட்டங்கட்ட வேணுமென்று யோசித்து,

47. மந்திரியை யழைத்து, " நம்முடைய குழந்தைக்குக் கலியாண முடித்துப் பட்டாஷேகஞ் சூட்டவேணு மென்று சொல்ல,

48. மந்திரீயானவன் சுயசாதி மந்திரீயானபடியினாலே, யிந்தப்பிள்ளையினுடைய பூறுவ மெலாந் துவக்கந் துவக்கி முகிவு வரைக்கு நாளிலே நன்றாய் விளங்கியறிந்திருந்த படியினாலே,

---

45. தாதியளை - தாதிகளை; பரிபாலினம் - பரிபாலனம்.

49. தேவடியாள் நாகி வயிற்றிலே யிராசாவின் விந்துக்குப் பிறந்த பிள்ளைக்குச், சோழ ராசாங்கப் பட்டமுங் கட்டிச் சிங்காசனத்திலே வைத்த மந்திரியாகிய நாமும் நம்முட சுய கோஸ்த்திர வங்கிஷங்களும்,

50. கைகுவித்து வணங்கினால், நம்முடைய சுயகோத்திரவின்மை கெட்டுப்போகுமென்று நினைத்து மந்திரி புத்திசாலியான படியினாலே, யிராசாவின் வாற்தை தட்டாமல், நல்லதென்று சொல்லி,

51. இரகசியத்திலே யுறவின்முறையாற் பெரிய மனிதரை யழைத்துக் காரியமிப்படியிருக்குது; தேவடியாள் வயிற்றிற் பிறந்த பிள்ளைக்கு நம்முட சாதியிற் பெண் கலியாணம் பண்ணிப்பட்டங்கட்ட இராசா நேமித்திருக்கிறா ரென்று சொல்ல.

52. உறவின் முறையா ரனைவரும், பெண் கொடுக்க மாட்டோமென்று சொல்ல, மந்திரி யிராசாவுடனே மறுவுத்தாரமாக,

---

48. முகிவு - முடிவு

49. கோஸ்த்திர - கோத்திர

50. கோத்தரவின்மை - கோத்திரப் பெருமை

52. உத்தாரம் - பதில்

53. ஆண்டவனே, சேத்திர வின்னமான பிள்ளைக்குப் பெண்ணுங் கொடுக்க மாட்டோம், பட்டமுங் கட்டக் கூடாதென்றுறவின் முறையார், பெரியவர்கள் சொல்லுகிறார்க ளென்று சொல்ல,

54. அப்போ திராசாவானவர், யோசித்து, அதற்குமுன் வெகுநாளாய்த் துவக்கிய பெண்ணையாற்றுக்கு வடக்குக் காளஸ்திரி யாறு வரைக்கும்.

55. மேற்கே, ஆமுர்க்கணவாய் முதல்ச் சமுத்திரக்கரை வரைக்கு மிராசாவின் காமாட்டி வேலைக்காரரை விட்டுக் காடுவெட்டி, வெளியாக்கி, யினிமேற் குடியேற்றவேணுமென்று யோசித்திருந்த காரியத்தில்,

56. பிறகு இராசா யோசனை யிலிந்தக் தேசத்திலிந்தப் பிள்ளைக்கு நிலையில்லை; ஆனதால்ப் புதிதாய்க் காடுவெட்டி யிருக்கிற வெளியைக் குடியேற்றி, யந்த இராட்சியத்தை யிந்தப் பிள்ளைக்குப் பட்டங்கொடுக்க வேணுமென்று, தன் புத்தியிலே யோசித்து,

---

53. வின்னமான - ஈனமான; சேத்திர வின்னம் - கோத்திர ஈனம் தாழ்ந்த கோத்திரம்.

54. காளஸ்திரியாறு - காளஹஸ்தி ஆறு (ஆந்திரா).

57. மந்திரிக்குச் சொல்லிச், சில திரவியத்தை யெடுத், தனேக மேவல்க்காரரிடத்திற் கொடுத்துப், பிறதேசங்களிற் போய்ப் பணங்களைக் கொடுத்தானும் பெண்ணுஞ் சில பிள்ளைகளை விலைக்கு வாங்கிவரச் சொல்லி,

58. இப்படி யனேகந் திரவியங்களைச் சிலவு பண்ணி, யாணும் பெண்ணுமாக அநேகஞ் சிறைகளை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து சேர்த்  தோராணுக்கொரு பெண்ணாகக் குடிசேர்த்து,

59. புதிதாய்க் காடுவெட்டின பெண்ணை யாற்றுக்கு வடதேசத்திற் குடியேற்றி, அந்தப் புது இராட்சியத்துக் கிராசாங்கஸ்த் தலமாகிற காஞ்சி நகரு முண்டாக்கி,

60. அதற்குக் கம்பைநதி, பாலாறு முண்டுபண்ணிக், காஞ்சிபுரத்திலே கோவில் ஸ்த்தல முமுண்டுபண்ணி, யதற்குத் தேவன்பெயர் ஏகாம்ப ரீசுரன் காமாட்சி யென்று பேரிட்டு,

61. அந்தப் பட்டணத்திலே யிந்த நாகி நாகரெற்றின மென்கிற

---

58. சிறை - அடிமை.

59. இராசாங்கஸ்தலம் - தலைநகர்.

நாடகசாலைத் தாசி வயிற்றிற் பிறந்த பிள்ளை ஆதண்டமானாகிற பிள்ளையைக் கூட்டிப்போய்க், குலோத்துங்க சோழனானவன் பட்டங்கட்டின பிறகு,

62. மந்திரியைப் பார்த்திந்தத் தேசத்துக் கென்ன நாமம் வைப்போமென்று கேட்க, மந்திரியானவன் யோசித்து, நாந்தேவடியாள் பிள்ளையென்று தாழ்த்தினதற்கு,

63. இராசாத் தன்னுடைய சாமர்த்தியத்தினாலே யுயர்த்தி, யிப்போ இதற்கென்ன தேசமென்று பேறிடுவோமென்று நம்மைக் கேட்டபடியினாலே,

64. ஒரே வாற்தையினாலே யிராசாச் சாமற்தியத்தினாலே யுயர்த்தின காரியத்தையெல்லாந் தாழ்த்திப்போடுவோ மென்று நினைத்திருந்தபடியினாலே,

65. மிகுந்த வணக்கமா, யாண்டவனே, யிதற்குப் பேர் தொண்டமண்டலந்தானே யென்று பறை போடுவித்தான். அன்று துவக்கி யின்றளவு மினிமே லுலக முகியுமளவுஞ், சோழ ராசாவின் தொண்டமண்டலங் காஞ்சிபுர மென்கிற பேராச்சுது.

66. அக்காலத்திற் சோழராசாவானவன், தன் சொய பொருளாகிற திரவியங்களைச் சிலவு பண்ணிப், பல தேசத்திலு மிருந்து பல சாதிச் சிறையும் வாங்கி, யொருசாதி யாக்கி,

67. அந்தத் தொண்டமண்டல தேசத்திற் குடியேற்றினபடியா லந்தக் குடியளுக்குத், தொண்டமண்டலத்து முதலியளென்று பேராச்சுது.

68. அவர்களந்தப்பேர் நிசிதமா யிருக்கிறத்தைப் பூறுவ சங்கதியைத் தள்ளக்கூடாத காரியமா யிருக்கச் செய்தே,

69. தங்கள் புத்தியினாலே யோசித்துப் பூறுவ மன்னிய பதார்த்த மாங்கிஷம் பொசித்த தைத் தள்ளிச், சைவத்தையும் ... ஆசாரத்தையும் பூசைகளையுந் தேடிக் கொண்டாலு, முன் பூறுவநாம அச்சரத்தை மறைக்கக் கூடவில்லை.

70. இதுதா னிந்தக் குலோத்துங்க சோழ பூறுவந் தொண்டமண்டலத்தை யுண்டாக்கின விதம்.

---

66. சொய - சுய

67. முதலியள் - முதலிகள் (முதலியார் வகுப்பார்)

*71. இந்தக் குலோத்துங்க சோழனுட ஏகபுத்திரியாகிற வொரு பெண்ணை, நாற்பத்தெட்டாம் பாண்டியனாகிற வாலசந்திர பாண்டிய நேககுமாரனான வரகுண பாண்டியனுக்குக் கலியாணம் பண்ணிக் கொடுத்தான்.*

*72. இந்தக் குலோத்துங்க சோழனானவன் அறுவத்தொன்பது வயதிருந்து மரித்தான்.சோழமண்டலஞ், தொண்டமண்டல மிரண்டு, மிவன் பெண்ணைக் கொண்ட வரகுணபாண்டியனைச் சேர்ந்தது.*

*73. அப்பால்ச் சோழன்மகள் வயற்றில்ப் பாண்டியன் மகனுக்குப் பிறந்த பிள்ளை உபயகுல கிளிப்பாண்டியன் வங்கிஷஞ், சோழ மண்டலமென்ற மூன்று தேசத்தையு மைஞ்ஞூற்றெழுபதுவருட மாண்டு வந்தார்கள்.*

*74. அந்தச் சோழன் தேவடியாள் பிள்ளையாகிற ஆதண்டமான வங்கிஷ மிவனுக்குள் புகலா யன்னவஸ்த்திரம் நடக்கக் கொஞ்சம்*

---

68. நிசிதமாய் - இழிவாய்; இருக்கச் செய்தே - இருக்கும்போது.

69. பூறுவமன்னிய பதார்த்தம் - பூர்வம் + அந்நிய + பதார்த்தம்; மாங்கிஷம் - மாமிசம்; பொசித்ததை - புசித்ததை.

பூமி கொடுத்தான். இந்தச் சோழன் சுயவங்கிஷப் பிதிரா யாண்டுவந்த காலம் ரெண்டாயிரத் தொரு நூற்று முப்பத்தாறு வருடம்.

75. இதற்கு ளிந்தச் சோழர் அனேகம் விறுமாண்டமான கோவில்களை யெல்லாம் வெகு அருமையாய் வீணாய்க் கட்டினார்கள்; வெகு குளங்க ளாறுகளை யுண்டாக்கினார்கள்.

76. மெய்யான தர்மமென்று பிராமணருக் கனேகஞ் சிலவு பண்ணினார்கள். புறதேசமான கலிங்கத் தேசத்தைக் கட்டித் திறை கொண்டார்கள்.

77. இன்னம், பொய்யான அனேகம் விதக் கீர்த்தி கொண்டார்கள். மெய்யான பல வழியைக் கண்டறிந்து மெய்யான தர்மத்தைச் செய்து, மெய்யான கீர்த்தி கொள்ளவில்லை.

78. இந்தச் சோழனி லொருவன் புத்தர் சமையஞ் செய்தா னிந்தச் சோழனி லொருவன் தேர்க்காலிற் பசுவின் கன்றரைப் பட்டுத்தென் றக்கியான துற்புத்தியைக் கேட்டு,

---

75. விறுமாண்டமான - பிரமாண்டமான

76. சிலவு - செலவு

78. புத்தர் சமயம் - பௌத்த சமயம்

*79. நற்புத்தியில்லாமல்த் தன் பிள்ளையைத் தன் தேர்க்காலிலே போட்டரைத்துப் போட்டா னிந்தச் சோழனி லொருவன் ஆனைச் சங்கிலியர் அவியார் கவிகொண்டான்.*

*80. இப்படி யிந்தச் சோழன் பாண்டிய னிரண்டு ராசாக்கள் கொண்ட.. வுலகக் கீர்த்தியை யெழுதி வைக்க வேணமானா லனேகம் பொஸ்த்தகம் வேணும்.*

*81. இப்படிச் சோழ பாண்டியன் உபயகுல கிளிப்பாண்டியன் பதினொராந் தலைமுறை கடசிப் பாண்டியன் மீனகேதன் பாண்டியன் வரைக்கும்.*

*82. இவர்கள் வங்கிஷ மிந்த மூன்று தேசமுங் காடுவெட்டி, நாடு நகருண்டு பண்ணிக் குடிக்கைந்து, வாரமுந், தங்க ளிராசாங்கத்துக்கொரு வாரமுமாக் வாங்கி,*

*83. இப்படி யனேகமலவு கீகத் தர்ம வழியாய் நடந்து ஆண்டுவந்த கால மிரண்டாயிரத் தெழுநூற் றேழுவருடம்.*

---

79. அவியர் கவி - அழியாத கவி

83. அநேகமலவு - அநேகம் அளவு; கீகத்தர்ம - கீர்த்தி தரும.

84. இதற்கு அக்கியானமாகிற ... வேத சாஸ்திரியளா லெழுதப்பட்டது மூன்று யுகங் கண்டதென்று மின்னம் அனேகம்... மெழுதப்பட்டிருக்கும்.

85. இப்படிச் சோழன் பாண்டிய னுபயகுல கிளிப்பாண்டியன், கடசி மீனகேதன் பாண்டிய னாள்வரைக்கும் வேறேயொரு சத்துருக் கலகமில்லாமல்,

86. சுயசுத்த பரிபாலின வற்தியாய் சகல சுயசுப சந்தோஷ செல்வ பாக்கிய சம்பன்ன கோலாகல சிம்மாசன கிரிடாதிதியமா யிருந்தார்கள்; அந்தநாள் 2707 வருடம்.

87. சேதுபதியாகிய மறவன் காலத்திலே, அந்தச் சேதுவாகிற இராமேரத்துக்குக் காவல்க்காரனாக விருந்தா னிவன் வங்கிஷ மறவரெல்லாம் பாண்டியன் வங்கிஷத்துக்கு கைவேலை யுழவாளப் பேரா யிருந்தார்கள்.

---

86. வற்தி - வளர்ச்சி; சம்பன்ன - நிறைவு; கிரிடாதிதியம் - முதன்மை.

87. யுழவாள - ஊழவார

88. இவர்கள் சாதி, யறுத்துக் கட்டுகிற சாதியானதா லொருபெண்பிள்ளை மூன்றாண்பிள்ளை, நாலாண்பிள்ளைக்குத் தாலி குட்டி வாழ்ந்து வருகிற சாதியாகச்சே,

89. இந்த விரண்டாயிரத் தெழுநூற்றேழு வருடத்திலு மென்மேலு மந்த மறவர் கோத்திரம் நாளிலே விஸ்த்தாரமாய் வந்தித்துது.

90. ஒரு வூருக்குப் பாண்டியன் வங்கிஷம் வெள்ளாளர் நாலு வீடிருந்தால், மறவர் நாற்பது வீடறுபது வீடு நூறு வீடிருப்பார்கள்.

91. இப்படிப், பாண்டியன் தேசமெல்லா, மறவர்குடி வந்தித்துப், பிரபலமாய் மறவர் கோஸ்த்திரப் பிரசைகள் பாண்டியன் கைக்கீழக் குடியான பேர்களா யிருந்தவர்கள், சனப் பெருக்கத்தினாலே மிகுந்து போனர்கள்.

92. அப்போ, மறவர்குடிகளெல்லாந் திரண்டு பாண்டியன் வங்கிஷத்தை யூருக்கூரி ருந்தவிடத்திற் குத்திக் கொன்று போட்டு,

---

88. தாலிகுட்டி - தாலிகட்டி

91. கோஸ்த்திர - கோத்திர

93. மறவ ரெல்லாருமாகத் திரண்டு, பாண்டிய னரசுப்பட்டணமாகிற மதுரையைப் போய்ச் சுற்றிக்கொண்டு, மீனகேதன் பாண்டியனையு மவனுடைய மூன்று பிள்ளைகளையுங் கொன்றுபோடலா மென்றும்,

94. அந்த மூன்று பிள்ளைகளில் மூத்தவன்பேர் வேளனாவுடைய பாண்டியன்; இரண்டாம் பிள்ளை வேதமுடைய பாண்டியன்; மூன்றாம்பிள்ளை கப்பலுடைய பாண்டிய னெனப்படும்.

95. மறவ ரிவர்களைக் கொன்று போட்டுத், தங்கள் மறவர் கோஸ்த்ரச் சிரசாயிருக்கிற சேதுகாலத் தனுக்காத்த தேவன் வங்கிஷப் பிதிர் சேதுராமேசுரத்தில்க் காவலாண்டு வருகிறபடியினாலே,

96. அந்த வங்கிஷத்தை அரசாக்கி வைத்து, இராட்சியத்தை தாமாள வேணுமென்று, நிச்சயித்து, அக்கால்த்திற் கேதுராமேசுர ஸ்த்தலக் கால்க்காரனான தனுக்காத்த தேவனிடத்திற்போய்ச் செய்தி சொல்ல,

---

95. சிரசாக - தலைமையாக

96. நிற்சயித்து - நிச்சயித்து

97. அந்தத் தனுக்காத்த தேவனானவன் இப்படிச் செய்யலாமா? இது பெரிய காரியம்! நானந்தப் பட்டணத்திலே யிருக்க ஏற்க்காது.

98. இந்தக் கோவிலைக் காத்துக்கொண்டிருக்கிற எனக்கித்தனை பெரிய காரியஞ் செய்யலாகாதென்றும் மறுதலிக்க, அந்த இனத்துச் சாதியாரான மறவரெல்லாங் கூடி,

99. " நாங்கள் வெகு பிறையாசப்பட்டு நடத்தி முகித்த காரியத்தை, யெங்களுக்குத் தலைவனாயிருக்கிற நீ சேர்த்துக்கொள்ள மாட்டோமென்றால், நாங்க ளும்மை விடுகிறதில்லை" யென்று கட்டாயம் பண்ணிக் கூட்டிவந்து பட்டங்கட்டினார்கள்.

100. அந்தத் தனுக்காத்ததேவன் பட்டங்கட்டிக்கொண்ட போது, தனக்குச் சேதுபதி தனுக்காத்த தேவனென்று பேரிட்டுக்கொண்டான்.

101. அந்தச் சேதுபதி தனுக்காத்த தேவனானவன், தர்ம இஸ்த்தலத்திலே யிருந்தபடியினாலே பாண்டியனையு மவன்மூன்று பிள்ளைகளையுமளவள் பெண்மக்கள் மறுமக்கள் மாரையுங் கொல்லவேண்டா மென்று,

---

97. ஏற்க்காது - ஏற்காது.

98. மறுதலிக்க - மறுக்க

101. இஸ்த்தலம் - ஸ்தலம்; மறுமக்கம் - மருமக்கள்.

102. அந்தப் பாண்டியனையும் மவன் பிள்ளை மூன்றுபேரையுங் கூட்டிக்கொண்டு சேதுராமேசுத்திற் கொண்டுவந்து தனுக்கோடியினும் அக்கினி தீர்தத்தினுந் தானு மவர்களுமாய்த் தானம்பண்ணி,

103. கோவிலி ரிராமலிங்கத்தின் சன்னதியில் வந்து, பாண்டியனுக்கு மவன் பிள்ளைகளுக்குஞ் சொன்ன வாற்தையாவது,

104. " உங்களுக்கு முங்கள் பிள்ளைகளுக்குந் துரோகஞ் செய்கிறதில்லை" யென்று பிராமாணஞ் செய்து கொடுத்து, மூத்த பிள்ளையைத் தனுக்காத்த சேதுபதியானவன் தன்னிடத்தில்த் தளவாயாகவும்,

105. நடுவுப் பிள்ளையைத் தேவாலையம் பிறமாலையந் தர்ம காரியங்களை விசாரிக்க வைத்து, மூன்றாவது கடசிப்பிள்ளையை யிராட்சியத்தை விசாரிக்கச் சொல்லி நேமித்து வைத்துத் தான் பாண்டியனரசை யாண்டுவந்தான்.

---

102. தானம் - ஸ்நானம்

104. பிரமாணம் - சத்தியம்

106. அன்றுமுதற் பதினொருபட்ட மறவராகிய சேதுபதி யிராசாவாகவும், பாண்டியன் வங்கிஷந் தளவாய் பிரதானியாகவுஞ் சீமை கசலமு மாண்டுவந்தார்கள்.

107. இப்படிப் பாண்டியன் வங்கிஷத் ததிகாரமுஞ் சேதுபதிப் பட்டமுமாய் அஞ்ஞூற்றுப்பத்து வருடமாண்ட பிறகு, பனிரண்டாவது பட்டம் வந்த சேதுபதி தனுக்கத்த தேவன் பட்டத்துக்கு வந்தவன்.

108. இந்தப் பாண்டியன் வங்கிஷத்தைத் தள்ளி யிராசாவும் பிரதானி அதிகாரமுந் தங்கள் மறவர் கோத்திரந் தானேயாப்புக் கொண்டிந்தப்படி மூன்று தலைமுறை தொண்ணூற்றெட்டு வருடமாண்டுவந்தார்கள்.

109. இதற்குள்ளே நந்தனென்கிற நீசன், கொஞ்சனா ளிந்தச் சோழ பூமியினுங் கொஞ்சநாள்த் தொண்டமண்டலத்திலு மாண்டு வந்தார்கள்.

110. பிறகு, மறவர்தானே அதை யழித்துத் தொண்டமண்டலந் சோழமண்டலம் பாண்டிமண்டல மிந்த மூன்று தேசமுமாண்டு வந்தார்கள்.

111. இப்படி மறவர் பதினாலு பட்ட மறுநூற்றெட்டு வருட மாண்டு வருகையி லானைக் கொந்தி ராயனென்றும், அழகாபுரி

ராயனென்றுங் குறும்பர் தலையெடுத்து வடதேசத்திற் பிரபலித்து, இந்தத் தனுக்காத்த சேதுபதியைத் தோப்பாக் கொடுக்கச் சொல்லக் கேட்டான்.

112. அதற்கிந்த சேதுபதிகள், நீ யாருனக்கு நாந்தோப்பாக் கொடுக்கிறதா? வென்று தள்ளிப்போட்டகள்.

113. அந்தக் குறும்பராகிய ராயர் கூட்டம் பிரபலமா யிந்தச் சேதுபதியாண்ட தொண்டமண்டலத்திலே பரங்கிப்பேட்டை வெள்ளாளறு வரைக்கும்.

114. அழகாபுரி நாயனாளில் வலுவிலே சீர்மை கட்டியாண்டான். வெள்ளாற்றுக் கிடபுரஞ் சிதம்பரங்கூடச் சேதுபதி யாண்டு வந்தார்கள்.

115. பிறகு வேலூரி ராய நாளிற் சேதுபதி தானையம், சிதம்பரந், திருமலை தேசம் இதுவல்லாஞ் சேதுபதி தானையம் போட் டிராமாசுரத்திலிருந்து இராட்சி மாண்டுவருகையில்,

---

111. தோப்பா - கப்பம்

114. வெள்ளாற்றுக்கிடபிரம் - வெள்ளாற்றுக்கு இடப்பக்கம்.

115. வாலிகுண்டுபுரம் - வாலிகண்டபுரம்; ராயநாளில் - இராயர் ஆட்சிபுரிந்தபோது; தானையம் - பாளையம்

116. வேலூர் ராயர் குருவாகிற அய்யகிளை யையராகிற வுத்தராதிக்கக் கன்னடியப் பிராமணறுஞ் சேதுஸ்த்தானம் பண்ணவந்து, இஸ்த்தானம் பண்ணிக்கொடுவந்து,

117. செம்புகீசுரமாகிற திருவானைக் காலில் வந்திறகங்கிச், சில நாளிருந் திவிடத்து தபிப்பிராயங்க ளுளவெல்லாம் பாத்துத் தஞ்ச நகரத்துக் காளனுப்பி, அவடத்துளவுஞ் சேற்தித் திவிடம் பெலயீன மென்றறிந்து,

118. இராயகுருவைய கிளையையரிடத்திலிருந்து கொண்டு, கொட்டிய நாகம நாயக்கனை வேலூர் இராயரிடத்துக் கனுப்பிக் காரியத்தை யறிவித்தபின்,

119. நாகமனாயக்கன் மகன் விசுவ நாதநாயக்கனும், ஆயிரஞ் சனமு மனுப்பி யவர்க ளிராம னாளுகிற சீர்மை வெள்ளாறு அறுதியான சீர்மை மேற்கே யிருக்கிறவிடத்தில்,

120. வாலிகுண்டு சமீபம் பத்து நாழிகைவழியிற் காட்டருகில் வந்து சேர்ந்து வஞ்சகமாய்ச் சாதிப்போரா யிராத்திரியே வாலிகுன்று தானையத்தில் வந்து விழுந்தடித்திலிருந்த சனத்தைக் கொன்று,

---

117. செம்புகீசுரம் - ஜம்புகேஸ்வரம்; பெலயீனம் - பலவீனம்.

120. சாதிப்போரா - சாதனை செய்பவராக

121. அந்தவிடத்திலிருந் துடனே திருசுராபுரத்துத் தானையத்திலும் வந்ததையு மடித்து வாங்கிக்கொள், டந்தவிடத்திலே மேலுஞ் சனத்தை வடக்கேயிருந்து வரவழைத்து வைத்துப் போட்டு, மதுரை, திருநெல்வேலி வரை கட்டினார்கள்.

122. பிறகு, ராயருட வூழியத்தி லொரு மனுடன் செவ்வப்ப னாயக்கனாகிற வனுக்கு

இராயர் ஆயிரஞ் சனங்கொடுத்தனுப்ப, அவன் வந்து தஞ்சநக்ரத்திற் போட்டிருந்த மறவர் தானையத்தை யடித்துத், தஞ்சநகரத்தை வாங்கிக் கொண்டார்கள்.

123. தஞ்சநகரத்தைச் செவப்ப னாயக்கன் முதலவன் சந்ததி நாலுபட்ட மாண்டுவந்தார்கள்.

124. அதற்குள்ளே, தஞ்சாவூர் வடுகர் தஞ்சநகர் மூன்று கோட்டையையு, மதற்குள்ளான அரண்மனைகள், சிவகங்கைக்குள முதலான மற்றக்குளம், வல்லத்துக்கோட்டை,

---

121. திருசுராபுரம் - திருச்சி

122. மனுடன் - மனிதன்

125. திருக்காட்டுப் புளிக்கோட்டை, கும்பகோணஞ், சாக்கைக் கோட்டை, பந்தநல்லூர்க் கோட்டை, பாளையங் கோட்டை, யிவளவு கெடிஸ்த்தலமுங் கட்டித் திருவாரூர் ஆயிரக்கால் மண்டபத்தைப் பிடுங்கி, மன்னார்கோவி லாயிரக்கால் மண்டபமுங் கட்டி,

126. தஞ்சாவூரிலிருந்து இராச கோபால விக்கிரகத்தைக் கொண்டுவந்து மன்னார் கோவிலி லிஸ்த்தாபித்தான்.

127.திருசுரபுர மதுரையை யாண்ட நாயக்கமார் விசுவனாதநாயக்கன் முதற் கடசி மங்கமாள் பரியந்த மெட்டுத் துரைத்தன மதுரையிற் கடசிப் பங்காரு திருமலைனாயக்கர் ஆக வொன்பது துரைத்தனத்தில்,

128. திருசுரபுர, மதுரை, பாளையங் கோட்டை., திண்டுக்கல்லுக் கோட்டை, சங்கலித்துருவங், கருவூருக் கோட்டை, நாமக்கல்லுக் கோட்டை,

129. மேற்கே பதினெட்டுப் பாளையப் பட்டுக் கோட்டைகள் முதலான கோட்டைகள் அதற்குள்ளான குளங்கள் கோவில்க

---

125. கெடிஸ்தலம் - நகரம் (Town)

ளிதுகளெல்லாம் பிரபலமமா யுண்டுபண்ணி, வெகு கீர்த்திகொண்டார்கள்.

130. இவர்களுக்கு மலையாளர ராசாப் பயந்து, பாண்டியன் தேசத்திலே சில சீர்மை திருடுகிற முகாந்திரமாகவு, மிப்போ கன்னியா குமரிக்குச் சிறுது சீர்மையெல்லாம் வளைத்துக் குறுக்கே கோட்டை போட்டுக்கொண்டான்.

131. இப்படி முன்னூறு வருடந் திருச்சிராப்பள்ளியு, மதுரையு, மதிற்சேர்ந்த விராட்சிய மெல்லா மாண் டெழுபத்திரண்டு பாளைப்படட்டுகளு முண்டாக்கி, யனேக கீர்த்திகொண்டு முன்னிராட்சியமாண்ட இராசாக்களான மறவர் குலத்திராசாங்கத்தைச் சுத்தமா யெடுத்துப் போட்டார்கள்.

132. அந்த மறவர் சேதுபதி ராசாங்கஞ் செய்யும்போது, நளச்சக்கரவற்தி பெண்சாதி யவளைவிட்டுப் பரிந்து, காட்டி லலைந்து,

133. பிறகு, திண்டோள்ச் சுவாகு வென்கிற சேதுபதியாண் மனையில் வந்தடைய, அவளை யந்தச் சேதுபதி, தனது

---

130. சிறுது - சிறிது

சகோதரியாய்ப் பாவித்து, விதற்ப தேசத்துத் தமையந்தி தகப்பனுக்குத் தூதரை யனுப்பிவித்து, அந்த விதற்பதேசமாண்ட இராசாவையு மவர்கள் சதுரங்க சேனைகளையு மழைப்பித்து, அவர்களுக்கு விருந்தளித்து, தமியந்தியையுங் கூட்டியனுப்பி, மகா கீர்த்தி கொண்டான்.

134. இப்படி யனேகங் கீர்த்திகொண்ட சேதுபதி யிராசாங்கத்தை நூறுவருடம் வடுகாரடுத்ருப் போட்டுத் தாங்கள் சுயராசாங்கமா யிருந்தார்கள்.

135. பிறகு, கண்ணுமேக்கியுடையான் மகன் வன்னித்தேவன், திரும்பத்தன் சாமாற்றியத்தினாலே தங்கள் சாதியான மறவரைச் சேர்த்துக் கொண்டு கொஞ்சஞ் சீர்மை கட்டினான்.

136. மூன்று வருடத்துக்குள்ளே நாயக்கர் வகைத்தளவாய் இராமப்பய்யன், அவனையடித்தவன் அம்மான் சடக்கத்தேவனையும் பிடித்துத் திருச்சிராப்பள்ளியிற் கொண்டுவந்து மூன்று வருடங் காவலிற் போட்டிருந்தான்.

---

133. விதற்ப தேசம் - விதர்ப்பதேசம் - Bara Nagpur என இப்போது அறியப்படும் நகர்; விதர்ப்பநாட்டைப் பீமன் ஆண்டான்; பீமனின் மகளே தமயந்தி.

137. மூன்று வருடத்திற்குப் பிறகு, வடக்கேயிருந்து இராமேசுர யாத்திரைக்கு வந்த வயிராவிகள் பன்னீராயிரஞ் சனமும் பனிரண்டு கோசாமிகளும் வந்தவர்கள்.

138. சேதுபதியை, வடுகர் திருச்சி ராப்பள்ளியிற் கொண்டுபோய்க் காவலிற் போட்டிருக்கிற செய்திகேட்டவர்கள் வந்து சீரங்கத்திலே யிறங்கி,

139."சேதுபதியை விடுகிறீயோ? இல்லாவிட்டால்த் திருச்சிராப்பள்ளிக் கோட்டையைப் பிடித்து, வடுகர் வங்கிஷத்தையுஞ் சுத்தமா யறுத்துப்போடுவோமெ"ன்று சொல்லிக் கோட்டையை வளைந்துகொண்ட பிறகு,

140. வடுகர், சேதுபதி சடக்கத் தேவனைக் காவலைவிட்டுச் சீரங்கத்திலே கொண்டுபோய் விட்டுப் பன்னீராயிரம் பயிராவிகளுக்கு விருந்துங் கொடுத்துச் சேதுபதியையு மொப்பிவித்தார்கள்.

141. பிறகு, வயிராவிகள் சேதுபதியைச் சீரங்கத்திலே பட்டங்கட்டி, யிராமேசுரத்துக்குக் கூட்டிப் போய்ப் பட்டத்துக்கு வைத்துப்போட்டு, வயிராவிகள் திரும்ப வுத்திராதிக்குப் போனார்கள்.

142. அப்போ, வயிராவிக்ள கட்டின பட்டஞ் சேதுபதி சடக்கன்தேவன் வங்கிஷ மின்னாள் வரைக்குஞ் சேதுபதி பட்டமாய் வருகிறது.

143. இந்தச் சேதுபதியிலே, முகவூரணிச் சேதுபதி நாளில், வடக்கேயிருந்து முகுலா துலுக்கர் வந்து வடுகராண்ட மதுரைப் பட்டணத்தை வளைந்து சுற்றிக்கொண்ட போது,

144. மூன்றுமாத மதுரைக் கோட்டை அடைபட்டிருந்து, வடுகனாயக்கர் பண்ணின வெழுபத்திரண்டு பாளையப்பட்டாராலே கூடாமல், வடுகனாயக்கமார் மதுரையி லடைபட்டபோது,

145. சேதுபதிபோய்ச் சத்துராதியான முகிலத் துலுக்கரை வெட்டிச் செயித்து, விரட்டி, அடைகோட்டையாகிய மதுரையைத் திறக்கப்பண்ணி, வடுக னாயக்கர் பேரில் வந்த இடுக்கந் தீர்த்துவைத்தான்.

146. பிறகு, கிழவன் சேதுபதி நாளில், மைசூர்க்கற்கர் தளவாய் நந்திராசாவு மவனுடைய தளமும் வந்து, மதுரைக்கோட்டையைச் சுற்றி யடைத்து முத்திக்கை போட்டபோது,

---

145. சத்துராதி-எதிரி; அடைகோட்டை - மூடியிருந்த கோட்டை; இடுக்கம் - இடுக்கண் - துன்பம்.

146. முத்திக்கை - முற்றுகை.

147. இந்தக் கிழவன் சேதுபதியு மவன் தளவாயுஞ் சேனைகளும் போய்ச் சண்டை செய்து, துரத்தி, அடைகோட்டையைத் திறந்து, வடுகர் துரைத்தனத்தை நிலைக்கப் பண்ணினான்.

148. இப்போ தஞ்சநகரமாறுகிற மராட்டியர் வங்கிஷத்தி ரசா பாபாசாயபு நாளில்த் தஞ்சாவூரில்க் கதிரையுந் தளமும் போய்ச் சேதுபதி விசையரெகுனாதத்துரை நாளிற் சண்டை செய்தபோது.

149. அந்தத் தளத்தையெல்லா மடித்து மிராட்டியரைத் துறத்திச் சூப்புச்சந்தை முதல் அம்மாபேட்டை வடுவூர் மட்டு மறாட்டியராள்

150. மற்றச் சோழதேசாமல்லாஞ் சேதுபதி கட்டிச் சிதம்பரம் வரைக்கு மொருவருட மாண்டு, பிறகு புதுவூற் வரைக்கு மிராட்டியருக்கு விட்டுப், புதுவூருக்குப் புறஞ் சேதுபதி யாண்டான்.

151. சேதுபதி போட்ட கோட்டை கொள்ளிடக்கரையில்த் தீவுக்கோட்டை, பட்டுக்கோட்டை, மேற்கே பழையகோட்டை, அறந்தாங்கிக்கோட்டை, கீழாநெல்லிக் கோட்டை, திருமயங்கோட்டை, திருப்பத்தூர்க் கோட்டை,

---

149. தளம் - படை; மிராட்டியர் - மராட்டியர்.

152. இராமநாதபுரங் கோட்டை, பாம்பன் கோட்டை, கமுதிக் கோட்டை, ஆறுமுகக்கோட்டை, யிந்தப் பத்துக் கற்கோட்டையு மின்ன மனேக மண்கோட்டைகளு முண்டு.

153. சேதுபதிக்கு முப்பத்திரண்டு பாயைகாரரரி லொரு பாளையகாரன் தொண்டமான்; சேதுபதி வேட்டைநாய் பிடித்தவ னுடையாத் தேவன்; இப்படிக்கொத்த சேதபதியானவன் மறவன்.

154. தஞ்சநகர மாண்ட வடுகர் செவ்வப்பனாயக்கர் முதல் விசையராகுவ னாயக்கர் வரைக்கு நாலு பட்டமாண்டார்கள்.

155. இப்படி யிருக்கச்சே, வேலூர் ராயரைத் துலுக்கர் வெட்டிப்போட்டு, வேலூராயனுடைய சீர்மையைத் துலுக்கர் கட்டிக்கொண்டு, துலுக்கருக்கரு மிராட்டியரும் ஆர்க்காட்டில் வந்திறங்கி,

156. நவாபு சாதுலகான் ஆறூர் எல்கை சேர்த்துப், பாலாற்றருகிற் கோட்டை போட்டான்; அதற்குப் பேர் ஆர்க்காடாச்சுது. நவாபு துலுக்கன் ஆர்க்காட்டி லிருக்கும்போது,

157. மறாட்டியரில் எகோசி ராசாவுக்கு ஆரணிக் கோட்டையுஞ் சீர்மையுங் கொடுத்திருக்கும்போது, தஞ்சநகரமாண்ட வடுக நாயக்கருக்குந் திருச்சுரபுர மதுரை ராட்சியமாண்ட வடுக னாயக்கமாருக்கும் பெண் வியாட்சியத்தினாலே வித்தியாசமாய்.

158. தஞ்சநகரம் ஆண்ட வடுக நாயக்கர், திருச்சுரபுரத்தாரை யடித்துப்போட வேணுமென்று நினைத்து, ஸ்த்தாணாதிபதிகளை ஆற்காட்டுச் சாதுலுகான் நவாபு இடத்துக்கனுப்பி,

159. சிறுது திரவியங் கொடுப்போமென்று மதிருச்சுரபுரத்தை அடித்துக் கட்டித், தனக்குக் கொடுக்கச் சொல்லி யுடன்பிடிக்கை பேசினார்கள்.

160. இதுசெய்தி திருச்சுரபுரமாண்ட நாயக்க ரறிந்துடனே ஆரணியிலிருந்த மறாட்டிய போசலை யேகோசி யிராசாவுக்குத் தானாபதியை யனுப்பி,

---

157. ஏகாசி - ஏகோஜி; தஞ்சை மராட்டிய ஆட்சி வமிசத்தைத் தோற்றுவித்தவர்; வியாட்சியம் - வியாஜ்ஜியம் - வழக்கு

158. சாதுலுகான் - Nawab Saadatullah Khan; கர்நாடக நவாபாக ஆட்சிபுரிந்தவர் (1710 - 1722 A.D.)

160. போசலை - Bhonsle; யேகோசி - ஏகோஜி

161. "துலுக்கனான நவாபைச் சேர்ந்துகொண்டு நம்முடைய வீட்டை யெடுத்துப் போடப் பேசியிருக்கிற தஞ்சாவூர் நாயக்கரை அடித்துப்போட், டந்த யிராட்சியத்தை யெங்கள் வச மொப்பிவித்துபோடும்;

162. உமக்கிம்மாத் திரவியந் தாறோ மெ"ன் றுடன்பிடிக்கை பேசி யுடனே திரவியத்தைக் கையேற்றிச் சீக்கிறப்படுத்தினார்கள்.

163. அப்போது, தஞ்சநகரத் திலிருந்த பெரியமனுஷருக்கும் அந்த யிராசாவா யிருந்த விசையராகவ னாயக்கருக்குஞ் சரிப்படாம லுள்ளே காரியஸ்தாளுக்கும் நாயக்கருக்கும் உள்பொண்ணியு மிருந்த செய்தி திருச்சுரபுரமாண்ட நாயக்கர் அறிந்து,

164. தஞ்சநகரத்திலிருந்த காரியஸ்த்தாள் சகலருக்கும் உள்ச்செய்தியுஞ் சிறுது திரவியமும் அனுப்பி, " நாமிப்படி மறாட்டியரை யெடுத்தனுப்பிகிறோம்;

---

162. இம்மாதிரவியம் - இவ்வளவு செல்வம்; கையேற்றி - கொடுத்து

163. உள்ப்பொண்ணியும் - உள் தகராறு

164. உள்ச்செய்தி - இரகசியச் செய்தி (Secret Message)

165. நீங்களு மொத்தாசையா யிருந்து, காரியத்தை முகித்தால், நீங்க ளவரவ ரிருந்தபடி நாம் நேமித்து வைத்கிறோ மெ"ன்று பிறமாண வாற்தைய ளனுப்பி,

166. இப்படியாகத் தஞ்சநகரத்திலிருந்த காரியக்காறரையுந் திருசுரபுரத்து நாயக ருள்வசப்படுத்திக் கொண்டு, மறாட்டியனாகிற எகோசி ராசாவுக்குச் செய்தி யனுப்பின வுடனே,

167. ஆரணியிலிருந்த எகோசி இராசாவும், அவனுடைய ஆணிரங் குதிரையும் வந்து, திருவையாற்றில்ப் பாளைய மிறங்கின செய்தி, தஞ்சநகரமாண்ட விசையராகவனாயக்கருக் கறிக்காறர் வந்து சொன்னவுடனே,

168. வந்து செய்திசொன்ன மனுஷனை நாக்கையறுத்துப்போட்டு, " என்மேலே யெதிரி சண்டைக்கு வாறானென்று சொன்னவனைத் தலையை வெட்டிப் போடுங் கோளென்" றுத்தரவு கொடுத்து,

---

165. பிரமாணவார்த்தை - உறுதிமொழி (Assurance)

167. அறிக்காறர் - அறிக்கைக் காரர் - அரண்மனைக்குச் செய்திகளைத் தருபவர்.

169. " நமக்கு ரெங்கசாமிராசகோபாலடு வுன்னாரு; எவருடா மனமிந்த வொச்சேதி? தொத்துக் கொடுக்கா?" வென்று சொல்லிப்போட்டான்.

170. அதின்பிறகு, காரியத்தை ஒரு பிள்ளையுஞ் சொல்லவில்லை; மராட்டியர் பாளையந் திருவையாற்றிலிருந்து அம்மன் பேட்டையில் வந்திறங்கி, மறுநாள் விண்ணாற்றங் கரையிற் பாளையம் வந்த செய்தி கோட்டையிலிருந்த காரியஸ்தா ளறிந்து.

171. வடகோட்டைவாசல் ஆன்நத வல்லி கோவில்வாசல் அல்லது வடக்குக்கோட்டை வாசலைத் திறந்துபோட்டுப் பெரிய கோட்டையில் வந்துவிட்டார்கள்.

172. எகோசிராவாவுங் குதிரையும் வடக்கு வாசல் வழியாய்க் கோட்டைக்குள்ளே வந்து, அவிடத்திலே சிறுது குதிரையை நிறுத்திப் போட்டுக் குறைக்குதிரையும் எகோசி ராசாவும் பெரியகோட்டை வடக்குவாயல்த் திறந்திருந்த வழியாய் பெரிய கோட்டைக்குள்ளே வந்தார்கள்.

173. நாலு வீதியுங் குதிரை சுற்றிக் கொண் டாசார வாசலிற் குதிரை வந்தபிறகு, நாயக்கர் கேட்டுக் கத்தி கேடயம்

---

169. கோலடு - கோபாலடு - கோபாலசாமி; மனமிந்த - நம்மிடம் வொச்சேதி - வருவது; தொத்துக் கொடுக்கா - வேசிமகனே

172. குறைக்குதிரை - மீதிக் குதிரைகள்.

வாங்கிக்கொண்டு, திட்டிவாயல் வழியாய்ப் பிறப்பட்டு, அய்யன்கடைவழியாய் வந்து,

174. இராசகோபாலன் கோவில்முன்னே வரும்போது, இராசகோபாலனை யுண்டென்று நம்பியிருந்தபடியினாலே, யிராசகோபாலன் கோவிலுக்கு முன்னே வந்தவுடனே குதிரைக்காறர் கண்டு, நாயக்கரை வெட்டிப் போட்டார்கள்.

175. அவருடைய சரீரத்தை யவடத்திலே சுட்டு, அவர் பெண்சாதி யேழுபேருந் தீய்ப்பாய்ந்தார்கள்.

176. மறாட்டியனாகிற எகோசி யிராசாக் கோட்டையும் பிடித்துச் சீர்மையும் ஒப்புப் கொண்டா னிதுதான் மறாட்டியர் தஞ்சநகர்க் கோட்டையுஞ் சீர்மையு மொப்புக்கொண்ட விதம்.

177. இப்படி மறாட்டியன் எகோசியிராசா முத லின்னேரம் வரைக்குந் தஞ்சநகரச் சீர்மை மறாட்டியர் ஆண்டுவருங் காலம் வருடம் 130 சில்வான மாகுது.

---

173. ஆகாரவாசல் - தலைவாசல்; திட்டிவாயல் - திட்டிவாயில் - புழைவாயில் (Wicket gate)

174. குதிரைக்காரர் - ஏகோஜியின் படைவீரர்கள்

175. சுட்டு - எரித்து

177. சில்வானம் - சொச்சம்

178. அதற்கமுன், தஞ்ாசவூர் நாயக்கர் ஆற்காட்டிலிருந்த சாதுலாகான் நபாவுக்குத் தானாபதி யனப்பித் திருசரபுரத்தை யடித்துப் போடச் சொன்னபோது,

179. அப்போ, துவக்கிக் காலமில்லாமற் சாதுலாகானுஞ் செத்துப்போய்ப் பிறகு வெகுநாள்ப் பின்னிட்டுப், பிறகு ஆர்க்காட்டுக்கு சந்தாகான் வந்த பிறகு,

180. தஞ்சநகரத்தை மறாட்டியர் வலுவி லுபாயமாய்ச் சதிப்போராய் வஞ்சகத்திலே பிடித்த செய்தி யறிந்து, தான திரிசுரபுரத்தைச் சதிமாற்கம் பண்ணி வாங்கிப்போட்டுப், பிறகு தஞ்ச நகரத்தையும் வாங்கவேணுமென்று யோசித்து,

181. திருச்சிராப்பள்ளியில் வடுகர் வங்கிஷ ராணிமங்கம்மாள் பட்டமாகச்சே அவளைச் சந்தாகான் தனக்குத் தங்கையென்று சொல்லிச் சினேகித் தவளக்குச் சந்தேகந்தோணாமல்த் தன் குறான்மேலே சத்தியஞ்செய்து கொடுத்து,

---

178. தானாபதி - தூதன்

179. சந்தாகான் - சந்தாசாகிபு (Chanda Sahib); ஆசப்ஜாவின் தளபதியாக வந்து திருச்சி, மதுரை, திண்டுக்கல் ஆகியவற்றைப் பிடித்தவர்.

181. குறான் - குரான் (Quran)

182. அவள் வஞ்சகமில்லாமல் அண்ணனென்று பாவித்துக் கோட்டைக்குள்ளே விருந்துக் கழைக்கச், சந்தாகான் திருசுரபுரத்துக் கோட்டையிலே மங்கம்மாள் மனையிலே விருந்து சாப்பிட வாறோமென்று வந்து,

183. சதிமாற்கமாய்க் கோட்டையைப் பிடித்து, மங்கம்மாளையும் பிடித் தரையிலடைத்துக் கொன்றுபோட்டுத், திருசுரபுரத்தையு மிந்தச் சீர்மையையும் வாங்கி,

184. மதுரையிற் போய்ப், பாளைய மிறங்சிச் சண்டைசெய்து, மதுரையை முத்திக்கை போட்டு, வடுகர் பட்டத்துத் துரையிடத்திற் சண்டை செய்து, கபிலாய் மதுரைக்கோட்டை வாங்கி, யிராட்சியத்தையு மொப்புக்கொண்டான்.

185. சந்தாகான் திருசுரபுர, மதுரைக் கோட்டையையு மிந்த யிராட்சியத்தையு மொப்புக்கொண்டு, துலுக்காணமாகிய காலம் வருடம் 74 ஆச்சுது.

---

183. பிடித்தரையில் - பிடித்து + அறையில்

184. கபிலாய் - ஒப்பந்தப்படி

185. துலுக்காணம் - இசலாமியர் ஆட்சி

*186. இப்படியாக்கு மித்தேசத்தின் பூறுவ விற்தி; யிந்தச் சோழமண்டலம், பாண்டிமண்டலந், தொண்டமண்டல மிந்த மூன்று தேசத்துக்கும் பூர்வம் ஆரணியமான வனாந்திரக்காடு.*

*187. அந்தக் காட்டை வெட்டி நாடு, நகரி, யாறுகள், குளங்கள் ஆக்கியானப் பொய்யான தேவர்களுடைய தேவாலையங்கள், ...சாஸ்த்திரங்களைப் போதிவிக்கின்ற பிராமனாள் சகலத்தையு முண்டுபண்ணின ஆதின வங்கிஷமானது சோழன், பாண்டியன் வங்கிஷ மென் றெப்போதுஞ் சொல்லப்படும்.*

*188. அந்தச் சோழன், பாண்டியன் வங்கஷத்தை யவர்கள் கைக்கீழ் வேலைக்குடியா யிருந்த மறவர்சாதி செய்து, இராட்சியத்தை யெடுத்துக் கொண்டு, சிலநாளாண்டு வந்தபிறகு,*

*189. அவர்களை வடகர் சதிசெய் தெடுத்துக்கொணடார்கள். வடுகர் சிலநாளாண்டுவந்த பிறகு, வடுகரை மறாட்டியருந் துலுக்கருஞ் சதிசெய்து இராட்சியத்தைக் கட்டிக்கொண்டார்கள்.*

---

186. ஆரணியம் - காடு

187. அக்கியான - அஞ்ஞான; ஆதின - ஆதீன - உரிமையுடைய

189. வடுகர் - தெலுங்கர்.

190. மறாட்டிய ரிந்தத் தேசத்துக்கு வந்து நூற்றுமுப்பத்துமூன்று வருடமாகுது. துலுக்கரிந்த இராட்சியத்தைக் கட்டி யெழுபத்துநாலு வருடமாகுது.

191. மறவர், வடுகர், மறாட்டியர், துலுக்க ரிந்தச் சோழமண்டலம், பாண்டியமண்டலந் தொண்டமண்டல மூண்று தேசத்துக்குஞ் சுதந்தரவான்களல்ல!

192. இந்தத் தேசத்தைக் காடுவெட்டி, நாடாக்கின பூறுவ ராசாக்கள் சோழ, பாண்டியர் வங்கிஷமே யல்லாமல், மற்ற மறவனாகிற சேதுபதி, வடுகராகிற நாயக்கமார், மறாட்டியப் போசலை, துலுக்க நவாபுகள் சொந்தக் காறரல்ல!

193. இவர்க ளவலோகக் காரிக் ளாய்ச் கதிமானங்களாய்க் கட்டியாண்ட போலல்லாமல், சுயவான்களல்ல; இந்தத் தேசாதிபதியான பூறுவ ஆதினகற்தர் சோழன், பாண்டியன் வங்கிஷமு மற்றுப்போகவில்லை; யிருக்கிறார்கள்!

---

192. ஆதினகற்தர் - ஆதீன கர்த்தர் - உரிமைக்காரர்கள்.

193. அவலோகக்காரிகள் - மட்டமான பார்வையுடையவர்கள்

194. எளியவர்களா யிருக்கிறார்கள், வடுகநாயக்கமார் வங்கிஷந், தஞ்சாவூர் நாயக்கர் வங்கிஷமு மிருக்கிறார்கள்.

195. திருசுரபுர, மதுரைத் தேசமாண்ட வடுகணாயக்கர் கோத்திரமு மிருக்கிறார்க்ள. அவர்களை மேலான, சங்கிக்கப்படத்தக்கக் கும்பினியா ரவர்கள் விசாரிக்குங் காலத்துக்குக் காத்திருக்கிறார்கள்.

# 4. பழவேற்காடு கைபீது (டி. 3082)

Translated

by

Venkatrow

# ACCOUNT OF PULLICAT

by

Cundapan; Mad 4th 1818

# பளவற்காடு கைப்பீயத்து

1. சாலிவாகன சகம் 1738.

2. பூற்வத்திலே யிந்த பளவற்காடு யெருக்கங்காட யிருந்ததை வெட்டி வூருண்டானபடியினாலே, யிந்த வூருக்குப் பவற்காடென்று பேருண்டாச்சுது.

3. சகம் 1500ல், இறைவி யென்கிறவள் யிந்த பளவற்காட்டிலே அதிகாரம் பண்ணிக்கொண்டிருந்தாள். அப்போ சந்திரகிரியிலே றாயப்பட்டம் துரத்தின பண்ணிக்கொண்டிருந்தார்கள். அதிலே, யிந்த பளவற்காடு செல்லுபடியாயிருந்துது.

4. சாலிவாகன சகம் 1500-க்கு மேலே, உலாந்தக்காறர் தங்க யாட்பாணமாகிய தீவுலேயிருந்து தேசத்திலேயிருந்து, கப்பல்காறர் வந்து கருமணலிலே வந்தெறங்கி, அங்கே கொஞ்சநா ளிருந்து,

---

1. சாலிவாகன சகம் 1738 = 1816 A.D.

3. றாயப்பட்டம் - இராயர் பட்டம்; துரத்தினம் - துரைத்தனம், செல்லுபடியாயிருந்துது - சேர்ந்திருந்தது.

அங்கே சரிப்படாமல் யிந்தப் பளவற்காட்டிலே வந்து கோட்டை கட்டவேணுமென்கிறதாய் வேலூருக்குப் போய், சதாசிவறாயரைக் கண்டு கோட்டை கட்ட சிலவு கேட்டுக் கொண்டு, பிறபாடு, கோல்கொண்டைக்குப் போய், அபரங்கேபு பாராசாவைக் கண்டு, பெர்மானா வாங்கிக்கொண்டு வந்து, கோட்டை கட்டினார்கள், பாறாசா உத்தரவு அஞ்சு கிறாமம், ஆயிரம் வறாகன் காணும்படியாகப் தங்களுக்குச் செல்லும்படியாயிருந்துது அந்த கிறாமத்துக்கு விபரம்:

5. யிந்தப் பளவற்காட்டுக்கு வடமேற்கு பத்துநாழி வழி தூரத்திலே இறுக்கந் தீவு; மேற்கே அஞ்சுநாழிவழி தூரத்திலே அவரிபாக்கம்; யிது உப்புவிளைகிறது. மேற்கே ஒருநாழி வழி தூரத்திலே கணவந்துறை; தெற்கே ஒருநாழி வழிதூரத்திலே தாங்கல்பெரும்புலம்.

6. யிந்த அஞ்சு கிறாமமும் வருஷத்திலே ஆயிரம் வறாகன் வரும்படியாய் சிறுது நாள் நடந்துகொண்டு வந்துது.

---

4. உலாந்தக்காரர் - Holanders; சிலவு - அனுமதி, கோல்கொண்டை - Golconda; அபரங்கசேபு - Aurangazeb; பாராசா - மகாராசா; பெர்மானா - Farman - ஆணை.

5. நாழிவாழிதூரம் - 24 நிமிடங்களில் ஒருவர் நடக்கக் கூடிய தூரம்.

7. கொஞ்சநாளைக்குப் பிற்பாடு, யிந்தத் தாங்கல் பெரும்புலம் பளவற்காடு வற்தகக் குடிகள் பெருமாள்கோவில், யீபவான் கோவில், ரெண்டுக்கும் படித்தரத்துக்கு வேணுமென்று கேட்டபோது, உலாந்தக்காரர் அந்தக் கோவிலுகளுக்கு விட்டுவிட்டார்கள்.

8. இப்போது, அந்தக் கிறாமங்களைக் கும்பினியார் கட்டிக்கொண்டார்கள். யிந்த உலாந்தக்காறர் வந்து சேர்ந்த பிற்பாடு, அனேகங் குடிகள் வந்து சேர்ந்து, யிந்த பளவற்காடு பின்னையும் பலமாச்சுது.

9. ஆதியிலே, யிந்த வுலாந்தக் காறர்க்கு மணலிலே வந்திறங்கினபடியினாலே, அவர்கள் சீமையிலேகூடக் கடதாசி முதலானதும் கொஸ்தகுற வந்தோறென்று எழுதிக்கொண்டு வந்தார்கள், யிங்கே வந்து சேர்ந்த பிற்பாடு, தெற்கே சதிரங்கபட்டணம், பரங்கிப்பேட்டை, நாகபட்டணம் வடக்கே யீமிலிபட்டணம், பாலக்கொல்லை, செகநாதபுரம் முதலானதும் துறைகள் உண்டுபண்ணிக்கொண்டார்கள்.

---

7. படித்தரம் - கோயிலின் அன்றாடச் செலவு

9. கொஸ்தகுறவந்தோறென்று - கொண்டு வந்தாரென்று

10. இவர்கள் வந்து நாற்பதன்பது வருஷத்துக்குப் பிற்பாடு, மயிலாப்பூரிலே புடிதீசுகாறரோடே சண்டைபண்ணி செயிச்சு சிறுது துபாக்கி, கத்தி முதலானதும் பிடிங்கிக்கொண்டு வந்து பளவற்காட்டிலே கொறந்தோராகிய கெவுனர் மெத்தை படிக்கட்டின் கீளே ஒரு குடங்கிலே அனேகநாள் வைச்சிருந்தார்கள். யிவர்கள் வற்தகம் செம்பு, லவங்கம், சாதிக்காய், சாபத்திரி, மிளகு, சக்கரை, கல்கண்டு, சகலாத்து பட்டுத்தாபிதா, தேக்குமரம், பலகை, குங்குலிகம், முதலான தினுசுகளும் வற்தகம்பண்ணினார்கள்.

11. அப்போ, மேற்கே லாலாபேட்டை ஆறுகாடு, வேலூர், வடக்கே நெல்லூர் முதலானதும், தெற்கே செஞ்சி, திருணாமலை முதலான யிடங்களிலே யிருந்துவந்து வற்தகர் வாங்கிக்கொண்டு போவார்கள், வருஷத்தில் ரெண்டு மூணு லக்ஷம் வறாகன் சரக்கு விலையாகும்.

12. அந்த நாளையில், யிந்த பளவற்காட்டிலே ஆயிர மாயிரத்திநூறு தறிக்காரர் நெய்வார்கள்.

13. யிவர்கள் சரக்கு விற்குறபோதும், வற்தகர் கொள்ளுகிறபோதும், முதலாவது உலாந்தற்யிட்டா அண்டையிலே தங்களுக்குத் தேவையான சரக்குகளை யெளுதிவித்து, அந்தக் கடுதாசியை வாங்கிக் கொண்டுபோய் சின்னக்கப்பித்தான் கையெளுத்து போடுவித்து, பிற்பாடு கெவுனர் கையெளுத்துப்

போடுவித்து, விற்பாடு சரக்கிருக்கிற கிடங்குக்காறன் கையிலே அந்தக் கடதாசியைக் குடுத்து, பணமுங் குடுத்தால் சரக்குக் குடுப்பான். அதை வாங்கிக்கொண் றப்பாலே வந்தால் தீவாணச் சேவுகள் மறிச்சு, கணக்குப்படி தீர்வை வாங்கி, ரெண்டுபங்கு தீவாணத்துக்கும், ஒரு பங்கு உலாந்தக் கும்பினிக்கும் சேருகிறது; பிற்பாடு, வற்தகர் சரக்குக் கொண்டுபோவார்கள்.

14. யிந்தக் கோட்டையிலே உலாந்தக் கெவுனர்கள் நாள்தோறும் நாற்பது அன்பது பேர் மட்டுக்கும் துரத்தினம் பண்ணினார்கள். யிங்கே தங்கசாலையும் நடந்துது. நேரம் பண்ணினவர்களுக்கு தூக்குக் கிடங்கும் நடந்துது. யிந்த வூரார் உலாந்தக் கும்பினி உத்தரவுப் படிக்கு நடக்கிறதுமுண்டு; தீவாண உத்தரவுப் படிக்கு நடக்கிறதுமுண்டு.

15. உலாந்தக் கோட்டைக்குச் சேர்நதது கோட்டைக்கு அருகே, தெற்கே, ஒரு ஒற்றைவாடைத் தெருவும், வடக்கே கோட்டைக்கு அருகே கோட்டைக் குப்பமும், யிது தவிர, மற்ற பளவற்காடு தீவாணத்திலே செல்லும்படியா யிருந்தது.

---

13. உலாந்தர்யிட்டா - உலாந்தர்கிட்டே - ஹாலந்துக்காரர்களிடம்; கப்பித்தான் - கேப்டன் (Captain); கெவுனர் - கவர்னர் (Governor); தீவாணச் சேவுகள் - அரசாங்கச் சேவகன்; தீர்வை - வரி

14. தங்கசாலை - நாணயம் தயாரிக்கும் கூடம் (Mint); நேரம் - குற்றம்

16. பளவற்காட்டுக்குச் சேர்ந்த கிறாமத்துக்கு விபரம்:

பளவற்காட்டுக்குத் தெற்கே, கால்நாழி வழியிலே குடமணி பெரிய கிறாமம்; தெற்கே ஒரு நாழி வழியிலே சாட்டங்குப்பம் சின்னக்கிறாமம்; அக்கினி முலை கால்நாழி வழியிலே வயிரன்குப்பம் சின்னக் கிறாமம்; ஈசான முலை முக்கால்நாழி வழியிலே கூளங்குப்பம் சின்னக் கிறாமம்; வட ஈசான முலை ரெண்டுநாழி வழியிலே தீவுக்குப்பம் பெரிய கிறாமம்; யிந்த ஆறு கிறாமமும் பளவற்காட்டிலே செல்லுபடியானது.

17. பளவற்காட்டிலே வலங்கைத் தெருவு பெரிசு ரெண்டு, சின்னது மூணு; இடங்கைத் தெருவு பெரிசு ஒண்ணு, சின்னது அஞ்சு; இது இரண்டுமல்லாத சொர்னகாரத் தெருவு ஒன்று, ஆகத் தெருவு பன்னிரண்டுக்கும் கொஞ்சம் ஏறக்குறைய முன்னூற்றைம்பது வீடுயிருக்கும்.

18. இதிலே யிருக்கப்பட்ட சாதிகள் வலங்கை கவறை, அகம்படியர், கண்க்கர், கோமுட்டி சாலியர், படிசாலர், வாணியர், கரையார், சாணார், காவல்வடுகு, இடையர், தமிளிடையர், ஊருக்குப் புறத்திலே

---

18. படிசாலர் - பட்டுசாலியர்(?)

*19. இடங்கைச் சாதி பள்ளிகள், கைக்கிளவர், கம்மாளர், செட்டிகள், ஊருக்குப் புறத்திலே.....*

*20. யிது ரெண்டு மல்லாத சோனகர்; யிதுவல்லாமல் கோட்டைக் குப்பத்திலே பட்டணவர் கரையார், வடுகச் செம்படவர், வடுகப்...., தமிழ்ப்..., உலாந்தக்காரர், யிவர்கள் வீடு எழுபது மட்டுக்கும் யிருக்குது. யிதுவல்லாமல், பளவற்காட்டிலே ஆதிநாராயணப் பெருமாள் கோவிலென்றும், சமையீஸ்வரன் கோவிலென்றும் யிரண்டுகோயில் பெரிசுமல்லா சின்னதுமல்லா நடுத்தரமா யிருக்குது.*

*21. அது, திரிசங்கு றாசனாலே பிறதிஷ்டை யானதென்றும், மறுபடி யிந்த பளவற்காடு வுண்டானநாள் முதல்கொண்டு வற்தகக்குடிகளாலே சிறுது*

*22. பெருமாள் கோவில் வலங்கையார் தற்மமென்றும், யீஸ்வரன் கோவில் யிடங்கயைார் தற்மென்றும் நாளது வரைக்கும் நடந்து வருகுது.*

---

19. கைக்கிளவர் - கைக்கோளர்; கம்மாளர் - விசுவகர்மர்

20. சோனகர் - இசுலாமியர்.

23. இதுவல்லாமல் இந்த வூருக்குள்ளே துற்கி, முகுந்தம்மாள் கோவில் என்று சின்னது யிருக்குது. இந்தப் பளவற்காட்டுக்கு அடுத்த மேற்கே அரைக்கால்நாழி வழியிலே தொங்குமுத்தன்குளம், நல்ல தண்ணீரக்குளம், அது தெங்குமுத்த செட்டியாலே யிந்த வூருண்டானபோது உண்டாக்கப்பட்டது. அதுக்கு துருக்கல்லினாலேயும், வெள்ளைக் கருங்கல்லினாலேயும் படி கட்டினான்.

24. இந்தக் குளத்துக்கு மேலண்டைக் கரையிலே பாப்பார் வீடு பத்திருக்குது. வடகரையிலே கம்மாளர் வீடு மூணு; வீரசைவப்பண்டாரம் வீடு மூணு யிருக்குது. தென்கரையிலே பள்ளிவீடு ரெண்டு, வண்ணார்வீடு ரெண்டு யிருக்குது. கீளண்டைக் கரையிலே தற்மராசாக் கோவிலொன்று சின்னதா யிருக்குது. மேலண்டைக் கரையிலே சிவன்கோவிலொன்று சின்னதாயிருக்குது.

25. இந்தக் குளத்திலே இடங்கையார் யீஸ்வரனுக்கு தெப்பல் திருனாள் விடுவார்கள். தங்களுக்கொரு நன்மை தின்மை வந்தால், யிந்தக் குளத்திலே செய்வார்கள்.

---

123. துற்கி - துர்க்கை (Durga)

25. நன்மை தின்மை - நன்மை தீமை

26. இதுக்கடுத்த தெற்கு சமீபத்திலே வலங்கையார் நல்லதண்ணிக்குளம் ஒன்று முன்னாளையிலே எடுத்தது; இதுக்கு செங்கல்லினாலேயும் வெள்ளைக் கல்லினாலேயும் படிகட்டி யிருக்குது. இந்தக் குளத்துக்குத் தெற்குக் கரையிலே பாப்பார்வீடு ஏழு, வீரசைவப் பண்டாரம் வீடு ஒண்ணு இதுகள் யிருக்குது. யிந்தக் குளத்திலே வலங்கையார் ஆதிநாராயணப் பெருமாளுக்கு தெப்பல் திருனாள் விடுவார்கள். தங்களுக்கு ஒரு நன்மை தின்மை வந்தால் யிந்தக் குளத்திலே செயிவார்கள்.

27. இதுவன்றி, வலங்கையார் குளத்துக்கு இடங்கையார் போறதுமில்லை; யிடங்கையார் குளத்துக்கு வலங்கையார் போறதுமில்லை.

28. அயிதர் கலாபத்திலே ஆறுக்காடு பிடித்த பிற்பாடு லாலா நானூற அன்னூறு கதிரையோடே வந்து, யிந்தப் பளவற்காட்டுக்குக் கவில் குடுத்து, சுற்றிலே கொள்ளை யிட்டுக்கொண்டுவந்த தானிணம், சரக்கெல்லாம் யிந்த வூர் வற்தகரிடத்திலே போட்டு சிறுது பணங்களும் வாங்கிக்கொண்டு, யிருக்கத்துக்குப்போக வேணுமென்றிருக்கிறபோது, சாரிசுயிசு முத்துதுரை சிறுது தளத்தோடே வந்து லாலாவைத் துரத்திவிட்டு, கோட்டையிலே

யிருந்தபோது, ஓடிப்போன லாலா சிறுது செனங்களுடனே இறுக்கத்துக்குப் படகேறிப்போய் வலசை போயிருந்த செனங்களைக் கொள்ளையிட்டு, சிறைபிடித்துக் கொண்டு, சீரங்கபட்டணத்துக்கு ரகசியமா யனுப்பிவித்தான்.

29. யிந்த சமாசாரம் அயிதர் கேள்விப்பட்டு, லாலாவைப் பிடித்து ஆனையின் காலிலே அடித்துக் போட்டான். அஞ்சாறு ஒண்டையிலே பணம்போட்டு போனான்.

30. 1805 வருடம் இங்கரீசக் கும்பினியார் இந்த வுலாந்தக் கோட்டையை யிடித்துப் போட்டார்கள். அதிலே யிருந்த பீரங்கிகளை யிருபத்து நாலு மட்டும் உடைச்சு, தோணித்துறை வழியிலே போட்டுவிட்டார்கள், மழைகாலத்தில் பளவற்காட்டைச் சுற்றி அரையளவு தண்ணீர் நிற்கிறதுண்டு முன்னாளையிலே ஆயிரம், ஆயிரத்திருநூறு தறிநெய்யும்; யிப்போ நூற்றிருபது தறி நெய்யுது.

31. இப்படி குப்பய்யரும், ஒத்தாண்டி வெங்கடாசல செட்டியும் எழுதி வைத்த கைப்பீயத்து.

---

28. தளம் - ஆட்கள்; அயிதர் - ஹைதர் அலி (Hyder Ali); கலாபத்திலே - சண்டையிலே

30. இங்கரீசு - இங்கிலீசு (English)

# பளவற்காடு
# வீட்டுக் கணக்கும் செனக்கணக்கும்

| | |
|---|---|
| 1. கவறை வீடு 5க்கு, | |
| ஆண்பெண் பசகள் உள்பட செனம் | 40 |
| 2. அகம்பிடியர் வீடு 27க்கு, | |
| ஆண்பெண் பசகள் உள்படச் செனம் | 200 |
| 3. கோமுட்டி வீடு 7க்கு, | |
| ஆண்பெண் பசகள் உள்படச் செனம் | 30 |
| 4. சாலியர் வீடு 40க்கு, | |
| ஆண்பெண் பசகள் உள்படச் செனம் | 280 |
| 5. படிசாலர் வீடு 17க்கு, | |
| ஆண்பெண் பசகள் உள்படச் செனம் | 120 |
| 6. கணக்கர்வீடு 8க்கு, | |
| ஆண்பெண் பசகள் உள்படச் செனம் | 50 |
| 7. வடுகு காவலிடையர் வீடு 12க்கு, | |
| ஆண்பெண் பசகள் உள்படச் செனம் | 84 |

---

1. பசகள் – சிறுவர்கள்.

8. தமிளிடையர் வீடு 10க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 40

9. வாணியர் வீடு 10க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 60

10. சாணார் வீடு 2க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 12

11. கரையார் வீடு 16க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 100

12. தேவடியாள் வீடு 10க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 40

13. தாணாக்காறர் வீடு 4க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 24

14. அம்பட்டர் வீடு 7க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 40

15. செம்படவர் வீடு 2க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 10

16. பள்ளிகள் வீடு 12க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 60

| | |
|---|---|
| 17. கைக்கிளவர் வீடு 10க்கு, | |
| ஆண்பெண் பசகள் உள்படச் செனம் | 60 |
| 18. கம்மாளர் வீடு 15க்கு, | |
| ஆண்பெண் பசகள் உள்படச் செனம் | 100 |
| 19. சோனகர் வீடு 100க்கு, | |
| ஆண்பெண் பசகள் உள்படச் செனம் | 600 |
| 20. சைட்டிகள் வீடு 60க்கு, | |
| ஆண்பெண் பசகள் உள்படச் செனம் | 360 |
| 21. சிவன்கோவில் பாப்பார் வீடு 2க்கு, | |
| ஆண்பெண் பசகள் உள்படச் செனம் | 6 |
| 22. நம்பிப் பாப்பார் வீடு 3க்கு, | |
| ஆண்பெண் பசகள் உள்படச் செனம் | 10 |
| 23. நியோகிப் பாப்பார் வீடு 1க்கு, | |
| ஆண்பெண் | 2 |

---

22. நம்பிப்பார்ப்பார் - பார்ப்பனருள் ஒருவகை; பெரும்பாலும் இவர்கள் கேரளத்தைச் சேர்ந்தவர்கள்; நம்பூதிரி என்ற சொல்லின் அடிப்பகுதியிலிருந்து நம்பி என்ற சொல் வந்துள்ளது.

23. நியோகிப்பர்ப்பார் - பார்ப்பனருள் ஒரு சிறு பிரிவு; இவர்கள் இன்றும் திருநெல்வேலி, திருச்சிப் பகுதிகளில் வாழ்கிறார்கள்.

24. புறத்தியிலே.... குடிசை 5க்கு,
ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 24

25. சக்கிலி குடிசை 1க்கு,
செனம் 6

## குளக்கரை வீட்டுக் கணக்கு

1. பாப்பார் வீடு 17க்கு,
ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 60

2. பண்டாரம் வீடு 5க்கு,
ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 15

3. கம்மாளர் வீடு 3க்கு,
ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 15

4. பள்ளிகள் வீடு 2க்கு,
செனம் 3

5. அம்பட்டன் வீடு 1க்கு,
செனம் 3

6. வண்ணான் வீடு 1க்கு,
செனம் 5

1. கோட்டைக்கு மேற்கு உலாந்தக்காறர்

ஒற்றைவாடைத் தெருவு 1க்கு, வீடு 20க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 100

2. கோட்டைக்குப்பம் உலாந்தவீடு 8க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 40

3. பட்டணவர் வீடு 25க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 150

4. கரையார் வீடு 10க்கு,

செனம் 60

5. கோட்டைக்குப்பம் வீடு, செம்மடவர் வீடு 3க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 20

6. வடுகுப்இ..... வீடு 10க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 70

## 1ஆவது இடமணி வீட்டுக்கணக்கும் செனச்,கணக்கும்

1. கவறை வீடு 15க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 80

2. பாப்பார் நாமம், விபூதி உள்பட வீடு 12க்கு

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 55

3. சாணார் வீடு 12க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 60

4. இடையர் வீடு 20க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 30

5. செம்மடவர் வீடு 20க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 120

6. பண்டாரம் வீடு 1க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 5

7. கம்மாளன் வீடு 1க்கு,

செனம் 6

8. கோட்டைக்குப்பம் தமிள்..... வீடு 16க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 110

9. இடமணி துலுக்கர் வீடு 2க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 12

## இடமணிக்குப்பம் வீட்டுக்கணக்கு செனக்கணக்கு

1. பட்டணவர் வீடு 15க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 100

2. ..... வீடு 12க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 72

## 2ஆவது சாட்டாங்குப்பம் வீட்டுக்கணக்கும் செனக்கணக்கும்

1. பட்டணவர் குடிசை 20க்கு,

ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 120

2. மீன்லாபக்காறர் சோனகர் குடிசை 7க்கு,
லாபக்காறர் துலுக்கர் குடிசை 1க்கு,
லாபக்காறர் ....குடிசை 2க்கு,
ஆகக் குடிசை 10க்கு,
ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 25

## 3ஆவது, வயிரங்குப்பம் வீட்டுக்கணக்கும் செனக்கணக்கும்

1. கரையார் குடிசை 6க்கு,
ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 36

2. பட்டணவர் குடிசை 3க்கு,
ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 18

3. சாணான் குடிசை 1க்கு,
செனம் 4

4. வண்ணார் குடிசை 4க்கு,
ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 20

5. சலவாதிப்.... குடிசை 2க்கு,
செனம் 10

---

2. மீன்லாபக்காரர் - மீன் விற்பனையாளர்

## 4ஆவது கொடிமரத்துக் குப்பம் அல்லது சிந்தரணங் குப்பம் வீட்டுக்கணக்கும் செனக்கணக்கும்

1. பட்டணவர் குடிசை 8க்கு,
   ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 50

2. லாபக்கார வடக்கத்தி ரெட்டி குடிசைக்கு 1க்கு
   ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 6

3. கொடிமரக்குப்பம் சலவாதிப்.... குடிசை 2க்கு
   செனம் 10

கொடிமரக்குப்பத்தில் ஏற்ற லிறக்கலு முண்டு; துறையிலே கப்பலு முண்டு.

## 5வது, கூனங்குப்பம் வீட்டுக்கணக்கும் செனக்கணக்கும்

1. பட்டணவர் குடிசை 10க்கு,
   ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 55

2. லாபக்காறர் செம்மடவன் குடிசை 1க்கு,
   செனம் 4

3. லாபக்காறர் பள்ளி குடிசை 1க்கு,
   செனம் 3

4. லாபக்காறர் வடக்கத்தி போயி குடிசை 2க்கு,
ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 5

5. லாபக்காற இடக்குடிசை 1க்கு,
செனம் 2

**வெது, தீவுக்குப்பம் வீட்டுக்கணக்கும் செனக்கணக்கும்**

1. பட்டணவர்குடிசை 40க்கு,
ஆண்பெண் பசகள் உள்படச் செனம் 240

2. இவர்கள் சலவாதிப் ......... குடிசை 1க்கு,
செனம் 2

3. தீவுக்குப்பம் செட்டி குடிசை 1க்கு,
செனம் 2

4. கரையார் சாராயக் குடிசை 2க்கு,
செனம் 6

5. கள்ளுக்கடை சாணார் குடிசை 2க்கு,
செனம் 5

6. லாபக்காற் சோனகர் குடிசை 5க்கு,
செனம் 20

# பட்டணவரும் கரையாரும்

*கடலிலே மீன் பிடிக்குற வலைப்பெயரும் மீன் பிடிக்குற விதமும் காலமும்: காவ செட்டி, தானமுதலி சொன்ன கைப்பீயத்து*

*1. பெருவலை, யதுக்குள்ளே, யதின் முனையிலே பையிருக்கும், யிது, பத்தாள், பனிரெண்டாள் சுமையிருக்கும். அது சமுத்தரத்திலே அரை நாழிகை வழிமட்டுக்கும் போட்டிருபக்கத்திலேயு மிழுக்குறது, போறபோது ஒரு படகிலே வலையைப் போட்டுக்கொண்டு, மூணாள் அல்லது நாலாள் ஏறிக்கொண்டு, அந்த வலை ஒரு குனைக்கயற்றைப் பிடிச்சுக்கொண்டு, ஒருத்தன் கனாயிலே நிற்பான், மற்ற வலையெல்லாம் சமுத்திரத்திலே அரைநாழிவழி தூரம் போய், அங்கேயிருந்து, அன்னூறுமாற் நிகளம் யிருக்கும்; அதுக்குள்ளே பை பத்துப்பன்னிரண்டு மாற் நிகளமிருக்கும்; தேங்காய்நாற் கயிற்றாலே பின்னுகிறது; மேல் வலை உள்வலையை சணப்பிறியாலே பின்னது; யகலம் மிரண்டுமாற் நிகளம் அளவில் விட்டுக்கொண்டு 6 மடக்காகத் திரும்பி அளவிலே விட்டுப் மற்றொரு குனைக் கயற்றைக் கரையிலே கொண்டுவந்து, கடலில் நிறுத்திப்போட்டு, முப்பது பேர் முப்பத்தஞ்சுபேர் ஆணுபெண்ணு ரெண்டு பக்கத்திலேயு மிழுப்பார்கள்.*

2. மப்பு மாறியும் பனியுமாயிருந்து, கற்றதிகமில்லாதே ஒடுக்கமாயிருந்தால், வெள்ளறா, வஞ்சிரம், சுறா, திருக்கை முதலாகிய மீன்கள் அதிகமா யகப்படும். காற்றதிகமானால் மீன் அதிக மகப்படாது.

3. பெருவரையிலே யதிகமாய் மீன் அகப்பட்டால் பத்து வறாகன், பனிரெண்டு வறாகன் மீன் அகப்படும். குறைஞ்சது ஆறு வறாகன், நாலுவறாகன், ரெண்டுவறாகன், ஒரு வறாகன் யிப்படி யிருந்தாலு மிருக்கும்.

4. யிந்தப் பெருவலை சமுத்திரத்திலே போட்டுப் பகலிலே மீன் பிடிக்குறதுமல்லாமல், ஒருவேளை றாவிலே பிடிக்குறதுமுண்டு. யிந்தப் பெருவலையிலே மீன் பிடிக்கிறது மழைகாலம், பனிக்காலமே யல்லாமல், கோடை காலம் பிடிக்கிறது யில்லை; யது அகப்படுகிறதுமில்லை.

5. கோடை காலமானால், பெருவலையைக் கரையிலே கட்டிவைப்பார்கள்.

6. மிகுதியாய் மீன் அகப்பட்டால், அப்பவே லாபக்காறருக்க ஒருவறாகன் மீன் முக்கால் வறாகனாய்க் குடுத்துவிடுவார்கள்.

---

2. மப்பு - மேகம்; மாறி - மழை.

அவர்கள் கொண்டுபோய்ச் சென்னப்பட்டணம் முதலான யிடங்களிலே வித்துக் கொள்ளுவார்கள். மீதியாய்க் கொஞ்ச மிருந்தால், பெண்டுகள் எடுத்துக் கொண்டுபோய் அருகாமையா யிருக்கிற தெருகளிலே விற்றுக்கொள்ளுகிறது முண்டு.

7, யிதுவன்றிப் படகிலேயாவது, கட்டுமரத்திலேயாவது, மீன் பிடிக்கிற நிமித்தியப் பெண்டுகள் போறதில்லை.

8. யிதுவல்லாமல், தூரிவலையொன்று அக்குள்ளே பையிருக்கும்; அது இரண்டாள் சுமை, யிருபதுமாற் நிகள ஒருமாற் அகலம் மிருக்கும். அது ஒரு கட்டு மரத்திலே யேற்றிக்கொண்டு, ஒரு பெரிய பறியும் வைத்துக்கொண்டு, அதிலே ரெண்டாள் ஏறிக்கொண்டு, ரெண்டு பக்கத்திலேயும் ரெண்டு கட்டு மரம் நவ்வாலுபேர் ஏறிக்கொண்டு, ஆக பத்துபேர் சமுத்திரத்திலே, ஒருநாழி வழிதூரம் ஒன்னரைநாழி வழிதூரம் போய், மீனனக் கும்புகள் கண்டவிடத்திலே ரெண்டு பக்கதிலேயும் யிருக்கிற ரெண்டு கட்டுமரக் காறனும் அந்த வலை ரெண்டு குனைக்கயற்றையும் பிடித்துகொண்டு, ரெண்டு பக்கத்திலேயும் யிழுத்துக்கொண்டும் நெருங்கி வந்த பிற்பாடு நடுவே யிருக்கிற கட்டுமரக்காரன் ரெண்டு பேரும் வலையைப் பிடித்து மீனைத்தூக்கிப் பறியிலே போட்டுக் கொள்ளுவார்கள்.

9. அப்படி பத்துமுறை யெட்டுமுறை பிடித்து, பறி நிரம்பினால், பிற்பாடு கரையிலே வருவார்கள். யிதிலே கானாங்கழுத்தன், சுதும்பு, முள்ளுவாளை, ஓலைவாளை முதலாகிய மீன்கள் மீத்தியாய் அகப்பட்டால், ரெண்டு வறாகன் மீன் யிருக்கும்; குறைஞ்சது ஒரு வறாகன், அரை வறாகன் யிப்படி யிருந்தாலு மிருக்கும்;

10. யிதுவல்லாமல், மாவலை யிது அஞ்சாறுமார் நிகளத்திலே ஒரு பையிருக்கும்; அகலம் அஞ்சாறுமார் நாலு கட்டுமரத்திலே ஆறுபேர் யேறிக்கொண்டு, வலையும் பறியும் வைத்துக்கொண்டு போய் முணுநாலாள் புருஷத்திலே வலையை கீழேவிட்டு, புருஷம்- ஓர் ஆள் தன் இரு கைகளையும் தலைக்குமேலே உயர்த்திச் சேர்த்துப் பிடித்த நிலையில் எவ்வளவு உயரம் இருப்பாரோ அந்த நீள அளவு நாலு பக்கத்திலேயும் வலையைப் பிடித்துத் தூக்கினால் காசாம்பொடி முதலான மீன்களும் அகப்படும்.

11. யிதிலே அரைவறாகன், காலவறாகன் இப்படி கொஞ்ச விக்கிறையமே யல்லாமல் அதிகமில்லை.

---

8. பறி - மீன்களைப் போட்டு வைத்துக்கொள்ளும் கூடை; கும்பு - கூட்டம்; தமிழ் மீனவர்களிடையே வழங்கிய இத்தமிழ்ச் சொல், இதே பொருளில் இன்னும் தெலுங்கில் வழங்குகிறது.

9. மீத்தியாய் - மிகுதியாய்; அரிய புதுச் சொல்.

12. யிதுவல்லாமல், கண்ணிவலை ரெண்டாள் சுமை; ஒரு மார் அகலம் அன்பது அறுபது மார் நீகளம்; அதுவொரு கட்டுமரத்திலே யேறிக்கொண்டு ஒரு பறியும் வைத்துக் கொண்டு, ரெண்டாளும் யேறிக்கொண்டு சமுத்திரத்திலே போய் அரைநாழி வழிதூரம் நீகள அலையவிட்டால் சுறாமீன், உல்லமீன் முதலாகியது அகப்படும்.

13. யிப்படி, பத்துமுறை, யெட்டு முறைவிட்டுப் பறி நிரம்பினால் கரையேறுகிறது.

14. யிதுவல்லாமல், சிறுவலை ஓராள் சுமை;. அது பைபோலே யிருக்கம்;. பத்துமார் நீகளம் நாலுமார் அகலம்; அதுவும் பறியும் படகிலேயேற்றிக் கொண்டு, பத்தாளு மேறிக்கொண்டு சமுத்திரத்திலே நாலஞ்சு ஆள் புருஷத்திலே, அரைநாழிவழி தூரம் போய் யேழெட்டுப்பேர் நீச்சாகக் கீளே யிறங்கி, வலையை விட்டு, நுணலை மீன் முதலாகிய மீனை யெழுப்பி வலையிலே வந்தபிற்பாடு படகிலே போட்டுக்கொள்ளுவார்கள். யிப்படி பத்துவிசை யெட்டுவிசை பிடித்துக்கொண்டு கரையேறுகிறது.

15. யிந்தவலை ஆற்றிலே போட்டு, ரெண்டாள் ரெண்டு பக்கத்திலேயும் யிழுத்து, ரெண்டு பக்கத்திலே ரெண்டாள் மீனை யோட்டினால், மடவை மீன் முதலானதுகளும் அகப்படும்.

**இதுவல்லாமல், ஆற்றுக் கதியிலே போடுகிற வலைப்பெயரும், மீன் பிடிக்கிற விதமும்**

16. ஆற்றுக்கழியிலே ஆழமாயிருக்கிற விடத்திலே படகிலேயும் கட்டுமரத்திலேயும் யேறிக்கொண்டு போய் மீன் பிடிப்பார்கள். ஆழமில்லாதபிடத்திலே சும்மா யிறங்கி வலைபோட்டுப் பிடிப்பார்கள். ஆற்றிலே பெருவலையும் ஒவ்வொரு காலங்களிலே போட்டு, கொடுவா மீன், சுறாமீன் முதலானதும் பிடிக்கிறதுமுண்டு.

17. யிதுவல்லாமல், கொண்டைவலை. அது யிருநூறு மார் நிகளமிருக்கும், ரெண்டுமார் அகலம் கொம்பு கட்டியிருக்கும்;. உள்ளே பையிருக்கம்.

18. சிறுவலை;. பத்துமார் நிகளம் ரெண்டுமார் அகலம்; அது ஆற்றிலே போட்டு ரெண்டு பேர் யிழுத்தால் தளரிப்பொடி யிதுமுதலானதுகளும் அகப்படும்.

19. ஆற்றுக்கழியிலே கல்லுவலை; ஆறுமார் நிகளம், நாலுமார் அகலம்.

பறடிவலை, சிறுவலை, ஓலைவலை முதலாகியதும் போட்டு, அனேகம் பேதமான மீன்களும் பிடிப்பார்கள்.

20. சமுத்திரத்திலே பட்டணவருங் கரையாரு மாத்திரமே மீன் பிடிப்பார்கள். ஆற்றுக் கழியிலே பட்டணவருங் கரையாரும் மீன் பிடிக்கிறது மல்லாமல் செம்மடவரும் மீன் பிடிப்பார்கள்.

21. பட்டணவருங் கரையாரும் சமுத்திரக் கரையோரத்திலேயாவது, ஆற்றுக் கழியோரத்திலேயாவது குடியிருக்கிறதே யல்லாமல், கரையோர மல்லாத வூருகளிலே குடியிருக்கிறதில்லை.

22. யிந்தப் பட்டணவருங் கரையாகும் யிந்த ரெண்டு சாதியும் வலை முடைகிறதும், மீன் பிடிக்கிறதும், படகு விடுகிறதும் யிது அவர்கள் தொழில்.

23. யிவர்கள் பெண்டுகள் ஒருவேளை ஆண்பிளைகளோடே வலை யிழுக்கிறது மல்லாமல், ஒரு வேளை பச்சை மீனுங் கருவாடுங் கடைகளிலே வைச்சுக்கொண்டு விற்கிறத முண்டு.

24. யிந்தப் பட்டணவருங் கரையாரும் பேசுகிறது தமிழே யானாலும் மிகவும் கொச்சையா யிருக்கும்.

25. இவர்கள் தரித்திரமாயிருக்கிறது யென்னத்துநாவை யென்றால், ஒரு வேளையைப் போலே மீன் மிகுதியாய் அகப்படாமல் போறப்படியினாலேயும், ஆண்பிளைகள் கள்ளுஞ் சாராயுங் குடிக்கிறது மல்லாமல், பெண்டுகளிலே சிறிதுபேர் தவிர மற்ற பெண்டுகளும் கள்ளுஞ் சாராயுங் குடிக்கிற படியினாலேயும் யிவர்களுக்கு யெப்போதும் யெளிமைத்தினம்.

26. மற்றச் செம்மடவர் கரையோரங் குடியிருக்கிறது மல்லாமல் ஆறுகளிலேயும் குடியிருப்பார்கள். யிந்தச் சாதி ஆண்பிளைகள் வலை முடைகிறது, மீன் பிடிக்கிறதும் யிந்த ரெண்டு தொழிலு முண்டு. யிவர்கள் பெண்டுகள் பச்சை மீனும் கருவாடும் நாள்தோறும் கடைகளிலே வைச்சுக்கொண்டு விற்கிறதுண்டு; துணி நெய்கிறது முண்டு.

27.சமுத்திரத்திலே ஆமையகப்படும். அது நாலாள் சுமை, அஞ்சாள்சுமை யிருக்கும். அந்தக் கரையிலே நண்டுகள் அகப்படும். அது சின்னதாயிருக்கும்.

28. ஆற்றுக் கழியிலே நண்டுகள் அகப்படும். அது குத்துக்குத்துப் பெரிசிருக்கம்.

29. யிதுவல்லாமல், தூண்டிகளிலே சமுத்திரத்திலேயும் கழியிலேயும் மீன் பிடிக்கிறதுண்டு.

30. சமுத்திரத்து மீன் பெயர் திமி யென்றும், திமிங்கல மென்றும் யிது ரெண்டு சாதியும் ஆனையை மிழுங்கிற மீன் யிதுவும் மனுஷரை முறிக்கிற பேய்ச்சுறாவும் யின்னமனேக மீன் வலையிலே யகப்படாது.

**31. வலையிலே யகப்படுகிற மீன் பெயரும் உருவமும்**

1ஆவது, வெள்ளறாமீன்: அது ஓராள் பருமன் ரெண்டு முழ நிகளம். யிது முற்றினது.

யிளந்தையா யிருந்தால் அதுக்குத் தக்க தாயிருக்கம்.

யினிமேல் சொல்லப்போற தெல்லாம் மப்படிதான்.

2ஆவது, சுறாமீன்: அடித்துடைப் பருமன்; ஒண்ணரை முழ நிகளம்.

3ஆவது, பால்சுறா: கீள்கால் பருமன்; ஒரு முழ நிகளம்.

4ஆவது, புகைச்சுறா: கீழ்கால் பருமன்; ஒரு முழ நிகளம்.

5ஆவது, வஞ்சிரம்: கீழ்கால் பருமன்; ஒரு முழ நிகளம்.

6ஆவது, முள்ளுவாளை: கைப்பருமன்; ஒண்ணரைக் கை யகலம் ஒரு முழ நிகளம்.

7ஆவது, எருமைநாக்கு: ரெண்டுகை யகலம்; ஒண்ணரைசாண் ணகளம்.

8ஆவது, வவ்வால்: செகப்பு நிறம்; ரெண்டு கை யகலம்; கை பருமன் ஒண்ணரைசா ணிகளம். பண்டியாயிருக்கும்.

9ஆவது, வெள்ளை வவ்வால்: ஒரு கை யகலம்; அரைக்கை பருமன்.

10ஆவது, சுதும்பு: ஒருசா ணிகளம், யரைக்கைப் பருமன்.

11ஆவது, சுதுப்பனாங்காறல்:உள்ளங்கை யகலம், மூவிரல் பருமன், அரைச்சா ணிகளம்.

12ஆவது, காற்ப்பொடி: சின்னது.

13ஆவது, ஓலைவாளை: ரெண்டுவிரல் பெருமன் ஒண்ணேகால் முழ நிகளம், நாலுவிரற்கிடை யகலம்.

---

11. சாணிகளம் = சாண் + நிகளம். நிகளம் - நீளம்

14ஆவது, பெரியகோல்வாச்சி: மூவிரல் பெருமன் ஒண்ணேகால் சாணிகளம்.

15ஆவது, சின்னகோல்வாச்சி: ரெண்டுவிரல் பெருமன் ஒருசா ணிகளம்.

16ஆவது, நுணலை: மூவிரல் அகலம், ரெண்டுவிரல் பெருமன், அரைசா ணிகளம்.

17ஆவது, தேங்காய்ப்பாறை: ரெண்டுகை யகலம், கீழ்க்கால் பருமன் ஒண்ணரைசா ணிகளம்.

18 ஆவது, தோல்பாறை; ஒரு கை யகலம், கைப்பெருமன் ஒருசா ணிகளம்.

19ஆவது, பாறை: தொடைப் பெருமன் ஒரு நிகளம், முணுகை யகலம்.

20ஆவது, கானாங்கழுத்தன்: ஒரு கை யகலம், நாலு விரல் பெருமன், ஒரு ஒட்டை நிகளம்.

*21ஆவது, உல்லம்: ஆள் பருமன், ரெண்டு முழ நிகளம்.*

*22ஆவது, நெற்றிலி: விரல் பருமன், விரல் நிகளம்.*

*23ஆவது, பால் நெற்றிலி: அரைவிரல் பருமன், முக்கால் விரல் நிகளம்.*

*24ஆவது, கவலைப்பொடி: ஒண்ணரை விரல் பெருமன், ஒண்ணரை விரல் நிகளம்.*

*25ஆவது, புண்டு விரிஞ்சான்: ரெண்டுவிரல் பெருமன் விரல் பெருமன், அரைசா ணிகளம்.*

*26ஆவது சென்னாக்குனி: மிகவும் பொடி.*

*27ஆவது, கொட்டிறா: நாலுவிரல் பெருமன், ஒட்டை நிகளம்.*

---

20. ஒட்டை - கைப் பெருவிரலையும், ஆள்காட்டி விரலையும் பரப்பினால் எவ்வளவு நீளமோ அந்த அளவு; ஒட்டைச்சாண் என்பதும் இதுவே.

25. விரல்பெருமன் - எனும் சொற்கள் மீள வந்துள; பெருமன்; கனம் (Thickness).

28ஆவது, திருக்கை: நாலாள் சுமை, பண்டியாயிருக்கும், வால் நிகளமாயிருக்கம், குதிரைச்சவுக்கு மரம் எட்ட......

29ஆவது, உளுவை: கைப்பெருமன், ஒண்ணேகால்சா ணிகளம்.

30ஆவது, கெளுத்தி: துடைப் பெருமன் ஒண்ணேகால் முழ நிகளம்.

31ஆவது, காசாம்பொடி: சுண்டுவிரல் பெருமன், விரல் நிகளம்.

32ஆவது, கற்றளை: மூவிரல் பருமன் ஒட்டை நிகளம்.

33ஆவது, கருங்கற்றளை: நாலுவிரல் பருமன், சா ணிகளம்

34ஆவது, பன்னா: கைப்பருமன், முழ நிகளம்.

35ஆவது, குருவிப்பன்னா: மூவிரல் பருமன், சா ணிகளம்.

36ஆவது, செம்மடக்கா: கையகலம், உள்ளங்கைப் பருமன்.

37ஆவது, கறுப்புத் திருக்கை: நாலாள் சுமை, வட்டவடிவு, எட்டடி யகலமிருக்கும்.

38ஆவது, கொட்டுவாளஞ் திருக்கை: பத்தாள் சுமை, வட்ட வடிவு, ரெண்டு கடவாயிலேயும் ரெண்டு கொம்பு, சா ணிகளம் யிருக்கும், பதினாறடி யகலம்.

39ஆவது, இந்தத் திருக்கையில் சின்னதும் பெரிசுமாய்ப் பத்து தினுசிருக்கும்.

40ஆவது, வெங்கண்: ரெண்டுகை யகலம், கைப்பருமன், ஒண்ணரைசா ணிகளம்.

41ஆவது, நவரைமீன்: கைப்பருமன், சா ணிகளம்

42ஆவது, தூக்கணாம் பாறை: வட்ட ரூபம், சா ணிகளம், கைப்பருமன்.

43ஆவது, சூறை: பெருந்துடைப் பெருமன், ஒண்ணேகால் முழ நிகளம், திரண்ட ரூபம்.

44ஆவது, ரெத்தப் பாறை: சிவலென் றிருக்கும் பெருந்துடைப்

---

41. சா ணிகளம் - **ஒருச்சாண்ணறிதீன்.**

42. ரூபம் - வடிவம்.

பெருமன், ஒண்ணரை முழ நிகளம்.

45ஆவது, கீச்சா மீன்: கெண்டை ரூபம், விரல் பருமன்

46ஆவது, மொலுவு: கறுப்பு நிறம், ரெண்டுமுழ அகலம், மூணுமுழ நிகளம், கெண்டை ரூபம், நாலாள் சுமை, ரெண்டுமுழப் பருமன்.

47ஆவது, குறுமீன்: கைப்பருமன், சா ணிகளம்.

48ஆவது, ஒட்டாம்பாறை: மட்டம், நாலுவிரல் பருமன், கையகலம்.

49ஆவது, ஓராமீன்: கைப்பருமன், சா ணிகளம் கெண்டை ரூபம்.

50ஆவது, பணைவாயன்: அன்பது முழ நிகளம், ஏழு முழ (அகலம்)

## ஆற்றுமீன் பெயரும் உருவமும்

1ஆவது, கொடுவாமீன்: ஆள் பருமன், மூணு முழ நிகளம், பெருவலையிலே பிடிக்கிறது.

2ஆவது, காலாமீன்: பெருந்துடைப் பெருமன், ஒண்ணேகால் முழ நிகளம்.

3ஆவது, மடவைமீன்: கீள்கால் பருமன், ஒரு. முழ நிகளம்.

4ஆவது, இருங்கெளுத்தி: பெருந்துடைப் பருமன், ரெண்டுமுழ நிகளம், கறுப்பு நிறம், ரெண்டு கன்னத்திலேயும், தலையிலேயும் நாலு விரற்கிடை கனம் முள்ளு யிருக்கும். யிதின் முள்ளு தைத்தால் மனுஷர் பிழைக்கிறது வருத்தம்.

5ஆவது, குளலுமீன்: பெருந்துடைப் பருமன், ரெண்டு முழ நிகளம், முகம் கூச்சாயிருக்கும், மடவை மீனுருவம்.

6ஆவது, அள்ளாற்றி: கீள்கால் பருமன், ரெண்டுமுழ நிகளம், குளலுமீனுருவம்.

7ஆவது, தெலைமீன்: ஓரடி யகலம், ஒண்ணரை முழ நிகளம், கைப்பருமன், ரெண்டு கன்னத்திலேயும் தலையிலையும் முள்ளுயிருக்கும்.

8ஆவது, சேசான்: முவிலை பருமன்; ஒட்டை நிகளம்.

---

4. விரற்கிடை - விரற்கடை - விரலின் கனம்; நான்கு விரற்கடை எனில், நான்கு விரல்களையும் ஒன்று சேர்த்துவைத்தால் என்ன கனமோ அந்தப் பருமன்.

5. கூச்சாயிருக்கும் - கூர்மையாக இருக்கும்.

9ஆவது, குளுவை: துடைப்பருமன்; மூணுமுழ நீகளம்; விலாங்க ரூபம்; முகம் கூச்சாயிருக்கும்.

10ஆவது, செம்மடக்கா: உள்ளங்கை யகலம்; உள்ளங்கைப் பருமன்.

11ஆவது, முள்ளாரு: உள்ளங்கைப் பருமன்; சா ணிகளம்.

12ஆவது, ஊடான்: ரெண்டுகை யகலம்; மூவிரல் பருமன்.

13ஆவது, கிழங்கான்: நாலுவிரல் பருமன்; சா ணிகளம்

14ஆவது, உடுப்பாற்றி: கைப்பருமன்; ஒண்ணேகால் சா ணிகளம்.

15ஆவது, உளுவை: மூவிரல் பருமன்; சா ணிகளம்

16ஆவது, மட்டுவா: ரெண்டுகை யகலம்; மூவிரல் பருமன்; ஒண்ணேகால்சா ணிகளம்.

17ஆவது, இறா: நாலுவிரல் பருமன்; ஒட்டை நீகளம்

18ஆவது, தளருப்பொடி: தட்டையா யிருக்கும்; சின்னது

19ஆவது, கெளுத்தி: கீள்கால் பருமன்; ஒரு முழ நிகளம்; ரெண்டு கன்னத்திலேயும் முள்ளிருக்கும்

20ஆவது, முள்ளுவாளை: ஒண்ணரைக்கை யகலம்; ஒரு முழ நிகளம்; மூவிரல் பருமன்.

21ஆவது, குழிமீன்: கீள்கால் பருமன்; மூணுமுழ நிகளம்; யிதுவே ஆற்றுவிலாங்குமாம்.

22ஆவது, மதுக்கெண்டை: கைப்பருமன்; சா ணிகளம்; யிது முள்ளுக் கெண்டையு மாம்.

23ஆவது, கோட்டுவாளந் திருக்கை: பெரிசு; தவிர, மற்ற திருக்கை யெல்லாமாற்றிலேயு மிருக்கும்.

24ஆவது, ஊடான் பொடி: கடலிலேயும் ஆற்றிலேயும் தூண்டிபோட்டும் சிறிது மீன் பிடிப்பார்கள்.

# வேடர், ஏனாதி, இருளர், வில்லியர், குறவர், யிவர்கள் கைப்பீயத்து

*1. வேடர், வலைகள், கண்ணிகள் முதலானதுங் கொண்டுபோய், வேட்டைநாயும் வைத்துக் கொண்டு, கரடி, பன்றி, மான், முசல், வரையாடு, உடும்பு, கடமை யிதுகளும், பின்னையும் சிறிது மிருகங்களை வேட்டையாடிக் கொண்டு வந்து, தாங்கள் தின்கிறது போக, மற்றது விற்றுக்கொள்ளுவார்கள்; கரடி தின்கிறது முண்டு.*

*2. யிதுகளை வேட்டையாடுகிறது மல்லாமல் புத்துகளிலே யீசல் பிடித்து தாங்கள் தின்கிறதுபோக, மற்றது வித்துக் கொள்ளுவார்கள்.*

*3. யிதுவல்லாமல், சிறுதுபேர் பாளையப்பட்டுகளா யிருந்து, சிறுதுபேர் துரத்தினம் பண்ணுகிறது முண்டு, சிறுதுபேர் பயிரிடுகிறதுமுண்டு. சிறுதுபேர் குடிகளிடத்திலே படிக்குச் செய்கிறது முண்டு*

---

3. துரத்தினம் - துரைத்தனம்; ஆட்சி.படிக்குச் செய்தல் - கூலிவேலை செய்தல்.

4. திருவளூருக்கு வடமேற்கே அல்லிக் குழமலையைச் சுற்றி மோடியப்பனாயகன் பாளையமென்றும், சேணிப்பாளைய மென்றும், மகிஷணப்பனாயகன் பாளையமென்றும், தம்பானாயகன் பாளையமென்றும், எட்டுப் பாளையப்பட்டு, தாயாதி முறையாய்த் துரத்தினம் பண்ணினார்கள். நபாபு நாளையிலே அதுகளைப் பிடிக்கிக் கொண்டார்கள்.

5. யிவர்கள் கலியாணம் பண்ணுகிற விதம் அத்தை பெண், அம்மான் பெண்ணைக் கலியாணம் பண்ணுகிறது. அப்போ கலியாணம் பண்ணுகிறதுக்கு நிறுவாக மில்லாதே போனால், தாலி மாத்திரங் கட்டிவைத்துக் கொள்ளுகிறது. ரெண்டு மூணு பிள்ளைகள் பெற்ற பிற்பாடாகிலும், அதுக்கு முன்னே யாகிலும் உள்ளவன் கலியாணம் பண்ணுகிறபோது, தங்களுக்குண்டான யிதாசக்திக்குத் தக்கதாய் கலியாணம் பண்ணிக்கொள்ளுகிறது.

---

4. திருவளூர் - திருவள்ளூர் (செங்கற்பட்டு மாவட்டம்); அல்லக்குழி (செங்கற்பட்டு மா.); பூண்டி உள்வட்டத்தைச் சேர்ந்த ஊர். நவாபு-நவாபு (Nawab) - கர்நாடக நவாபு.

5. நிறுவாகம் - வசதி; யிதாசக்தி - யதாசக்தி - தனது சொந்தச் சக்தி.

6. யிவர்கள் கலியாணம் பண்ணுகிறபோது, வாசலிலே அம்பை நட்டு, அதுக்குச் சரியாய்ச் சூரியன் வந்தால் தாலிகட்டுகிறது; மற்றப்படி, நாளு நக்ஷத்திரமும் பார்க்கிறதில்லை.

7. பாளையப்பட்டா யிருக்கிறவர்கள் மாத்திரமே பாப்பான் வைத்துக்கொண்டு கலியாணம் பண்ணுவார்கள்; மற்றவர்கள் தங்கள் சாதி முறைப்படிக்குக் கலியாணம் பண்ணிக் கொள்ளுவார்கள்; பாப்பாற் தேவையில்லை.

8. யிவர்கள் புருஷன் விழுந்து போனால் மறுபடி ஒரு புருஷனைக் கலியாணம் பண்ணிக் கொள்கிறது முண்டு.

9. யிவர்கள் காடு மலைகளிலே மிகுதியாய்க் குடியிருப்பார்கள் கொஞ்சம் மிகுதியாய்க் குடியிருப்பார்கள். விறகு கட்டுகள் கொண்டுவந்து வூருகளிலே விற்கிறது முண்டு, சிறுதுபேர் பாளையகாறரண்டை சேவகத்தினமாயு யிருப்பார்கள். சிறுதுபேர் காவல்காறரா யிருக்கிறது முண்டு அவர்களுக்கு வூருகளிலே காவல் மிராசுகளு முண்டு.

---

9. காவல்மிராசு - காவல் காக்கும் பணிக்காக, ஊதியம் தரும் வகையில், நெல் போன்ற பொருள்களை ஆண்டுக்கு இவ்வளவு என்று தருவது.

10. யிவர்கள் தெய்வம் சுப்பிரமணிய சுவாமி பெண்சாதி வள்ளியம்மையைப் பூசிப்பார்கள்.

11. யிவர்கள் காடு மலைகளிலே தேன்கூடு அழிக்கிறதுமுண்டு. காடு மலைகளிலே கவலைக் கிளங்கு முதலான கிளங்குகள் எடுத்து வந்து பக்ஷணம் பண்ணுகிறது உண்டு.

12. யிதுவல்லாமல், ஏரி குளங்களிலே தாமரைக் கிளங்கு, அல்லிக்கிளங்கு, கொட்டிக்கிளங்கு சிட்டிக்கிளங்கு முதலானதுகள் யெடுத்துக்கொண்டு வந்து விற்றுக்கொள்ளுகிறதுமுண்டு; பக்ஷணம் பண்ணுகிறதுமுண்டு.

## ஏனாதிகள்

1. காடு மலைகளிலே குடியிருக்கிறது, ஆண்பிள்ளைகள், பெண்பிள்ளைகள் கட்டை விறகுகள் கொண்டுபோய் வூருகளிலே விற்கிறது மல்லாமல், படிக்கும், கூலிக்கும் வேலை செய்கிறது முண்டு.

---

1. ஏனாதி - நாவிதர், மறவர் ஆகிய இரு வகுப்பாரையும் குறிக்கும் பொதுச்சொல்.

2. சிறுதுபேர் பாளையப்பட்டா யிருக்கிறது முண்டு. சிறுதுபேர் சேவகத்தினமா யிருக்கிறது முண்டு. இவர்கள் கலியாணம் பண்ணினால் பாப்பார் யில்லாத கலியாணம் பண்ணுவார்கள்.

3. மற்ற பாளையப்பட்டா யிருக்கிறவர்கள் மாத்திரம் பாப்பான் வைச்சுக்கொண்டு கலியாணம் பண்ணுவார்கள். சிறுதுபேர் மிருக வேட்டையுமாடுவார்கள்.

4. அத்தை பெண், அம்மான் பெண்ணைக் கலியாணம் பண்ணுவார்கள். வூரிலேயுங் குடியிருப்பார்கள்.

## இருளர்

1. காடு மலைகளிலே குடியிருக்கிறது மல்லாமல், வூருகளிலேயும் மிகுதியாய்க் குடியிருப்பார்கள். கொஞ்சம்பேர் மிகுதியாய் மலைகளிலே கிடைக்கிற கவலைக் கிழங்கு, வள்ளிக் கிழங்கு,

---

2. இப்பகுதிக்குப்பின் தாட்சுவடியில் வேடர்கள் பற்றி முன்வந்த அதே பகுதியே மீண்டும் எழுதப்பட்டுள்ளது; எனவே அப்பகுதி இங்கு இடம்பெறவில்லை.

குளங்குட்டை ஏரி யிதுகளிலே யிருக்கிற தாமரைக்கிழங்கு, அல்லிக்கிழங்கு கொட்டிக்கிழங்கு, சிட்டிக்கிழங்கு, உருளைக் கிழங்கு யிதுகளை யெடுத்து வேகவைத்துத் தின்பார்கள்.

2. உடும்பு, முசல் முதலிய மிருகங்களையும் பிடித்து தின்பார்கள். யிவர்கள் கலியாணம் பண்ணினால் அத்தைபெண், அம்மான் பெண்ணைக் கலியாணம் பண்ணுவார்கள்.

3. யிவர்களுக்கும் பார்ப்பார் தேவையில்லை. இவர்கள் குடியிருப்பு ஓரிடத்தில் நிலையாய் இரார்கள். ஆகார முள்ளவிடத்திலே யிருப்பார்கள். யிவர்கள் சுப்பிரமணிய சுவாமி பெண்சாதி வள்ளியம்மையைக் கும்பிடுவார்கள்.

## வில்லியர்

1. காடு மலைகளிலே குடியிருக்கிறது யல்லாமல், வூரிலே குடியிருக்கிறதில்லை. மயில், குயில், காடை, கவுதாரி முதலான பட்சிகளைப் பிடித்துத் தின்கிறது மல்லாமல், பேட்டை ஸ்தளங்களிலே கொண்டுபோய் விற்றுக்கொள்ளுவார்கள்.

2. கலியாணம் பண்ணுகிறபோது அத்தை பெண், அம்மான் பெண்ணைக் கலியாணம் பண்ணுவார்கள்,. யிவர்களுக்கு பாப்பார் சுத்தமா தேவையில்லை.

---

# குறவர் சாதி

1. மலைகள், காட்டோடை மலையோரங்கள் யிதுகளிலே நூறுபேர் பெண்சாதி பிள்ளைகளுடன் குடியிருந்துக்கொண்டு, வழிமுன் பாட்டைகளிலே.... உண்டு.

2. பட்டணமா யிருக்கிறவிடத்திலே, ராத்திரியிலே போய்க் .. .. உள்ளே நுழைகிறபோது ... அவனைத் தலையை வெட்டிக் கொண்டு போறதுமுண்டு.

3. யிவர்கள் கலியாணத்துக்கும் பாப்பார் தேவையில்லை.

---

1. பேட்டை - சந்தையூர்

# குறவர் சாதி

1. கூடைகட்டிக் குறவர், பொதி மாட்டுக் குறவர், ... குறவர் யிப்படி குறவர் மூணு பேதமுண்டு.

2. கூடைகட்டிக் குறவர் வூருக்குப் புறத்தியிலே குடியிருந்துகொண்டு, கூடைகள், மரக்காவ்படி,

தொம்பைக் கூண்டு, முதலானதும், யீச்சங் கசங்கு பிரம்பு யிதுகளினாலே கட்டி விற்றுக் சீவனம் பண்ணுவார்கள்.

3. யிவர்கள் கலியாணம் பண்ணினால் அத்தைபெண், அம்மான் பெண்ணைக் கலியாணம் பண்ணுவார்கள். யிவர்களுக்கு பாப்பார் தேவையில்லை.

4. யிவர்களுக்கு ஒவ்வொருதருக்கு நாலஞ்சு கழுதைகளு மிருக்கும். இவர்கள் பெண்டுகள் பச்சை குத்துவார்கள். குறி சொல்லுவார்கள். இவர்கள் பூனை தின்கிறதுமுண்டு.

---

2. மரக்கால்படி - மரக்கால் அளவை அளப்பதற்கான முகத்தலளவைக் கருவி, 8 படி = 1 மரக்கால் 12; மரக்கால் 1 கலம்.

# பொதிமாட்டுக் குறவர்

1. மாட்டின் பேரிலேயும் கழுதைகள் பேரிலேயும் அரிசி, நெல்லு, புளி, வெல்லம், பயறு, சோளம் முதலானதும் பொதிகளிலேற்றிக் கொண்டுபோய் நயமான விடத்திலே கொண்டு குறைச்சான விடங்களிலே விற்றுக்கொள்ளுவார்கள்.

2. யிவர்கள் கலியாணம் பண்ணினால் ரெண்டு மூணு கழுதைகள் குடுத்து பெண்ணைக் கொள்ளுவார்கள். ஒவ்வொருத்தனுக்கு நாலுபேர் அஞ்சுப்பேரைக் கலியாணம் பண்ணுவான். யிவர்கள் கலியாணம் பண்ணுகிறது பாப்பார் தேவையில்லை.

3. யிவர்கள் பெண்டுகள் பித்தளை வளையல் கையிலே விஸ்தாரமாய்ப் போடுவார்கள். காதிலே பித்தளைக் கம்மல் போடுவார்கள்.

---

1. நயமான இடம் - பொருள் அதிகம் விளையும் இடம். குறைச்சானவிடம் - பொருள் குறைவாக விளையும் இடம்.

# கரையார், பட்டணவர், செம்மடவர்

1. கலியாணம் பண்ணினால், பெண் வீட்டுக்காறருக்கு நாலு வறாகன் குடுக்கிறது. கலியாணம் பண்ணவேணு மென்றால் அம்மான் பெண்ணைக் கொள்ளுகிறது. பாப்பார் வந்து கலியாணம் பண்ணிவிக்கிறது. அந்தப் பாப்பானுக்கு ஒரு பெரியபணம், ஒருபடி அரிசியுங் குடுக்கிறது.

2. இவர்களுக்குப் பெரியதினக்காறர் எண்ணூர் முகத்துவாரத்தண்டை யிருக்கிறது, சாமி செட்டி, சின்னப்ப செட்டி.

3. யிவர்கள் சாதியிலே தப்பிதம் பண்ணினால் அதை விசாரிச்சு, அடிச்சு அபராதம் வாங்கிறது.

4. யிவர்களிலே செற்றுப்போனால் கலியாணம் பண்ணினவர்களுக்குத் தகனம் பண்ணுகிறது; யில்லையென்றால், (புதை)க்கிறது.

5. பட்டணவர், கரையாரைப் பார்க்கிலும் செம்மடவர், சாதியிலே கொஞ்சம் செத்தியாய்

1. ருசு - சான்று (evidence); உளுக்காந்து - உட்கார்ந்து.

6. கரையாருக்கு முதலி யென்றும், பட்டணவர்க்கு செட்டி யென்று பேர்; செம்மடவருக்கு நாயக்கனென்று பேர்.

1. இந்த மூணு சாதியிலேயும் ஒருத்தன் பெண்டாட்டியை ஒருத்தன் யெடுத்துக்கொண்டால் அதுக்கு ருசு அத்தாச்சி வந்தால், அந்தச் சாதி பெரியதினக்காறரும், அந்த வூராருங் கூடி. அந்த வூருக்குப் புறத்தியிலே மரத்தின் கீளே, பாய் போட்டுக்கொண்டு வுளுக்காந்து, அவனையும் அவளையும் அழைப்பித்து அவனுக்கும் அவளுக்கும் காரியகாறனாய் பெரியவனாயிருக்கிறவனையும் அழைப்பித்து, அவன் கிட்ட கலியாணச் சிலவு வாங்கி, பெண்டாட்டிக் காறனுக்குக் குடுத்து, அபராதம் வாங்கித் தாங்கள் யெடுத்துக் கொள்ளுளவார்கள்.

2. அன்னைய திணம் சாப்பாடு சிலவும் வெற்றிலை பாக்குச் சிலவும் அவன் குடுக்கிறது. புறத்தியிலே யானால், தூரத் துரத்திவிடுவார்கள்; கிட்ட வைக்கிறதில்லை. அடக்குற மட்டுக்கும் அடக்குவார்கள்; அடங்காதே போனால் விபசாரத்துவம் பண்ணினால் லம்பாடி..

---

1. ருசு - சான்று (evidence); உளுக்காந்து - உட்கார்ந்து.

**3. சமுத்திரத்திலே போடுகிற வலைப் பெயர்:-**

1. பெருவலை
2. தூரிவலை
3. மாவலை
4. கண்ணிவலை
5. சிறுவலை

**4. ஆற்றுக் கழியிலே போடுகிற வலைப்பெயர்:-**

1. பெருவலை
2. கொண்டைவலை
3. சிறுவலை
4. கல்லு வலை
5. பறடி வலை
6. ஓலை வலை

# 5. திருப்பாலைவனங் கைப்பீயத்து (டி.3084)

1. பளவற்காட்டுக்கு மேற்கே நாலுநாழி வழிதூரத்திலே தேர்ந்துறையாகிய திருப்பாலைவனம் சிவஸ்தளம். அது வுண்டான விதம்:-

2. பூற்வத்திலே குலோத்துங்கச் சோளன் பூமியெல்லாம் சிவலிங்கம் பிறதிஷ்டையுண்டுபண்ணின போது, இந்தத் திருப்பாலைவனத்திலே சிவலிங்கப் பிறதிஷ்டை யுண்டுபண்ண வேணுமென்கிறதாய், தன்னுடைய சேனையோடுங் கூட வந்து, திருப்பாலைவனத்திலே வந்து யிறங்கி, சிவலிங்கமொன்று வுண்டுபண்ணி, பிறதிஷ்டை பண்ணுகிறத்துக்கு யிடம் பார்த்து, காமாட்டிகளை விட்டு, அங்கே யிருந்த பாலை மரங்களை வெட்டுவித்தான்.

---

1.திருப்பாலைவனம் - செங்கை மாவட்டத்தில், பொன்னேரி வட்டத்தில் உள்ள ஊர்.

2. காமாட்டிகள் - மண்வெட்டுவோர்கள்.

3. அதிலேயொரு சிவலிங்கமிருந்து, அந்தச் சிவலிங்கத்துக்குச் சிறசிலே கோடாலி காயம் பட்டுது. அது பட்ட மாத்திரமே குலோத்துங்கச் சோளனுடைய பட்டத்து யானை விழுந்து செற்றுப் போச்சு.

4. அப்போ குலோத்துங்க சோளன் பயந்து சுவாமியைத் தோத்திரம் பண்ணி, அந்தப் பழைய சிவலிங்கத்தை மூலஸ்தானத்திலேயே வைத்தது பிறதிஷ்டை பண்ணி அலிமுத்தீஸ்வரச்சுவாமி யென்று பேரிட்டு, பிற்பாடு தானுண்டு பண்ணின சிவலிங்கத்தையும் ஒருபக்கத்திலே வைத்து பிறதிஷ்டை பண்ணி, திருப்பாலை வனத்தீஸ்வரனென்று பேரிட்டு, கெற்பக்கிறகம் பின்னாலே வளைவுண்டாகக் கட்டி, பிறபாடு முன்பண்டபம் முதலானதும் கட்டிவைத்தான்.

5. இப்பவும் அந்தப் பளைய சுயம்பு லிங்கத்துக்குக் காயம் பட்டதும், சிரசிலே குழியாயிருக்குது. இப்போவும் அந்தக் கோவிலுக்குள்ளே பளைய பாலைமரம் பெரிசு மூன்றிருக்குது. அதினாலே திருப்பாலைவனமென்று அந்த பூமிக்கு பேருண்டாம்.

---

3. செற்றுப் போச்சு – இறந்துவிட்டது.

6. திருத்தேர்த்துறை யென்ற எதுனாலே யென்றால், அந்தப் பளைய சுயம்பு லிங்கத்தை பண்ணுகிறத்துக்கு முன்னே தேவேந்திரன் தன்னுடைய பாதத்தின் பேரிலே யேறிக்கொண்டு வந்து நாள் தோறும் அந்தச் சுயம்பு லிங்கத்தைப் பூசை பண்ணிய பிற்பாடு போவான். அப்படி யிருக்கச்சே ஒருனாள் பத்தி குறைந்த படியினாலே அந்த ரதம் ஆகாசத்திலே நடவாமல் போச்சுது.

7. அந்த ரதத்தை, அந்தத் திருப்பாலை வனத்துக்கு மேலண்டை அருகாமையிலே ஒரு மடுவு மேற்கே யிருந்து கிளக்கே போகுது, அதிலே விட்டு விட்டுப் போய்விட்டான். ஆனபடியினாலே அந்த ரதம் வெகுநாள் வரைக்கும் சகலருக்கும் தோற்றப்பட்டுக் கிடந்தது. ஆனபடியினாலே அந்த வூருக்குத் திருத்தேர்த்துறை யென்றுயொரு பேருண்டாச்சுது.

8. இதுவல்லாமல், அந்தச் சுயம்பு லிங்கம் வெளுப்பாயிருக்க வேண்டிய தென்னத்துனாலே யென்றால், பூர்வத்திலே, தேவர்கள், அமிர்தங் கடைந்தபோது, அந்த அமிர்தத்திலே கொஞ்சம் லிங்காகாரமாய்ப் பிடித்து வைத்துச் சிவலிங்க பூசை பண்ணினார்களாம். ஆனபடியினாலே அநதச் சிவலிங்கம் வெள்ளையா யிருக்குது.

9. இதுவல்லாமல், அந்தக் குலோத்துங்கச் சோளனுக்குப் பிற்பாடு, ராஜராஜ சோளன் விக்கிரமச் சோளன், பொத்தப்பிச் சோளன், கண்டகோபாலன், சுந்தரபாண்டியன், குமாரபொக்கறாயன் முதலான பேர்கள் யிந்தச் சுவாமிக்குச் சிறுது மானியங்களும் கோவிலுக்குச் சிறுது திருப்பணிகளும் செய்து கட்டிவித்த கெற்பக்கிறஹம் பின்னாலே, சிலாசானம் போகுவித்து, குலோத்துங்கச் சோளன் தற்மம் நடப்பிவித்தார்கள்.

10. இந்தக் கோவில் பெரிசுமல்லச் சின்னது மல்ல; நடுத்தரத்திலே கொஞ்சம் பெரிசு. இந்தக் கோவிலுக்குக் கீழண்டை யெதிரே சமீபத்திலே துருக்கல்லினாலே கட்டின திருக்குளமொன் றிருக்குது.

11. இப்போ இங்கரீசுக் கும்பினியார் இந்தக் காஞ்சி தேசத்திலே திருக்காஞ்சிபுரம் திருவணாமலை, திருப்பதி, திருக்கழுக்குன்றம், திருவளூர், பெரியபாளையம், இப்படி யிருபத்தேழு தளத்துக்குத் தற்மம் குடுத்து நடப்பிக்கிறார்கள்.

12. அதிலே யிந்தத் திருப்பாலவனமொரு ஸ்தளமாய் வருஷம் 1க்கு இருநூற்று நாற்பது வராகன் தற்மம் குடுத்து, தேர்திருனாள் முதலானதும் நடப்பிக்கிறார்கள், திருப்பாலவனமும் மற்றொரு கிராமமும் யிந்த ஸ்வாமிக்கு சோத்திரியம் நடக்குது.

-----x-----

11. இங்கரீசு - இங்கிலீஸ் (English)

12. வராகன்; பொற்காசு; பொதுவாக 1 பகோடா ஒரு வராகனுக்கு ஈடாகப் பேசப்படும்; 1 பகோடா = ரூ. 3.50

சோத்திரியம் - சுரோத்திரியம் - இங்கே, மானியம்.

# 6. சித்தாமூர் கோவிலுக்கும் மடத்துக்கும் வரும்படி வருமானம் துரைகளிடத்தில் எழிதிக் குடுத்த கைபீது - வயணம்

## (டி.2980 - ஓலை)

*[1] ஸ்வஸ்தி ஸ்ரீமந் தேவமான்னிய தேவஸ்ரீ ஸ்வாமியார் அவர்கள் முன்பத்திர தேவ பட்டாசாரிய ஸ்வாமியார் அவர்கள் மகா ராச ராச ஸ்ரீ சற்வேயர் சன்னல் கற்னல் மைக்கிஞ்சி துரை அவர்களுக்கு எழிதிக் குடுத்த கையீது.*

*என்னமென்றால், குலோத்துங்க சோழ னாளையில், ஜைந மார்க்கத்தில் யிந்த கஞ்ஜி தேசத்தில் பிறபலமாகிய, அனாதி ஜிநாலயமாகிய சித்தாமுர் ஜிநாலயத்துக்கும், மடத்துக்கும், பூசைக்கும், செலவுக்கும் நடக்கும்படி னாலாயிரம் வராகனுக்கு கிராமங்கள் சற்வமான்னியமாக விட்டு நடப்பிச்சார்கள்.*

---

1.சித்தாமூர்-விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சிதாலுகாவில் உள்ள ஊர்; வல்லம் என்ற ஊரை அடுத்துள்ளது. சற்வேயர் - Surveyor: சன்னல் - General; கற்னல்-Colonel; மைக்கிஞ்சி - Mackenzie. கஞ்சி - காஞ்சிபுரம்; ஜிநாலயம் - ஜைன ஆலயம்; சர்வமானியம் - வரி ஏதுமில்லாத மானியம்.

2. யிதின் பிற்காலம் விக்கிரம சோழ மகாராயா ராச்சியம் பண்ணி அருளாநின்ற காலத்து, யிந்த சித்தாமூர் சிம்ஹபுரிநாத ஸ்வாமியார் கோவிலுக்கும், ரண்டாயிரத்து அன்னூறு விராகன் காணும்படி நஞ்சை நிலம் சிறுது ஊர்களில் சற்வ மான்னியமாக விட்டு நடப்பிச்சார்கள்.

3. யிதின் பிற்காலம் சகாப்தம் ஆயிரத்து னூத்து னாற்பது வருஷம் செல்லுகயில் விஷ்ணுதேவ மகாராயன் ராச்சியம் பண்ணுகயில், ஸிம்ஹபுரிநாதஸ்வாமியர் கோவிலுக்கும் பார்ஸ்வநாதஸ்வாமி கோவிலுக்கும், நேமிதஸ்வாமி கோவிலுக்கும் மடத்துக்கும் ரண்டாயிரம் விராகன் காணும்படி நஞ்சை நிலம் சிறுது ஊர்களில் சற்வமான்னியமாக விட்டு நடப்பிச்சார்கள்.

4. யிதின் பிற்கால சகாப்தம் ஆயிரத்து அன்னூத்து சில்லரை வருஷம் செல்லுகயில் ஸ்ரீறங்கதேவமகாராயன் ராச்சியா அதிகாரம் பண்ணுகயில், சித்தாமூர் ஜிநாலயம் மூணுக்கும் மடத்துக்கும் செல்வதாக ஆயிரத்து னானூறு விராகனுக்கு சிறிது ஊர்களில் நஞ்சை புஞ்சை நிலம் சற்வமான்னியமாக விட்டு நடப்பிச்சு வந்தார்.

---

2. அன்னூறு - ஐநூறு, விராகன் - வராகன்.

4. அன்னூத்து - ஐநூற்று

5. யிதின்பின், சகாப்த்தம் ஆயிரத்து அன்னூத்து யிருவதெட்டு வறுஷம் செல்லுகயில், வேங்கிடபதி மகாராயர் ராச்சியா அதிகாரம் செல்லுகயில், ஜிநாலயம் மூணுக்கும், மடத்துக்கும், ஆயிரம் விராகனுக்கு சிறிது ஊர்களிலே நஞ்சை, புஞ்சை நிலம் சற்வமான்னியமாக விட்டு நடப்பிச்சார்.

6. யிதின் பிற்காலம், சகாப்த்தம் கிஷ்ஷ்ணராயன் னாளயில், சித்தாமூர் பிறபலமாகிய ஜிநாலயம் மூணுக்கும் மடத்துக்கும், அறனூறு விறாகனுக்கு சிறுது ஊர்களில் நஞ்சை புஞ்சை நிலம் சற்வ மான்னியமாக விட்டு நடப்பிச்சார்.

7. யிதின் பிறகாலம் ராச்சியா அதிகாரம் பண்ணினவர்கள், யிறனூறு வராகன் மட்டுக்கும் நடப்பிச்சார்கள்.

8. யிதின் பிற்காலம், ராயசி நாளையில், அந்த வருமாநங்களை கட்டிபோட்டு, நாற்ப்பது வராகனுக்கு நஞ்சை புஞ்சை நிலத்தில் மான்னியமாக நடப்பிச்சார்.

9. யிதின் பின், மகாராச ராசஸ்ரீ கும்பினியார் துரையவர்கள் அறவது வராகனுக்கு நஞ்சை புஞ்சை நிலமான்னியமாக விட்டு நடப்பிச்சு வருகுறார்கள்.

---

8. கட்டிபோட்டு - கட்டிப்போட்டு.

*10. யிப்ப, யிந்த சித்தாமூர் மூன்று ஜிநாலயங்களுக்கும் மடத்துக்கும் செல்லும் செலவு நித்ய கட்டளை தினம் ஒண்ணுக்கு விராகன் ஒண்ணரை ஆக வறுஷம் ஒண்ணுக்கு விராகன் அன்னூத்து நாற்பதும் மாகோத்ஸவத்துக்கு, வஸந்தோத்ஸவம், ரதோத்ஸவம் பத்து ணாளைக்கும் விராகன் யிறனூற்று அறவதும், ஆக வறுஷம் ஒன்னுக்கு விராகன் எண்ணூறு செல்லுகயினால், யிந்த தேசத்திலிருக்குற ஜைநர்களில் துரைகளிடத்தில் சேர்ந்து உத்தியோகம் செய்யாமைனாலேயும், பெரிதாகிய வியாபார வருமானம் யில்லாத்தினாலேயும், க்ருஷி செய்து கஷ்ட சீவனமாகையினால் அவர்களிடத்தில் யாசகம் செய்து, யிந்த கேரிவல்களுக்கும் மடத்துக்கும் செலவுகள் நிபாயிக்கவில்லை. அவர்களுக்கு குடுக்குறது(க்கு) மகாராச ராசஸ்ரீ துரை அவர்கள் மனசு பெரிசு பண்ணி, யிந்த மார்கத்தின் பேரில் தயவு செய்து, யிந்த செலவுக்கு நட(த்திக்கொ)ள்ளும்படி பிரார்திச்சு கொள்ளுகுறோம்.*

---

10. மகோத்ஸவம் = மகா + உத்சவம்; வஸந்தோத்ஸவம் = வசந்த + உத்சவம்; ரதோத்ஸவம் = ரத + உத்சவம்; க்ருஷி = வேளாண்மை; நிபாயிக்க வில்லை = நிர்பயிக்கவில்லை - நிர்வகிக்கப் போதுமானதாக இல்லை.

# 7. திருவிடைச்சுரம் கோட்டை வரலாறு (டி.3098)

1. செங்கல்பட்டுச் சில்லாவைச் சேர்ந்த திருவிடைச் சுரத்திலிருக்கும் புராதீனக் கோட்டையில் ஆண்டுகொண்டிருந்த வன்னிய அரசர்களான காத்தவராயன், சேத்துராயன் என்றவர்களின் விசேஷித்த சரீத்திரம் சகாதேவ நாட்டான் வாக்குமூலத்தைப் பிடித்தெழுதினது.

2. பூறுவீகத்தி லிந்த ஸ்தளத்தின் குறும்ப பிறபுக்கள் புராதீனமாய் ராஷ்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். அவர்களை யாதொண்டைச் சோளன் தஞ்சை நகரத்திலிருந்து வந்து சம்மாரம் பண்ணி தொண்டைமான் சக்கரவற்தி யென்ற கிதாப்பு பெத்த பின்பு, அவர்களுக்குப் பதிலாக கொண்டைகட்டி வெள்ளாழர் ஸ்தாபிக்கப்பட்டார்கள்.

---

1.திருவிடைச்சுரம் - செங்கற்பட்டு - திருப்போரூர் சாலையில் இவ்வூர் உள்ளது. செங்கற்பட்டுப் புகைவண்டி நிலையத்திலிருந்து ஐந்தரை மைல் தொலைவில் உள்ளது.

2. ஆதொண்டைச்சோழன் என்பவன், ஔவையார் பாடிய தொண்டைமான் இளந்திரையனா என்பது ஆய்வுக்குறியது.

3. அந்த நாள்களில் வன்னியர் என்ற பள்ளி ளிந்தக் கோட்டையை தேசாதிபதி உத்திரப்படிக்கு ஸ்வாதீனம் பண்ணிக்கொண்டு, பிறபுத்துவம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். ஆனா யிவர்கள் ஆந்திர, கன்னிட, திராவிட தேசாதிபதிகளுக்கு கப்பங் கட்டிக்கொண்டு வந்தார்கள்.

4. இவர்கள் பிறபுத்துவத்தின் சமுசாவழிச் சரித்திர மொருவராலும் கார்க்கப்பட்டதில்லை.

5. இப்படி யிருக்கிற நாளையிலே, இவர்கள் வமுசத்தில் காத்தவராயன், சேத்துராயன் என்ற யிரண்டு அரசர்களிந்தப் பட்டத்துக்கு வந்தார்கள்.

6. இவர்கள், ளதீக புத்திவந்தர்களா யிருந்தபடியினாலே, தாங்களிருந்த பூற்வீகக் கோட்டையை மகா பலமாய்க் கட்டினார்கள். அந்தக் கோட்டையின் பரப்பிருக்கிற பிறகாரம் அளந்து கண்ட வயணம்:-

---

4. கார்க்கப்பட்டதில்லை - பாதுகாக்கப்பட்டதில்லை.

6. வயணம் - விவரம்.

*7. தெற்கு வடக்கு 1149 அடி;*

*கிழக்கு மேற்கு 1206 அடி;*

*இந்தக் கோட்டை அலங்கச் சுவர் இருபதடி விசாலமா யிருக்குது.*

*இந்தக் கோட்டையைச் சுத்திலும் முப்பதடி விசாலத்துக்கு உரு 1 அகிள் இருக்குது.*

*8. இப்படியாய் இந்த கோட்டைக்கு மத்தியிலே ஒரு சிறப்பான உள்க்கோட்டையும் மரண்மனையும், மலைமேலே கட்டியிருக்குது. யிது அளந்து கண்டது:-*

*9. கிழக்கு மேற்கு 280 அடி;*

*தெற்கு வடக்கு 195 அடி;*

*இந்தப் பிறகாரம் கோட்டையைப் பிலக்கக் கட்டி வெகு சூரத்துவ முள்ளவனாய் ராச்சியம் பண்ணுகையிலே, மேலான தேசாதிபதிக்கு*

---

7. சுவடியில் எண்கள், தமிழ் எண்களே காணப்படுகின்றன. உரு - ஒரு; அகிள் - அகழி (Moat)

9. பிலக்க - பலமாக; மாமூல் - வழக்கம்போல; விடாகிச்சு - மறுத்து.

மாமூல்ப் பிறகாரம் கப்பம் கட்டாமல் உடாகிச்சுப் போட்டார்கள். இவர்களுடைய பிரபல மதிகப்பட்டுது.

10. இதில், காத்தவராயன் மாத்திரம் தீர சூரத்தனமுள்ளவரை யிருந்தான். இவனுக்கு கோட்டைக்கு வடக்கு ஒருனாழி வழிதூரம் கோமாளம் மலையில் நவபத்து, கோட்டைக்கி அக்கினி மூலையில் ஒரு கல் தூரத்து மலை மேல் நவபத்து, கோட்டைக்கு தெற்கு னாலுனாழிவழி தூரத்தில் மாதிளங்குப் மலைமேல் நவபத்து, கோட்டைக்கு மேற்கு பெரிய மலைமேல் ஞான புரியீஸ்பரர் சவசஸ்தம்பத் தடியில் நவபத்து, இந்தப்படி னாலுதிக்கிலும் வாத்திய முழங்க,

11. யிதன்றி, வேறே யாதொரு தேசாதிபதியும் நிகரில்லை யென்று வெகு போகத்தை யனுபவித்துக் கொண்டிருந்தான்.

12. இவன் பேரில், ராயர் தண்டு சண்டைக்கு வந்தபோது, இவன் மேலாகச் சொல்லப்பட்ட மலைகளி லெல்லா மிருந்து நவபத்து முழங்கப்பண்ணி, எந்த மலைமேலே யிருக்கிறானென்கிற தடம் தெரியாமல் வெகுனாள் லோலாயப் பட்டு, கடையாந்திரம் ஒருனாள்

---

10. நவபத்து – தோல்வாத்தியம்.

ராயத்தண்டு ஓய்ந்திருக்கிற சமையம் பாத்து, தன் தண்டுகளோடே வந்து விழுந்து வெகு ராணுக்களை அடுக்கடையாய் வெட்டித் தள்ளினான்.

13. அப்போ, ராயருடைய தளகர்தனுக் கதீக்கிற கோபம் வந்து, வெகு தளங்களோடே வந்து விழுந்துததினாலும் சண்டை பண்ணினவிடத்தில், இவன் தானிருக்கிற சோடை தெரியாமல் சண்டை குடுத்து, வெகு ராணுக்களை மடியப்பண்ணி அழிந்தான்.

14. அப்போ, ராயரானவர் இவன் வெகு பலாஷ்ட்டியனா யிருக்கிறான் என நினைத்து சண்டையை நிறுத்தி, யாதொரு முலமா யிவனுக்கு அபாயம் வருத்திவிக்க வேணுமென்று நினைத்துக்கொண்டிருக்கையில்,

15. காத்தவராய னாகப்பட்டவன், தொண்டைமான் சக்கிறவத்தியினாலே குறும்பருக்கு வதிளாக வைத்திருக்கு வெள்ளாழ

---

12. ராயர் - கிருஷ்ணதேவராயர்(?); லோலாயம் - அல்லல்; கடையாந்திரம் - கடைசியில்; தண்டு - சேனை, ராணு - சேனை; அடுக்கடையாய் - மீண்டும் எழாதபடி.

13. அதீக்கிற - அதிகமான; சோடை - சுவடு

14. பலாஷ்யன் - பலவான்

பிறபுக்களை யதிகமாய் சின்னம்பண்ணி அவர்களை கொடுமைப்படுத்தினான்.

16. அதினாலே வெள்ளாழர் மூர்க்கமாய் எழும்பினார்கள் ... வெள்ளாழர் வந்து – ராயரிடம் பிறாது பண்ணினபடியினாலே, ராயரவர்கள் விசாரிச்சு, உய்யாள்வார் பாளையக்காரனை அனுப்பி அவனை சம்பாரம் பண்ணச் சொல்ல அவனும் வந்து ... ராணுக்களோடே சண்டை பண்ணினான்.

17. இப்படி ஆறுமாசத் தறுதி உயித்தியம் பண்ணி உய்யாள்வாரால் நிறுவாகப்படாமல், தன் தளங்களோடே நிறுபங்கப்படாமல் நெல்லுப் பாளையமே சேர்ந்து, காத்தவராயனுடைய ராசதான்யாகிற திருவிடைச்சுரத்துக்கு வேகு காறரை யனுப்பி, உபாயத்தினாலே காத்தவராயனை செயங்கொள்ளலாம் என்று பார்த்துவரச் சொல்லி யனுப்பினான்.

---

15. வதிள் - பதில்; சின்னம்பண்ணி - சிதைத்து

16. பிராது - புகார் செய்தல்; சம்மாரம் - அழித்தல்.

17.ஆறுமாசத்தறுதி - ஆறுமாதம் வரை; உயித்தியம் - யுத்தம்; நிறுபங்கப்படாமல் - சேதமாகாமல்; வேகுகாறர் - ஒற்றர்; உபாயம் - தந்திரம்.

18. அப்போ, வேகுகாறர் வந்து பார்க்குமிடத்தில் அப்போ யிந்த திருவிடைச்சுர தேவஸ்தானத்துக்குச் சமீபத்திலே 101 தாசிகள் வீடு யிருந்தது. அதில், குப்பச்சி என்று பேர் கொண்டு, தாசிகளுக்குள்ளாக பெருநாட்டாள் என்று பேர்க்கொண்டு ஒரு தாசி மகா ரூப லாவணிய சவுந்தரியமாயிருந்தாள்.

19. அவளோடே சொல்லப்பட்ட காத்தவராயன் சினேகம்பண்ணி, யிவளுடமருந்து மயக்கத்திலே வசப்பட்டு, தன் வேலை நேரம் போக மத்த வேளைகளிலெல்லாம், இவளுடைய மயக்கத்தில் சிக்கிக்கொண்டு யிரவும் பகலும் அவளிடத்திலேயே சாப்பிட்டுக்கொண்டு அவள் சொற்பேச்சு கடவாமல் நடந்துகொண்டிருந்தான்.

20. இதை வேகுகாறர் அறிந்து உய்யாள்வாருக்கு அறிக்கை பண்ணினார்கள். அந்தச்சிணம் உய்யாள்வாரும் கடலூர் வெள்ளாளரும் அந்தக் குப்பச்சி என்ற தாசியிடம் வந்து, அவளுக்கு நாலுபை விராகன் வெகுமதி வைத்து, காத்தவராயன் தலையை வெட்டி தங்களுக்கு கொடுத்துக் காப்பாத்த வேணுமென்று கெஞ்சினார்கள்.

---

20. அந்தச் சிணம் - அந்தக்ஷணம்

21. அப்போ அந்த குப்பச்சி யென்கிற தாசியானவள், இந்த நாலுபை விராகனைக் கண்டு பொருளாசை யதிகரித்து, தானே காத்தவராயன் தலையை வெட்டி தருகிறேன் என்று உடனே பிட்டிக்கை பண்ணி இன்ன ராவிலே இந்த மணி வேளையிலே, யிந்த இடத்திலே வாருங்கோள் அந்தப்படிக்கே செய்கிறோ மென்று நிற்சையித்து சொன்னால்.

22. அந்தப்படிக்கே அவள் சொன்ன யிடத்துக்கு வந்திருந்தார்கள். அன்றைதினம் காத்தவராயனானவன். சாயந்திரம் குதிரை மட்டத்தின் மேலேறிக் கொண்டு, உல்லாசத்துடனே வந்து சப்பிறகுட மஞ்சத்தின் பேரில் உளுக்கார்ந்திருக்கையில்,

23. குப்பச்சி எனற தாசியானவள் மகா ருசிகரமான பலகாரத்தில் விஷங் கலந்து சுட்டு அதை அவனுக்கு வாடிக்கைப்படியே ஊட்டினாள். அதை அவன் சாப்பிட்டு, கொஞ்ச தியாலத்துக்குள்ளே யவனுக்கு புத்திமோகங்கண்டு, சுறணையற்றவனாய் மஞ்சத்தில் விழுந்து விட்டான்.

---

21. பிட்டிக்கைபண்ணி - சம்மதித்து

22. சப்பிறகுடமஞ்சம் - சப்பிரகூடமஞ்சம் - தோரணக்கட்டில்

23. தியாலம் - நேரம்

24. அப்போ, அவனை மஞ்சத்துனுடைய பின்னாலே அவன் கையைக் கட்டி அவனிரண்டு சுலுப்பாய்களைப் பிடித்துக் கட்டில் கால்களிலே கட்டி, கருக்கான கத்தியினாலே அவன் தலையை அறுத்து, ஒரு தாம்பாளத்திலே வைத்து, மேல் சொல்லிய யிடத்துக்கு வந்திருக்கும் உய்யாள்வார் மனுஷாளிடத்துக்குக் கொண்டுவந்து கொடுத்தாள்.

25. அவாளிது காத்தவராயனுடைய தலை கெபாலென் றடையாளமாய் பின்பு ராசத்துரோகஞ் செய்த யிவனுடைய சிரசையும் வாங்கிக்கொண்டு போய் விட்டார்கள்.

26. இந்தச் சேதியை அதிகாலையில் காத்தவராயன் தம்பிச் சேதுராயன் கேட்டு, அதீக விசனத்துக் குள்ப்பட்டு, சொல்லப்பட்ட குப்பச்சிக்குள் ளடக்கமாயிருந்த நூறு தாசிகளையும் பிடித்துவந்து, யிந்த வூரிலே யிருக்கிற ஏரிக் கரையிலே, மாட்டை போலே பிணைத்து எல்லோரையிம் தலை வெட்டிவித்தான்.

27. அந்த நாளையிலிருந்து, ஏரி யின்னாள் மட்டுக்கும் பிணை ஏரி என்றழைக்கப்படுகிறது.

---

24. கருக்கான - பதமான

25. கெபால் - கபாலம்

28. இதல்லாமல், யிந்த நூத்தொரு தாசிகள் வீட்டை கொளுத்திப்போட்டான். அந்த யிடங்க ளின்னாள் மட்டுக்கும் குப்பச்சிகுண்ணு என்றழைக்கப்பட்டு, வனாந்தரமாயக் கிடக்குது.

29. உள்ளூர் மக்கள் உய்யாள் வாருக்கு உளவாயிருந்தவர்களைப் பிடித்துச் சொல்லப்பட்ட ஏரியின்மேல் பிணைத்து வெட்டிப்போட்டான். அப்போ உய்யாள்வார் தன்னுடைய சேனை பரிவாரங்களுடன் வந்து, இந்த திருவிடைச் சுரத்து கோட்டையின் பேரில் இருந்து, இருபத்தாறுநாள் சண்டைப்பண்ணி, வெகு சேனையும் விருதரத்தாரின் தண்டுகளையும் பிடித்துக் கடைசியில் காத்தவராயன் தம்பி, சேத்துராயனைப் பிடித்து, திருவிடைச் சுரத்துக் கோட்டையைப் பிடித்து யிழுத்துப்போட்டு, கிருஷ்ணராயருடைய அப்பனைப் பிரகாரம் தனது பாளையத்துக் காவலுக்குள்ளாக கொண்டு வெள்ளாழருக்கு பிரீதி வரும்படியாக நடந்து கொண்டான்.

30. அந்நாள் முதலிந்த ஊர் ஆனைக்கொந்து சம்ஸ்தானத்துக்கு அடக்கமாயிருந்தது.

31. இந்த சரித்திரத்தை யிந்த வூரா ரெல்லாரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

- A true investigation by E.N.Appavoo.
- Translated by Appavoo.

---

28. குண்ணு - குன்று; வனாந்தரம் - காடு

# 8. பாண்டுக்குழி வரலாறு

## Account of Panndoocoolies written from different verbal accounts in the Jagheer and Arcott District (D.3096 ; D.3821)

1. பாண்டுக்குழியைப் பத்தி யாதொரு பொஸ்தகத்திலு மெழுதப்பட்டதில்லை, யென்று யாவரும் பிறச்சித்தமாய்ச் சொல்லுகிறார்கள்.

2. ஆனபடியினாலே, யிந்த பாண்டுகுழியினுடைய வரலாறு ஒருவராலும் வகையாய் சொல்லப்படாத பிறகாரமா யிருக்கிறபடியினாலே, இதற்கடியில் சொல்லப்படுகிற பிரசாரம் பலபேருடைய வாக்குமுலத்தை பிடித்து எழுதப்பட்டுது.

3. என்னமென்றால், முதலாவதுப் பாண்டுகுழி ஒரு பேராய் கூப்பிடப்படாமல், பேராலும், பல வழியாலும் பாண்டுகுழி என்றழைக்கப்படுகிறது.

---

1. படுவூர் - செங்கை மாவட்டத்தில், திருவிடந்தையை ஒட்டி அமைந்துள்ளது. படூர் என்று தற்போது அழைக்கப்படுகிறது.

சிலபே ரிதை பாடுகுழி என்கிறார்கள். சில ரிதை பாடைக்குழி என்கிறார்கள். சில ரிதை பாண்டு சமாதி என்கிறார்கள். மத்தவர்கள் பாண்டவாள் குழி என்றும், பாண்டவாள் கோவில் என்றும், மத்த யிடங்களில் யிதை வேடர்குடி என்றும், குறும்பர்குடி என்றும், சிலபேர் வாலிகுடி, ராட்சசாள் வீடு என்றும் குரங்கு பாறு என்றுஞ் சொல்லுகிறார்கள்.

4. நான், என் கண்ணினால் பார்த்த யிடங்களில், கும்பினி சாகீருக்குள், யிந்தக் குழிகள் படுவூர், வல்லம், மும்மை, செங்கற்பட்டு நந்தம், ஆனியூர், குண்ணத்தூர், ஆவாதூர், உத்திரமேரூர், ஆயர்பாக்கம், விளாம்பாக்கத்து திருப்பாமலை என்கிற கிராமங்களிலே யிருந்து யின்னம் நான் பார்த்த விடங்களிலிருந்து, கும்பினி சாகீருக்குள்ளே வெகு யிடங்களுக்குள்ளே யிருக்குதென்று யாவருஞ் சொல்லுகிறார்கள்.

5. இதுவன்றி, சித்தூர் சீமைகளிலும் திருத்தொணியிலும், வெகு சீர்மைகளிலும், பவானி சீர்மைகளிலும், யின்னம் மேற்கு

---

4.சாகீர் = ஜாகீர் - ஒருவரின் பணியைப் பாராட்டி, அவருக்கு அரசால் விடப்படும் மானிய நிலம்

வெகுசீர்மைகளிலுமிருக்கு தென்று, சில உண்மையுள்ள மனுஷாள் சொல்லுகிறார்கள். அது நிசமாய் நம்புகிறதற்குப் போதுமான அஸ்திவார மிருக்குது.

6. இப்பா லிதின் வரலாறு என்னமென்றால், பாண்டுகுழி யென்றால், பூற்வீகத்தாருடைய குழி என்றற்தமாகுது. பாடுகுடி யென்றால், பாட்டினுட வீடென் றற்தமாகுது பாடைகுடி யென்றால், பாடை வைக்கிற யிடமென் றற்தமாகுது. பாண்டுசமாதி யென்றால், பாண்டு சபங்களை வைக்கிற யிடமென் றற்தமாகுது. பாண்டவாள் கோவிலென்றால், பூற்வீகத்தாருடைய கோவிலென் றற்தமாகுது. வேடர்குடி என்றால், வேடருடைய குடியிருப்பென் றற்தமாகுங், குறும்பர்குடி என்றால், குறும்பர் குடியிருப்பென் றற்தமாகுது. வாலிகுடி என்றால், வால் முளைத்த மனுஷருடைய குடியிருப்பென் றற்தமாகுது. குரங்கு பாறு என்றால், குரங்குகளுடைய கல்வீடு என்றற்தமாகுது.

7. ஆனா லிதின் சரித்திரத்தை பத்தி சிலர் சொல்லுகிற தென்னவென்றால், சாலிவாகன சகஞ் துவக்கமான பிற்பாடு, அப்போ பிறபலமாயிருந்த கெணித சோதிட சாஸ்திரிகளால் பிராமனாள்

---

6. சபங்களை - சவங்களை - பிணங்களை

தங்கள் சோதிரிஷ சாஸ்திரப்படிக்கு தேசத்துக்கு அக்கினி மழையினால் அழிவு வருகுதென்று முன்னறிவித்தார்கள். அப்போலிருந்த மனுஷாள், புத்தி வந்தாள் ஆலோசினைப்படிக்கு தங்கள் சீவனைக் காத்துக் கொள்ளும்படிக்கு அதிகமாய் மலைச்சாரல்களிலும் வனாந்திரங்களிலும், கருங்கல்களினாலே பூமிக்குள்ளாக வீடுகளை கட்டி . அதில் தங்களுக்கு வேண்டிய சாமான் முதலானதுகளை வைத்துக்கொண்டு, அதில் குடித்தனம் பண்ணினார்கள்.

8. அப்போ, ஒரு சொற்ன மழை பெய்துது. சிலர் சொற்னத்தினுடைய அபலாசையினாலே வெளியிலே பிறப்பட்டு அதைப் பொறுக்கினார்கள்.

9. அப்போ, நினையாத பிறகாரம் அக்கினி மழை வருஷித்தது; தாம் அதில் சொற்ன மழை பொறுக்கவந்தவர்க ளெல்லா மழிந்து போனார்கள். சில ரிந்தக் கல்வீடுகளி லிருந்தவர்க ளிந்த அக்கினி

---

7. கெணித - கணித; புத்திவந்தாள் - புத்தி உடையவர்கள்;

8. சொற்ன - சொற்ண - தங்க (Gold)

9. நினையாத பிறகாரம் - எதிர்பாராதவகையில்

மழையினை வழிந்துபோனார்கள். சில ரீதில் பாடுபட்டு பிழைத்து லோகத்தை பரிபாலனம் பண்ணினார்க ளதினா லிது, பாடுகுடி என்றழைக்கபட்டு தென்கிறார்கள்

10. சிலர் சொல்லுகிற சரித்திர மென்னமென்றால், துவாபர யுகத்தின் நதியகத்தில், பாண்டுவர் என்று பேருள்ள சந்ததியா ரிந்த லோகத்திலே வாசம்பண்ணினார்கள். அவாள் மனுஷ அளவுக்கு மெத்தக் குறைச்சலாய்ச் சித்திரக்குள்ளர்போ லிருந்தார்கள். அவர்களுக்கு காவேளை, நாய்வேளை என்ற காய்க ளவர்களுக்கு போசனமாயிருந்தது. ஆனா லிவர்களுக்கு ஏழானை பிலமுண்டாயிருந்துதாம்.

11. இவாள்,தங்க ளிஸ்திறிகளை முறுகத்தைப்போலே புணர்ந்தாற்களாம், இவாள் மலைகளைப் பிளக்கிறது, வெகு லேசாயிருந்துதாம். இவாள் தங்களுக்கு குடியிருக்கிறதுக்காக வேண்டி, யிப்படியாப்போ லொத்தக்கல் வீடுகளை பூமிக்குள்ளே கட்டினார்கள்.

---

10. பிலம் - பலம்

11. இஸ்திறிகள் - ஸ்திரீகள்.

12. யுகாந்த பிரளையத்திலே அவா ளழிந்துபோனார்கள். அதின் பிற்பாடு, யிந்தக் குழிகளிருந்தபடியினாலே, அவாள் பேரினாலே பாண்டுவர் குழி என்றழைக்கப்படுகுது என்றார்கள்.

13. சிலர் சொல்லுகிறது, கலியுக துவக்கத்தில் பாஞ்சபாண்டவாள், திரியோதினாதிகளினாலே வனவாசம் பண்ணினார்கள். அப்போ, அவர்கள் தாங்கள் வனவாசம் பண்ணிக்கொண்டு வந்த யிடங்கள் பலபேராலு மறியப்பட்டு, அவாள் பேர் என்றும் விளங்க யிப்படிப்போலொத்த கல் வீடுகளை பூமிக்குள்ளே கட்டிவித்தாற்க ளென்று சொல்லுகிறார்கள். ஆனதால் பாண்டவாள்குழி என்றழைக்கப்படு தென்கிறார்கள்.

14. சிலர் சொல்லுகிற சரித்திர மென்னவென்றால், பூறவத்தில், பூற்வீகத்திலே மனுஷாள் நிலமுகரி என்ற தேவதைகளுக்கு மாதந்தோறும் பொங்கலிடுவார்கள். ஆனால் பொங்கலிட்டு. பூசை புலஸ்க்காரம் பண்ணிவைக்க மனுஷ சஞ்சாரமான யிடத்திலானால் அவசுத்தங்கல்ப்பத்தினாலே மனுஷாளுக்கு உயிர்ச்சேதம் வருமென்று மலையோரங்களிலும், வனாந்திரங்களிலு மிப்படியாய்ப்போலொத்த கல்வீடுகளைக் கட்டி, யதில் வேண்டிய சாமான்களை எல்லாம்

வைத்து வைத்து. வருஷந் தோறு மதில்வந்து, பொங்க விடுவார்க ளானதினால், பாண்டவாள் கோவி லென்றழைக்கப்படகு தென்கிறார்கள்.

15. சிலர் சொல்லுகிற ஷரித்திர மென்னவென்றால், யிகாந்த பிறளயத்துக்கு பிற்பாடு, யிந்த லோகமெல்லாங் காடு மூடிப்போய், கிறாதகரான வேடறாலும், துஷ்ட்ட மிறுகங்களாலும் வாசஞ்செய்யபட்டுது. அப்போ, மேலாகச் சொல்லப்பட்ட வேடர்கள், முறுகங்களைச் சம்மாரம் பண்ணிக் காடுகளை கொஞ்ச மழித்தார்கள். அந்த நாளி லிவாள், தங்கள் பெண்சாதி பிள்ளை துஷ்ட்ட மிறுகங்களுக்குக் கார்க்க, யிப்படியாய் போலொத்த யிடங்களைக் கட்டிவைத்தார்கள். அப்போ, யிது வேடர்குடி என்றழைக்கப்பட்டுது. அப்பிற யிதுகளை குறும்பர்க ளாக்கிறமித்துக் கொண்டு, சிலர் யிப்படி போலொத்த யிடங்களிலே வாசஞ்செய்த படியினாலே, குறும்பர்குடி என்ற ழைக்கப் பட்டுதென்றார்கள்.

16. சிலர் சொல்லுகிற சரித்திர மென்னவென்றால், ராமராச்சியபாரத்திலே, வால்முளைத்த மனுஷரும் குரங்கைப்

---

15. யுகாந்தம் = யுகம்+ அந்தம்; அந்தம் - முடிவு; முழுகங்கள் - மிருகங்கள் ; காற்க்க - காக்க

போலொத்த மனுஷரு மிந்த ராச்சியங்களிலே வாசஞ்செய்தார்கள். அவாள் மகா கிறாதகரான மனுஷளா யிருந்தார்கள். அவாளுக்கு கன்ம ரூப முண்டாயிருந்துதாம். அவாள் வீரத் தத்துவமுள்ளவர்களும், பராக்கிரமசாலிகளுமா யிருந்தார்கள். இவாள் மலைகளை துளைக்கிறதுக்கும், கல்களை தூக்கிறதுக்கும் வெகு பிலக்கிறசாலிகளா யிருந்தார்கள்.

இவாள் தங்களுக்குக் குடித்தனம் பண்ணும் பொருட்டால், அவர்கள் யிநதக் கல் வீடுகளைபூமியில் கட்டி அதில், வெகுகாலங் குடித்தனம் பண்ணியுகாந்த பிறளயத்தி லழிந்துபோனார்கள், அதினால் யிதுகள் வாலி குடி என்றும், குரங்குபாறு என்று மழைக்கப்படுகு தென்கிறார்கள்.

17. மேலுஞ் சிலர் சொல்லுகிற சரித்திர மென்னவென்றால், ஆதிகாலங்களிலே யிந்த பூமிகளில் ராட்சசர் வாசம் பண்ணினார்கள், அவர்களுக்கு மாயரூப முண்டாயிருந்துது. அவாள் காடுகளிலே மிறுகங்களைப் போலே சஞ்சாரம் பண்ணினார்கள், அவாள் தங்கள் ஸ்த்திறிகளை பிள்ளைகளை வைக்கும்படிக்கு, இப்படியாப்

---

16. பிலக்கிறசாலி - பலமுள்ளவன்; கன்மரூபம் - கொடிய உரு; பிரளயம் - வெள்ளம்.

போவொத்த கல்வீடுகளை பூமிக்குள்ளே கட்டி, குடியிருந்தபடியினாலே, யிது ராச்சசர்வீடு என்றழைக்கப்படுகு தென்கிறார்கள்.

18. முக்காலத்தில், முறுகண்டரிஷி, யவர்குமாரன் மாற்கண்டரிஷி என்னப்பட்டவர்களின்ன முயிறோடிருக்கிற நாள்களில் மனுஷாள் - 900 - 1000 - 1900 பிரளயம் வரைக்கும் சாகாம லிருந்து சுகிச்சார்கள். அவாள் வெகு வருஷம் பிலன் புஷ்ட்டியோடே யிருந்து, அப்பிறம் வயது தளர்ந்து பழுத்த பழமாய் எழுந்திருக்க நடக்க மாட்டாமல் பாயிலே கிடக்கிறதாம்.

அவாளுடைய சரீரம் பூஷணி பழத்துக்குக் சமானமா யிருந்து, கண்ணிலே மாத்திர மதீக தெளிவாய் முழித்துக் கொண்டிருப்பார் களாம். அவாள் சாப்பாடு முதலாய்ச் சாப்பிடுகிறது அதிகப் பிறையாசையா யிருக்கிறதாம்.

19. மேலுமவர்கள் பிணத்துக்கு சமானமாய் எப்போதும் படுக்கையிலேயே கிடப்பார்களாம். அவாளுக்கு பேரர்களும் பேத்திமார்களும் மதிகமா யிருப்பார்களாம். இப்படியாய்ப்போ

---

18. முறுகண்டரிஷி - மிருகண்யரிஷி; மாற்கண்டரிஷி - மார்க்கண்டரிஷி

லொத்த பழுத்த பழம் வீட்டிலே வெகுனாளய் கிடக்கிறதாம். கடைசியிலே குறிக்கப்பட்ட னாளிலே யிந்த பழுத்த பழமான மனுஷனை வீட்டிலே சாக ஒறுக்காமல் யிவனுக்கு பூமியின் கீழ் கல்லறை கட்டி, யவனை வைத்து அவனுடைய அவனால் சம்பாதிக்கப்பட்ட முழு ஆஸ்திகளைப் பானை சட்டி விறகு முதலான சகல பண்டங்களையும் அதிலே கூட வைத்து வைப்பார்களாம்.

20. மேலும், நிதம் அவனுயிரோடிருக்கிற வரைக்கும் அவனுத்தார் நிதம் போய் அந்த வீட்டின் வாசலிலே காவலிருக்கிறது. கடையாந்திரம் அவனுக்கு காலம் வந்து பரகெதி யடைந்தபின்பு, அவனினத்தாரில் முதிர்ந்ததவர்க ளவ்விடத்தில் வந்து யிழவு கொண்டாடி, அந்த வாசலை மண்ணினாலே மூடி, அதை கூட்டு மண்ணினாலே கெட்டித்து போடுவார்கள்.

21. அது முகாந்திர மென்னவென்றால், அவன் வீட்டில் மறணமடைந்தால், வீடு தீட்டுப்பட்டு போகுமென்றும் அவனால் ஆளப்பட்ட பண்டங்கள் அவனுடைய ஆஸ்தியை சுகந்தரித்தால் அதினால் தீட்டு வருகிறதல்லாமல், கற்மஞ் சித்திச்சு குடி

---

20. அவனுத்தார் - அவன் உற்றார்; பரகெதி - பரகதி - சாவு; கூட்டுமண் - களிமண்.

நசித்துப்போகுமென்று மவர்களுக்கு பாரம்பரை ஞாய முண்டாயிருந்துதாம்.

22. இது நிசமென்று வெகுபேர் நிற்செயிக்கிறார்கள். இப்படி பாண்டவர்கள் பூர்வீகத்தார் சமாதி வைக்கப்பட்ட யிடங்கள் நிலகல்லறைகள் - பாண்டுகுழி என்றும், பாடைகுடி யென்றும், பாடுகுடி என்றும், பாண்டவாள் சமாதி என்று மழைக்கப்பட்டு தென்று நிற்செயிக்கிறார்கள்.

23. இந்த பாண்டுகள் ஒருவிதமாய் மாத்திர மிருக்கவில்லை. நான் பாத்தவிடங்களில்ச் சிறுதுகள் சிறுதுகள் நாற்சதுரமாயிருக்குது; சிறுதுகள் விருத்தமா யிருக்குது; சிறுதுகள் கோட்டக்கட்டமா யிருக்குது; சிறுதுகள் பிறமாண்டமா யிருக்குது; சிறுதுகள் வெகுசிறிசா யிருக்குது; சிறுதுகள் கொஞ்ச்சிறிசா யிருக்குது; சிறுதுகளுக்கு மூடுபாறை யிருக்குது; சிறுதுகளுக்கு மூடுபாறை யில்லாதிருக்குது; யிந்தப் பிறகாரம் பலவிதமா யிருக்குது.

---

21. சுகந்தரித்தால் - அனுபவித்தால்; கர்மஞ்சித்திச்சு - பூர்வவினை பலித்து;

23. விருத்தம் - வட்டம்.

24. சிலதுகள் சீமான்களின் குழி என்னப்படுது; சிலதுகள் கொஞ்சசீமான் குழி என்னப்படுகுது; சிலது குடித்தனகாரர் குழி என்னப்படுகுது; சிலதுகள் தரித்திரவான்கள் குழி என்னப்படுகுது; சிலதுகள் பிச்சைக்காறர் குழி என்னப்படுகுது; யிந்தப்பிறகாரம், அந்திஸ்து பிறித்துச் சொல்லப்படுகுது.

25. இதுவல்லாமல், சீமான்கள் குழிகளிலே அவாளாலே சம்பாதிக்கப்பட்ட திரவியங்கள ளெல்லாம் வைக்கப்பட்டிருக்கு தென்றும், வெகுபேர்கள் லிதை சோதினை பண்ணி எடுத்திருக்கிறார்க ளென்றுஞ் சொல்கிறார்கள்.

26. மத்த குழிகளிலே யொன்று மில்லாமல் பானைகள், சட்டிகள், அருவாமனை, திருவுபலகை, கத்தி, காம்பில்லாக் கொடுவாள், காம்பில்லாக் கோடாலி, சுண்ணாம்பு கலசம், கற்குண்டு, கள்அம்மி, திருகையு மிருக்குது.

27. சீமான்கள் குழிகளிலே அவைத்த திரவியங்க ளிருக்குதென்றும் வெகுபேர்க ளெடுத்திருக்கிறார்க ளென்றுருஞ் சித்தமாய்ச் சொல்லுகிறார்கள்.

---

24. சீமான் - செல்வர்; அந்திஸ்து - அந்தஸ்து

26. அருவாமனை - அரிவாள்மனை; கள்அம்மி - கல் அம்மி

27. சித்தமாய் - உறுதியாய்.

# 9. மருதங் குறும்பர் கோட்டை வரலாறு (டி.3828)

# ACCOUNT OF A CURUMBAR FORT AT MARUTAM NEAR CANCHI IN THE UTRA MELUR DISTRICT

*1. முன்னாளிலே, யிந்தக் கோட்டை குறும்பராலே கட்டப்பட்டது. இந்த கோட்டை மண்ணினாலே கட்டப்பட்டிருக்குது. சுமாற் நாற்பது காணி விஸ்த்தீறண மிருக்குது. கோட்டை செவர் அகலம் ரெண்டு கோலிருக்கும், இது வெகுனாளாய் குறும்பராலே யாளப்பட்டது. அப்பிற மவாள் ராயர் கிஷ்ட்ணராயர் பிறபுத்துவம் வரைக்கும் ஆண்டு, ராயர் கிஷ்ணராயர் னாளிலே அவருக்குள் செங்கில்பட்டு கோட்டை ராசாவானவன், யிவாள் மேல் யுத்தத்துக்கு வந்து, திருப்புலிவனத்தில் எதிர்க் கோட்டைப் போட்டுக்கொண்டு, வெகுனாள் சண்டை குடுத்து, கடைசியில் குறும்பர் முறியடிக்கப்பட்டு, குறும்ப பிறபுவை அன்னிதமாய் சம்மாரம்பண்ணி, திம்மராசாவானவ னிந்த கோட்டையைக் கட்டிக்கொண்டான்.*

---

1. மருதம் - செங்கை மாவட்டத்தில், உத்திரமேரூர் வட்டத்தில், திருப்புலிவனம் உள்வட்டத்தில் உள்ள ஊர். செங்கில்பட்டு - செங்கற்பட்டு; அன்னிதம் - முற்றிலுமாக

*2. அப்பிற மிவனிந்த கோட்டையை, தன் நெருங்கின பந்துவாகிய கோவிந்தராசாவுக்கு சாகீறாக குடுத்தான்.*

*3. அவனும், அவனுட ரூப வற்ணிய சவுந்தரியமான வெங்களம்மா என்ற இஸ்த்திறியுமாய், இந்த கோட்டை அனுபவித்திருந்தார்கள்.*

*4. இவாள் அதிக விறாக தாபமுள்ளவர்களா யிருந்து, அக்கருத்த சகல சாஸ்திர முதலானதுகளிலே தேறினவர்களை யிருந்தபடியினாலே, இவாளிங்கேச நடபாலி கட்டி, அதிலோரு நாள் சலக்கிறீடை பண்ணினார்கள். அந்த நடபாலி இன்னாள் வரைக்கும் வெங்களம்மா சலக்கிறீடை நடபாலி யென்றழைக்கப்பட்டிருக்குது.*

*5. இவனிந்த கோட்டை, அனுமந்த ராயர் கோவில் ஒன்று, பெருமாள் கோயிலொன்று கட்டிவைத்தார்கள், அது கிலமாய்ப்போ யின்னாள் வரைக்கு மிருக்குது.*

---

4. விறாகதாபம் - காதல்வயம்; நடபாவி - உள்ளே செல்லும் படிகள் கொண்ட கிணறு; சலக்கிரீடை - நீர்விளையாட்டு.

5. கிலம் - அழிவு

6. அதின் விக்கிறக மகாவினோதமானதா யிருக்குது. இவாள் சிலகால மிருந்து, யிந்தக் கோட்டையை அக்கிறகாரமாகக் கட்டிவைக்க யிடம் பண்ணிப் போனார்கள்.

7. அந்தப்படி, அவாளுக்கு பிற்க்கால, மிந்தக் கோட்டை பிராமணாளுக் குபகாரமாக அக்கிறகாரமாக்கப்பட்டு, யின்னாள் வரைக்கும் அந்த புண்ணியத்தி னாமத்தினாலே வெங்களம்மாபுர மென்றழைக்கப்பட்டிருக்குது.

8. இதனுட வரலாறை விஸ்தாரமாய் எழுத ரெண்டு மூண்று னாளிவ்விடத் திலிருந்து, தரியாபத்தீ பண்ணினால், எல்லவருக்கும் விசிதமாய் தெரிகிறதால் குறும்பர் கைபீது எழுதலாம்.

----- x -----

8. தரியாபத்தி – தரியாப்து (பாரசீகச்சொல்) – விசாரணை

# 10. ஆற்காட்டுப் பூருவீக சரித்திரமும் அதின் ஆதி மூலங்களும் (டி. 3813)

# ACCOUNT OF ARCOT - DERIVATION OF THE WORD IN FIRST AND SECOND SETTLEMENT - AND SUBSEQUENT HISTORY

*1. பூருவீகத்திலே, வேத வியாசராலே சொல்லப்பட்ட பிரமாண்ட புராணத்திலே க்ஷீரனதி மகத்துவத்திலே சொலப்பட்டிருக்கிற பத்ததி யென்னவென்றால், "கல்ப்பகாலத்திலே, நந்திகேஸ்பரன் கறுவத்தை யடைந்து பரமேஸ்வரர் அசுராள் சகலரையுந் துரத்தி யடித்தாரே, அது அவராலே யான காரியமல்ல; தன்னுடைய கெற்சினையான கூப்பிடுதலாலே சகலமான அசுராளும் பயந்து ஓடிப்போய்விட்டார்க ளென்று கறுவமாயிருக்கிற நந்திகேஸ்வரர் மனது, பரமேஸ்வரனுக்குத் தெரிந்து, மிகவுங் கோபத்துடனே, "நீயிந்த செம்பு தீவத்து பரதகண்டத்திலே கல்லாய்ப் போய்விடக் கடவதென்று, ஈஸ்வரன் சாபங் கொடுத்தார்!*

2. அப்படியே, பரதகண்டத்தி லொரு பறுவதமாய்ப்போய் கல் ரூபமாயிருந்து கொண்டு, விஷ்ணுவை நோக்கி, தபசுபண்ணிக் கொண்டிருக்கையில், விஷ்ணுவானவர் கண்டு, கயிலாசத்துக்கு பிறமாதி தேவர்களுடனேபோய் பரமேஸ்வரனைக் கண்டு, "உங்கள் வாகனமா யிந்தக் கயிலாச வாசப்படியில் யாரையும் வரவொட்டாமல் காவலாய் சாக்கிரதையா யிருந்து நந்திகேஸ்வரன் எங்கே போயிருக்கிறாரென்று" கேட்டதற்கு,

3. பரமேஸ்வரரானவர், "ஒரு காரணத்தினாலே யவனைக் கல்லாய்ச் சபித்துப் போட்டோ மென்று" சொன்ன விசேஷம் விஷ்ணு கேட்டு, பரமேஸ்வரருக்கு நல்ல விசேஷம் சொல்லி யழைத்துக்கொண்டுபோய்க் கல்லா யிருக்கிற நந்தியண்டை விட்டு, ஈஸ்வரன் தயவுசெய்து, நந்தி சாபத்தைத் தீர்க்கச்சொல்லிக் கேட்க, அப்போது, ஈஸ்வரன் தலை சடாபாரத்திலிருக்கிற கெங்கையை யழைப்பித்து, இந்த நந்திகேஸ்வரன் பேரில் விழுந்து அவனுடைய சாபத்தைப் போக்கி வைக்க சொல்லிச் சொன்னார்.

---

1. ஆற்காடு - வடஆற்காடு மாவட்டத்து ஊர்; க்ஷீர நதி - பாலாறு; கெற்சினை - கர்ஜனை; செம்புதீவம் - ஜம்புத்வீபம் - நாவலந் தீவு ( பாரத நாடு ).

2. பறுவதம் - பர்வதம் - மலை ; பிறமாதி - பிரம்மா ஆதி;

3. சடாபாரம் - தலைமுடி

4. அப்போது, கெங்கையானவள் "சுவாமி! நான் பூமியிலே சிவ ரூபமாய் விழுந்தால் நான் சமுத்திரத்துக்குப் போகிற கரை யிருபுறத்திலேயும் ஈஸ்வரனும் விஷ்ணுவும் நீங்களிரண்டு பேரும் வாசஞ்செய்துக் கொண்டிருந்தால், அப்படியே வெளிப்பட்டு, நந்தி சாபத்தைப் போக்கடித்து, நதியாகி சமுத்திரம் போய்ச் சேருகிறோ மென்று" சொன்னாள்.

5. அந்தப்படியே சிவன் விஷ்ணு யவர்க ளிரண்டுபேருஞ், சகலதேவர்கள் ரிஷிகளுடனே பிறப்பட்டு வருகிறபோது, கெங்கை வெகு பிறவாகங் கொண்டு, வருகையில், ஈஸ்வர னொரு பிராமண வேஷமெடுத்துக்கொண்டு, காஞ்சிபுரஞ் சமீபத்தில் பிறமயாகம் பண்ணுகிற யாகசாலைக்கி வந்த விடத்தில் வந்த சப்த ரிஷிகளும் ஷடாரண்யமென்று பூருவீக நாமத்தை யுடைய ஆறு வனமாயிருக்கப்பட்ட ஆறுகாடான ஆறு காட்டிலேயு மந்த யேழு ரிஷிகளும் லிங்கப் பிரதிஷ்டைப் பண்ணினார்கள். அந்தக் காடிருந்த விபரமும் ரிஷிகள் லிங்கப் பிரதிஷ்டை பண்ணின விபரமு மென்னவென்றால்,

---

5. ஷடாரண்யம் : ஷட் - ஆறு; ஆரண்யம் - காடு; காஞ்சிபுரம் - செங்கை மாவட்டத்தில் உள்ள ஊர்.

6. இப்போது வேப்பூரென் றழைக்கப்படுகிற கிராமம் ஆதியிலே நிம்பாரண்ணியம் அல்லது வேப்பங் காடாயிருந்தது. அதினாலே யது வேப்பூ ரென்னப்படுகுது. இதில் வதிஷ்டர் தமக்கொரு வாசீரமம் பண்ணிக்கொண்டு, அந்த ஈஸ்வரனுக்கு வதிஷ்டரே யீஸ்வரனா ரென்று மந்தத் தேவஸ்தானத்துக்கு வதிஷ்டரா சீரம மென்றும் பேருண்டாச்சுது.

7. இப்போது வன்னிமேடென் றழைக்கப்படுகிற கிராமம் ஆதியிலே சமீவன மல்லது வன்னிக்காடா யிருந்தது. இதில் அகஸ்தியர் தமக்கொரு ஆசிரமம் பண்ணிக் கொண்டு, லிங்கப் பிரதிஷ்டை பண்ணபடியினாலே யந்த யீஸ்வரனுக்கு அகத்தீஸ்வர ரென்றும், அந்தத் தேவஸ்தானத்துக்கு அகஸ்திய ஆசீர்ம மென்றும் பேருண்டாச்சுது.

8. காரைவனம் அல்லது காரைக் காடாயிருந்தது. அதினா லதைக் காரை மோடென்று அழைக்கபட்டிருக்குறது. அதில் கெவுதமர்கொரு வாசீர்மம் பண்ணிக்கொண்டு, லிங்கப் பிரதிஷ்டை

---

6. நிம்ப மரம் - வேப்பமரம்; வதிஷ்டர் - வசிஷ்டர்;

7. சமீமரம் - வன்னிமரம்

பண்ணினபடியினாலே, அந்த ஈஸ்வரனுக்கு கௌதம யீஸ்வரனென்றும், அந்த ஆசிர்மத்துக்குக் காரை வனமென்றும், யழைக்கப்பட்டிருக்குது.

9. இப்போது விஷாறு யென்றழைக்கப்படுகிற கிராமம் ஆதியிலே விஷ விருக்ஷவன மல்லது யெட்டிக்காடா யிருந்தது. அதினாலே யது விஷாறு யென்று இப்போதழைக்கப்படுகிறது. இதில் வால்மீகர் தமக்கொரு வாசீர்மம் பண்ணிக்கொண்டு லிங்கப் பிரதிஷ்டை பண்ணிவைத்த படியினாலே, அந்த யீஸ்வரனுக்கு வால்மீக யீஸ்வரரென்று பேர் வந்து, அந்தத் தேவஸ் தானத்துக்கு வால்மீக ராசீர்மமென்று பேருண்டாச்சுது.

10. இப்போது குடிமல்லுரென்றழைக்கப்படுகிற கிராமம் ஆதியிலே கூடமல்லிகாவன மல்லது கொடைமல்லிகைக் காடாயிருந்தது. இதில் காசிப ரிஷியாகப்பட்டவர், தமக்கொரு வாசீர்ம முண்டுபண்ணிக்கொண்டு, அதிலிங்கப் பிரதிஷ்டை பண்ணின படியினாலே, அந்தத் தெய்வஸ்தானத்துக்கு காசீபராசீர் மமென்று பேருண்டாச்சுது.

---

9. விஷாறு - விஷாரம் - வ.ஆ. அம்பேத்கர் மாவட்டத்து ஊர்

10. குடிமல்லூர் - வ.ஆ. மாவட்டத்து ஊர், காசிபர் - கஷ்யபர்

11. இப்போது புதுப்பாடி யென்றழைக்கப்படுகிற கிராமம், ஆதியிலே சூதவிருக்ஷவனம் அல்லது மாங்காடா யிருந்தது. அதில் பார்த்துவாசர் ஆசீர்மம் பண்ணிக்கொண்டு, அதில் லிங்கப்பிரதிஷ்டை பண்ணினபடியினாலே பார்த்துவாச ஈஸ்வரனென்றுந் தேவஸ்தானத்துக்கு பார்த்து வாசீர்மமென்றும் பேருண்டாச்சுது.

12. இந்த ஷடாரண்ணியத்துக்கு மத்தியிலே மேற்சொல்லிய வனத்திற்றானே அத்திரி ரிஷியாகப்பட்டவர்தமக்கொரு வாசீர்மமும் பண்ணி லிங்கப் பிரதிஷ்டை பண்ணினபடியினாலே அத்திரியீஸ்வரரென்றுந், தேவஸ்தானத்துக்கு அத்திரியாசீர்மமென்றும் பேருண்டாச்சுது.

13. இப்படி யிந்த ஆறுவாரணியங்களிலே சப்த ரிஷிகளும் ஆஸ்ரமம் பண்ணிக் கொண்டு பூசை செய்திருந்தவாறு ஆரணியத்துக்கும்பொதுவிலே சமஸ்கிறத பதமாயி ஷடாரணிய மென்று பேர் வைத்தார்கள். இந்தப்பேர் தேவதைகள் ரிஷிகளாலே வைக்கப்பட்டதென்று புராண யுக்தமாய் சறுவத்திராளுக்குந் தெரியப்பட்டிருக்கின்றது.

---

11. சூதமரம் - மாமரம்; பார்த்துவாசர் - பரத்வாஜர்.

13. சப்தரிஷிகள் - ஏழுரிஷிகள்; சமஸ்கிறத - சமஸ்கிருத (Sanskrit); சறுவத்திராள் - அனைவரும்.

14. இந்த தெண்டஹாரண்யத்தின் மூன்றாம் பிறிவாகிய விந்த மண்டலத்தை சோழமண்டலத்திலிருந்து வந்த குலோத்துங்க சோழ ராசாவும், அவருக்கு நாகி நாகரத்தினத்தினாலே பிறந்த ஆதண்ட சோழனும் வந்து பார்த்து, யிதிலிருந்த காட்டு சாதிகளை செய்த்துக் காஞ்சிபுரம், விரிஞ்சிபுரம் முதலான ஸ்தளங்களுக்கு தேவஸ்தானங் காடுகளழித்துக் கட்டிவைக்கிறபோது, இந்த ஷடாரண்ணியத்தையும் பார்த்து, இதுகள் ரிஷிகளுடைய ஆசீர்ம மென்கிற முக்கியத்தைக் கேழ்விப்பட்டு, இந்த ஆறு வாரண்ணியத்தையும் அழித்து, கோவில்கள் முதலானவைகள் கட்டிவைத்து, சில தருமங்களும் பண்ணினார்கள்.

15. அவர்களுக்குப் பிற்காலஞ், சொல்லப்பட்ட கட்டடங்கள் முழுதுங் கீலமாய்ப் போய்விட்டு முன்போலே யெதாப்பிறகாரம் அந்த ஆறுகாடுஞ் சரியாய் மூடிப்போய்விட்டது.

16. இப்படி சிலகாலமாய்க் கிடந்து, அப்பிறம் நல்லபொம்ம நாயடு திம்மநாயடு யென்னப்பட்டவர்கள் பின்னுக் கொண்டையிலிருந்து வேட்டை மார்க்கமாய்ப் பிறப்பட்டு, வெகுவாரணியங்களிலே

14. ஆதண்டசோழன் - ஆதொண்டைச்சோழன்; விரிஞ்சிபுரம் - வ.ஆ. மாவட்டத்திலுள்ள ஊர்; ஆறு வாரண்ணியம் - ஆறு + ஆரணியம் = ஆறு காடுகள்.

வேட்டையாடிக்கொண்டு இந்த ஷடாரண்ணியமாயிருந்த விந்த வாறுகாடு மகா பிறமாண்டமா யிருந்தபடியினாலே, இதில் வெகு மிருகசாதிக ளடைந்திருக்கு தென்று, யிதில் வேட்டையாட வந்தார்கள். அவாள் வேட்டைக்கு வந்தவிடத்தில், ஒரு கிழ முசலானது மகா ஆக்கிறமமான புலியைத் துரத்தி, அதின் குரவளையைப் பாய்ந்து கடித்துப் பார்த்து, வெகு பிரமிப்பை யடைந்து, இது மகா சூரத்துவமுள்ள பூமியா யிருக்குதென்று அறிந்துகொண்டு, இவர்களுக்கு அஞ்சனத்தினாலே வழியா வகப்பட்டிருந்த ஸ்திதியைக் கொண்டு, இவ்விடத்திற் பூருவீகமாய் ஷடாரணியாமன்று நாமத்தைக் கொண்டிருந்த விந்த வாறு பிலத்தக் காடுகளையும் வெட்டி வைத்து, இந்த ஆறுகாடு மழித்து, வெளியாக்கி, குடியேத்தி வைத்தபடியானாலே, இந்தத் தமிழ் தேசத்துக்கொத்தபடி தமிழ் பாஷையினால், தமிழ் பதமாய் ஆறுக்காடென்று பேர் வைத்து, அதின் மத்தியில் கல்லினாலொரு கோட்டை கட்டி வெகுநாள் பிரபுத்துவம் பண்ணி சந்ததி வரிசை துடர்ந்து வந்தது.

---

16. நாயடு - நாயுடு; பின்னுக்கொண்டை - பெனு கொண்டா; முசல் - முயல்; குரவளை - குரல்வளை.

17. அதின் பிறகு சுலுப்புக்கான் சாய்பண்டை நபாபு லக்ஷங் குதிரையுடனே இந்த தேசத்துக்கு வந்து, செஞ்சி ராசா ராமசந்திரபதியுடனே சண்டைபண்ணி பனிரெண்டு வருஷம் கோட்டையை முத்திக்கை போட்டு, செஞ்சிக்கோட்டையை வாங்கி தாவதுகான் சாயபுவை யிந்தத் தேசத்துக்கு மனைசுபைதாறனாய் வைத்து, செஞ்சிப்பட்டண முதலானதுகளும், ஆற்காடு சுபாஷக்குள் ளடக்கமென்று அப்பணை பண்ணினபடியினாலே, ஆற்காட்டு சுபாவென்று பிரபலமாச்சுது.

18. இப்படி யவர்களூறு பண்ணிப்போட்டு தாவதுகான் வடக்கே போய்விட்டார். அதின் பிறகு, யிந்த சுலுப்புகானிந்த ஆறுகாட்டைப் பேட்டையாக்கி, வடக்கே யிருந்து வெகு துலுக்கரை யழைப்பித்து, வீடுகள் கோரிகள் முதலானவைகளைக் கட்டிவைத்து, அதிக பிரபலம்பண்ணினான்.

19. இவன் கற்னாடக ராசாவுக் கதிகமாயிருந்து தெய்வாலயம் பிறமாலயங்களுக்கு யேறக்குறைய கொஞ்சம் நடப்பித்து வந்தான். ஆற்காட்டில் துரைத்தனம் பலக்காரித்த படியினாலே வரவர சனங்கள் வந்து குடியேறிப் பட்டிணம் பலத்துப் போச்சுது.

---

17. சுலுப்புக்கான் சாய்பு - Sulfikhan Sahib; மனைசுபைதார் - (Local ruler) வட்டார ஆட்சியர்; சுபா - மாநிலம் (Province).

18. தாவதுகான் - Dawud khan.

20. இந்தத் துலுக்கத் தர்பாரிலே தமிழாள் முதலானவர்கள் வீடு பலமாய்க் கட்டப்போகாது; வாஉறனப் பிரதிஷ்டைகளுடனே யிருக்கப்போகாது. அப்படி யாதாமொருவ னிருந்தால் அவனிடத்திலே யவதாரம் வாங்கி, அவனை சிறுகடித்துப் போடுகிறது. உத்தியோக கிரேஷ்தாள் ஆறுமாதம் முட்டையுஞ் சோறும் ஆறுமாதங் கிட்டியுங் கையுமாய் நிற்கிறது. இப்படிக்சிச் சிறுதுநாள் துலுக்கருடைய பிரபுத்துவம் நடந்துவந்து மஉறா ராசராசஸ்ரீ இங்கிலீஷ் கம்பனியாருக்கு ராஜிய சுவாதீனமான பிற்பாடு, ஆற்காடு மஹாக்ஷேத்திரமான படியினாலே சனங்களின் கோறுதல்படி யவர்களுட விடுக்கந் தீர்ந்து, சலாபத்துக்குள்பட்டு, சவிக்கியத்தை யடைந்திருக்கிறார்கள்.

------------- x ---------------

---

19. பலக்காரித்தபடியால் - வலுவாக இருந்த காரணத்தால்.

20. போகாது - இயலாது; கிரேஷ்தாள் - கிருகஸ்தாள் - கிருகத்தோர்; சுவாதீனமான - உரிமையான; கோறுதல் - கோருதல்; சலாபத்து - மகிழ்ச்சி; சவிக்கியம் - சவுக்கியம்.

# 11. கள்ளப்புலியூர் வெள்ளைக்கல் மேட்டுக் கைபீது
## (டி.3805)

**சேத்துப்பட்டுத் தாலூக்கில் கள்ளப்பிலியூரில் வெள்ளைக்கல் மேட்டு கைபீது**

1. சேத்துப்பட்டுத் தாலூக்கில், கள்ளப்பிலியூரென்கிற கிராமத்துக்குக் கீழ்புறம் வெள்ளைக்கல் மோடன்று ஒரு மேடிருக்குது. அந்த மேடு அகலமும் பருமனும் நீகளமுமான வெள்ளைக் கல்லுகளினாலே நிறைந்திருக்குது.

2. அதின் வரலாறு கள்ளப்புலியூர் கோவில் குருக்கள் சொல்லுகிறபடி யென்னவென்றால், பூருவீக காலத்திலே வரதனென்றும், வில்வாதி யென்றும் இரண்டு ராக்ஷதர்க ளிவ்விடத்தில் வாசம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பாட்டைசாரியாய் வருகிறவர்கள் போகிறவர்களுக்கு விருந்து பண்ணி யனுப்பிவிக்கிற வயணம் வில்வாதி யெனப்பட்ட ராக்ஷதன்

---

1. கள்ளப்புலியூர் - விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தாலுகாவில் தற்போது உள்ள ஊர்

வரதனென்கிற ராக்ஷதனைக் கொன்று யேனபானத்துலே போட்டு, சமயல் பண்ணுகிறது; அவன் சாத முதலான சமஸ்த பதார்த்தங்களாகி யிருக்கிறது.

3. யிதை பாட்டை சாரியாய் வந்திருக்கிறவர்களுக்கு பரிமாறி, வந்தவாள் திர்ப்தியாய்ச் சாப்பிட்டு, அவனிடத்தி லனுப்பி வைத்துக்கொண்டு, அவாள் போற சமயத்தில் வில்வாதி யென்கிற ராக்ஷதன் சத்தம்போட்டு, வயத்துக்குள் சாத முதலான பதார்த்தங்கள் ரூபமாய்ப் போயிருக்கிற வரதனென்கிற ராக்ஷதனை, "வரதா" வென்று கூப்பிடுகிறது. அவன் ஆட்டுக்கிடாய் ரூபமாகி சாப்பிட்டிருக்கிறவர்கள் வயத்தைக் கொம்பினாலே பீறிக்கொண்டு வெளியில் வருகிறது.

4. வயறு பீறுண்டு செத்தவர்களை வரதன், வில்வாதி யென்னப்பட்ட வில்விரண்டு ராக்ஷதர்களும் ப[illegible]த்துப் போடுகிறது.

5. இந்தப்படி வெகுகாலம் நடந்து வருகையில், கயிலாச பருபதத்தில் சிவனுக்குக் கலியாணம் நடக்கிறபோது, அகஸ்தியனை பொதியமாமலைக்கு அனுப்பிவைத்தார்கள்.

---

2. பாட்டைசாரி - வழிப் போக்கன்.

6. அவரிந்த மார்க்கமாய் வருகிறபோது, வில்வாதி யென்னப்பட்டவன், அவரை ரொம்பவும் பிறிசாலம் பிடித்து, வரதனெக்கிறவனைக் கொன்று, அவருக் கிதாப்பிறகாரம் விருந்துபண்ணி வைத்து, அவர் திர்ப்தியாகி போறபோது, வில்வாதியாகப்பட்டவன், "வரதா" வென்று சத்தம்போட்டுக் கூப்பிட்டான்.

7. இந்த ரசஸ்ய மவருக்குத் தெரிந்து, சீரணமாகுவாயென்று சொல்லித்தன் வயத்தைத் தடவினார்.

8. வரதன், சீரணமாகிப் போனான். வில்வாதியையுஞ் சபித்துப்போட்டார். அவனுமுடனே செத்தான்.

9. அவாள் காயதீர்கராண்படியினாலே அவர்களழிந்து போனபிறகு, அவாளுடைய வெலும்புகள் பல் ரூபமாயிருந்து, ஒரே குவியலாகி கிடக்கிறபடியினாலே, வரதன் வில்வாதி யென்னப்பட்ட ராக்ஷதாளுடைய வெலும்பு யிப்போது வெள்ளைக்கல் மேடு யென்று அழைக்கப்பட்டிருக்கின்றது.

# 12. வேலூர் துலுக்கப் பிரபுக்கள் வம்சாவழி (டி.3809)

**வெள்ளிக்கந்தப் பய்யரால் கவித்துவம் பண்ணப் பட்டது:**

*1. திருவளர் செம்பாலை வாழு, செல்வ விநாயகன் திருவடியை மருவிய, தணிகை மலை வாழு, மயிலடி வேலவர் திருவடியை பரந்தி, வெள்ளிமலை காளத்தி பறனாநறவிந்தன் திருவடியை வறந்தி, யுளமுடியே வளத்த மாற்கசகாயர் திருவடியை அண்ணாமலை பாகன் னாயகி உண்ணாமுலையார் திருவடியை பன்னார் படவீட்டில் வாழும் பரஞ்சோதி யெல்லம்மாள் திருவடியை திருச்சந்தி வேளையிலே, யிவர்களை சிந்தையிலே மணந்தொழுதேத்தி, அரிச்சந்திரன் மனையாள் தனயிவராலாகிற காரியமென்ன வென்றால்*

*2. கல்வி கல்லோலை யெல்லாங் கனகமலை போல சொல்வே ணிக்கதையைத் தொப்பை செண்பகவிநாய ரருளாலே வாரணி பிள்ளையலே சடையாண்டி வலசைக் கதை சொல்வர்க்கருள்வீர்.*

---

1. வேலூர் - வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஊர்.

3. தாரணி கலியுகத்தில், கலவிய மிலவியும் மிகவுளதாய் யிப்படி யிருக்கையிலே, வேலூர் ஒப்புடன் ஆண்டவன் பேர் மெப்பிய ருலாமல்லிகான் சாயுபு தப்பிறை யில்லா துரையவன்தான் குமாரர்கள் நால்வருண்டு. அவன்பேர் கூறுகிறேன் - அவன் மூத்தவன் பேர் பரியபாக்கறல்லிகானுக் கிளையவன் பாற்திபன் சாதகல்லி நிருபன் தோஷ்த்தறல்லி கானுக் கிளையவன் யகுபேரு மமுதலிய வருடனே கோட்டையிலே சுகமாய் கொத்தவர் தமைப்போல வீத்திருந்தார்.

4. சுனுசாய்புக்கிளைய நபாபு சாதுல்லா கானென்று பேர் படைத்து,

5. வேலூர் கோட்டையுடன் ருலாமல்லி, வீருடன் தர்மமர்யாண்டிருந்தார். அவர் காலமுஞ் சென்று பாக்கறல்லி அவரும் பட்டமிக்கட்டி வேலூர் கோட்டை சாதகல்லி மிகுந்த சனங்களுடன் வாழ்ந்திருந்தார்.

---

3.ருலாமல்லிகானின் நான்கு மகன்கள் - பாக்கறல்லி கான் (Bagarali Khan), தோஷ்த்தறல்லி, சாதகல்லி,அகுபேர் முகமதலி (Akbar Mohammed Ali).

6. அவன் காலமுஞ் சென்று, நிருபண் தோஷ்த்தறல்லி நிதானமாய், தர்மமா யாண்டிருந்தான்.

7. அவன் காலமுஞ் சென்று, யகுபேரு மம்மதலி யவருக்கு யாவருங் கூடப் பட்டமுடன் அரியதோ(ர்) ஆற்காட்டில் நவாபுசாயபு வாழ்ந்திடு நாளையிலே, பெரியதோர் லாலவும் தோன்ற மல்லு பின்னையு முல்லகுப்பு சந்து தனதானிய மிகுந்த நல்ல சங்கறபாற்கு சவுக்காற கடைகளுடன் அன்னதான மிகுந்த அன்பான வீதிகள் கடைத்தெருவும் உப்பரிகை மேடைகளும், நல்ல உயர்ந்த மாளிகை கோபுரமுந், தப்பறையில்லாமல் அநேகந்தான தர்மங்கள், தாண்டகம் இப்படி யிருக்கையிலே,

8. சிலுநாயக்கன் யின்பமுடனே துலுக்குகள் செய்யலுத்தான்; சிலுநாயக்கனாலே நம்முடைய சீமையெல்லாம் வெகு றூட்டி யென்று போலூர் வறுதய்யரும், றங்கப்பசெட்டி யிவாள் நாட்டாமைக் காறர் யாவரும் ஆலோசனைகள் பண்ணி, நம்மாலாகிற

---

5. வீருடன் - வீறுடன்

6. நிருபண் - நிருபன் - அரசன்

7. சவுக்காரக்கடை - சோப்பு விற்கும் கடை; தாண்டகம் தாண்டவம்- நடனம்.

காரிய மென்னவென்று லாலாவண்டைக்குப்போய், யிங்கு நடக்கிற துருக்குகள் தெரியசொல்லி, தீவாண்சாய்பே நாமசேதி களெல்லாந் தெரியசொல்லி, இதுயிது விபரமென்று அவர் இன்பமுடனே அவருறைக்கலுமே,

9. லாலா சாத்துலகான்,“ நாளை காலமே பயணம்; அறியுமெ”ன்றார். சாத்தேரிக்கரைமேல் பெரிய செண்டாவும் அவருந்தான் போட்டார், அன்று முகாமிருந்து மைற்றா நாள் ஆரணி யருகினில் போயிறங்கி, ஆரணி வெங்கிடராவை அழைத்து பொந்தியி லவர் வந்து, அன்று முகாமிருந்து, மைற்றா நாள் போலூருறண்டறப்பட்டுனில் போயிறங்கி, இரண்டு மூன்று நாளிருந்து, கலசபாக்கந் தனிலே கணக்கவே நாலுமுகம் போயிறங்கி, சிந்தாமல் சிதறாமல் சிலுநாயக்கன் தெத்தடி செக்கினில் போயிறங்கி, அந்தரங்கமாகவேதான் அவலுக்கு அந்தபுறத்திலே ஆள் வேகுவிட்டு, யெந்த விதத்திலேயுஞ் சிலுநாயக்கன் யெப்படி யாகிலுங்

---

8. றூட்டி - லூட்டி - நாசம்.

9. செண்டா - கொடி; முகாம் இட்டதற்கு அடையாளம்; மைற்றாநாள்- அடுத்த நாள்; கலசப்பாக்கம் - வடஆற்காடு மாவட்டத்தில், போலூருக்குத் தெற்கே உள்ள ஊர்.

கைப்பிடியாய்க் கொண்டுவர வேணுமென்று மனிதர் தொக்கரித்தே மலையேறலுத்தார்.

10. அவனண்டையி லிருந்தவர்கள் நாங்கள் பெண்டுகளே யல்லாமல் வேறொரு மொண்டி சிலுநாயக்கனைக் காணோமென்றார். அகப்பட்ட பேரையெல்லாம் நம்முட ஆற்காட்டுக்கே கொண்டுபோ வென்றார். நகைத்துடன் சாத்துலகான் நல்லதென்று சம்மதித்து, திருவருணாமலைதனிலே தண்டுசெயமாய் வந்து யிறங்கியபின், மறுநாளான பின்பு, வகையுள்ள றங்கப்பசெட்டியவாள் சேர்ந்தபின்,

11. சிலுநாயக்கன் பெண்டுகள் சிக்கின பேரையெல்லாரையுந் தான் கைகால் வாங்கச் சொல்லி, அவர்களை கனக்கவே அயிராணி பண்ணலுத்தனர்.

--------- x ---------

---

11. அயிராணிபண்ணுதல் - துன்புறுத்தல்; இதன்பின் தொடர்பற்ற சில செய்திகள் சுவடியில் உள.

## 13. அழிபடை தாங்கி யென்னப்பட்ட சப்த்த பிராகாரத்தையுடைத்தானக் கோட்டையிலே ராச்சிய பரிபாலனம் பண்ணின பவுத்த ராசாக்களுடைய மகா விசேஷித்த சரித்திரம் அல்லது கைபீது

(டி.3814)

## Account of the Bauddha Rajas who ruled in the Area called Fort of Auzipadai tangi.

*1. பூருவீக காலத்திலே இந்த மூன்றாம் பங்காகிய தெண்டகாரணியத்திலே பவுத்தாள் வாசம் பண்ணினார்கள். இவர்கள் தங்களுக்கு, இந்த வாறணியத்திலே ராஜியபரிபாலனத்தை யுண்டுபண்ணும் படியாக சிந்தித்துக் கொண்டு சடாரண்ணியத்துக்குஞ் சயின கஞ்சிக்கம் மத்தியிலே அழிபடைத்தாங்கி யென்று இப்போது பேர்நாமத்தைக் கொண்டிருக்கிற ஸ்தானத்திலே மஹா விஸ்தாரமுஞ் சிறப்புமான யேழுசுத்துக் கோட்டை கட்டி ராஜிய பரிபாவனம் பண்ணினார்கள். இந்த ராட்சிய பாரத்திலே யிந்த மூன்றாம் பங்காகிய தெண்டகாரண்ணித்தில், வெகுவெகு இடங்களிலே விசேஷமாகக்*

காஞ்சி பட்டணத்திலுந், திருப்பெனம் பூரிலும், புனதகைபுரியிலு முனம் வெக விடங்களிலும் பவுத்த தேவஸ்தானங்கள் பிரதிஷ்டைப் பண்ணினார்கள். இவர்களுக்குக் கடைசியாக ராச்சியம் பண்ணின பிரபு ஸ்ரீம்சீதளமகாராசா யிந்த ராட்சிய பரிபாலனங்களிலே பவுத்த சன்னாசிகள் வெகு படிப்பாளிகளாயிருந்து கொண்டு, பலத்த மடாதிபதிகளா யிருந்தார்கள். இவர்களிடத்தி லனந்தம் பேர்கள் வடதேசங்களிலே வெகுதூரங்களிலிருந்து வந்து தற்மசாஸ்திரந், தற்கசாஸ்திரங், காவிய முதலானவைகள் பாடஞ்சொல்லிக் கொள்ளுவார்கள்.

2. இப்படி பாடங்கள் படித்துக் கொண்டு வெகுநாளிருந்து படிப்பிலே தேறின பிற்பாடு சாமார்த்தியவான்களாகி, அவர்கள் தங்கள் தேசங்களுக்குப் போய்ச் சேருவார்களாம். இந்த பவுத்த சன்னாசிகள்மகா படிப்பாளிகளான படியினாலே, சயினாளாகப் பட்டவர்கள் தாங்கள் மதபேதிகளென்பதைக் காண்பியாமல், தங்கள் பிள்ளைகளையும் வெகு தூரதேசங்களிலிருந்தனுப்பிப் பாடஞ் சொல்லிக் கொள்வார்களாம். இப்படி பாடம் படித்துக்கொண்டு வருகிற சயினாளில், அகளங்கன், அநிஷ்களங்க னென்கிற விரண்டு

1. அழிபடைதாங்கி எனும் ஊர், வ.ஆ. மாவட்டத்தில், காஞ்சிபுரம்-ஆற்க்காடு சாலையில் உள்ளது; சன்னாசி - துறவி.

சயின பிராமணப்பிள்ளைகளி லிந்த புத்த சன்னாசிகளிடத்தில் வந்து பாடஞ் சொலலிக்கொண்டு, தாமிவாள் பாடஞ்சொல்லிக்கொண்டு வருகிற தறுவாயிலே, மதங்களைப் பத்தி தற்க சாஸ்திரங்களிலே பாடஞ்சொல்லிக் கொள்ளுகிற போது, சயினமத தற்க்க கட்டத்திலே பாடஞ் சொல்லுகிறபோது, புத்த சன்னியாசியாகப் பட்டவர், அவ்விடத்திற் றிட்டமாய்ச் சொல்லமாட்டாமல். தப்பிப்போ யன்றைக்கிப் பாடத்தை நிறுத்திவைத்தாராம். அப்போதந்த அகளங்கன், நிஷ்களங்க னென்னப்பட்ட சயின பிராமணாள் பவுத்தசன்னாசி யாக்கப்பட்டவர் ஸ்தானபானத்துக்குப் போயிருக்கிற சமையத்திலே தாங்கள் பாடஞ்சொல்லிக்கொண்ட அந்த சயினமதக் கட்டத்தில் சயினமதமே மகாமுக்கிய மென்று ஒட்டி யெழுதி வைத்தார்கள். மறுதிரம் அந்த புத்த சன்னாசியாகப்பட்டவர் சகலருக்கும் பாடஞ் சொல்லிக் கொடுக்கிறபோது, சறுவத்திராளும் பாடம் சொல்லிக்கொண்டார்கள்; அப்போதிந்த அகளங்கன், நிஷ்களங்கனென்னப்பட்ட சயின பிராமணாள் பாடஞ் சொல்லிக்கொள்ள வந்தபோது, அந்த சயினியன் நேத்தியத்தினம் பாடஞ்சொல்லிக்கொண்ட அந்த சயின மதக் கட்டத்திலேசயினமதமே முக்கியமென்று புதுவெழுத்தா யொட்டி யெழுதியிருக்கிறதை யறிந்துகொண்டு, தம்மிடத்திற் பாடஞ்சொல்லிக்கொள்ளுகிற

வித்தியாற்திகளுக்குள்ளே யாதொரு படிப்பாளிகளான சயினியா யிருக்கவேணுமென்று தரியாப்து செய்கிறபோது, வெளியாகாமல் போச்சுது.

3. அப்போது, புத்த சன்னாசி யாகப்பட்டவர் விசனத்தை யடைந்து, யிப்படித் துணிகரமாய்ச் செய்தவனை சிரச்சேதஞ் செய்ய வேணுமென்று தீர்மானித்துக்கொண்டு யெத்தனம் பண்ணுகின்றார்.

4. அதெப்பபடியென்றால், தம்மிடத்திலே பாடஞ் சொல்லிக்கொள்ளுகிற வித்தியாற்திகளெல்லா மொரு தளத்தின்பேரிலே படுத்துக்கொண்டு யிராத்திரி காலங்களிலே நித்திரைப் பண்ணுவார்கள். ஒரு நாட் சமயத்திலே யிப்படி யிவர்கள் நித்திரைப் பண்ணிக்கொண்டிருக்கும்போது புத்த சன்னாசிகள் ஒரு பலத்தக் கடத்திலே வெகுசம்பந்தமான பண்டங்களைப் போட்டுத் தண்ணீரை நிரப்பி, யிவாள் சயனித்துக்கொள்ளுகிற ஸ்தளத்திலகப்பிற்றிடீ வென்னப் போட்டுடைத்தார்கள். அவ்விடத்தில் நித்திரைப்பண்ண வித்தியாற்திக ளியாவரு மசுப்பிற

---

2. சயினியன் - சமணன்; வித்தியார்த்தி - மாணவன்.

3. சிரச்சேதம் - தலையைவெட்டுதல்.

றங்களுக்கு மோசம் வந்ததென்று தங்கள் தங்கள் தெய்வங்களை பிராத்தித்தார்கள்; அதில் பவுத்த வித்தியாற்திக ளெல்லாம் "புத்த புத்த" யென்று ரத்த சப்தமாயி சுமறணை பண்ணினார்கள். ஆனாலிந்த அகளங்க னிஷ்களங்கனெனுஞ் சயின வித்தியாற்திகள் "சயின சயின" வென்று வுரத்த சப்தமாய் சுமறணைப் பண்ணினார்கள்; இதைக் கேட்ட பவுத்த சன்னாசிகள் இவர்கள் பேரில் வெகு கொடூரமான ஆங்காரத்தைக் கொண்டிருந்த வுடனே ஈம்சீதளமகாராசா வைக் கண்டுபேசி, யிவர்களைச் சிரச்சேதம் பண்ணிவைக்க வேணுமென்று மனிதர்களை யழைத்துக்கொண்டு வந்த விடத்தி, லிந்த அகளங்க, னிஷ்களங்க னென்ற விரண்டு சயின பிராமணாளு மோடத் துவக்கி னார்கள்; அப்போது, மனிதர்க ளிவர்களைப் பின்றுடர்ந்து துரத்திக்கொண் டோடினார்கள். அவர்களோட, விவர்களோட வெகுதூரம் வரைக்கும் மோடினார்கள். கடசியி லொன்று முடியாமல், அகளங்க, னிஷ்களங்க னென்கிற விவ்விருவருந் தாங்கள் தப்பித்துக் கொள்ளக் கூடாததை நன்றாயறிந்துக் கொண்டு நிஷ்களங்கனு மகளங்கனு நன்றா யோசனைப் பண்ணி நிஷ்களங்கனாகப்பட்டவன் தானவர்களுடைய கோபத்துக்கு யிரையாய்ப்போய் பிராமணனைக் கொடுக்கிறேனென்றும், அகளங்கன் சாமாற்திய னானபடியினாலே

தன் சீவனைக் காப்பாத்திக் கொண்டு சயினமத உத்தாறணம் பண்ணவென்று தீர்மானம் பண்ணி, யிருவரு மொருகுளத்ததங் கரையில் வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்திலொரு வண்ணானவன் துணிகளைச் சலவை பண்ணிக்கொண்டிருந்தான். அவனிடத்தி லிவர்க ளிருவரும்போய் சத்துதூரம் வரைக்கும் வழி காட்டும் படிக்கு அந்த வண்ணானைக் கேட்டுக் கொண்டார்கள். அந்த வண்ணானைக் கேட்டுக்கொண்டபடிக்கு அந்த வண்ணானாகப்பட்டவன் சம்மதித்ததின் பேரில், அகளங்க னாகப்பட்டவன் அந்த வுடுப்புகளுக்குக் காவலாயிருந்துகொண்டு நிஷ்களங்கனுக்கு வண்ணானை வழிகாட்டச் சொன்னான். நிஷ்களங்கனும் வண்ணானும் துரத்திக் கொண்டுவந்த யெதிராளிகளுக்கு யெதிர்கொண்டு போனபோது, அவர்க ளிவர்க ளிருவரையுந் துரோகம் பண்ணின சயினாளென்று சிரச்சேதம் பண்ணிப்போட்டு பவுத்த சன்னாசிகளுக்குச் சேதி சொன்னார்கள்.

---

4. பிராமணனைக் கொடுக்கிறேன் - பிராணனைக் கொடுக்கிறேன் என்று இருக்கவேண்டும்; உத்தாரணம் - நிலைநிறுத்தல்.

5. அவர்கள் சந்துஷ்டியை யடைந்து வெத்தி கொண்டவர்களாக அந்த இராசாவினுடைய இலாக்காவுக்குள்ளிருந்த சயின பஸ்திகளெல்லாஞ் துவசஸ்தம்பங்களிலே மாமிசத் துண்டுகளையும், அதற்கிசைவான வொரு சமஸ்கிறத சுலோகத்தையு மெழுதித் தூக்கி வைத்தார்கள்.

அந்த சுலோகமாவது:

"மாம்சஸ்ய மரணம் நாஸ்தி
நாஸ்தி மம்சஸ்ய வேதனா
வேதனா மரணம் பாவே
ரோதோஸோ மாம்ச பக்ஷிணே"

6. இந்தப்பிறகாரஞ் சுலோகஞ் சயின பஸ்தியினுடைய துவசஸ்தம்பங்களிற் றொங்கி மாமிசமுங் தொங்கினதினாலே சறுவ சயினாளும் அசங்கிதத்தை யடைந்தார்கள். இப்படி அந்தந்த யிடங்களிலிருக்கிற சயினா ளெல்லாரும் மகா விசனத்தை யடைந்துக்

---

5. சுலோகத்தின் பொருள் : மாமிசத்தால் மரணம் இல்லை; மாமிசத்தால் வேதனை இல்லை; மரணம் வரும்போதே வேதனை! மாமிச பதார்த்தங்களாக ஆகும்போது மாமிசம் அழுமா?

கொண்டிருக்கிற தறுவாயிலே, அகளங்கனாகப்பட்டவன் சறேளென்று மாறுவேஷத்துடன் ஊருக்குள் வந்து சயின ஸ்திகளெல்லாந் துவசஸ்தம்பங்களில் கட்டித் தொங்கப்போட்டிருளக்கிற மாமிசத்தையுஞ் சுலோகத்தையும் பார்த்து, அதிக விசனத்தை யடைந்து, பிராணத்தைக் கொடுத்து சயின மதத்தை யுத்தாரணம் பண்ணவேண்டுமென்கிற கெட்டியான பிறிதிக்கினையுடனே சராவண பெளுகுளம் போ யவ்விடத்திலிருக்கப்பட்ட மடாதிபதியாகிய சயினப் பட்டாச்சாரியார் கையினாலே சன்னியாசம் பெத்துக்கொண்டு, உடனே யிவ்விடத்துக்கு வந்து பவுத்தஸ் தளங்களிலெல்லா மிருக்கப்பட்ட துவசஸ்தம்பங்களிலே கலையங்களில் மனிதர் பீயை வாரிக்கட்டி தொங்கப் போட்டு, அத்தோடேகூட சமஸ்கிருதத்திலே ஒரு சுலோபமு மெழுதிக்கட்டித் தொங்கப்போட்டு வைத்தார். அந்த சுலோபமாவது யெப்படியென்றால்,

“கூதஸ்ய மரணம் நாஸ்தி
நாஸ்தி கூதஸ்ய வேதனா
வேதனா மரணா பாவே
கொதோஸோ கூத பக்ஷணே”

*7. இந்தப் பிறகாரஞ் சப்த கோவில் களெல்லாந் தொங்கிறதை ராசாவானவ னறிந்து, இந்த சயின சன்னாசியை அழைப்பித்து விசாரணைப் பண்ணுமிடத்தில் அநேக உதாரணங்களைச் சொல்லிக் காட்டினதின் பேரில் புத்தர்களையுஞ் சயினர்களையுங் கூட்டி, ஒரு கெடு வைத்து, அதற்குள்ளாக வாதம்பண்ணிக் கெலிக்கிறவர்கள் இந்தத் தேசத்திலே முக்கியமா யிருக்கிறதென்றுந் தானும் அவர்கள் மதத்திலே நிலைக்கிறதென்றும்; இந்த வாதத்திலே தோத்துப்போற பேர்களைக் கல் காணத்திலே போட்டு, ஆடிக் கொண்ணுப்போடுகிறதென்று தீர்மானித்து யிருகிறத்தாரிடத்திலு முச்சிலிக்கை வாங்கிக்கொண்டு வாதம் பண்ண நேமித்தவிடத்தில், இருதிறத்தாருஞ் சம்மதித்து, புத்தருஞ் சயினரும் வாதம் பண்ணத் துடங்கினார்கள்.*

---

6. சரவணபெளகுளா - கர்நாடக மாநிலத்தில் உள்ள சமணத்தலம்.
சுலோபம் - சுலோகம் (Sloka);
கல்காணம் - கல்உரல்;
முச்சிலிக்கை - சம்மத ஒப்பந்தம்.
சுலோகத்தின் பொருள் - மலத்தால் மரணம் இல்லை;
மலத்தால் வேதனை இல்லை ; மரணத்தால்தான் வேதனை;
மலபதார்த்தங்களாக மலம் ஆகும்போது அது அழுமா?

ளா ராசா சமுகத்திலே சயினர் பிறசன்னமுகமாய் வாதம் கள். பவுத்தரோவென்றால் தங்கள் முகந் தெரியாமல் டுக்கொண்டு, அதற்குள் யாதொருவருக்குஞ் தெரியாமல் ஒரு கிடத்து நிறைய மது அல்லது கள்ளை வார்த்து நிரப்பி வைத்து, அந்த கிடத்தின் வாயின்பேரில் துஷ்ட தேவதை சுருபம் பண்ணிவைத்து, கிடப்பூசைப் பண்ணி அதின் பலத்தினாலே வாதம் பண்ணத் துடங்கி, கிட-கிட-கிட- ஓயாமல் வாதம் பண்ணி எதிராளிகளான சயினரை வாயெடுக்க வொட்டாமல் அடித்தார்கள்.

8. இப்படியாக யிந்த வாதம் நடத்திவர ராசாவினாலே நிஷ்ககர்சை பண்ணப்பட்ட கட்டத்தின் நாள் நிறைவேறி, சமீபித்து வருகிறபோது, சயினாள் யாவரு மகாவிசனத்தைக் கொண்டுயிருந்து விசேஷமாக அகளங்க ஆசாரியராகப் பட்டவர் துக்க சாகரத்துக்குள் ளமுந்தி யிரவும் பகலுஞ் " சயினசயின" வென்று யிசுமறணை பண்ணி பரிசாலக நாயகியாகப்பட்ட பரதேவதை யம்மையை தியானஞ் செய்துக்கொண்டு யிருக்கிற போது, சயின மத முழுகிப்போய் விட்டதென்கிறதாயும், இன்ன மிரண்டொரு நாளைக்குள்ளாக சயினா லெல்லாருங் கல்க்காணத்தி

7. கிடத்து - குடத்து; சுருபம் - உருவம்

8. நிஷ்கர்சை - நிச்சயம்; விசனம்-வருத்தம்; புனகம் - மறுபடி

லாடப்படுவார்க ளென்றும் நிஷ்ஷெயித்துக் கொண்டிருக்கிற போது, பரதேவதை யம்மையாகப் பட்ட சுவாலினியம்மை மகா தூய வெண் வஸ்திரந் தரித்துக்கொண்டு, சகல பூஷணங்களுடனேயும் குளுந்த முகமாய் அகளங்க ஆச்சாரியருக்கு...... சோதியிலே தெரிசனத்துக்கு வந்து, அகளங்க ஆசாரியரைப் பார்த்து, " பயப்படாதே மகனே! சயினமத உத்தாறணம் பண்ணுகிறத்துக்கு சாமற்றியன் நீயேனால் பவுத்தாளாகப் பட்டவர்கள் மதுகட்டம் வைத்து கிட பூசைப் பண்ணுவதினாலே வாயோயாமல் வாதம் பண்ணுகிறார்கள். நாளையத்தினம் அவாள் வாதத்துக்காரம்பித்து வெகுதூரம் பேசின பின் 'புனகம்' என்று சொல்லு!

அப்போ, அவர்களுக்கு முன் சொன்னது பின்தெரியாமல் தடுமாறி தோத்துப் போவார்கள்; மேல் நீயவர்கள் போட்டுக் கொண்டிருக்கிற திரைக்குள்ளே போய் காலினாலே திரையை யுதைத்தால், அந்த மதுக்குட முடைந்து, துற்கந்தமாகி அவாளுடைய புழுதிமாயஞ் சறுவத்திராளுக்குந் தெரியப்பட்டு அவாள் வெளியங்கமாய்த் தோற்றுப் போவார்கள்!

இந்தவிதமாய் சயின மதத்தை உத்தாரணஞ்செய்யுமென் கிறதாய் சுவாலினி யம்மை சொல்லிப்போட்டு, அரூபமாய்ப் போய்விட்டாள்.

9. மறுநாள் அகளங்காச்சாரியார் மகா சஷ்துஷ்டியுடனே தற்மதேவதையை தியானஞ் செய்துக்கொண்டு, ராச சபையிலே வந்து புத்தர்கள் வாதம்பண்ணத் துடங்கி வெகு நேரம் பேசுகையில், அகளங்காச்சாரியர் 'புனகம்' என்று சொன்னார்.

அப்போ பவுத்தாள் துஷ்ட தேவதைபலத்தினால் வாதம் பண்ணினவர்கள் முன் சொன்னத்தைப் பின் சொல்லமாட்டாமல் தடுமாறி நிற்கையில், அகளங்காச்சாரிய ரெழுந்து, பவுத்தாள் போட்டிருக்கிற திரையை உதைக்கு மளவில் மதுக்குட முடைந்து, துற்கந்தமான நாத்த முண்டாகி, அந்தக் கள்ளு வெகுநாள்ப் பட்டதானதால், அதில் கிருமிகள் நெளியத் துவங்கித்தது.

10. அப்போது, ஈம்சீதள மகாராசா முதல் சறுவத்திராளும் "பவுத்தாள் தோத்தார்கள்!" யென்று யேக சப்த்தமாய்ச் சொல்லி, பவுத்தர்களும் ஒத்துக்கொண்டார்கள்.

--------- x ---------

# 14. பொன் விளைந்த களத்தூர் வரலாறு
## (டி. 3825)

# An account of the ancient gold products of calloattur and notices of the history of that place

*1. பூற்வீகத்தில், யிந்த களத்தூர், புழல் குறும்ப ராசாங்கத்துக்கு இரண்டாவது கோட்டையா யிருந்துது. இவாள் யாதொண்ட சக்கிரவற்தியினாலே சம்மாரம் பண்ணப்பட்ட பின், னிந்த்தகத்துக்கு கொண்டைகட்டி வெள்ளாழர் தொண்ட மண்டலாதிபர் என்று கிதாப்பு பெத்தவர்கள் பத்துக் கணக தண்டிகைக்காற் பிறபுக்கள் அரசுக்கு வைக்கப்பட்டார்கள். இவாள் ராசாவுக்குள்ப் புகலாயிருந்து கொண்டு, தேசத்தை நடத்தை பண்ணிக்கொண்டு வந்தார்கள்.*

*2. இவாளுடைய நாள்களிலே இந்த வூரி லொரு ஏழை புரோகித னிருந்தான். அவனிந்த திருவாலீஸ்பரர் தேவஸ்தானத்தில் வந்து,*

---

1. பொன்விளைந்த களத்தூர்- செங்கை மாவட்டத்தில், செங்கற்பட்டு வட்டத்தில் உள்ள ஊர். உள் புகலாய்- அரசனுக்குக் கட்டுப்பட்டு; இங்கே ஆதொண்டைச் சக்கிரவர்த்திக்கு கட்டுப்பட்ட கொண்டைகட்டி வெள்ளாளச் சிற்றரசர்கள்.

புரோகிதஞ் சொல்லிக் கொண்டு போவான். ஆனாலிவனுக்கு புரோகிதத்தில் வருகிற சம்பாத்தியம் காலச்சியத்துக்கு கட்டி வராமல், களத்தூரி லந்த வெள்ளாழ பிறபுவினிடத்தில் ஒரு காணி நிலம் வாங்கி, யதை பயிரிட நினைத்துக் கொண்டு மறுகாலமே திருவாலீஸ்பரருக்கு புரோகிதஞ் சொல்லப் போனான்.

3. அவடத்தி லிவன் பஞ்சாங்கஞ் சொல்லி திரும்புகையில், திருவாலியீசுரன் யிவனுடனே பேசி, நீ யிப்போ பயிரிட நிலம் வாங்கி யிருக்கிறாயே, அதை நீ உழுது புழுதியாக்கி விரை விரைக்கப் போறபோது, நமக்கறிவி என்று சொல்லி சொன்னார்.

4. அந்தப்படி, மத்த உழுகிறபோது, யிவனும் விழுது புழுதியாக்கி விரைவிரைக்கப் போறபோது, திருவாலீஸ்பரருக்கு அறிவித்தான். அப்போ, திருவாலீஸ்பரர் விரிஷப வாகனாரூடராய் அவ்விடத் தெழுந்தருளி, தம்முட கையினாலே ஒரு கை விரையை வாங்கி யிறைத்து, மாயமாய்ப் போயிவிட்டார்; மத்த விரையை யிந்த புரோகிதன் தெளித்துப்போட்டு வீடு சென்றான்.

---

2. காலச்சியம் - காலக்ஷேயம்.

4. விரிஷப வாகனாரூடர் - காளைவாகனத்தின் மீதமர்ந்த ஈசுரன்.

5. இந்த விரை மந்த விரைகளைப் பார்க்க வதீக வீரியத்துடன் முளைத்துது. மத்ததுகள் சீவடலாய் முளைத்து, கதிர் ஏர்த்த காலத்தில் யறுக்கிற பருவமாயி வெகுவாயி அறுக்கவும் பட்டுது. ஆனா லிந்த புரோகிதனின் பயிர் மந்த பயிர்களைவிட அதீகக் கொழுமையாய் வளர்ந்து போச்சுது.

6. ஆனால் யிது யின்ன மிளம்பருவமாயிருந்து கதிர் முதலாய் வீசயில்லை. யிது நாளுக்கு நாள் அதீக உயரமாய் வளர்ந்தபோய், ஒருவராலும் எட்டிப்பிடிக்கக் கூடாமல் வளர்ந்து போச்சுது.

7 இதைப்பார்த்த விந்தப் புரோகிதன், விசனப்பட்டுக்கொண்டு தன் பசிக்கி உதவ யிடமாயிருக்க யில்லையே யென்றிருக்கிற ஒருனாள், ஒரு கரைகாற வெள்ளாழ னிந்தப் பயிரைப் பார்த்து, விறுமித்து, ஏதுயிது யித்தனை கொழுமையாய் வளருது; யின்னங் கதிர் பிடிக்கவில்லையா? யென்று ஒரு முதலைச் சாயித்து, அதைப் பிளந்து பார்த்தான்.

8. அப்போ, அதில் பொன்கதிர் காணப்பட்டுது. இதைக் கண்டவுட னிவன் விறுமித்து, பிலத்த பேராசை யுண்டாகி, யுடனே, அந்த புரோகிதனிடம் போ " யின்னம் உம்முடைய பயிர் கதிர்

7. விறுமித்து - பிரமித்து

வீசவில்லையே!" என்று அங்கலாயத்துக் கொண்டான். அதின்பேரி லந்தப் புரோகிதன் மிகவும் அங்கலாய்த்தான்.

9. அப்போ, இந்த வெள்ளாழ னவனுடனே, " நீர் என்னுடைய விளைந்திருக்கிற நிலத்தை யறுத்து சாப்பிடலாம் ; அதை எனக்கு விட்டுவிடு! மென்று கேட்டான். அதற்கந்த புரோகிதன் சம்மதிப்படி சீட்டெழுதிக் குடுத்துவிட்டு, வெள்ளாழன் நிலத்தை யறுத்து சாப்பிட்டான், இந்தப் புரோகிதன் பயிர் வெகு நாளைக்கு பின் கதிர்வீசத் துவக்கிச்சுது. அப்போ ஆகாசமெல்லாம் சொற்ண நிறமாச்சுது. அது முத்த முத்த அதிக சொற்ண நிறமாச்சுது.

10. இதை அந்த நாளிலேயிருந்த அறிஅரராயர் கேட்டு, ராணுக்களை யனுப்பி பாரராப்போட்டு, ஏற்த்தக் காலத்தில் தாமே வந்து அனுப்புவிட்டு, ஒப்படிப்பண்ணி, குடிவாரம், அரண்மனைவாரம் போக சுகந்திரக்காரருக்குள்ள சுகந்திரம் உரியாய் பொன்னளந்து கொடுக்கப்பட்டுது.

11. இதை ஒப்படியாக்க களஞ்செய் கல்லினாலே காறையிட்டு வைக்கப்பட்டுது. ஆனதினாலே யிந்த ஊர் பொன்விளைந்த களத்தூர்

---

9. சொர்ணம் - தங்கம்

10. ஏற்த்த - ஏற்ற; அரண்மனைவாரம் - அரண்மனைக்குத் தரவேண்டிய வரி.

என்னப்பட்டுது. இந்த களத்துச் செங்க லின்னஞ் சிலதுகள் பார்க்கப்படுகுது.

12. இந்த பொன் கழனிக்கு தண்ணீர் பாச்சின வாய்க்கா லின்னம், பொன் காலென்னப்படுது; யிந்த பதிர்கூடின யிடம், யின்னம் பொன்பதிர்க்கூட்ட மென்றழைக்கபடுகுது. இந்த பொன்கதிர் சிலதுகள் திருவாலீசர் கோயில் சேமத்திலும் சிலது குடுமீஸ்பரர் கோவில சேமத்திலும் வைக்கப்பட்டிருக் தென்று சொல்லுகிறார்கள்.

13. இந்த களத்தூர் தொண்டமா சக்கிறவற்தி நாள் முதல்க்கொண்டு, கிருஷ்ணராயர் நாள் வரைக்கும் வெள்ளாழரா லிந்த கோட்டை.... பிறபுத்துவம் நடப்பிக்கபட்டுது.

14. கிருஷ்ணராயர் அகோபள மடத்துக் சன்னியாசியார் போதினைப்படிக்கு இதை அக்கிறகாரம் பண்ணவேணுமென்று வெள்ளாழரை கேட்க, அவாள் சம்மதியாததால் ராயர் தண்டு வந்து விழுந்து., ஆறுமாதம் சண்டை குடுத்து, கடைசியில் வெள்ளாழற் பிராண சேத மிச்சம் வருகுதென்று கோட்டையை அக்கிறகாரம் பண்ணவிட்டு விட்டார்கள். அப்பிறம் யிந்த களத்தூர் யிரண்டக்கிறகாரமாக கிஷ்ணராயர்புரம், பறாயிமுசபுர மென்று பண்ணப்பட்டுது.

# 15. பல்லாவரத்திலிருந்த பூர்வீக ராசாக்களுடைய கைபீது (டி.2805)

*1. பூருவத்திலே பல்லநென்றொரு ராசா யிருந்தான். அவன் ஆதியாய் இந்த ஸ்தலத்தில் பிறபுத்துவம் பண்ணியபடியினாலே, இந்த ஸ்தலத்துக்கு முன் மறு பேரில்லாமல் அந்த ராசாவினா லாளப்பட்டபடியினாலே பல்லபுறம் அல்லது பல்லன் பட்டண மென்றழைக்கப்பட்டது*

*2. அவன் சயின குறும்பநென்று சொல்லப்பட்டிருக்குறான். இவன் வெகுநாள் பிறபுத்துவம் பண்ணி தெய்வலோக பிராப்த்தி ஆனான்.*

*3. பின் இவன் மகன் காலிங்கன், தன் தகப்பன் பட்டத்துக்கு வந்தான். இவன் வெகுநாள் தபம் பண்ணியவிடத்தில், ஒரு பெண் பிறந்துது. அதுக்குப் பேர் பத்மாவதி யென்று பேரிட்டு, வெகு செல்வீகமாக வளர்த்தான்; அவள் மகா ருபவர்ண்ண சவுந்தரியமாக*

---

1. பல்லாவரம் - செங்கை மாவட்டத்தில், ஆலந்தூர் உள்வட்டத்தில் அமைந்தள்ள ஊர் பல்லாவரம்.

2. தெய்வலோக பிராப்தி ஆனான் - இறந்தான்.

இருந்தாள். அவள் தகப்பானாகிய காலிங்கன், அதிக வேதாத்தியாக இருந்து, தன் பிள்ளைக்கு அதிக படிப்புக் கத்துக் கொடுத்து, அந்த நாள்கால வழக்கமாயிருந்த நயின பாஷை முதலானதுகள் தர்ப்பித்துக் கொடுத்தான்.

4. இப்படி, இவள் மகாவித்தியா சாமர்த்தியம் பொருந்தியவளானதை தகப்பன் சந்தோஷப்பட்டு, இவளுடைய வித்தியாப்பிசம் நடந்துவந்த பிறகு, இவளுக்கு தனிமயிலே ஒரு பெலத்த மாடி தன் அறண்மனைக் கடுத்தாப் போலே கட்டிவைத்து, அதிலே சில சாதிகளும் இவளையு மங்கே வைப்பித்தான்.

5. அங்கே, இவள் நாள்தோரும் வித்தியாப்பியாசம் பண்ணிவிக்கயில், அதிக சமர்த்திகவதி ஆயிநாள். இதுவன்றியில், இவள் நாள்தோறும் மீனம்பாக்கத்திலிருந்த தீற்த்தத்தில், ஸ்தானபானத்துக்கு தன் தாதிகளுடன் போறத்துக்கு வழக்கப்பட்டிருந்தாள். யிப்படியில் நாள்தோரும் போகுற வழக்கமாக இருக்குகயில், ஒரு நாள் சோழ ராசா மகனிலொருத்தன், அதிக வித்தியாசாமர்த்தியம் பொருந்திய தன் மந்திரிகளுடனே வேட்டை

---

3. தபம் - தவம்; தர்ப்பித்து - கற்பித்து என்று இருக்கவேண்டும்

4. தனிமயிலே - தனிமையிலே என்று இருக்கவேண்டும்.

மார்க்கம் அதிக காடுகள், செடிகளுடன் அதிக மிருகசாதிகள் வாசம்பண்ணுகுற ஸ்தலமாக யிருந்ததால், அவ்விடம் வந்து வேட்டைகளாடி மீனம்பாக்கத்திலிருக்குற தீற்த்தத் தண்டயில் வந்து, தாகம் தீர்த்துக் கொண்டிருக்கும்போது, அந்த ராச குமாறத்தி, தாதிகளுடன் புடைசூழ ஸ்தானத்துக்கு வந்தாள்.

6. அப்போது, ஸ்தானத்திர்க்கு வந்திருக்குற சோழராசாவின் குமாறன் இவளைக் கண்டு அதிகமாய் மோகித்தான். அப்போ அவளும் இவனைக் கண்டு அதிகமாய் மோகதாப மாகினாள். அதன்பேரில், அவள் ஸ்தானத்திலிறங்கி ஸ்தானம்பண்ணி அறண்மனைக்கு திரும்புகாலில் இந்த ராசகுமாறனின் பேரில் உடைத்தாகிய அதிக மோகதாபத்திநாலே இவளதிக வித்தியாசாமர்த்தியமுடையவளாக இருந்ததிநாலேதான் தான் படித்திருந்ததன்படி ஒரு புஷ்பத்தை எடுத்து தன் பல்லில் வைத்துக்கொண்டு போய்விட்டாள்.

7. அப்போ றாசகுமாற னிதைக்காண பிரிமித்து, அதிக மோகப்பட்டு மந்திரி, அசமனநயின பாஷையிலே

5. மீனம்பாக்கம் - சென்னையை அடுத்த விமான நிலையம் அமைந்துள்ள ஊர்; செங்கை மாவட்டத்தில், ஆலந்தூர் உள் வட்டத்தைச்சேர்ந்தது; ஸ்தானத்துக்கு - ஸ்நானத்துக்கு - குளிப்பதற்கு.

சாமார்த்தியவானாகிற வனானபடியினாலே அதன் அர்த்தசாற மேதென்பதை அவனிடத்தில் தரியாபாத்து பண்ணிநான். அதன்பேரில், மந்திரி மகன் அதன் அர்த்த சாறத்தை சொல்லுகுறான், யென்னவென்றால், அவள் புஷ்பத்தை கைய்யிலே யெடுத்தது, தன்னையே தூக்கி ஒரு புஷ்பத்துக்கு சமானமானவளென்று சொல்லுகிறாள்; அவள் அதை தனது பல்லின் பேரிலே வைத்தது, தான் பல்லாவறத்திலிருக்குற தென்கிறாள்; அவளதை காலின்பேரிலே வைத்தது, தான் காலிங்கன் மகளென்குறாள்; தன் காலிலே மெரித்தது, தன்பேர் பத்மாவதி யென்கிறாள்; தன் மார்பின் மீதில் வைத்துக் கொண்டது, அவடத்துக்கு நீ வந்தால், தன்னிரு ஸ்தனங்களையும் தந்து, தனக்கு கணவனாக வைத்துக்கொள்ளுகுறே நென்குறாள்.

8. இதைக் கேட்ட மாத்திறத்திலே ராசகுமாறன் அதிக விறகதாப முள்ளவநாகி, மந்திரி மகனை யோசனை கேழ்க்க அதன்பேரில் அவன், "பயப்படாதே வா" யென்றழைத்துக்கொண்டு ராச குமாரனும் பல்லாவறமே வந்துசேர்ந்து, அவடத்தில் அந்த ராசகுமாறத்திக்கி பூக்கட்டிக் கொடுக்குற பூவாணிச்சி வீட்டில் வந்து, அந்த

---

7.அசமன நயின பாஷை - நயன பாஷை - உள்மனத்தை அறிதல் மற்றும் கண்சாடைகளை அறிதல்; ஸ்தனம் - கொங்கை.

பூவாணிச்சியைப் பணத்திநாலே கைவசம் பண்ணிக்கொண்டு அவள் ராசகுமாறத்தி அண்டைக்கு போகுமிடத்தில், "அண்டுகடைந ரிண்டு வந்தனர்' யென்ற சப்தத்தைச் சொல்லும்பறக்கு போதனை பண்ணிநார்கள்.

9. அவள் அந்தப்படி, "அண்டுகடைந ரிண்டு வந்தனர்" என்று சொல்லிநாள், அப்போ ராசகுமாறத்தியானவள் அவள்பேரில் உக்கிற முகத்தை காண்பித்து, காலெடுத்து வைத்து, மூன்றடி அடித்து அனுப்பிவிட்டாள்! அவள் வந்து டைந்த சங்கதி ராசகுமாறனுக்கும் மந்திரி குமாறனுக்கும் சொல்லிநாள். அப்போ ராச குமாறன் துயறப்பட்டதின் பேரில் மந்திரி குமாறனானவன் யோசித்து, ராசகுமாரனுக்கு சொன்னது: "சிகப்படி மூன்றடியும் அவளுக்கு மூணுநாளாய் வீடுதூறம் வந்திருக்குறது. சொல்லியனுப்புகுறேநென்று சொல்லி அனுப்பினாள்" யேநென்றால், அந்தப்படி மூன்றுநாள் சென்று மறுநாளும் அந்த பூவாணிச்சியை வசப்படுத்தி, "அன்று வந்த நாயென்று போயிநாள்" என்று சொல்லப்பண்ணிநார்கள்.

---

8. அண்டு கடைநரிண்டு வந்தனர் - அன்று கண்டனர் இன்று வந்தனர் என இருக்கவேண்டும்; இவ்வாறே பின்பும் படிக்க;

10. அந்தப்படி, அவள் செய்குறபோது ராசகுமாரத்தியானவள், தன் பத்து விறல்களிநாலும் சந்தனத்தை சைத்து, இந்த பூவாணிச்சி முதுகில்வைத்து அந்த வழியை விட்டு பிழக்கடை வழியாகி அனுப்பி விட்டாள்! இத்தோடே இந்த பூவாணிச்சி வெகு வியசனப்பட்டு ஒருக்காலும் தான் இதர்க்குள் படுவதில்லை யென்ற பிரதிக்கினையுடனே ராசகுமாரானிடத்தில் நடந்த காரியத்தைச் சொல்ல, அவன் மிகு மன வருத்தத்திர்க் குள்ளாகி, அதர்க்குப்பின் மந்திரி குமாறன் னடைந்த காரியத்தைச் சொல்லுகுறான். "அவள் தன் பத்து விறல்களிநாலே சந்தனத்தை தோய்த்து அடித்தது, புழக்கடயாலே போகச் சொல்லினது, பத்து நாள்" நிலவாயிருக்குற படியிநாலே அது சென்ற மாத்திறத்தில் புழக்கடையிலே வறச்சொல்லியிருக்குறாள்!"

11. அதன்பேரில் ராசகுமாறன் சந்தோஷப்பட்டு பத்துநாள் கழித்து, யிருட்டு வந்தபோது ராசகுமாறத்தியு அரண்மனை புழக்கடை வழியாய் போனபோது, அவளே எதிர்கொண்டு வந்து இவனை ஆலிங்கனம் பண்ணி, தன் பஞ்சணைக்கி கூட்டிக்கொண்டு போய், ஒரு கிழமை வரைக்கும் சுகபோகத்தை அனுபவித்தார்கள்.

---

9. உக்கிரமுகம் - கோபமான முகம்; வீடுதூரம் - மாதவிலக்கு.

12. அப்புறம், அவன் மந்திரி மகனை நினைத்து துக்கித்தான். அதுசாடை கண்டு அந்த ராசகுமாரத்தி அவனைக் கேட்டாள். இவடத்தில் காரியத்தைச் சொன்னான்.

அப்போ, இந்த ராசகுமாரத்தி விசனப்பட்டு, குறமுகத்தைக் காண்பித்து, உடனே தன் கையினாலே நஞ்சு போட்டு, பலகாறம் செய்து அவனுக்கு கொடுத்தனுப்பினாள்.

---------- x ---------

11. ஆலிங்கனம் - தழுவுதல்

12. இத்துடன் சுவடி முடிவடைந்தது.

# 16. மாமலைபுரம் கைபீயத்து
## (டி.3181; டி.3182)

1. பூர்வம் மூன்றாம் சதுர்யுகத்திலே புண்டரீக மகாரிஷி யென்கிறவர் மேற்கு சமுத்திர தீர்த்தத்திலே யிருக்கிற தடாகத்திலே நின்றும் பத்மத்தை கிறிகிச்சுக் கொண்டு, திருநாராயணபுரம் வந்து திருநாறாயணனை அர்ச்சனை பூப்பிறதெக்ஷணம் பண்ணிக்கொண்டு வரவேணுமென்று யோசனை பண்ணி, அப்படியேமு பிறதெக்ஷணம் பண்ணிக்கொண்டு வருகிறபோது, தாம் தினப்பிறதி தினமுமவ்விடத்திலே தாமரை புஷ்பத்தைக் கண்டால், அத்தை பகவானுக்கு ஆராதனை பண்ணிக்கொண்டு வரும்போது, யிந்த யிடம் ஆர்ணியமா யிருந்தது. அந்த ஆர்பணியத்தில், ஒரு தாமரை தடாகம் அநேக அலங்காரத்துடனே யிருந்தபடியினாலே அநேக ரிஷிகள் யிந்த ஆர்ணியம் தபசுக்கு மகா யோக்கியமா யிருக்குதென்று யோசனைபண்ணி, அநேக காலம் யிவ்விடத்திலே தபசு பண்ணிக் கொண்டு யிருந்தார்கள்.

---

1. மாமலைபுரம் - மகாபலிபுரம் - சென்னையை அடுத்து அமைந்துள்ள ஊர். மாமல்லபுரம் என்பதும் இதுவே; செங்கை மாவட்டத்தில் செங்கற்பட்டு வட்டத்தில் இவ்வூர் அமைந்துள்ளது.

ஆர்ணியம் - ஆரணியம் - காடு.

2. இப்படி யிருக்கும் நாளில் புண்டரீக மகாரிஷியும் தென்தேச மெல்லாம் சஞ்சாரம் பண்ணிக்கொண்டு, யிந்த ஆர்ணியத்திலே வந்து, யிங்கே யிருக்கிற ரிஷிகளையும் தாமரைத் தடாகத்தையும் பார்த்து, "ரொம்பவும் மனோறம்மியமா யிருக்கிறது; நா மிவ்விடத்திலேதானே வாசம்பண்ணிக்கொண்டு யிருக்கப்படாநின்ற ரிஷிகளோடும் கூடிக்கொண்டு தாமும் தபசு பண்ணவேணுமென்று" தாமரை தடாகத்தையும் புஷ்பத்தையும் பார்த்து, யிந்த புஷ்பத்தை யெடுத்து பகவானுக்கு ஆராதனை பண்ணவேணுமென்று, தாமரை தடாகத்திலே யிறங்கி ஸஹஸ்ரதள கமலத்தைப் பறிக்குமளவில், அதிலே ஹரியப்பிரியனென்னப்பட்ட ராஜா பூர்வம் பிராமணனுடைய சாபத்தினாலே யிந்த தடாகத்திலே முதளையாய்ப் பிறந்து, அநேக காலமாய் வாசம் பண்ணிக்கொண்டு யிருக்கப்பட்ட முதளை புண்டரீக மகாரிஷியினுடைய பாதத்தை வாயாலே பிடிக்கவேணுமென்று போகச்சே, தாமரைக்கொடியினுடைய முள்ளினாலே நாக்கில்நின்று ரத்தம் புறப்பட்டு மூர்ச்சை தெளிந்துயிருக்க ரிஷியும் ஸஹஸ்ரதள கமலத்தைப் பரிச்சுக்கொண்டுக் கரையிலே வந்து முதளையைப் பார்த்து, நீ யாரென்று கேட்க, முதளை சொன்னது: "பூர்வம் ராஜாவாய் அநேக கிருதுக்களெல்லாம் பண்ணிக்கொண்டு, பிராமணாள் முதலான பேர்களுக்கு அகண்ட சாம்பிராச்சியமுங் கொடுத்துக்கொண்டு

யிருக்கச்சே ஒரு பிராமணன் வந்து, "சாதம் வேணுமென்று கேட்டான். அதற்கு நான் சகல சாம்பிராச்சியமும் கொடுக்கச்சே சாதங்கேட்டானென்று சிரித்தேன்! அவர், "நீ யென்னை பரிகாசம் பண்ணினபடியினாலே முதளையாகப் போகக் கடவாய்!" என்று சபித்தார்.

3. அந்த சாபத்துக்கு எப்போ விமோசன மென்று கேட்டேன். அதற்கு யந்த பிராமணன் சொன்னது, "புண்டரீக மகாரிஷி வரப்போறார்; அவரைக் கண்டால் உன் சாபம் விட்டுப்போகுமென்று சொன்னார். ஆகையால் உம்மைக் கண்டபடியினாலே என் சாபம் விட்டுப் போகும்படியாய் யென்னிடத்திலே தயவுபண்ணி வேணுமென்று கேட்டேன்; "அப்படியே ஆகட்டும்! உன் விர்த்தாந்த மென்ன"வென்று கேட்டார்.

4. அதற்கு முதளையான ராஜா சொன்னது: "பூர்வம் நம்முடைய குலத்திலே அரிசேகர மகாராஜா வென்று ஒரு ராஜா யிருந்தான். அவனுக்கு வராககவாமி பிறந்தியக்ஷமானார். அவரை

---

2. ஸஹஸூதள - ஸஹஸ்ரதள என்று இருக்கவேண்டும்;

ஸஹஸ்ரதளம் - தாமரைப்பூ; ஆயிரம் இதழ்களை உடையது என்பது பொருள்; முதளை - முதலை; பரிச்சு - பறித்து; கறை - கரை.

ஆதாரித்துக்கொண்டு யிருந்தான். அதற்கு பிற்பாடு யெங்கள் தகப்பன் அறிநந்தன் ஆதாரித்துக்கொண்டு யிருந்தான். அதற்கு பிற்பாடு நான் ஆதாரித்துக்கொண்டு யிருந்தேன். எனக்குப் பிற்பாடு யென்பிள்ளை சதாநந்தன் மல்லராஜா வென்னும்பேர் யிப்பவும் ஆராதித்துக்கொண்டிருக்கிறான் யென்று சொல்லி ரிஷி கையில் சிலவு வாங்கிக்கொண்டு சொர்க்கத்துக்குப் போனான். புண்டரீக மகாரிஷி யென்கிறவர் புஷ்பத்தை யெடுத்துக்கொண்டு, யிந்த புஷ்பத்தை யாருக்குச் சாத்தலாமென்று ஆலோசனை பண்ணச்சே க்ஷீராப்பதி நாதனுக்கே யோக்கிய மென்று ஆகாசவாணி சொல்லிற்று.

5. அதைக் கேட்டு, புஷ்பத்தை சமுத்திரக்கரையில் வைத்து, சமுத்திரத்தை யிறைக்கும்போது, க்ஷீராப்பதிநாதன் நம்மிட பக்தன் சிறுமைப்படுகிறா னென்று, அவர் ஒரு கிழவனாய் வந்து, "நீரேன் யிறைக்குறீர்?" யென்று கேட்டதற்கு, க்ஷீராப்பதிக்குப் போகவேணுமென்று ரிஷி சொல்ல, அதைச் சுவாமி கேட்டு, "யிரைக்க உம்மாலாகாது! நான் யிரைக்கிறேனென்று" சுவாமி யிறைக்க சமுத்திரம் வடிந்ததை ரிஷி கண்டு, சந்தோஷப்பட்டு, சுவாமி யென்று தெரியாமல் "உமக்கு யென்னவேணு"மென்று கேட்க "சாதம் கொண்டுவாருமெ"ன்று சொல்ல, நல்லதென்று ரிஷி சம்மதித்து சாதம்

கொண்டுவருகிறே னென்று மல்லாபுரி பட்டணத்துக்கு வந்து பிறசாதம் கொண்டுபோய் பார்க்குமிடத்தில் கிழவராய் வந்த க்ஷீராப்பதிநாதன் சமுத்திர சமீபத்தில் மணலைத் திண்ணையாகக் குவித்து, அதின் பேரில் பள்ளிகொண்டு ரிஷி சமற்பிக்க வேணுமென்று வைத்திருந்த தாமரை புஷ்பத்தையும் சாத்திகொண்டு யிருந்ததை ரிஷிகண்டு, மிகவும் சந்தோஷப்பட்டு அநேக விதமாய் சுவாமியை தோத்திரம் பண்ணினான். அதற்கு சுவாமி சந்தோஷப்பட்டு, "உமக்கு யென்ன வேணுமெ"ன்று கேட்க, "அடியேனுக்குத் தேவரீர் திருவடிகளே தவிர, வேறொன்றும் தேவையில்லை" யென்று ரிஷி சொல்லி சுவாமியினுடைய திருவடிகளண்டை பஜனை பண்ணிக்கொண்டிருக்கிறார்; பூமியிலே சயினித்துக்கொண்ட படியினாலே ஸ்தலசயனச் சுவாமி யென்று நாமதேய முண்டாச்சுது. தனணாமமாய் நிலமங்கை நாச்சியாரென்று ஸ்ரீமகாலக்ஷுமிக்குப் பேருண்டாச்சுது. அப்போதந்த பட்டணம் ஆண்டுக் கொண்டிருந்த மல்லேசுவர ராஜா சுவாமியையும் ரிஷியையும் கண்டு மஹாபாக்கிய மென்று கோவில் கெற்பகிரகம், மகாமண்டபம், கோபுரம், திருமதில் முதலாகிய திருப்பணிகள் செய்வித்து பிற்மோற்சவ முதலான உற்சவங்கள் பண்ணிவித்துக் கொண்டு வந்தான்.

---

5.க்ஷீரம்- பால்; பிறசாதம் - பிரசாதம் என்று இருக்கவேண்டும்., ஸ்தலம் - பூமி.

*6. யிப்பால், கோயில் வருத்து வயணம்: கலகத்துக்கு முன்னாலே யிந்த கோயிலுக்கு யிந்த ஊரிலே அஞ்சுகாணி மானியம், தென்னந்தோப்பு தானியத்து உடவாரத்துக்கு மேரை, உப்பளம், கடும்பாடி, பையனூர், பூஞ்சேரி யிதுகளிலே உப்பு விக்கிறையம் விராகன் 100க்கு, விராகன் 1; உப்பளங்காணி 2, பெருமாளேரி நெல்லுக்காணி 3, கொளத்தூர் காணி 1, மாம்பாக்கம் காணி 1, ஆத்தூர் காணி 2, நல்லா பெற்றாள் சுரோத்திரியம் முன்னாலே விராகன் 9 கொடுக்கிறது.*

*7. கலகத்துக்கு பிற்பாடு பேரிச்சு சுரோத்திரியம் விராகன் 9, மேரைவிராகன் 12 ஆக விராகன் 21; யிப்போ கட்டுகிறது, கோவளத்திலே உப்பளத்துக்கு 100க்கு விராகன் 1/2 ஆக கோவிலுக்கு வருகிறது. யிந்த வூரிலே யிலுப்பைமரம் முத்து கோயிலுக்கு சேருகிறது. யிப்போ யிதுகளெல்லாஞ் சேர்த்துக்கொண்டு சற்க்காரிலே வருஷா வருஷம் 60 விராகன் விழுக்காடு உப்பளம் மேரை தவிர கொடுக்கிறார்கள்; யிது நடந்து கொண்டு வருகிறது. சிலவு ரொம்ப கோயிலுக்குச் செல்லுகிறபடியினாலே நடக்கும்படியாய் தாங்கள் தயவு பண்ணி நடப்பிக்க வேண்டியது.*

---

6. வருத்து - வருமானம்; கொளத்தூர், மாம்பாக்கம் ஆகிய ஊர்கள் செங்.மாவட்டத்தில் கேளம்பாக்கம் உள் வட்டத்தைச் சேர்ந்தவை; நல்லான் பெற்றாள், கடம்பாடி ஆகியன இதே மாவட்டத்தில் மாமல்லபுரம் உள் வட்டத்தில் உள்ளன.

# 17. திருக்கழுக்குன்றம் கைபீயத்து (டி.3182)

## குருக்கள்மார் வரலாறு

1. வடக்கே மந்தனகாளி புரத்திலே யிருக்கச்சே ராஜேந்திரசோழ ராஜா தனக்கு பிர்ம்மஹறத்தி தோஷம் போற நிமித்தியம் கெங்கா ஸ்தானத்துக்குப் போகச்சே, ராச்சியங்களிலே யிருக்கபட்ட ஸ்தளங்கள் தோறும் கோயிலுக்குள்ளே தெரிசனம் பண்ணப் போகச்சே, ராஜா தோளின் பேரிலே யிருக்கிற பிர்ம்மஹறத்தி கோபுர வாசலிலே நின்று யிருந்து தெரிசனம் பண்ணி வரச்சே, திரும்பியும் ராஜா தோளின் பேரிலே வந்து ஏறிக்கும். அப்படி ஸ்தளங்கள் தோறும் போகிறபோது, மந்தனகாளிபுறத்திலே போச்சே ஊருக்கு வெளியிலேதானே பிர்ம்மஹறத்தி நின்றுயிருந்தது ராஜா மந்தனகாளிபுர்துக்குள்ளே போய் சுவாமி தெரிசனமும், ஆனசைவாள் தெரிசனமும் பண்ணிக்கொண்டு வரச்சே, பிர்ம்ஹறத்தி, ராஜா தோளின் பேரிலே யேறாமல், பின்னாலே வந்தது.

2. அப்படிக்கு கெங்கைக்குப் போய், கெங்கா ஸ்நானம் பண்ணிக்கொண்டு வரச்சே பிர்ம்மஹறத்தி தோஷம் நிவர்த்தி ஆச்சுது. திரும்பியும் ராஜா, மந்தனகாளிபுரத்துக்கு வந்து, அந்தவூரிலே யிருந்த

ஆதிசைவாள் நல்ல யோக்கியாள் மந்திர சாமர்த்திய முண்டானவாள் என்று ராசாவுக்கு மனதிலே தோணப்பட்டு எங்களைக்கூட அழைத்துக் கொண்டு ராஜா, தன்னுடைய தேசத்திலே யிருக்கபட்ட திருக்கழுக்குன்ற ஸ்தளத்திலே யிருக்கும்படியாய் வைத்து, சுவாமியாருக்கு பூசை பண்ணும்படிக்கு எங்களை ஸ்தாபித்து, அதுக்காக யெங்களுக்கு யிந்த ஊரை பிர்ம்மதேயமாகக் கொடுத்து, நாங்கள் அனுபவித்துக்கொண்டு, பரம்பரையாய் யிந்த ஸ்தளத்திலே பூசை பண்ணிக்கொண்டு யிருக்கிறோம்; யிது நடந்த வரலாறு.

## திருக்கழுக்குன்றம் - கோயில் பூர்வோத்திரம்

3. சுரகுரு ராஜா நாளையில், திருமலைக்குக் கோயில் கட்டிவித்து, ஆலயம் ஏற்படுத்தி, கிராமத்துக்கு வீதியும் ஏற்படுத்தி, உத்ஸவமும் பண்ணிவைத்தான். பிற்பாடு, தான் சொந்தமாய் ப[illegible]ப்பாறை யண்டை கோவில் கட்டி சிவப்பிறதிஷ்டை பண்ணினான். அதுக்கு வடக்கே மேல்படி ராஜா மந்திரி யிரணிய தேஸசு கோவில் கட்டி,

---

1. திருக்கழுக்குன்றம் - செங்கை மாவட்டத்தில், செங்கற்பட்டு வட்டத்தில் உள்ள ஊர். இவ்வூர் மலைக்கோயில் புகழ்பெற்றது;

பிரமஹத்தி, பிராமணனைக் கொல்லுவதால் உண்டாகும் தோசம்.

2. பிரம்மதேயம் - பிராமணர்களுக்கு எவ்வித வரியும் இல்லாது மானியமாகக் கொடுக்கப்படும் நிலம் அல்லது ஊர்;

சிவப்பிறதிஷ்டை பண்ணினான். யிதின் வடமேற்கு சம்பாதி தேவர் பூசை பண்ணின சுவாமிக்கி சுரகுரு ராஜா கோவில் கட்டினான். திருமலைக்குக் கீழ்பக்கம் ஒரு கல்மண்டபம் சுரகுரு ராஜா மலையைத் துளைத்த மண்டபம் யேற்படுத்தி, சுவாமியும் பிறதிஷ்டை பண்ணிவைத்தான்.

4. இதன் பிறகு காந்தராயன் நாளையில், ஆலையம் சிதலாயிருந்து ஆலயம் கட்டிவைத்தான். அதின்பிறகு, சூரியன்வன் திருமலையில் பிள்ளையர் கோவிலுங் கட்டி படியு முடியக்கட்டி, மலைப்படியிலே மலைக்கி ஒசத்தி அக்கினி மூலையிலே துர்க்கி கோயில் 1, அதின் மேற்கு கீழ் கணனாதர் கோயில் 1, அதின் மேற்கு கீழ் சிவப்பிறதிஷ்டை1, அதின் மேற்குகீழ் இரட்டைப் பிள்ளையர் கோயில் 1, ஆக மலைப்படியிலே யிருக்கிற கோயில் 4; அடிவாரத்தில் சுவாமி பாதுகை கோயில் 1; யிதற்கு அக்கினி மூலையில் பிள்ளையார் கோயில் 1; யிந்த மலைக்குக் கீழ்ப்பக்கம் பகத்தாளமூவர்; கோயில் 1; யிந்த மலைக்கு வாய்வு மூலையில் கொடி விநாயகர் கோயில் 1; யிந்த மலைக்குக் கிழக்கு பாசமறுத்தான் பிள்ளையார் கோயில் 1;

---

4. அக்கினிமூலை - தென்கிழக்கு மூலை; ஈசானிய மூலை - வட கிழக்கு மூலை; நிருதிமூலை - தென்மேற்கு மூலை; வாயுமூலை - வடமேற்கு மூலை.

மலைக்குக் கீழே ஊருக்கு நடுவே பத்தவத்ஸசல சுவாமியார் நந்திகேசுரருக்கு ஆக உற்பவம்.

5. சுரகுருராஜா கெற்பகிறகம் கட்டினது 1; யிதின் நிருதி மூலையில் விக்கினேஸ்வரர் கோயில் 1; யிதின் சுவாமி கெற்ப்கிறகத்துக்கு மேற்கு சுப்பிரமணிய சுவாமியார் கோயில் 1; கெற்பகிரகத்துக்கு வாய்வு மூலையில் அம்மன் கோயில் 1; அதின் பிறகு சோழராஜா சீரணோத்தாரணம் பண்ணான்; அதின் பிறகு கிஷ்ணராயர் நாளையில் பேரம்பலபண்டாரம் தெற்கே தண்டலச்சேரியிலே யிருக்கச்சே, அவருக்கு சுவாமி சொற்பனம் காண்பித்து, " யிந்த ஸ்தளத்துக்கு நீ போய் உன்னாலே தற்ம கைங்கிரியம் நடக்கவேண்டி யிருக்குதென்று, அந்தப்படிக்கி கோயில் குருக்கள்மார் சொற்பனத்திலும் பண்டாரத்தை அழைத்துக்கொண்டு வந்து அவனாலே தற்ம கைங்கரியம் நடக்குமென்று சொற்பனமானபடியினாலே, அந்த பண்டாரத்தை யிந்த ஊருக்கு அழைத்துக் கொண்டு வந்து, கைங்கரியம் நடந்துது.

6. கோபுரம் 5; சபாமண்டபம் 2; ஆமை மண்டபாம் 1; பிரகாரம் மதிலும், நந்தி தீர்த்தம் படியும், கோயிலுக்கு யீசானத்தில் பொய்யாத பிள்ளையார் கோயில் 1; கிழக்கு சொக்கப்பிள்ளையர் 1; சங்கு தீர்த்தம்

மேலண்டைக் கரையில் தீர்த்த யீசுவரர் கோயில் 1; சங்குமுகப் பிள்ளையார் கோயில்1 ; தெற்கே நிருதி முலையில் பொன்னிட்ட நாதர் கோயில் 1; கோயில் ஆலயத்துக்குள்ளே தெற்கே தெசவிடங்க நாயகர் மண்டபமும், நிருதி முலையிலே சிதம்பரேசுரர் கோயிலும், யீசானத்தில் தொடார் கோயிலும், தெற்கே திருப்பெருந்துறை கோயிலும் ருத்திரகோடீ கிராமத்தில் ருத்திர கோடீசுர சுவாமியர் கோயிலும் ஆலயம் பிரகாரக் கோடியிலும் கட்டி வைத்தார்கள்.

7. யிந்த தற்ம கைங்கரியத்துக்கு ஆக பண்டாரம் கிருஷ்ண நாயரிடத்திலே காத்திருந்து கட்டளை கிறாமம் 32, திருப்பணி வேலைக் கிராம் 18; ஆக கிராமம் 50-ம் சற்வ மானியமாக வாங்கி, அந்த யீஸத் துகையை தற்ம கைங்கரியம் நடப்பித்தார்.

அந்த கிராமங்களில் ஏரிக்கி கல்கட்டும் எல்லைக் கல்லுக்கு ப சூலமும் போட்டு, சிறிது கிராமங்களுக்கு கல்கரணமும் போட்டு வைத்தார்.

அதுமுதல்கொண்டு கோயில் கட்டளைக்கி அவர் சந்ததியார் ஒருவர் பண்டாரம் யிருந்துக்கொண்டு முவை சந்ததி வரைக்கும் தர்ம் கைங்கரியம் நடந்து வந்தது. அதன் பிறகு, துலுக்கானியம்வந்து கோயிலுக்கு நடந்த கிராமங்களையும் கட்டிப் போட்டு, கோயில்

ஆராச்சிகமாய் கோபுர வாசப்படி கதவையும்கொளுத்திப்போட்டு, சிறிது கோயிலுகளையும் பிடிங்கிப்போட்டு, அபந்திறையா யிருந்தது.

8. அப்போ, சுவாமிக்குப் பூசை நைவேத்தியம் நடந்து வந்தது, புதலிங்கப்பையர் நாளையில் ஆலயத்துக்குள்ளே வாய்வு மூலையில் உமாமயேசுர சுவாமிக்குக் கோயிலுங் கட்டி, சிவப்பிறதிஷ்டை பண்ணார். ஊருக்கு நிருதி மூலையில் பொன்னிட்டநாதர் கோயிலும் கணக்கப்பிள்ளையார் மண்டமும் யிருந்து, துலுக்காணியத்தில் கோயிலிடித்துப்போட்டு, மண்டபத்தை மகபதியாகக் கட்டிப்போட்டார்கள். அதிலே யிருந்த சுவாமி மாத்திரம் தாழக் கோயில் கொண்டு வந்துவைத்திருக்கிறது.

9. சித்தாத்திரி வருடம் மேஸ்தர் ஆட்டிசன் துரை நாளையில் மகபதியை யிடித்து முன்னிருந்தபடிக்கு மண்டபமாத்திரம் ஏற்படுத்தி, அந்த மண்டபத்தில் உத்ஸவ மாத்திரம் நடந்து வருகிறது.

---

7. மூலை - பதினைந்து; துலுக்காணியம் - இசுலாமியர் ஆட்சி; ஆராச்சிகமாய் - துருவிப்பார்த்து; அபந்திறை - கோயிலானது அரைகுறையாய் நின்றது.

8. கணக்கப்பிள்ளை மண்டபம் - கோயில் கணக்கு எழுதுவோர் அமர்ந்து எழுதும் மண்டபம்; மகபதி - மசூதி.

மேலப்பட்டுக்கு உபகிறாமத்தில் சொக்கநாதசுவாமியார் கோயில் சூரிய வம்ஸத்து ஆதண்டச் சக்கறவர்த்தி நாளையில், கோயில் கட்டினது. யிப்போ கோயில் யிடிந்து போய், சுவாமிமாத்திர மிருக்கிறது. யிதின் பிறகு கோயில்களில் செடிகள் முளைத்து, ஒழுக்கு விழுந்து, அபந்திறையா யிருந்தது.

10. ஆங்கீரச வருடம் அன்வறிதிகான் சுபாவுலே யிருந்த அமில்றங்காசாரியார் நாட்டார் நாளையிலே, யாசகம் பவண்ணி, செடிகளும் வெட்டி, மண்டபத்து மேல்தளவரிசை பண்ணி, சாந்தும் போட்டு, அநேக தர்மம் பண்ணி, சுவாமி நிளவேதனத்துக்குக் கொஞ்சம் மானியமும் விட்டு, யிரண்டு காலம் பூசை நிவேத்தியம் நடந்து வந்தது. அதின் பிற்பாடு பல வருடம் முதல் விகரணசுபாவுலே அப்பாச்சிநயினார் செங்கல்பட்டு சீமை அமில்பண்ணச்சே, யிந்த ஸ்தளத்து பூற்வோத்திரம் நாபாபுக்கு தெரியப்படுத்தி யுவ வருடம் சீமை ஓட்டுக்ளகும் உடவார மளைக்கும் மேரை நாழிக்கு தானபத்திரம் 1; சித்திரபானு வருடம் தான பத்திரம் 1; சுரோத்திரிய கிறாமம் மூணும் மானியம் அறுபது காணியும் நபாபு கையில் சிலவு வாங்கிக்கொடுத்தார்.

---

9. மேலப்பட்டு - செங். மாவட்டத்தில், திருக்கழுக்குன்றம் உள் வட்டத்தில் இவ்வூர் உள்ளது.

10. அன்வறிதிகான் - Anvaruddin Khan; அமில் - வரி வசூல் அதிகாரி; முதல்விகரண - முகமதலிகான் (?)

11. அதுமுதல் நடந்துவருகிறது; கும்பினியாரும் அந்தப்படிக்கி நடப்பிக்கிறார்கள்; சர்வதாரி வருடம் மங்கிட்டி வீரபத்திர முதலியார் முன்னாலே கெற்பகிரகம் பேரம்பல பண்டாரம் பண்ணி அடிக்கி வைத்திருந்ததை, சோழ ராஜா கட்டி வைத்திருந்த கெற்ப கிரகத்தை பிரித்துப்போட்டு, புதியதாயிருந்த கெற்பகிரகத்தை கட்டி, அதற்கு மண்டபம் திருவடமாடப்பத்தியும் கட்டி குப்பாபிஷேகம் பண்ணிவைத்தான்.

12. விருத்தி வருடம் நாட்டு விறாகுமுதலியார் கோயிலுக்குக் கிழக்கு பூமிக்கிறையம் வாங்கி, யிருபது வீடுகட்டி பிராயணாளுக்குத் தானம் பண்ணான். கர வருடம் திருமணம் நல்லதம்பி முதலியார் மலையடி வாரத்தில், மண்டபம் கட்டி, சத்திரமும் கட்டி, தற்மம் பண்ணிக்கொண்டு வருகிறார். அதின் பிறகு, ஐதர்கலாபத்தில் ரொம்ப ஆராச்சிகமாய் எருக்கங்காடு மூடியிருந்தது. சோபகிருது வருடம் வடுகநாத முதலியார் அமிலுக்கு வந்து அநேகம் பணம் சிலவு பண்ணிக் காட்டையும் வெட்டி, தெரும் பண்ணிவைத்து, சங்குதீர்த்தம் குளம் மண் எடுப்பித்து, பாதி மட்டுக்கும் படியும் கட்டி வைத்தார். சங்கு தீர்த்தத்தில், யுவ வருடம் அப்பாச்சி நயினார் அமிலில் யிரண்டு சங்கம் பிறந்து கோயிலிலே வைத்திருந்தது. ஐதர் கலாபத்திலே போய்விட்டது!

13. அதின் பிறகு, பராபல வருடம் வடுகநாத முதலியார் அமிலில் ஒரு சங்கம் பிறந்து, வைத்திருக்கிறது; அது வாம விறுத்தம் அதன்பிறகு தேசம் சுபிஷ்ஷ மில்லாததினாலே சங்கம் உற்பத்தியில்லை. பன்னிரண்டு வருஷத்துக்கு ஒரு திரம் சங்கம் உற்பத்தியாகிற நிபந்தனையில்லை. யிதுக்கு முன்னாலே மாக்கண்டய்யருக்கு சங்கம் பிரதிஷ்ஷமான பிற்பாடு கால அபாந்திரம் வந்துபடியினாலே சங்கம் பிறந்ததும் யிருந்ததும் தெரியது. அம்மன் பிடாரிகோயில், கிராமத்தார் கட்டிவைத்தார்கள்.

## சம்பத்சரம் உத்ஸவம் வரலாறு

14. ஆவணி மீஉ விநாயக சதுர்த்தி; விக்கினேஸ்பரருக்கு விமான உச்சவம் நாள் 1 ; பவுத்திர உச்சவம் மூணுநாள் நடக்கிறது. புரட்டாசி மீஉ. நவராத்திரியில் அம்மனுக்கு சகல சஸ்திரபாணம் பண்ணி, சிம்மாசனத்தில் அலங்காரம் பண்ணி ஒன்பதுநாள் உபசாரம் நடக்கிறது. பத்தாநாள் விஜயதசமியில் குதிரை வாகனத்தின் பேரில் சந்திரசேகர் சுவாமி ஏளப்பண்ணி, மூவர் கோயிலண்டைபோய்

---

12. பண்ணான் - பண்ணினான்; ஐதர் - Hyder Ali; தெரும் - தெருவும் (Street); கலாபத்திலே - போரில்.

வன்னி பூசை பண்ணி, பாரிவேட்டை பண்ணிக்கொண்டு கிறுபிறதெக்ஷணமாய் கோயிலிலே வருகிறது. ஐற்பிசி மாதம் பௌர்நமியில் சுவாமிக்கி அன்ன அபிஷேகம் பண்ணி, தீபாராதனை ஆனவுடனே கழிச்சு மேளதாளத்துடனே குளத்திலே கொண்டுபோய் விட்டுவிடுகிறது. கந்தர்சஷ்டி ஆறுநாள் பிரதமை முதல் சஷ்டி பாதி வரைக்கும் யிருந்த யிடத்தில் உபசாரம் பண்ணி, ஆறாநாள் மயில் வாகனத்தின் பேரில் சுவாமி தெருவீதி உற்சவம் பண்ணி, கோயிலுக்கு வருகிறது. கார்த்திகை மாதம் கிர்த்திகை தீப உற்சவம் திருமலையில் முப்பத்திரண்டு முழ கிழவு பெரிய சாலில் வற்றி போட்டு, பெரியதீபம் வைத்து, தெருவீதியில் ரிஷப வாகனத்தின் பேரில் உற்சவம் பண்ணி கோயிலுக்கு வருகிறது. மார்கழி மாதம் சுக்கிலபக்ஷத்தில், மாணிக்க வாசகருக்குத் தெரு வீதியில் ஒன்பது நாளைய உற்சவம்; உதையத்தில் உற்சவம் பண்ணி ஒன்பதாநாள் ராத்திரி சபாபதி சுவாமிக்கு கிறுதமுதலாகிய அபிஷேகங்கள் பண்ணி, பத்தா நாள் உதையத்தில் சபாபதி சுவாமி உற்சவம் பண்ணுகிறது. தை மாதம் சங்கராந்திக்கு மலைதாழக் கோயில் சுற்றிக் கோயிலுக்கு அபிஷேகம் நிவேத்தியம் நடந்து, மூன்றா நாள் கீரைப் பாக்கம் மண்டபடி பாரி வேட்டையும், தெருவீதி யெழுந்தருளப்படியும் நடக்கிறது. தைப்பூசத்தில் தெப்பல் உற்சவம் நடந்து, தெருவீதி உற்சவம் நடக்கிறது. மாசு மாதம்

*சிவராத்திரிக்கு நாலு காலமும் அபிஷேக நிவேத்திய நடக்கிறது. மாசி மீ-த்தில் (மாதத்தில் ) ஆதியூர் ஷாந்தியில் திருவூறலுச்சவம் நடக்கிறது. பங்குனி மீஉ பங்குனி உத்திரத்தில் சுவாமிகளுக்கெல்லாம் அபிஷேகமும், திரிபுரசுந்தரி அம்மனுக்கு மகா அபிஷேகமும் திருக்கலியாணமும் தெருவீதியில் ரிஷபவாகன உற்சவமும் நடக்கிறது.*

*15. சித்திரை மீஉத்தில், பிரம்ம உற்சவ வயணம்: முதலில், திருவிழாவுக்கு முன் பிடாரியார் காப்புக்கட்டி, மூன்று நாளைய உற்சவ*

---

13. சங்கம் - சங்கு (Conch); வாமவிருத்தம் - இடம்புரி; சுபிஷ்ஷ - சுபிட்சம் - வளம்.

14. சம்பத்சரம் - சம்வத்சரம் - ஆண்டு;

ஏளப்பண்ணி - எழுந்தருளச்செய்து;

முப்பத்திரண்டு முழு கிழிவு - 32 முழ அளவுள்ள துணி;

கிரி - மலை;

சஸ்திரபாணம் - ஆயுதம், அம்பு முதலியவற்றைப் பூட்டி;

திருவூறல் - நீராட்டு; பரிவேட்டை - குதிரை வாகனத்தில் சென்று வேட்டையாடல்;

நடக்கிறது. சுவாமிக்கு வாஸ்த்துளச் சாந்தி, மிறுச்சங்கிறகணம் அங்குறார்ப் பணம், துளசப் பிரதிஷ்டை, ரிஷபாதி வாகனம் பண்ணி மறுநாள் மிருகசிரஸ நஷ்த்திரத்தில் துசா ரோகணம் பண்ணி, முதல் திருவிழாகால விழா பல்லக்குச் சேர்வையும், ராத்திரி சிம்மாசனத்திலேயும் யெழுந்தருளி உற்சவம் நடக்கிறது. இரண்டாம் நாள் காலவிழா பல்லக்குச் சேர்வையும் ராத்திரிக்குப் பூதவாகனச் சேர்வையும் நடக்கிறது. 3-ஆம் நாள் காலவிழாப் பல்லக்குச் சேர்வையும் ராத்திரிக்குச் சந்திரப் பிறவை வாகன உற்சவமும் நடக்கிறது. 4-ஆம் நாள்கால விழா பல்லக்குச் சேர்வையும் ராத்திரிக்கு நாகவாகனச் சேர்வையும் மேலண்டைக்கோபுர வாசலாலே புறப்பட்டு பொன்னிட்டநாதர் கோயிலுக்குப் போகிறது. 5-ஆம் நாள் காலவிழாப் பல்லக்குச் சேர்வையும் ராத்திரி ரிஷபவாகனச் சேர்வையும் நடக்கிறது. 6-ஆம் நாள் காலவிழாப் பல்லக்குச் சேர்வையும் ராத்திரிக்கு ஆனைவாகனச் சேர்வையும் நடக்கிறது.

16. யிந்தப்படிக்கு வடவண்டை கோபுர வாசலாலே சுவாமி போகிறது. ஏழா ணாள் பூர நக்ஷத்திரத்தில் ரத உற்சவம். கீழண்டைக்

---

15. மிறுச்சங்கிரகணம் = மிருத் + சங்கிரகணம் ; மிருத் - மண்; சில இடங்களிலிருந்து மண் எடுத்து வந்து செய்யும் ஒரு சடங்கு; துசாரோகணம் - கொடியேற்றுதல்;

கோபுர வாசலாலே சுவாமி ஏளப்பண்ணுகிறது. 8-ஆம் நாள் காலவிழா பல்லக்குச் சேர்வையும் ராத்திரிக்குக் குதிரை வாகனச் சேர்வையும் நடக்கிறது. 9-ஆம் நாள் காலவிழா பல்லக்குச் சேர்வையும் ராத்திரிக்கி சந்திரப் பிறபைச் சேர்வையும் நடக்கிறது. 9-ஆம் நாள் றாத்திரி சபாபதி சுவாமியை சிம்மாசன மண்டபத்தில் எழுந்தருளப் பண்ணி, சாந்து சாத்தி பத்தாநாள் அருண உதையத்தில் சபாபதி சுவாமிக்கு சந்திரப் பிறபையில் தெருவீதி உற்சவம் நடக்கிறது. உடனே காலவிழா பல்லக்குச் சேர்வையும் சங்கு தீர்த்தத்தில தீர்த்தவாரியும் சாயரக்ஷையில் க்ஷணமும் பண்ணி அடிவாரத்தில் மண்டபடி சேர்வையும் நடக்கிறது. அதின் பிறகு திருமலையில் சித்திரை நக்ஷத்திரத்தில் அவரோகணமும் அடிவாரத்தில் திருக்கலியாணமும் கைலாச வாகனத்தில் சுவாமி ஏளப்பண்ணி, தெருவீதி உற்சவமும் நடக்கிறது. பிறகு சண்டிகேஸ்வரர் ஏளப்பண்ணுகிறது. பதினோராந் திருவிழா ராத்திரி நந்தி விமானத்தில் சுவாமி ஏளப்பண்ணி தெருவீதி உற்சவம் பண்ணி திருவூடல் நடக்கிறது. அதின்பிறகு சுவாமிகளை ஆஸ்தானத்தில் எழுந்தருளப் பண்ணுகிறது. மறுநாள் உற்சவ சாந்தி பண்ணுகிறது, மறுநாள் முதல் பத்து நாளைக்கு உச்சவ சுவாமிக்கி விடாயாற்றி உற்சவம் நடக்கிறது. வைகாசி மீஉஅடிவாரத்தில் பத்து நாளைக்ளகு வசந்த உற்சவம் நடந்து, பத்தாநாள் ரிஷபவாகனச் சேர்வை நடக்கிறது. கத்திரி பூசை சீதகும்பாபிஷேகம் ஏழுநாளைக்குத்

திருமலையில் அபிஷேகம் உபசாரம் நடக்கிறது. ஆனி மீஉ த்தில் கொன்றையடி உற்சவம் நடக்கிறது.

---

16. சேர்வை - சேவை; வணங்குதல்; சாந்து - சந்தனம்; திருவூடல் - திருக்கல்யாணம்; சாயரக்ஷை - மாலை; அருண உதயம் - சூரிய உதயம்.

## பேரம்பல பண்டாரம் வரலாறு

17. ராயர் நாள் வருடம் 300-க்கு மேல் பிரபவ வருடம் தெற்கே தண்டலச்சேரியிலே சமுசார கிரகத்திலே சோழியவெள்ளாழரில் பேரம்பலபிள்ளை யென்கிறவர் யிருபது வயதிலே யிருந்தார். அவருக்கு ஸ்ரீவேதகிரீஸ்வர சுவாமியார் சொற்பனஞ் சாதிச்ச வயணம், "நம்முட ஸ்தளமான திருக்கழுக்குன்றத்தில் நீ வந்து தர்ம்ம கைங்கரியம் நடக்க வேணுமென்றும் அந்தவூர் குருக்கள்மார் உன்னை அழைத்துக்கொண்டு போகிறதற்கு வருவார்கள். அவாளுடனேகூட அந்த ஸ்தளத்துக்குப் போய் கைங்கரியம் நடப்பியென்று சொற்பனமாய், ஸ்தானத்தாரும் வந்து, அழைத்துக்கொண்டு நடுவழியிலே அச்சரபாக்கம் என்கிற

ஸ்தளத்திலே வந்து யிறங்கி, திரவியம் அனுக்கூலமாய ஆலயம் பிரகாரம், கோபுரம் முதலானத்துக்கு வேலைவிட்டு நடந்துது. யிப்புறம் வருகிறபோது, கிணாறிலே வந்திறங்கி, அவ்விடத்திலே கோயிலும் ஆலயம் மதிலுடனே வேலைவிட்டு நடந்துது. யிப்புறம் திருக்கழுக்குன்றத்துக்கு வந்து ஆதீனத்துக்குப் பட்டங்கட்டிக் கொண்டு பேரம்பல பண்டார மென்று பேராச்சுது.

18. கைங்கரியம் நடந்த வயணம்: கோபுரம் 5; சபாமண்டபம் 2; ஆமை மண்டபம் 1; பிரகார மதிலும் நந்தி தீர்த்தம் படியும் தெசவிடங்க நாயகர் மண்டபம்; சிதம்பரேஸ்வரர் கோயில்; தொடாய் கோயில்; திருப்பெருந்துறை கோயில்; பொய்யாத பிள்ளையர் கோயில்; சொக்கப் பிள்ளையார் கோயில்; பொன்னிட்டநாதர் கோயில்; ருத்திரகோடி கிராமத்தில் ருத்ர கோடீசுரன் கோயில்; ஆலயம், பிரகாரம், சோழரும் கட்டி, யிந்த தர்ம்ம கைங்கரியத்துக்கு கிருஷ்ணா ராயரண்டை காத்திருந்து கட்டளை கிராமம் 32, திருப்பணிவேலை கிராமம் 18, ஆக கிராமம் 50-ம் சர்வ மானியமாக வாங்கி, கோயிலுக்கு கம்பத்தமும் வைத்து, கைங்கரியம்நடப்பித்தார். அந்த கிராமங்களுக்கு ஏரிக்கு கல்கட்டும், எல்லை கல்லுக்கு ப சூலமும் போட்டு, கிராம கிராமங்களுக்கு கல்காணமும் போட்டு

---

17. அச்சரப்பாக்கம் - செங்.மாவட்டத்தில், திருக்கழுக்குன்றம் உள்வட்டத்தில் உள்ள ஊர்;

வைத்தார். அதுமுதல்கொண்டு இரண்டாம் பட்டம் சிதம்பர பண்டாரம், மூன்றாம் பட்டம் பேரம்பல பண்டாரம், நாலாம் பட்டம் சிதம்பர பண்டாரம், ஐந்தாம் பட்டம் நமசிவாய பண்டாரம், ஆறாம் பட்டம் வயித்தியநாத பண்டாரம், யெனக்கு மன்மத வருடம், ஐந்து வயதில் பட்டம் ஆச்சுது.

யிந்தப்படிக்கு மூன்று பட்டம் வரைக்கும் தர்ம்ம கைங்கரியம் நடந்தது. யிப்புரம் நாலாம் பட்டம் முதல் அபிஷேக கட்டளை மாத்திரம் விசாரித்துக்கொண்டு வருகிறது.

இப்படி கட்டளை பேரம்பல பண்டாரம் கையெழுத்து.

# சக்ரவர்த்திகள் வரலாறு

19. பெலிபந்தன் முதல் என் புண்ணிய புருஷாளுடைய கீதகாலப் பிரமாணம்:

| | | |
|---|---|---|
| பெலிபந்தன் செகாப்பதம் | - | 19 கோடி 38 லக்ஷத்து, 8853, |
| அரிச்சந்திர செதாப்தம் | - | 14 கோடி 29 லக்ஷத்து 39,974 |
| நள செதாப்தம் | - | 13 கோடி 37 லக்ஷத்து 20,534. |
| புருகுச்செவா செதாப்தம் | - | 12 கோடி 38 லக்ஷத்து 44,565. |

| | |
|---|---|
| புரூரவர் செதாப்தம் | - 11 கோடி 25 லக்ஷத்து 64,670. |
| சாகா சொதப்தம் | - 11 கோடி 25 லக்ஷத்து 68,540. |
| கார்த்தவீரிய செதாப்தம் | - 10 கோடி 24 லக்ஷத்து 34916. |
| அங்க ராஜா செதாப்தம் | - 9 கோடி 19 லக்ஷத்து 38855. |
| மறுது செதாப்தம் | - 8 கோடி 9 லக்ஷத்து 86665. |
| அம்பரீஷ செதாப்தம் | - 8 கோடி 30 லக்ஷத்து 80865. |
| மயேசுர செதாப்தம் | - 7 கோடி 29 லக்ஷத்து 80852. |
| மருது ராஜா செதாப்தம் | - 6 கோடி 10 லக்ஷத்து 72865. |
| ஏயாதி செதாப்தம் | - 5 கோடி 16 லக்ஷத்து 52847. |
| சசிபிந்து செதாப்தம் | - 4 கோடி 8 லக்ஷத்து 27868. |
| வேராய செதாப்தம் | - 3 கோடி 7 லக்ஷத்து 50863. |
| சிசபிந்து செதாப்தம் | - 2 கோடி 16 லக்ஷத்து 28873. |

ராமராவணயோர் பிற்றகால கசவுக்கு செதாப்தம் - 1 கோடி 20 லக்ஷத்து 24869.

| | |
|---|---|
| பரத செதாப்தம் | - 1 கோடி 14 லக்ஷத்து 57712. |

20. முனி சகஸ்திரப் பிரமாணம் எழுதப்படுகிறது:-

| | | |
|---|---|---|
| பாண்டவர் செதாப்தம் | - | 4873 |
| கலியது பரிஷ்சித்து செதாப்தம் | - | 4856 |
| சென்மெச்சயாதை செதாப்தம் | - | 4546 |
| ஓதையான மகாராசா செதாப்தம் | - | 4488 |
| விஜயதேவராஜா செதாப்தம் | - | 4440 |
| செயதேவராஜா செதாப்தம் | - | 3430 |
| சதுர்முக ராஜா செதாப்தம் | - | 3520 |
| கண்ணுவ மனு செதாப்தம் | - | 3465 |
| மகிபாலா செதாப்தம் | - | 3445 |
| லோகிதா செதாப்தம் | - | 3435 |
| கெங்காதரா செதாப்தம் | - | 3425 |
| சாமகேது ராயர் செதாப்தம் | - | 3376 |
| புவம தேவராயர் செதாப்தம் | - | 3356 |
| புரந்தக ராயர் செதாப்தம் | - | 2956 |
| சகா றயர் செதாப்தம் | - | 2800 |

| | | |
|---|---|---|
| பாலசந்திர ராயர் செதாப்தம் | - | 2700 |
| நிற்மாண தேவராயர் செதாப்தம் | - | 2445 |
| மகாபல தேவராயர் செதாப்தம் | - | 2628 |
| ஸ்ரீநாதராயர் செதாப்தம் | - | 2568 |
| மல்லநாதராயர் செதாப்தம் | - | 2275 |
| சந்திரகுப்த மகாராயர் செதாப்தம் | - | 2100 |
| சாலிவாகன சகாப்தம் | - | 1494 |
| போசராஜா செதாப்தம் | - | 1738 |
| ராசநரேந்திர ராயர் செதாப்தம் | - | 1538 |
| சக்ரவர்த்தி ராயர் செதாப்தம் | - | 1444 |
| மகாதேவராயர் செதாப்தம் | - | 1424 |
| ராஜசோழராயர் செதாப்தம் | - | 1361 |
| விஜயசோழராயர் செதாப்தம் | - | 1216 |
| வெசோளியராயர் செதாப்தம் | - | 1100 |
| ராசேந்திர சோழராயர் செதாப்தம் | - | 1706 |
| ராஜாதிராஜ சோழராயர் செதாப்தம் | - | 1303 |

| | | |
|---|---|---|
| பல்லாள ராயர் செதாப்தம் | - | 840 |
| சின்னபல்லாளராயர் செதாப்தம் | - | 766 |
| தேவள ராயர் செதாப்தம் | - | 745 |
| விஷ்ணு வல்லாளராயர் செதாப்தம் | - | 485 |
| மகாதேவராய செதாப்தம் | - | 508 |
| ராமதேவ ராயர் செதாப்தம் | - | 494 |
| அரிஅர ராயர் செதாப்தம் | - | 447 |
| நீலகண்ட ருத்ர ராயர் செதாப்தம் | - | 452 |
| கர்கித ருத்ர ராயர் கெதாப்தம் | - | 420 |
| விஜய பூதாரக ராயர் கெதாப்தம் | - | 417 |
| பிரதாப ருத்திர ராயர் கெதாப்தம் | - | 361 |
| டில்லி லைபாராயர் கெதாப்தம் | - | 352 |
| அனவெனமன ராயர் கெதாப்தம் | - | 327 |
| திருமலராயர் கெதாப்தம் | - | 322 |
| கெஜபதி கபிலேசுர ராயர் கெதாப்தம் | - | 317 |
| வீர நரசிம்ம ராயர் கெதாப்தம் | - | 299 |

| | | |
|---|---|---|
| *கிஷ்ண ராயர் கெதாப்தம்* | - | *227* |
| *அச்சுத ராயர் கெதாப்தம்* | - | *248* |
| *ராமராயர் கெதாப்தம்* | - | *217* |
| *திருமலராயர் செதாப்தம்* | - | *292* |
| *ஸ்ரீரங்கராயர் செதாப்தம்* | - | *185* |
| *வெங்கிடபதி ராயர் செதாப்தம்* | - | *159* |
| *சிரக்குறராயர் செதாப்தம்* | - | *185* |
| *ராமச்சந்திர ராயர் கெதாப்தம்* | - | *146* |
| *ஸ்ரீரங்கராயர் கெதாப்தம்* | - | *128* |

*இப்படிப்பட்ட தர்மம புருஷ ராயிருக்கபட்ட ராஜாக்களுடைய வமிசங்களைச் சொன்னவாள் கேட்டவாள் எக்யம் பண்ண பலத்தை அடைவார்கள்.*

## 21. திருக்கழுக்குன்றத்தைச் சேர்ந்த தேவஸ்தானங்கள் ஒன்பதுக்கு விபரம்

*திருக்கழுக்குன்றம், ருத்ர கோ(டி) நாதர் கோயில், திருயிடைச்சூரம்,*

---

20. சகாப்தம் என்ற சொல், சுவடியில், தெதாப்தம், கெதாப்தம், செதாப்தம் என்றெல்லாம் எழுதப்பட்டுள்ளன.

திருப்போரூர், பரமேஸ்வரி மங்கலம், புலிப்பா கோயில், நெருமூர் மடவிளாகம், கொடுவூர் மடவிளாகம், திருவாலக் கோயில் ஆக தேவஸ்தானம் 9.

## 22. கட்டளைக் கிராமம் 32க்கு விபரம்:-

தேவமண்டலத்துச் சீமையான தாழப்பேடு, காங்கையன் குப்பம், கோனார் குப்பம், பறிதல் மேடு, கீரைப்பாக்கம், புல்லேரி, அமுர்தப்பள்ளம், பூயிலுப்பை, யூச்சங்காரணை, சூரக்குப்பம், தழுவக்குழஞ்ச நல்லூர், பெருந்துரவு, மங்கலம், முடையூர், குறுமுகை, அகத்தெரிமங்கலம், நாவலூர், பிடாரம் பட்டு, நாப்பாக்கம் வெண்பாக்கம், யிருங்குன்றப்பள்ளி, நாலோக சூரியன், பிரத் வெள்ளப் பந்தல், பொய்க்காரணை, சின்னக் காட்டுப்பாக்கம், வசவாபுரம், கொத்திமங்கலம், தத்தளூர், உழுத மங்கலம், தச்சூர், போசன் குப்பம், பனவெட்டுத் தாங்கல் ஆகக் கிராமம் 32.

---

21. ருத்ர கோட்டி, செங்.மாவட்டத்தில, திருக்கழுக்குன்றம் உள்வட்டத்தில் அமைந்துள்ள ஊர்,

நெரும்பூர் - இதே மாவட்டத்தில, தனி உள்வட்ட ஊர்.

திருப்போரூர் - இதே செங்.மாவட்டத்தில் தனி உள் வட்ட ஊர்;

## 23. திருப்பணிக் கிராமம் 18க்கு விபரம்:-

*வைவழுதூர், வடத்திம்மூர், நடுவக்கரை, குன்றபாக்கம், காட்டுப்பாக்கம், கருப்பங்காடு, யிரும்பிலி, வடபொருந்த பாக்கம், சம்பாதி தேவநல்லூர், முத்திக்கு நல்லான் குப்பம், மாதளங் குப்பம், காந்தராயன் குப்பம், சொக்கியார் குப்பம், நயினார் குப்பம், கொடித்தண்டலம், நாச்சிமேடு, கிழ நரசிங்குப்பம், மேலப்பட்டு ஆகத் திருப்பணிக் கிராமம் 18. ஆகக் கிராமம் 50.*

*தொண்டை மண்டல வரலாறுகள்*

*நூல் முற்றும்.*

---

22. கொத்திமங்கலம் என்ற ஊரே கோத்திமங்கலம் என்று சுவடியில் உள்ளது ; கொத்திமங்கலம் என்ற ஊர் செங். மாவட்டத்தில் திருக்கழுக்குன்றம் உள்வட்டத்தில் உளது.

தத்தனார் - செங்.மாவட்டத்தில் திருக்கழுக்குன்றம் உள் வட்டத்தில் உளது.

பூயிலுப்பை, அமிர்தபள்ளம் - செங்.மாவட்டத்தில், கரும்பாக்கம் உள்வட்டத்தில் உள்ள ஊர்கள்.

நாவலூர் - செங்.மாவட்டத்தில், கேளம்பாக்கம் உள் வட்டத்தில் உள்ள ஊர்.

வேண்பாக்கம், கீரப்பாக்கம், புல்லேரி, தாழம்பேடு, காங்கேயன் குப்பம் - இந்த ஆறு ஊர்களும் செங்.மாவட்டத்தில், பொன்விளைந்த களத்தூர் உள் வட்டத்தில் உள்ளன. முடையூர், குருமுகை, வெள்ளப்பந்தல், இந்த மூன்று ஊர்களும் செங். மாவட்டத்தில், திருக்கழுக்குன்றம் உள்வட்டத்தில் உள்ள ஊர்கள்.

23. மேலப்பட்டு, முத்திகை நல்லான்குப்பம் - இவை செங்.மாவட்டத்தில, திருக்கழுக்குன்றம் உள் வட்டத்தில் உள்ள ஊர்கள்

அச்சிட்டோர் : ✆ : 854 56 70

இராயப்பேட்டை எழுதுப்பொருட்கள் அச்சு மற்றும்
தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட், சென்னை 14.

## அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்,
சென்னைப் பல்கலைக்கழகம் வளாகம்,
சென்னை – 5.

### வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| நீதிக் கதைகள் | - | 30.00 |
| மடல் திரட்டு | - | 43.00 |
| கருப்பர் குளுவ நாடகம் | - | 43.00 |
| நலங்கு மெட்டு இராமாயணம் | - | 306.00 |
| தமிழக ஊர் வரலாறுகள் | - | 40.00 |
| இடங்கைவலங்கையர் வரலாறு | - | 40.00 |
| தமிழ் அகராதி | - | 50.00 |
| வைத்திய அகராதி | - | 34.00 |
| பழனியாண்டவர் சிந்து பாமாலை | - | 40.00 |
| சுந்தரமூர்த்தி நாயனார் யட்சகானம் | - | 60.00 |
| யயாதி விலாசம் | - | 104.00 |
| நாவாய் சாத்திரம் | - | 51.00 |
| இராகதாளப் பிரத்தாரம் | - | 68.00 |
| பிரத்யும்ன சரிதம் | - | 94.00 |

25% தள்ளுபடி வழங்கப்படும்

*Printed by :*

**Royapettah Stationery and Printing and Allied Products Producers Industrial Co-op. Society Ltd.,**
**26, Koya Arunagiri First Street, Royapettah, Chennai - 14.**